N.Sitalakshmi's Sudumo Nin Kaadhal

# Sudumo nin kaadhal?

அத்தியாயம் 1

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்கா தேவி சரணம்!
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்கா தேவி சரணம்!

துர்க்கை அம்மனை துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளே
தரிசனம் கண்டால் போதும்

துர்க்கை அம்மனை துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்கா தேவி சரணம்

என்ற வரிகளால் துர்கையை துதித்தப்படி, புத்தம்புதிதாய் தயாரித்த காபி டிக்காஷனை, சூடான பாலில் பதமாய் கலந்து, அளவாய் சக்கரையிட்டு, நுரை ததும்ப ஆற்றி, அப்போது தான் துயிலெழுந்த  பேத்திகளுடன் போர்டிகோவில் விளையாடிக் கொண்டிருந்த தன் கணவர் - தர்மராஜனிடம் நீட்டினார் மங்கையர்க்கரசி!

தனக்கான காபி வந்ததும் தானுண்டு தன் வேலையுண்டு இன்றில்லாமல், என்றும் கேட்பது போல் இன்றும் "நீ காபி குடிச்சிட்டியா, மங்கை?" என வினவிய தர்மராஜன், திண்டுக்கல் அருகே உள்ளே செம்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும்  அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். தோட்டம், துறவு, தென்னத்தொப்பு, கரும்பு விளையும் பூமி, பல வீடுகள் என ஏகப்பட்ட சொத்துக்கள் இருந்தபோதும், கல்வியை புகட்டும் அரும்பெரும் சேவையான ஆசிரியர் தொழிலை தெய்வமாய் மதித்து,

தன் ஓய்வு காலம் வரை அதை சிரத்தையாக செய்துமுடித்தவர். தன் கீழ் படிக்கும் மாணவர்களுள் சுமாரானவர்களுக்கு மாலை நேரத்தில் தனி கவனம் செலுத்தி அவர்கள் முன்னேற உதவியவர், நன்றாக படிக்கும் மாணவர்களுள் மிக தாழ்ந்த நிலையில் இருக்கும் பலருக்குத் தன்னாலான பண உதவிகளையும், அரசாங்கத்திற்கு உரிய வகையில் விண்ணப்பித்து அரசின் உதவியையும், புத்தகம், சீருடை, பேனா, பேப்பர் போன்ற உதவிகளைச் செய்தார் என்றால் அது சிறு வார்த்தையாகிவிடும் - மாரியாய் பொழிந்தார் என்று தான் கூற வேண்டும்!

அன்பும் பண்பும் நிரம்பிய கணவரின் பிரியத்திற்கு பதிலாய் , "இதோ, ஷைலுக்கு காபி கொடுத்திட்டு நானும் எடுத்திட்டு வரேன்" என உள்ளே சென்ற மங்கையின் சேலையை, அவரது பேத்திகளுள் ஒருத்தியான ஆர்த்தி பிடித்து எழுக்கவே, "என்னடா குட்டிமா? பாட்டி உன்னைப் பார்க்காம உள்ளே போயிட்டேனா! சாரிடா! வாங்க...வாங்க...பாட்டி தூக்கிக்கிறேன்!" என்ற கொஞ்சலுடன் அவளையும் உள்ளே தூக்கிச் சென்றார்.

ஆறு மாதங்களே நிரம்பிய அந்த குட்டித் தேவதையும், கால்களை உதைத்துக் கொண்டு தன் சந்தோஷத்தை வெளிப்படுத்த, "என் அம்மு குட்டி...என்ன சொல்றாங்க? பாட்டி வீடு ரொம்ப குஷியா இருக்கா?" என்ற கேள்வியுடன், தாய்க்கும் சேர்த்து காபி எடுத்துக் கொண்டு எதிரே வந்தாள் ஷைலு என்று செல்லமாக அழைக்கப்படும் ஷைலஜா!

"ம்ம் ரொம்ப ரொம்ப ஜாலி...இல்லைடா அம்மு!" - மங்கையின் இடது கை பெண்ணின் பக்கம் நீண்டிருந்தாலும், பேத்தியின் கால்களைப் பிடித்துவிட்டன; அவள் உதைத்ததில் வலி வந்திருக்குமாம்! கல்யாணம் முடிந்து எட்டு வருடங்கள் கழித்துப் பிறந்த செல்வங்கள் அல்லவா?

"அப்பாவோட வரண்டால உட்கார்ந்துக்கலாம்மா!" எனத் தாயையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றவளை, அவளது அடுத்த புதல்வி - ப்ரீத்தி தன் பொக்கை வாய் சிரிப்பால் ஈர்க்க, அவளைத் தன் மடியில் இருத்திக்கொண்டு தந்தையின் அருகே அமர்ந்தாள். தன் தாயின் மடியில் அமர்ந்திருந்த ப்ரீத்தியும், பாட்டியின் இடுப்பில் இருக்கை அமைத்திருந்த ஆர்த்தியும் இரட்டையர்கள்; ஆனால் ஜாடையில் வேறுப்பட்டவர்கள்!

தாயின் காபியைப் பார்த்து, ப்ரீத்தி "சப், சப்" என சப்புக் கொட்ட, "அம்மா...அப்புக்கு காபி வேணுமாம்! அவங்க அப்பா மாதிரியே - சரியான காபி பைத்தியம்! கொஞ்சூடு வாய்ல தொட்டு வைக்கட்டா?" என மகளை தன் ஆருயிர் கணவன் ஷ்யாம்சுந்தருடன் ஒப்பிட்டதோடு நிறுத்திக் கொள்ளாமல், மகளின் ஆசையையும் நிறைவேற்ற ஆசைப்பட்டாள்.

"காபி ஆகாது ஷைலு! பச்சைப் பிள்ளைக்கு கண்டதெல்லாம் கொடுக்கக் கூடாதும்மா..." என மங்கையர்க்கரசி எவ்வளவோ சொல்லியும், "ம்ம்..பிள்ளை ஆசைப்படுதும்மா. நான் குடிக்கிறதே பார்க்கிறா பாருங்க...ப்ளீஸ்மா...ப்ளீஸ்மா" எனத் தாயிடம் மகளுக்காக கெஞ்சிக் கொஞ்சி, கடைசியில் காபியை மகளின் வாயில் தொட்டுத் தொட்டு வைத்து, அவளது தாகத்தைத் தணித்தாள் அந்த அன்பு தாய்!

தாய் - மகள் - பேத்திகள் - அனைவரது செயல்களையும் மௌனமாய் கவனித்துக் கொண்டிருந்த தர்மராஜன் "ஷ்யாம் சொல்றது கரெக்ட் தான் குட்டிமா! நீ தான் பசங்களுக்கு அதிகம் செல்லம் கொடுக்கிற" என்றார் விரிந்த சிரிப்புடன்.

"ஆமா, ஆமா, அவர் என்னமோ செல்லமே கொடுக்காத மாதிரி! எப்படித் தான் ஒரு வாரமா இவங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு அங்க இருக்காரோ?" - செல்லமாய் சலித்துக் கொண்டாலும், சிங்கப்பூரில் வசிக்கும் கணவனை எண்ணி மனம் ஏங்கினாள் மகள்! அங்கிருந்து வருவதற்கு முன்னர் "ப்ரீத்தி குட்டி கன்னத்தில அழகா குழி விழுறது அப்பா கண்ணிலேயே நிற்குதாம்!", "என் ரூம்க்குள்ள போனாலே ஆர்த்தி..."ங்கா" "ங்கா" சொல்றமாதிரியே இருக்காம் அம்மாக்கு!" என அவனை நச்சு செய்தது, அவளுக்கு மறந்துவிட்டது குறிப்பிடத்தக்கது!

கணவனைப் பற்றிய பெருமையில் ஷைலஜா திளைத்திருக்கையில், "என்னவளே, அடி என்னவளே!" எனச் சிணுங்க துவங்கிய அவளது கைப்பேசி ஷ்யாம்சுந்தரின் அழைப்பு என்பதைக் காட்டிக் கொடுத்தது.

"ஹே குட்டீஸ், அப்பா பேசுறாங்க! வாங்க வாங்க!" எனப் பிள்ளைகளை அள்ளிக் கொண்டு உள்ளே விரைந்த மகளைப் பெருமையும், பூரிப்பும் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தனர், பெற்றவர்கள் இருவரும்.

பூரிப்பிற்கு காரணம் - எண்ணி எண்ணி ஏங்கிய செல்வ மகளின் தாய் கோலம்! பெருமையின் காரணம் - மகளும் மருமகளும் செய்திருக்கும் காரியம்; அப்படியென்ன காரியம் என்கிறீர்களா? ஷைலஜாவின் பொன்வயிற்றை கூடாக்கி அவள் ஈன்றெடுத்த வைரம் ஆர்த்தி மட்டுமே! ஆர்த்தி பிறந்த அன்றே அருகிலிருக்கும் சிவானந்த குருகுலத்திற்குச் சென்று - அந்த வாரத்தில் அங்கே சேர்ந்த குழந்தைகளுள் மிகவும் சிறு குழந்தையாய் (ஒரு மாதமே ஆனா) இருந்த குழந்தையை தத்தெடுத்து - ஆர்த்தியின் உடன் பிறப்பாய் ஆக்கியது தான் அக்காரியம்!

ஆனால், இந்த ஷ்யாம்சுந்தரை மருமகனாக்குவதற்குள் என்ன என்ன தடைகள்?

எட்டு வருடங்களுக்கு முன்னர் ஷைலஜாவிற்கு வரன் தேடத் துவங்கிய போது, முதன்முதலாக ஷ்யாமின் ஜாதகம் வர, வெளிநாட்டில் பெண்ணைக் கட்டிக் கொடுப்பதா என தர்மராஜன் தயங்கினார் என்றால், "அக்காவை வேற வீட்டுக்கெல்லாம் அனுப்ப முடியாது! அவளுக்குக் கல்யாணமே செய்யக் கூடாது! என் கூடவே தான் இருக்கணும்!" என கத்தி ஆர்ப்பாட்டம் செய்துவிட்டான் - அவர்களது கடைசி புதல்வன் - நிகேதன்.

நிகேதன் எப்போதுமே அப்படித் தான் - தாயை விட தமக்கையின் மீது ஓர் தனிப்பட்ட பாசம். அதற்கு காரணம் - நிகேதன் பிறந்தபோது கர்ப்பப்பை நீக்கப்பட்டதால் மங்கையர்க்கரசி நடமாடவே சிரமப்பட - தன் குட்டித் தம்பியை முழுக்க முழுக்க தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டாள் ஐந்தே வயதான ஷைலஜா - தந்தையின் உதவியோடு. ஆனால், தமக்கைக்கு அவன் கொடுக்கும் இடத்தில் கால் பங்கு கூட, தமையனுக்குக் கிடையாது!

ஆம், தர்மராஜன் - மங்கையர்க்கரசி தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் - மூத்தவள் ஷைலஜா - நடுவில் நவநீதன் - கடைசியாக நிகேதன்! ஷைலுவிற்கு நவீக்கும் மூன்றாடுகள் இடைவெளியிருக்க, பையன்கள் இருவரும் இரண்டே ஆண்டு இடைவெளியில் சண்டைக் கோழிகளாய் நின்றனர்!

நிகேதனின் கேலிப் பேச்சிலும், கிண்டலிலும், அதிரடி பாசத்திலும், அன்பான செய்கைகளிலும் வெளிப்படும் அன்பின் அதே அளவை குறைந்த வார்த்தைகளில் மிக பந்தமாய் வெளிப்படுத்திவிடுவான் பெரியவன் என்பது மங்கையின் கணிப்பு! ஆனால், ஷைலுவின் கருத்தோ "அன்பை வெளியேவே காட்டாமல் மனதிற்குள்ளேயே வைத்துக்

கொள்வதற்கு அது என்ன தீடத்தகாத பொருளா?" என்று இருக்கும்.

ஷைலஜா தனது B.E(ECE) படிப்பை முடித்துவிட்டு வேலைக்காக காத்திருந்தபோது தான், ஓர் குடும்ப நண்பரின் மூலமாக ஷ்யாமின் ஜாதகம் வந்துசேர்ந்தது. தாயை இளம் வயதிலேயே இழந்ததோடு அல்லாமல், தந்தையின் மறுமணத்தால் தனித்துவிடப்பட்டு, அதை விட்டு வெளிவருவதற்காக முயன்று படித்து, வெளிநாட்டில் வேலைக்குச் சேர்ந்து, சில ஆண்டுகளில் தனியே ஓர் தொழிலை நிர்வகிக்கும் அவனை தர்மராஜனுக்கு முதல் பார்வையிலேயே பிடித்திருந்தபோதும், அன்பு மகளை எப்படி சிங்கப்பூர் வரை அனுப்புவது என அவர் தயங்க, "எனக்கு டென்த் எக்ஸாம் வருது...அக்கா கூட இல்லைன்னா நான் ஃபைல் ஆகிடுவேன்!" என மிரட்டினான் இளையவன்.

அவனது பின்னணியிலேயே இளகியிருந்த ஷைலஜா, அவனது புகைப்படத்தைக் கண்டதும் சிவந்த முகத்திலும், சிரித்த மௌனத்திலுமே தன் சம்மதத்தை வெளிப்படுத்த பெற்றவர் இறங்கிவந்தார் எனினும், தம்பியப்பன் தான் முரண்டு செய்தான்.

முடிவில், அவர்கள் வீட்டில் வேலை செய்யும் வேலம்மாவின் மகள் தாமரைச்செல்வி "நிகேதன் சார், இன்னைக்கு எங்க தமிழ் வாத்தியார்...அன்புடைமை அதிகாரம் நடத்தினாங்க...அதில இரண்டாவது குரல் நடத்தினப்போ எனக்கு உங்க நினைப்பு தான் வந்துச்சு... அதான்...
"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு."ன்னு வருமே அந்தக் குரல். நீங்களும் ஷைலு அக்காவோட அன்பை உங்களுக்கே உங்களுக்குன்னு மட்டும் வச்சிட்டு...அக்காவை கஷ்டப்படுத்துறீங்க இல்லை..." எனத் தன் மனதிற்கு இனிய ஷைலு அக்காவின் சொல்லா துன்பத்தைக் காணச் சகிக்காமல், என்ன விஷயம் என்று தாயிடம் அறிந்து கொண்டு பிரச்சனையின் மூலத்தையே அவள் சீண்டிவிட, பிரச்சனைக்குரியவனின் முகத்தில் யோசனை படிந்து, இரண்டே நாட்களில் அவனைச் சம்மதிக்க வைத்தது!

இந்த செயலுக்கு பின்னர், ஏற்கனவே தாமரையின் மீது அன்பாய் இருந்த ஷைலஜா, தன் திருமண நகையோடு சேர்த்து அவளுக்கும் ஒரு சிறு தங்கச் சங்கலி வாங்கிப் பரிசளிக்கும் அளவிற்குச் சென்றாள்.

அதே போல், அவளது திருமணம் முடிந்த இரு ஆண்டுகளில் வேலம்மாள் கல்லுடைக்கும்

©Bhuvana's story

குவாரியில் நடந்த விபத்தால் உயிரிழக்க, தாமரையின் நிலையை எண்ணி சிங்கப்பூரிலிருந்து உடனே பறந்து வந்தாள். தாயை இழந்து தவிக்கும் கொடுமையை இச்சிறு பெண்ணும் அனுபவிக்க வேண்டுமே என்ற எண்ணத்தில், அதன் பின்னர் வந்த அவளது கல்வி செலவுகள் முழுதையும் ஷ்யாம் ஏற்று கொண்டான். அவனது பண உதவியில் கால் பங்கு கூட தேவையில்லாதது போல் தாமரைக்கு உபகார சம்பளங்கள் பலவகையில் கிடைத்தப்போதும், தனக்கு உதவி செய்யும் அந்த குடும்பத்தாரை தெய்வமாகவே கருதிவந்தனர் தாமரையும், அவளது தந்தை செல்லியப்பனும்.

இப்போது கூட, நவநீதனின் திருமண விஷயத்தில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியது ஷைலும், ஷ்யாமும் தான்!

அமெரிக்கா மாகாணத்தில் நியூயார்க் நகரில் வேலை செய்யும் தங்களது இரண்டாவது மகன் - நவநீதனுக்கு பெண் பார்க்க ஆரம்பித்தப்போது (ஷைலு பிரசவத்திற்காக தாய் வீடு வந்திருந்த வேளை), அவனது படிப்பிற்கும் (B.E(EEE) and M.Sc in BITS, Pilani, M.S in Nanotechnology), வேலைக்கும் (Senior Designer, Motorola Pvt Ltd.,) பெண்களின் ஜாதகங்கள் வந்து குவிய, அவர்களுள் தங்களுக்கு மிகவும் பிடித்த இரு பெண்களைத் தேர்வு செய்து முதலில் ஷைலுவிடம் காட்டினர் பெற்றோர்.

முதல் பெண்ணைப் பார்த்துவிட்டு, "நம்ம நவீக்கு இவள் கொஞ்சம் குட்டையா இருப்பாம்மா! உன் ரெண்டு பசங்களும் தான் மரம் ஏறாமலே காய் பறிக்கிற அளவுக்கு வளர்ந்து வச்சிருக்காங்களே!" என்ற விமர்சனத்தோடு நிராகரித்தவள், அடுத்த பெண்ணைப் பார்த்துவிட்டு "இந்தப் பொண்ணு நல்லா இருக்காம்மா! நம்ம செல்வி குட்டி மாதிரியே இருக்கா இல்லை...இவளையே நவீக்கு பர்க்கலாம்ம்மா!" எனத் தன் பக்கம் சம்மதத்தைக் கூறிய கையோடு, இடுப்பில் கைவைத்து மெல்ல எழுந்தவாறே "நவீ மாதிரியே செல்விக்கும் ஒரு மாப்பிள்ளை கிடைச்சா நல்லா இருக்கும்... செல்வி மாதிரி ஒரு பொண்ணு கிடைக்க அந்தப் பையன் கொடுத்து வச்சிருக்கணும்ன்னு ஷ்யாம் சொல்லிட்டே இருப்பார்! சொந்தத் தங்கை மாதிரி அவருக்கு அவ மேல அத்தனை பாசம்!" எனத் தனக்குத் தானே பேசிக் கொண்டு, கைப்பேசியில் காத்திருந்த கணவனை அவள் நாடிச் செல்ல,

அவளது கடைசி வாக்கியத்தைக் கேட்டிருந்த தர்மராஜனுக்கு மனதில் ஓர் விதை

விழுந்தது. அந்த விதை, ப்ரீத்தியை தத்தெடுத்துக் கொண்டு ஷ்யாம் மருத்துவமனையை மிதித்தப்போது விருட்சமாய் மாறியது. மருத்துவனான இளைய மகனின் பாசமிக்க கவனப்பில் மகளது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு, தங்கள் வீட்டின் முதல் பேத்திகளான ஆர்த்தியும்-ப்ரீத்தியும் ஒருங்கே தேறி, சீராய் சதையிட்டு, சிங்கப்பூர் குடியுரிமை வாங்கி, தங்கள் ஆருயிர் தந்தையிடம் சென்றபின்னர் நவநீதனின் திருமணப்பேச்சு மீண்டும் கிளம்பிய வேளையில், "நம்ம செல்வியையே நவீக்கு கல்யாணம் பண்ணி வச்சிடலாமா மங்கை? உன் கருத்து என்ன?" என மனைவியை கேட்டே விட்டார் - அந்த ஆசிரியர்.

சில நிமிட அமைதிக்குப் பின்னர் "இது எனக்குத் தோணவே இல்லை...பாருங்களேன்!" என்ற அங்கலாய்ப்பிலேயே தன் சம்மதத்தை, ஒத்த மனம் கொண்ட அந்த இல்லத்தரசி வெளியிட, இருபத்தைந்து வருடத் தாம்பத்தியம் அழகோவியமாய் மிளிர்ந்தது!!

"நம்ம நினைச்சா மட்டும் பத்தாது! செல்லியப்பன் சம்மதிக்கணும். பொண்ணு வாழ்க்கை பற்றி அவருக்கு நிறைய கனவுகள், திட்டங்கள் இருக்கலாம். அப்புறம் நவநீத் சம்மதிக்கணும். முக்கியமா செல்விக்குப் பிடிக்கணும். நாம அவளுக்கு படிக்க உதவி செய்திருக்கோம் என்பதற்காக அவ மேல இதை எந்த காரணத்தைக் கொண்டும் திணிக்கக் கூடாது!" என மிக நியாயமாய் பேசியவர், முதலில் மகனிடம் சம்மதம் பெற்றுவிட்டு, செல்லியப்பனிடம் பேசுவது என முடிவு செய்தார். பெண் வீட்டாரிடம் பேசிவிட்டு, நவநீத் மறுத்துவிட்டால்? அவன் தான் மூன்றாண்டுகளாக கல்யாணம் என்றாலே, "வேற பேசுங்கம்மா" என்கிறானே!

செல்வியை மருமகளாக்கும் எண்ணம் வந்ததுமே, மகனை அழைத்தப் பெற்றோரிடம் "கல்யாணமா? என்னம்மா அவசரம்?" என சலித்துக் கொள்ளத் தான் செய்தான். ஆனால் மங்கையர்க்கரசியின் "நான் சொல்லவரதை இரண்டே இரண்டு நிமிஷம் பொறுமையா கேளு கண்ணா! நானும் அப்பாவும் நம்ம செல்வியை உனக்குப் பார்க்கலாமான்னு நினைச்சோம். உனக்குப் பிடிச்சிருந்தா மேல பேசலாம். இப்போ பேசி வச்சிட்டு ஒரு வருஷம்...ரெண்டு வருஷம் கழிச்சுக் கூட கல்யாணம் செய்துக்கலாம்! நிச்சயம் பண்ணி வச்சுட்டா எனக்க் கொஞ்சம் மனசு நிம்மதியா இருக்கும் ராஜா! அப்பாவும் நானும் நிம்மதியா நாலு மாசம் சிங்கப்பூர் போயிட்டு வருவோம்... இல்லைன்னா பொண்ணு பார்க்கிற வேலையில இங்கேயே இருக்கணும்...கவலையும் வேற...என்ன சொல்றே?" என மிகவும் நாயமா பேசினார்.

அத்தனை நயம் தேவையே இல்லாதது போல், "செல்வியையா?" என சில வினாடிகள் யோசித்தவன், "ஹ்ம்ம் சரிம்மா...பாருங்க!" என்றான் மகன்.

அவனது சம்மதம் இப்போதுதான் கிடைத்திருக்க, மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைத் திட்டமிடத் தொடங்கினர் பெரியவர்கள் இருவரும்!

அத்தியாயம் 2

அன்றைய தினமே மங்கையர்க்கரசியும், தர்மராஜனும் செல்லியப்பனைக் காண அவரது வீட்டிற்குச் சென்றனர். வீடு என்றால் நான்கு சுவர்களும், இரு பக்க கூரையும் கொண்ட ஓர் குடிசை தான். ஆனால், அங்கே வாழ்ந்து வந்த தந்தையும், மகளும் தங்களிடையே நிலவும் பாசத்தால் அதை வீடென்று ஆக்கி வைத்திருந்தனர்.

அவரது வேலை நேரம் முடிவதைக் கணக்கிட்டு தான் பெரியவர்கள் இருவரும் சென்றது. அது சரியே என்பது போல், அவர்களது கார் அந்த வீட்டின் முன் நின்று, பத்து நிமிடங்கள் கழிந்த பின்னரே செல்லியப்பன் எங்கிருந்தோ ஓடிவந்தார்.

"வாருங்க...வாருங்க! என்னங்கையா இம்புட்டு தொலைவு? சொல்லியிருந்தா நானே வீட்டுப் பக்கம் ஓடியாந்திருப்பேனே!" என வந்தவர்களை வரவேற்ற அந்த பெரியவர் தர்மராஜனை விட சிறியது தான் என்றாலும், தேகம் கருத்து, உடல் இளைத்து, கைகள் முரடாகி அவரது மூப்பை உயர்த்திக் காட்டியது! அவர் பார்க்கும் கல் உடைக்கும் வேலையின் பாதிப்பு அப்படி!

அந்த சிறு வீட்டிற்குள் அவர்களை வரவேற்று, பையை விரித்து அமரச் சொன்ன செல்லியப்பன், காப்பி வாங்கிவென வெளியே செல்ல எத்தனிக்க, சிறிது நேரம் செல்லட்டும் என அவரை நிறுத்திவைத்தனர் தம்பதியர்.

"இருக்கட்டும் செல்லியப்பன்! எங்களுக்கு ஒரு காரியம் என்றால் நாங்க தானே வரணும். அதை விடு, நீ எப்படி இருக்கே? செல்வி நல்லா இருக்காளா? ஃபோன் ஏதும் செய்தாளா?" எனத் தன்னிலிருந்து அவரது மகள் பக்கம் பேச்சைத் திருப்பினார் தர்மராஜன்.

மகளைப் பற்றிய கேள்வி முகத்தில் பெரும் பிரகாசத்தை உண்டு பண்ண, "பாப்பா நல்லா இருக்குதுங்களாம். தினைக்கும் ராவுக்கு ஒருக்கா...பகலைக்கு ஒருக்கா இந்த குட்டி

போன்ல பேசிடுதுங்க. அது பேசினா தானுங்க அய்யா நமக்குப் பேசத் தெரியுது. எனக்கா இதில எந்த பொத்தானை அமுக்கி எப்புடி பேசுறதுன்னு தெரியலீங்க! நீங்க சேர்த்துவிட்ட இடத்தில சாப்பாடு, ஆளுங்க எல்லாம் நல்லா இருக்குதாம்..." என விரிந்த முகத்துடன் பேசினார் செல்லியப்பன் - சென்னையில் இருக்கும் பிரபல மென்பொருள் நிறுவனத்தில் ஆறு மாதங்களாய் வேலை பார்க்கும் மகள் வாங்கிக் கொடுத்த கைப்பேசியை மெல்ல வருடியவாறே!.

"ஹோ, செல்ஃபோன் வாங்கிக் கொடுத்திருக்காளா உங்க பொண்ணு? உங்க பொண்ணு கூட மட்டும் தான் பேசுவீங்களா? இந்த நம்பர் எங்களுக்கெல்லாம் கிடையாதா?" என மங்கை சிரிப்புடன் கேள்வி கேட்க,

"ஐயோ என்னமா இப்படி சொல்லிட்டீங்க? அதை வச்சுக்கிட்டு நான் என்ன செய்யப்போறேனுங்க...இந்த துண்டு காகிதத்தில பாப்பா நம்பரு எழுதிக் கொடுத்திருக்கு. யாருன்னா ஃபோன் நம்பர் கேட்டா இதை குடுப்பான்னு சொல்லிச்சு" என மனைவியின் படத்திற்குப் பின்னாலிருந்து ஒரு சின்ன காகிதத்தை எடுத்து, மங்கையிடம் நீட்டினார்.

அவர் கொடுத்த எண்ணை தனது கைப்பேசியில் குறித்துக் கொண்ட மங்கை, கணவரைப் பார்த்து "பேசுங்க" என்பது போல் ஜாடை காட்ட, பதிலுக்கு தர்மராஜன் "பொறுமா" என அங்கே கண்களாலேயே இருவரும் ஓர் போர் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களது மௌனபாஷையில் பெரிதாய் ஒன்றும் விளங்காமல், "என்னங்கையா? எதுனா முக்கியமான விசயமா?" என எடுத்துக் கொடுத்தார் செல்லியப்பன், தனக்குக் கிடைக்கப் போகும் இன்ப அதிர்ச்சி தெரியாமல்.

"செல்வி கல்யாண விஷயம் தான்!" என தர்மராஜன் தொடங்க, செல்லியப்பனின் முகம் மேலான ஆச்சிரியத்தைக் காட்டியது. தர்மராஜனின் குடும்பம் செம்பட்டிக்கு குடியேறி வந்தபோது, இவர்களுக்கும் அந்தக் குடும்பத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை தான் - தர்மராஜன் தலைமை ஆசிரியராய் இருக்கும் மேல்நிலை பள்ளியில் செல்வி ஆறாம் வகுப்பு படிக்கிறாள் என்பது தவிர!

தானும், தன் மனைவி வேலம்மாளும் கல்லுடைத்து சம்பாதிக்கும் காசில் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்க, அந்த சிரமமான ஓட்டத்தை தடை செய்யும் பொருட்டு செல்விக்கு உடம்பு முடியாமல் போகவே, அதற்குத் தேவையான வைத்தியச் செலவிற்காக தான் வேலம்மா

வாத்தியார் வீட்டிற்கு சுற்று வேலைக்குச் சென்றதே. உடம்பு சரியானதும் செல்வியும் அங்கே செல்ல, அவளது படிப்பு ஆர்வத்தையும், தங்களது நிலைமையையும் பார்த்து தர்மராஜன் செய்த உதவிகள் ஆயிரம்! படிப்பில் துவங்கி, தன் மனைவி இறந்த நேரம் உள்ளுக்குள் நொறுங்கிப் போயிருந்த மகளைத் தேற்றி, படித்துக் கொண்டிருக்கும் போதே மகளுக்கு வேலை கிடைக்க - அந்த வேலையில் அவளை அமர்த்தியதோடு நில்லாமல் உணவு உறைவிடம் என அனைத்தையும் பார்த்துச் செய்தவர்கள் - இப்போது திருமணத்தைப் பற்றி பேசவே அவருக்கு ஆச்சிரியமாய் தான் இருந்தது! இக்குடும்பத்திற்கு வேலை செய்தது தவிர வேறு என்ன செய்தோம் என்ற ஆச்சிரியம்!

"செல்வியோட கல்யாணத்தைப் பத்தி நீங்க ஏதாவது யோசிச்சு வைக்கலைன்னா நாங்க ஒன்னு கேட்கலாமா?" என மங்கை அங்கிருந்து பிடித்துக் கொள்ள,

வெளியிலிருந்து ஒருவர் வந்து மகளின் திருமணத்தைப் பற்றி பேசியதும், தன் மகளின் திருமணம் பற்றி யோசியமாலே இருந்துவிட்டோமே என்றே கவலை அவரது ஆச்சிரியத்தை மூடியிட்டு மறைக்க "அப்படி எதுவும் இல்லைங்க அம்மா...சின்னப் புள்ளை தானேன்னு இருந்துட்டேனுங்க! எடுத்துச் சொல்ல அது அம்மா வேற இல்லைங்களே!" என்றவரின் குரல் கலங்கியிருக்க, அதை சரியாக படித்தார் முன்னாள் தலைமை ஆசிரியர்.

"நீங்க கலங்குறதுக்காக சொல்லலை...செல்லியப்பன்! எங்களுக்கு ஒரு ஆசை. அதை உங்ககிட்ட சொல்லி உங்க சம்மதம் வாங்கலாம்ன்னு வந்தோம்!" என்றவர் மேலும் பேச்சை வளர்க்காமல், "எங்க ரெண்டாவது பிள்ளை - நவநீதனுக்கு உங்க மூத்தப் பெண் தாமரைச்செல்வியை பெண் கேட்டு வந்திருக்கோம். உங்களுக்கும் செல்விக்கும் பிடிச்சிருந்தா மேல பேசலாம். உங்களுக்கு வேற விருப்பமிருந்தாலோ...இல்லை இஷ்டமில்லை என்றாலோ தயங்காம சொல்லிடுங்க. நாங்க தப்ப எடுத்துக்க மாட்டோம்! எங்களுக்கு செல்வியும், ஷைலு மாதிரி தான். அவ நல்லா இருந்தா போதும்" என தர்மராஜன் முடித்தப்போது, செல்லியப்பனின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"என்னண்ணா இது?" என மங்கை பதற, "உணர்ச்சிவசப்படாதீங்க செல்லியப்பன்! யோசிச்சு பதில் சொல்லுங்க!" என்றவரை இடைமறித்து, "உங்க வீட்டில வாழ என் மக கோடி புண்ணியம் பண்ணியிருக்கனுங்கய்யா! எனக்கு என்ன பேசுறதுன்னே புரியலைங்க..." எனத் தடுமாறினார் தாமரையின் தந்தை.

©Bhuvana's

அவரது வார்த்தையிலிருந்தே சம்மதத்தைப் பிரித்தெடுத்த மங்கை "ரொம்ப சந்தோசம் அண்ணா!" என மகிழ, தர்மராஜனோ "செல்விகிட்ட பேசுங்க! அவ மனசுக்குப் பிடிச்சிருந்தா எங்களுக்கு சொல்லி அனுப்புங்க. அடுத்தகட்ட வேலையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்!" என செல்வியின் சம்மதத்தை முன்னிறுத்தி பேசிவிட்டு, நெகிழ்ந்திருந்த செல்லியப்பனிடம் விடைபெற்றதும் வெளியேறினார்.

விருந்தினர் இருவரும் கிளம்பிச் செட்றதும், மகளின் அழைப்பிற்காக வெகு ஆவலுடன் காதிருக்காலனார் செல்லியப்பன். ஒரு மாதம் முன்னர், மூன்று நாட்கள் விடுமுறையில் வந்திருந்த மகள் வாங்கிக் கொடுத்திருந்த அந்த சின்னச்சிறு கருவியையே ஆசையோடு பார்த்துக் கொண்டு, ஒரு வினாடி கூட அதை தன்னிடமிருந்து பிரிக்காமல் கூடவே வைத்துக் கொண்டு சுற்றியவரின் தாகம் தணிக்க, சரியாக ஒன்பது மணிக்குத் தந்தையை அழைத்தாள் செல்வி.

மகள் சொல்லிக் கொடுத்திருந்தது போல், மணி அடித்த மறு நொடியே அதன் பச்சை பொத்தானை பரபரப்புடன் அமுக்கியவர் "பாப்பா!" என்றார் ஒற்றை சொல்லாக.

அந்த ஒற்றை சொல்லே, தந்தை தனது குரலைக் கேட்க ஆவலாய் இருந்திருக்கிறார் என்பதைப் பறைசாற்ற, அந்தப் பக்கமிருந்த செல்வியும் "அப்பா...எப்படி இருக்கே? சோறு பொங்கி...சாப்பிட்டியாப்பா?" என்றாள் தாயின் கனிவுடன்.

"இல்லைடா பாப்பா! நீ எப்ப பேசுவேன்னு இதையே பார்த்திட்டு இருந்தேனா... பசி எடுக்கவே இல்லை கண்ணு!" எனத் தந்தை பதில் கொடுக்க, "ரமாக்கா கடையில ரெண்டு இட்லியானும் வாங்கிச் சாப்பிடுப்பா. நான் தான் ஒன்பது மணிக்குக் கூப்பிடுறேன்...அதுக்குள்ளே சாப்பிட்டிருன்னு சொன்னேன் இல்ல? என்னப்பா நீயு? போ...முதல சாப்பிட்டு வா... அப்புறம் பேசலாம்" எனக் கடிந்து கொண்ட மகள், கைப்பேசி அழைப்பை இப்போது துண்டிப்பதாகவும், கால் மணி நேரத்தில் அழைப்பதாகவும் கூறி பிடிவாதமாய் நின்று தந்தையை உணவுண்ண அனுப்பிவைத்தாள்.

சொன்னது போல் கால் மணி நேரம் கழித்து அழைத்தவள், "சாப்பிட்டியாபா? உன்னைப் பார்த்ததும் ரமாக்கா கடைசி கரண்டி மாவில ஊத்தின தோல் இட்லியை போட்டுச்சா...உன்னைப் பார்த்தாலே ஏயக்கணும் போலிருக்கும் போல...நீயாவது வாயைத் திறந்து கேட்டியா இல்லையா?" எனத் தந்தையைக் குடைந்தவளை ஒரு வழியாக சரிகட்டி, "இன்னைக்கு நம்ம வூட்டுக்கு வாத்தியார் அய்யாவும், அவுக வீட்டம்மாவும்

வந்திருந்தாங்க பாப்பா!" என விஷயத்தைத் தொடங்கினார் செல்லியப்பன்.

"சாரா? அம்மாவும் கூட வந்தாங்களா? என்ன விஷயம்ப்பா? ஷைலு அக்கா வந்திருக்காங்களா? குட்டிப் பிள்ளைங்களை பார்க்கணும் போலிருக்கு...பிறந்தாப்புல பார்த்தது!" என செல்வியின் குரலில் துள்ளல் அப்பட்டமாய் எட்டிப் பார்த்தது.

"ஷைலு பொண்ணு வந்திருக்கான்னு தெரியலையே பாப்பா! கேட்க மறந்துட்டேனே!" என வருந்திய தந்தையிடம் வேறென்ன விஷயம் எனக் கேட்டாள் மகள்.

அந்த கிராமத்து மனிதருக்கு சுற்றி வளைத்தோ, நாசூக்காகவோ பேசத் தெரியாமல் போனதால் "நவீ தம்பிக்கு உன்னைப் பொண்ணு கேட்டு வந்தாங்க பாப்பா! எனக்கு எவ்வளவு சந்தோஷமா..." என விஷயத்தைப் பட்டென உடைத்தவர், மேலும் பேசிக் கொண்டே செல்ல, அந்தப் பக்கம் செல்வி செயலிழந்து போனாள்.

அவர்கள் வீட்டிற்குத் தான் மருமகளா? ஆனால் ஏன்?
நவநீதன் அண்ணா படித்த படிப்பிற்கு வேறு பெண்ணா கிடைக்கவில்லை?
அவர்களை விட அந்தஸ்தில், படிப்பில், ஏன் வாழும் முறையில் கூட கிட்டே நெருங்க முடியாத தன்னை ஏன்?
அதுவும் அவர்கள் வீட்டில் வேலை பார்த்த ஒருத்தரின் மகளை...படிக்க வைத்தார்கள்...உணவிட்டார்கள்...நல்ல நாள் பெரிய நாளில் துணி எடுத்துக் கொடுத்தார்கள்...ஒரு படி மேலே போய் ஷைலஜா அக்காவின் கல்யாணத்திற்கு நகை வாங்கிக் கொடுத்தார்கள்...ஆனால் திருமணம்? மருமகள்? செல்வியின் மனதில் ஆயிரம் கேள்விகள் தொடர்ந்து முளைத்தன.

அவளது கேள்வி படையை ஈட்டிக் கொண்டு தடுக்கும் போர் வீரனாய் "நீ என்ன சொல்றே பாப்பா? உனக்குப் பிடிச்சிருந்தா மேக்கொண்டு பேசலாம்ன்னு வாத்தியார் சாரு சொன்னாரு" என ஆர்வமே உருவாய் செல்லியப்பன் கேட்க,

"நீ என்னப்பா சொன்னே?" என அவரை எதிர்கேள்வி கேட்டாள் தாமரை.

"என்னத்த சொல்லுறது...அவங்க கேட்டதும் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கிட்டு...எனக்குப் பேச்சே வரலை...எவ்வளவு பெரிய இடம்...உன் ஆயி

©Bhuvana's

சொல்றமாதிரி நீ ராணி மாதிரி இருக்கப் போறேன்னு நினைச்சேன் பாப்பா" என்றார் செல்லியப்பன் சந்தோஷ மிகுதியில்.

"ம்ம்"

"என்ன பாப்பா? நீ என்ன சொல்றே? உனக்கு இஷ்டம்மான்னு வாத்தியார் சார் கேட்கச் சொன்னாரு...உனக்குப் பிடிச்சிருந்தா தான் மேல பேசுறதுன்னு சொல்லிட்டாரு...பெரிய மனுஷங்கன்னா பெரிய மனுஷங்க தான்!"

"இல்லப்பா...இப்பத் தானே வேலைக்குச் சேர்ந்திருக்கேன். கொஞ்ச நாள் வேலை பார்த்திட்டு...உனக்கு ஏதாவது ஒரு வழி அமைச்சுக் கொடுத்திட்டு..." - மகள் இழுக்கையிலேயே

"என்ன கண்ணு வேலை? இந்த மாதிரி சம்பந்தம் நாம தலை கீழா நின்னா கூட கிடைக்காது பாப்பா! அவுங்களே வீடு தேடி பொண்ணு கேட்கும்போது நாம வேணாம்ன்னு சொல்லக் கூடாதும்மா! பிரவு...நீ எனக்கென வழி செய்ற? இப்போ நான் என்ன கதியத்து போயா இருக்குதேன். இத்தினி நாள் சோறு போட்ட இந்த கல்லுடைக்கிற தொழிலு இன்னும் கொஞ்ச காலத்துக்கு என்னைய காப்பாத்தும் கண்ணு! என்னைப் பத்தி நினைச்சிட்டு நீ தயங்காத" - எனத் தன் பக்கத்துக்கு வாதத்தை எடுத்து வைத்தார் தந்தை.

அவர் பேசியதில் கல்யாண விஷயத்தை விட்டுவிட்டு, அவர் வேலைக்குச் செல்வதை மட்டும் எடுத்துக் கொண்டு "ஆமா, நீ இன்னும் கல்லுடைக்கிறதுக்குத் தான் நான் இவ்வளவு கஷ்டப்பட்டு படிச்சனாக்கும்! அந்த தொழிலை விட்டுட்டு வீட்டில நிம்மதியா இருன்னா கேட்கிறியா? இல்லன்னா நீயும் இங்கேயே வந்திடு...ரெண்டு பேருமா ஒரு வீடெடுத்து தங்கிக்கலாம்" எனக் கடுமைக் குரலில் கட்டளையிட்டாள் இளையவள்.

"உழைச்ச உடம்புத்தா, சும்மா இருந்தா மரத்துப் போய்டும். நீ கலியாணத்திற்கு சரின்னு ஒத்தை வார்த்தை சொல்லு நீ சொல்லுறதை நான் அச்சுக் கல் கணக்கா கேட்குறேன்!" என அதிலும் மகளின் திருமணத்திற்கே அடி போட்டார் அந்தப் பெரியவர்.

அவரது பேரத்தில் பட்டென சிரித்த மகள் "அப்பா...நீயாப்பா? இப்படி பேசுறே? உனக்கு

இப்படி சாமர்த்தியமாவெல்லாம் பேசத் தெரியுமா?" என்றாள் சிரிப்பினூடே சந்தோஷமாய்.

"போ கண்ணு!" என அதற்குள் செல்லியப்பன்னுக்கு வெட்கம் வந்துவிட்டது.

"ஹே எங்கப்பாவுக்கு வெட்கம் வந்திட்டுது டோய்" என்ற செல்வி மேலும் சிரித்துவிட்டு, "சரிப்பா, போய் படு! நாளைக்குப் பேசுறேன்" என அழைப்பைத் துண்டிக்க முற்பட்டாள்.

ஆனால், மகளின் சம்மதத்தை எதிர்நோக்கியிருந்த தந்தையோ "என்ன பாப்பா...ஒண்ணுமே சொல்லலையே? உனக்கு இஷ்டமில்லையோ? பணம் காசு போனாலும் போயிட்டுப் போகுது...உனக்கு மனசு பிடிச்சா தான் பாப்பா மேல பேசணும். நீ விரும்பலைன்னா வேண்டாம் கண்ணு!" என்றார் உற்சாகம் முழுசாய் வடிந்த குரலில்.

அழைப்பை எடுத்தப்போது அவர் குரலிலிருந்த குதூகலமும், இப்போது தென்படும் வருத்தமும் மனதை வருத்த "அப்படியில்லைப்பா..." என இழுத்தாள் மகள். அந்த ஒற்றை வார்த்தையைத் தன் மனதின் ஆசைப்படி அர்த்தம் கொண்டு "அப்போ, சம்மதமா பாப்பா?" எனத் துள்ளினார் தந்தை.

"கொஞ்சம் யோசிச்சு சொல்லவா?" எனக் கேட்டு, "நாளைக்கு காலையில சொல்றேன்பா! என்ன?" என அவளே நேரம் காலமும் குறிக்கவே, "நல்லா யோசிச்சு நல்ல முடிவா சொல்லுமா! நானும் உன் ஆயியும் காத்திருப்பம்" என்ற செல்லியப்பன், மனைவியின் பூவிட்ட படத்தைப் பார்த்தவாறே அழைப்பைத் துண்டித்தார்.

தந்தையிடம் பேசிய விஷயத்தை அசை போட்டவாறே தன் படுக்கையில் விழுந்த செல்வி எனத் தெரிந்தவர்களால் அழைக்கப்படும் தாமரைச்செல்வி - எப்போதும் தந்தைக்கும், தாய்க்கும் "பாப்பா" தான் - வெளியாட்களிடம் சொல்லும்போது கூட "செல்வி" என்ற பெயர் இருவர் வாயிலும் வரவே செய்யாது - "எங்க பாப்பா" என்பது தவிர, அவளுக்கு அவர்கள் வேறு அடைமொழி கொடுத்ததே இல்லை!

திருமணமாகி எட்டு வருடங்கள் சென்றபின்னர் பிறந்த மகளிடம் பெற்றோர் இருவருக்கும் இயல்பாய் இருந்த பாசம், அவள் நன்றாக படிக்கவே அவளது படிப்பும் நலனும் குறிக்கோளாய் வாழ்ந்து வந்தனர் எனலாம். இருவரும் கூலி வேலை (கல் குவாரியில் தினக்கூலிக்கு கல் உடைப்பது) செய்தாலும், மகளின் வயிறோ படிப்போ வாடாமல்

பார்த்துக் கொண்டனர்.

பக்கத்துக்கு வீட்டுப் பிள்ளைகள் சிலரை அவர்களது பெற்றோர் கல்லுடைக்க அனுப்பியபோது, தானும் வேலைக்கு வருகிறேன் என்று நின்ற செல்வியிடம் "எங்களுக்கும் நீ உளைக்கனும்ன்னு ஆசை தான். ஆனா, இப்படி காடுலையும் கல்லுலையும் இல்லை. உசந்த உத்தியோகத்தில் உட்கார்ந்து என்னையும் உன் அப்பனையும் நீ பார்த்துக்கணும் கண்ணு! அப்படி ஓர் இடத்துக்குப் போகணும்னா நல்லா படிக்கணும். அதனால படிக்கிறது தான் உனக்கு இப்போ வேலை" என அறிவுறுத்தி நிறுத்தி வைத்தார் வேலம்மாள்.

அன்றாட சோற்றுக்கும், வருஷத்திற்கு ஒரு முறை நல்ல துணிக்கும் என்று போய் கொண்டிருந்த வாழ்வில், தாமரைச்செல்விக்கு வந்த மஞ்சள்காமாலை நோய் தான் தர்மராஜன் சார் குடும்பத்தை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தது. வீட்டில் சுற்று வேலைக்கு என்று சென்ற வேலம்மாவை மங்கை நடத்திய முறையில், தேவைக்கு மீறிய போதும் அந்த வீட்டு வேலையை விடாமல் செய்தார் செல்வியின் தாயார். மங்கையின் சுடு சொல் கலக்காத பேச்சோ, வேலம்மாவின் முகம் சுளிக்காத வேலையோ, தர்மராஜனின் மாணவி என்ற நிலையோ அல்லது அவளது சூடிக்கையான படிப்போ ஏதோ ஒன்று செல்வியின் குடும்பத்தை தர்மராஜனின் குடும்பத்தோடு கட்டிப் போட்டிருந்தது.

அந்த பிணைப்பு, வேலம்மாவின் இறப்பிற்குப் பின்னர் மேலும் இறுக பின்னப்பட்டது என்று தான் சொல்லவேண்டும். அப்போது தான் பூப்படைந்திருந்த செல்விக்குத் தன் உயிரான தாயார் இறந்ததை உணர்ந்துகொள்ளவே முடியவில்லை. தாயின் சேலையை விரித்து அதில் சுருண்டு படுத்துக் கொண்டு, வீட்டை விட்டு நகர மறுத்தவளை, மங்கையும் ஷைலஜாவும் தான் மெல்ல மெல்ல தேற்றினார். உணவையே மறந்திருந்தவளுக்கு, உணவிட்டதோடு நில்லாமல் அவள் உயிராய் எண்ணும் படிப்பு தான் அவள் தாயின் உயிர் என உணரவைத்து, அவளை வெளியே கொண்டும் வந்தனர்.

அவர்கள் மட்டுமல்ல, நிகேதனும் தான்! அவர்கள் இருவரும் அன்பு வார்த்தையால் செல்வியைத் தேற்றினார் என்றால் நிகேதன் சவாலிலும், கேலியுலுமே அவளை உசுப்பிவிட்டு, அவளுள் இருக்கும் சுடுரை தூண்டிவிட்டு ஒளி பெறச் செய்தான்!

"அம்மா இறந்தது கஷ்டமா தான் இருக்கும். அதுக்காக உலகமே அழிஞ்ச மாதிரி ஓவர்

அசோகவன சீதை மாதிரி சீன் போடறாம்மா...சும்மா ஸ்கூல்க்கு மட்டம் போட பிளான் பண்றா!"

"இவளையும் பேசாம கல்லுடைக்க அனுப்புங்க! என்னோட வேலை படிக்கிறது தான்னு எங்கம்மா சொல்லியிருக்குன்னு சொல்லிட்டே நல்லா நாலு கல்லை உடைக்கட்டும். அப்போ தான் புத்தி வரும்!"

"நான் தான் கிளாஸ் பிரஸ்ட்டுன்னு இனிமேல் பீத்த முடியாது. அந்த சரோஜா பொண்ணு பிரஸ்ட் ரேங்க்கைத் தட்டிட்டுப் போகப் போகுது. இது 'ஙே'ன்னு வாயைப் பார்த்திட்டே இருக்கட்டும்!"

"இவ இப்படி இருக்கிறதைப் பார்த்து இவங்க அப்பாவுக்கும் முடியாம வரணுமா? அது தான் அவளோட ஆசையான்னு கேளுங்க!" என அவள் காதுபடவே மங்கையிடம் பேசிய நிகேதனின் பேச்சுத் தான் செல்வியை நேர் செய்தது எனலாம்.

நேர் செய்து கொண்டுவந்ததோடு நிறுத்திவிடாமல், அவள் பத்தாவதில் பள்ளியில் முதல் மாணவியாக வந்தபோது, தந்தை தனக்குத் தரும் பணத்தில் - ஹீரோ பேனா ஒன்றை வாங்கி அவளுக்குப் பரிசளித்தான் அந்த பெரிய மனிதன்.

அதே போல், பொறியியல் கல்லூரியில் சேர்ந்து அவள் ஆங்கிலத்தைக் கண்டு அரண்டு மிரண்டு அழுதபோது, மதுரை மருத்துவக் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்த நிகேதன் விடுமுறை நாட்களில் வீட்டிற்கு வரும் நேரமெல்லாம் - அவளது ஆங்கில வாத்தியாராக அவதாரம் எடுத்தான். அதற்கு அவன் அவளைப் படுத்திவைக்கும் பாடை இப்போது நினைத்தாலும், செல்விக்கு சிரிப்பு தான்!

"இங்கிலீஷ் படிக்க வந்தியா? இது என்ன? அது ஏன் அப்படி இருக்குன்னு கேள்வி கேட்க வந்தியா? oppurtunity ஐ ஏன் ஆப்பர்ச்சுனிட்டின்னு சொல்றாங்க...ஒப்பர்ச்சுனிட்டின்னு சொல்லாம அப்படின்னு கேள்வியெல்லாம் கேட்டா நீ என்ன பெரிய படிப்ப்ஸா? பிச்சுப் புடுவேன் பிச்சு!"

"இன்னைக்கு சொல்லிக் கொடுத்ததுக்கு சன்மானமா இந்த ரெகார்ட்-டை வரைஞ்சு வச்சிட்டுப் போ!"

"இன்னைக்கு ரெகார்ட் எதுவுமில்லை. அதனால இன்னைக்கு சன்மானம் - உங்க வீட்டு சாப்பாடு! ஓடு ஓடு... சீக்கிரம் எடுத்திட்டு வா! அம்மா...இந்த வாண்டுக்கு அந்த முட்டை பிரியாணியை கொடுத்திடுங்க. எனக்கு ஒரு சூப்பர் சாப்பாடு வருது!"

"ஒரு தடவை சொல்லிக் கொடுத்தா புரிஞ்சுக்கத் தெரியாதா தத்தி...தத்தி!"

"போன வாரம் செய்யச் சொன்ன வீட்டுப்பாடம் எங்க? காலேஜ்ல இன்டெர்னல்ன்னா என்னோட வீட்டுப்பாடம் செய்யமாட்டியோ? கொழுப்பு! தோட்டத்தில இருக்க பெஞ்ச் மேல அரை மணி நேரம் நின்னுட்டு... இனிமேல் நிகேதன் சார் கொடுக்கிற வீட்டுப்பாடத்தை ஒழுங்க செய்வேன்! சின்னப் பையன்னு அவரை ஏய்க்கமாட்டேன்னு நிறுத்தாம சொல்லிட்டே இரு!"

இப்படியெல்லாம் அவளைப் படுத்தி வைத்திருக்கிறான் தான் என்றபோதும் நிகேதன் மீது அவளுக்குப் பிரியம் தான்! தன் மனதிற்கினிய ஷைலு அக்காவும், ஷ்யாம் அண்ணாவும் அவனது மனதிற்கும் இனியவர்களாய் இருந்ததாலோ என்னவோ! (இதற்கும் நிகேதன் கேலி செய்வான் தான் - "அக்கா, அத்தான் உனக்கு அண்ணாவாம்! நம்ம செல்வி மேடம் சொல்லிட்டாங்க! என்னமோ நான் தான் உன் கல்யாணத்தை வேண்டாம்ன்னு சொன்னேன்னு எல்லாரும் என்னைத் திட்டினாங்க! இவ என்னடான்னா கல்யாணத்திற்கு அப்புறம் ஒரு புரட்சி உண்டு பண்ற மாதிரி உறவையே மாத்துறா!" என அவன் விதவிதமாய் கேலி செய்தபோதும் செல்வி மாற்றிக் கொள்ளவே இல்லை!)

அவனை மணக்கக் கேட்டிருந்தால் உடனே சம்மதித்து இருப்பாளோ என்னவோ, பார்க்கும் போது ஓர் புன்சிரிப்பும், "நல்லா இருக்கியா? ஒழுங்கா படி" என்ற குறுகிய விசாரிப்புமாய் இருந்த நவநீதனின் முகத்தை பலத்த முயற்சிக்குப் பின்னர் கண்ணிற்குள் கொண்டுவந்து யோசிக்க ஆரம்பித்தாள் செல்வி. பாதி நாள் வெளியூரிலேயே இருந்தவனின் முகத்தை முயன்று மனதில் இருத்தி, தந்தைக்குக் கூற வேண்டிய முடிவை அசைப்போட்ட அவளது யோசனை வெகு தூரம் ஓடும் முன்னர், தூக்கம் அவளை நாடி ஓடிவந்துவிட, சூர்யனும் நிலவின் இடத்தைப் பிடிக்க விரைந்தோடி வந்தான்.

காலையில் எழுந்ததுமே, ஆவலே உருவாய் காத்திருக்கும் தந்தையின் முகம் நினைவு வர, சொன்ன நேரத்திற்கு அவரை அழைத்த மகள் - "உனக்குப் பிடிச்சிருந்தா எனக்கும் சம்மதம்பா. ஆனா, நான் சார்கிட்டயும், அம்மாகிட்டயும் கொஞ்சம் பேசணும். என்ன சரியா?" என்றபோது தந்தை சந்தோஷத்தில் மிதக்க, மகளின் எண்ணமோ பேச வேண்டிய விஷயத்தை மெல்ல அணிவகுத்தது.

## அத்தியாயம் 3

மகளின் சம்மதம் கிடைத்ததுமே, மனம் முழுதும் சந்தோசம் மட்டுமே நிறைந்திருக்க கண்களில் திரண்டிருந்த கண்ணீருடன் தன் மனைவியின் படத்தருகே சென்ற

செல்லியப்பன் "வேலு...நம்ம பாப்பா நீ சொன்ன மாதிரியே ராணி கணக்கா வாழப் போகுது! யாரு வுட்டில தெரியுமா...நம்ம வாத்தியார் வுட்டு மருமகளா...மூத்த மருமகளா! நீ இருந்தா எம்புட்டு மகுந்து போயிருப்பேன்னு தெரியல...ஆனா, நீ இல்லாது நானும் அவளும் மருகுறோம் தாயி!" எனக் கைகளை ஏந்தினாற்போல் வைத்து மனைவியிடம் பேசினார்.

படத்தில் சிரித்துக் கொண்டிருந்த மனைவி என்ன பதில் சொன்னாரோ, "போறேன் தாயி! போறேன்! அவுங்க பெரிய மனுசங்க...வீடு தேடி வந்து பொண்ணு கேட்டாக! இப்போ பதில் மருவாதையா நாம தானே போய் பொண்ணோட சம்மதத்தை சொல்லோணும். வாத்தியார் அய்யாகிட்ட போய் பேசிட்டு...நம்மால முடிஞ்சதை செய்றதா சொல்லிப்புட்டு ஓடிவாரேன்" என உயிரோவியமாய் நின்ற மனைவியிடம் உரைத்துவிட்டு, தீபாவளிக்குப் பெண் எடுத்துக் கொடுத்திருந்த புது சட்டையை இரண்டாவது முறையாக அணிந்து கொண்டு, வழியில் பூ-பழம்-இனிப்புகள் எனத் தர்மராஜன் வீடு தேடிச் சென்றார் செல்வியின் அப்பா.

அப்போது தான் குளித்துமுடித்த பேத்திகளுக்கு மனைவியின் துணையுடன், பவுடர் போட்டு, துணி மாற்றிக் கொண்டிருந்த தர்மராஜன் வரவேற்பறையின் தரையைத் தளமாக்கியிருக்க, பிதுங்கி வழிந்த மூன்று மஞ்சள் பைகளுடன் வாசலில் தயங்கி நின்றார் செல்லியப்பன்.

பேத்திகளின் அழகில் பெரியவர்கள் இருவரும் செல்லியப்பனைக் கவனிக்கத் தவறிவிட, குளித்ததும் கொடுக்க வேண்டிய மருந்துகளை எடுத்துக் கொண்டு மாடியிறங்கிய ஷைலஜா தான் அவரை முதலில் கண்டாள். "வாங்க அங்கிள்! ஏன் வெளியவே நிக்கிறீங்க? உள்ள வாங்க!" என வாயார வரவேற்றவளை நலம் விசாரித்தவாறே உள்ளே வந்தவரை, மூத்தவர்களும் முறையே வரவேற்றனர்.

அவர்களுடனே தரையில் அமர்ந்தவரை மேலே உட்காருமாறு மங்கை வற்புறுத்த, "புள்ளைங்களோட இருக்கேனுங்கம்மா! நம்ம மாப்பிள்ளை மாதிரியே இருக்குதுங்கம்மா...பிறந்தாப்பல பார்த்தது! இப்பத்தேன் ஜாடையே தெரியுது!" எனப் ப்ரீத்தியின் கன்னம் தொட்டு, செல்லியப்பன் கொஞ்ச, ஷைலஜாவிற்குப் பெரும் பரவசமாய், நிம்மதியாய் இருந்தது. ஏனென்றால், அவர்கள் ப்ரீத்தியைத் தத்தெடுத்தது பற்றிய விவரம் அறிந்தவர்கள் மிக மிக சிலரே! அப்படியிருக்கும் போது, செல்லியப்பனின்

இக்கொஞ்சல் ப்ரீத்தியின் வரவை வெளியுலகம் சந்தேகமின்றி அங்கீகரிக்கிறது என்பதன் பொருள் தானே!

அந்த நிம்மதியுடனே அவருக்குக் குடிக்கக் கொண்டுவந்து கொடுத்தவளிடம் ஓர் தாம்பாளம் கேட்டவர், கொண்டு வந்த பொருட்களை அதில் அடுக்கி, "என் பொண்ணு செல்வியை உங்க பையனுக்குக் கொடுக்க எனக்கும், என் பொண்ஜாதிக்கும், என் பொண்ணுக்கும் மனசார சம்மதமுங்க!" என்றார் விரிந்த புன்னகையோடும், கண்களில் கண்ணீரோடும், மனதில் சொல்லொண்ணா மகிழ்வோடும்.

அவரது மகிழ்ச்சியைத் தங்களதாக்கி அவர் செய்த மரியாதையை ஏற்றுக் கொண்டவர்கள், உடனே அவரை அவரது மருமகனுடன் பேசவைத்து, அவன் வாய்மொழியாக திருமணத்தை உறுதி செய்தனர். அதன் பின்னரும் மகனுடன் பேசிய மங்கைக்குப் பெரும் ஆச்சிரியம் காத்திருந்தது - அடுத்த மாதமே தனக்கு விடுமுறை எடுக்க முடியும் என்றும் - அப்போதே நிச்சயமல்லாமல் நேரடியாக திருமணத்தையே வைத்துக் கொள்ள முடியுமா? என அவன் கேட்க, இன்னும் அரை வருடமோ ; ஒரு வருடமோ என வாடியிருந்த தாய்க்கு இனிய ஆச்சிரியமாகத் தானே இருக்கும்!!

செல்வியிடமும் பேசிவிட்டு சொல்வதாகக் கூறி, கைப்பேசியை அவர் மகளிடம் கொடுக்க, தம்பியை சற்று நேரம் வம்பு செய்துவிட்டு, அவன் கேட்ட செல்வியின் கைப்பேசி எண்ணை சிறு அலைக்கழிப்பிற்குப் பின் கொடுத்தாள்.

அனைவரும் இங்கே இன்பத்தில் திளைத்திருக்க, தான் எண்ணிய விஷயங்களை எப்படி சொல்வது என செல்வி உருப்போட்டுக் கொண்டிருந்தாள்.

அதற்கு அவசியமே இல்லாதது போல், அவளது வேலை நேரம் முடிந்தபின்னர் வருங்கால மருமகளை அழைத்த மங்கையர்க்கரசி "அப்பா இப்போ தான் வீட்டுக்கு வந்தாங்க. ரொம்ப சந்தோஷம்டா செல்விம்மா! நவீக்கு அடுத்த மாசமே லீவ் கிடைக்குமாம்...சீக்கிரமே கல்யாணத்தை முடிச்சிடலாமா ராஜாத்தி?" எனக் கேள்வியாக ஆரம்பித்தப்போது அதற்கு எப்படி பதில் சொல்வதென்று புரியாமல் வெறுமனே சிரித்து வைத்தாள் இளையவள்.

"என்ன பேச்சையே காணோம்? வெட்கமா? நவீ மாதிரி பேசுறதுக்குக் காசு கேட்காம நல்லா பேசுடா..." எனச் சிரித்தார் பெரியவர்.

"நவநீத்...அண்ண...ம்ம்...அவருக்கு சரியா அம்மா?" எனத் திக்கித் தடுமாறி செல்வி முடித்தப்போது, அவரது "ம்ம்" மிக பலமாய் ஒலித்தது. தொடர்ந்து "எனக்கே ரொம்ப ஆச்சிரியம்! நான் செல்வியைப் பார்க்கட்டுமான்னு கேட்டு ரெண்டு செகண்ட் கூட ஆகியிருக்காது...சார் சரி சொல்லிட்டார். இவ்வளவு நாளா கேட்காம போனோமேன்னு நானும் மாமாவும் ரொம்ப வருத்தப்பட்டோம்" என அவளுக்குத் தேவையான தகவலைத் தகுந்த ஏற்ற இறக்கங்களுடன் சொல்லி முடித்தார் மங்கை.

அவர் கூறிய விஷயத்தில் மட்டுமல்லாது அவரது சந்தோஷத்திலும் செல்வியின் முகம் மொட்டவிழ்ந்து, விரிந்து, சிவந்து பின்னர் பூத்தது!

"ஆகா, அவனுக்குப் பிடித்திருக்கிறது!" என்ற விஷயமே அவளது சம்மதத்தை நியாயப்படுத்துவது போலிருந்தது. அவளைப் போலத் தானே அவனும்... செல்வியை அடிக்கடி பார்த்ததில்லை...அதிகம் பேசியதில்லை...உரிமையாய் சண்டையிட்டதில்லை...அப்படியிருக்கும் போது அவன் மனதில் தோன்றிய சம்மதம் தன் மனதில் தோன்றியதில் தாமரைச்செல்விக்கு நிம்மதியைக் கொடுத்தது என்றால், தனக்குத் தெரிந்தே இரண்டாண்டுகளாக திருமணத்திற்குத் தடை விதித்துக் கொண்டிருந்த நவநீதன் - தன் பெயரைக் கேட்ட இரண்டாவது வினாடி சரி சொன்னான் என்பது சந்தோஷத்தையும், வெட்கத்தையும் ஒருங்கே கொண்டு வந்து அவள் மனதிலும், முகத்திலும் புகுத்தியது.

இது மட்டுமே தான் பேச எண்ணிய விஷயம் அல்லவே, இன்னொன்றும் அல்லவா இருக்கிறது என்று தொலைந்து போகக் காத்திருந்த மனதைத் திசைத் திருப்பி, மங்கையிடம் வந்த செல்வி "அம்மா, ஒரு விஷயம்...அப்பாவுக்கு என்னை விட்ட உறவுன்னு ஒருத்தர் கூட இல்லை. அதனால கல்யாணமான பிறகும் அப்பாவை நான் பார்த்துக்கணும்!" என்றாள் குரலில் தீர்மானத்துடன்.

"கண்டிப்பா செல்விம்மா! நீ வேற மாதிரி நினைச்சாத் தான் நான் ஆச்சிரியப்பட்டிருப்பேன். இப்போதைக்கு இங்க பார்த்திட்டிருக்க வேலையை விட்டுடு. கல்யாணம் முடிஞ்சு அமெரிக்கா போனதும் அங்க ஒரு வேலை பார்த்துக்கலாம்...உன் படிப்புக்கு அங்க நல்ல வேலை கிடைக்குமாம்...ஷைலு சொன்னா!" என சிக்கலின்றி முடித்துவைத்தார் மங்கை.

"ரொம்ப நன்றிம்மா" என்ற செல்வி, "அவர் ஒத்துப்பார் இல்லையா?" என்றாள் அடுத்த கவலையாக (கேள்வியாக)

"அவனையே கேளேன்! இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்குப் பேசுறேன்னு சொல்லியிருக்கான்!" என்ற மங்கை, "ஹான்...ஹய்யோ!" என செல்வி அலறியதைப் பொருட்படுத்தாமல், "உன்னைக் கேட்காம நம்பர் கொடுத்ததுக்கு ஷைலு அக்கா சாரி சொல்றாடா கண்ணு! கொஞ்ச நேரம் கழிச்சுப் பேசுறாளாம்!" என்ற அவசர சொல்லோடு அழைப்பை வைத்தும்விட்டார்.

கவலை தீர்ந்த சந்தோஷத்தை விட, அவன் தன்னை அழைக்கப் போகிறான் என்ற பரபரப்பே நெஞ்சம் முழுதும் நிரம்பியிருக்க கைப்பேசியின் கணம் கூடத் தாங்கமுடியாதவள் போல் தவித்தாள் தாமரைச்செல்வி - இன்பமாக!

அவளது தவிப்பைப் பொறுக்காதவன் போல் ஐந்தே நிமிடத்தில் செல்வியின் கைப்பேசியை தனது அழைப்பால் சிணுங்க வைத்து, அவளைச் சிதற வைத்தான் நவநீதன். ஏற்கனவே அறிமுகமானவன் என்றபோதும், தன்னை மணக்கவிருப்பவன் என்ற ஒற்றை தகுதியே செல்வியின் சிந்தனையை சிவக்கடிக்க, "ஹலோ" என்றாள் அவள் மெல்ல!

"ஹாய் செல்வி எப்படி இருக்கே?" என்றதிலே தமிழின் வாசனை குறைந்து ஆங்கிலத்தின் தாக்கம் நிறைந்து கமகமத்தது அவனின் குரல்.

"ம்ம். நல்லா இருக்கேன்" என்ற குரல் அவளுக்கே கேட்காதது போல் தோன்ற, செல்விக்கே வியப்பாய் இருந்தது! சொல்லும் விஷயத்தைத் தெளிவாகவும், பிறர் பாராட்டும் வண்ணமும் சொல்லும் திறமை பெற்றவள் என தர்மரசநாள் புகழப்படும் செல்வியா? என்றிருந்தது அவளுக்கு! ஆயினும், மணம் கொள்ளப் போகிறவனிடம் மனம் விட்டுப் பேச முடியாமல் வார்த்தைகளும் வெட்கம் கொண்டு - சிவத்து சிக்கத் தான் செய்தன!

பழக்கத் தோஷமாய் தன் நலத்தை வாய் சொல்லிவிட்டாலும், அவனது விசாரிப்பு மூளையை எட்டியதும் "நீங்க நல்லா இருக்கீங்களா நவநீத் அண்...வந்து...நல்லா இருக்கீங்களா?" என முடித்தாள்.

அவளது தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டவன் போல் "இப்பவும் சரி, கல்யாணத்திற்கு அப்புறமும் சரி என்னை பேர் சொல்லியே கூப்பிடலாம் செல்வி. எனக்கு ஆட்சேபனையில்லை" என்றான் நவநீதன்.

"பேர் சொல்லியா?" என்றாள் பொறியியல் படித்திருந்தாலும் கிராமமனம் மாறாத அச்சிறு பாவை. தாய் தந்தையை "மாமா" என்றும், மங்கை தர்மராஜனை "என்னங்க...", "நிக்கி அப்பா", "அவரு...", "எங்க வீட்டில சார்" எனப் பல பெயர் கொண்டும், சில நேரம் விளிப்பென்பதே இல்லாமல் கண் ஜாடையாலும் அழைப்பதில் தொடங்கி, ஷைலஜாவின் "ஷ்யாம்" என்ற அழைப்பில் வந்து நின்றது.

தன் தலைமுறையில் இருக்கும் ஷைலஜா கணவனைப் பேர் சொல்லி அழைப்பதை மனம் ஏற்றாலும், தாய் தந்தையை அழைப்பதைப் போல் தானும் தன் கணவனை அழைக்கவேண்டும் எனத் தோன்றியது செல்விக்கு. அதனால், "பேர் சொல்ல ஒரு மாதிரி...மரியாதை குறைச்சலா... "மாமா"ன்னு கூப்பிடவா? எங்கம்மா..." என்ற செல்வியை முழுதாய் முடிக்கவிடவில்லை நவநீதன்.

"அதெல்லாம் யு.எஸ் வாழ்க்கை முறைக்குச் சரி வராது செல்வி. பேர் சொல்லியே கூப்பிடு!" என முடித்துவிட்டான் அவன்.

அவனது குறிக்கிடலில் சிறு ஏமாற்றம் ஏற்பட்டாலும், "ம்ம் சரி" என அதற்கு முற்றுபுள்ளி வைத்தாள் கேட்டிருந்தவள்.

அதன் பின்னர், சிறு அமைதி நிலவ "நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு அம்மா கேட்டதும் யோசிக்காம சரி சொல்லிட்டேன்! உனக்கு இதில இஷ்டம் தானே? நான் சரி சொன்னதற்காக உன்னை யாரும் வற்புறுத்தலையே" என அவன் இழுக்க

"நிச்சயமா இல்லை! எனக்கு யோசிக்க நேரம் கொடுத்து...நான் மனசார சம்மதம் சொன்னதும் தான் மேற்கொண்டு பேசியிருக்காங்க" என்றாள் ஆணித்தரமாய்!

"ம்ம் உன் சம்மதம் ரொம்ப முக்கியம்!" என்ற நவநீதனின் குரலிலிருந்த தீவிரத்தை எண்ணி மகிழ்ந்த செல்விக்கு, அந்த தீவிரத்திற்கு வேறு பல அர்த்தங்கள் இருப்பது புரிவதற்கான வயது வரவில்லையோ? ஹ்ம்ம்...

அவர்களது பேச்சு அவளது வேலையின் பக்கம் பயணிக்க, அது தான் நேரம் என்று தான்

வேலைக்குச் செல்லவேண்டும் என்றும், தன் வருமானத்தைத் தன் தந்தைக்கும், தன்னைப் போல் படிக்கவிரும்பும் ஏழை மாணவர்களுக்கும் கொடுக்க விரும்புவதாக கூறினாள் செல்வி.

"சியூர். உனக்கு இங்க கண்டிப்பா வேலை கிடைக்கும். ம்ம் என்னைக் கேட்டா நீ M.S படிச்சா இன்னும் நல்ல வேலை கிடைக்கும்... நீ படிச்சு முடிக்கிற வரைக்கும் நான் ஹெல்ப் பண்றேன்!" என்றவனுக்கு நன்றி உரைத்தாலும் "M.S படிக்க நிறைய செலவாகுமே! அதெல்லாம் வேண்டாம்...என் படிப்புக்கு ஏற்ற வேலையே போதும்..." என இழுத்தாள் செல்வி.

"செலவைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே?" என்ற கேள்வியிலேயே அதற்கு முற்று புள்ளி வைத்து அடுத்த விஷயத்திற்குத் தாவினான் கணவனாகப் போகிறவன்.

அவளது தற்போதைய வேலை, பாஸ்போர்ட், விசா, கல்யாணத்திற்கான விடுமுறை, அமெரிக்கா பயணம் என அடுத்த ஒருமணி நேரத்தில் அதன் பின்னர் அவர்கள் பேசிய விஷயங்கள் ஏராளம்!

இவர்களது சம்பாஷனை இங்கே இனிதே அரங்கேற, அங்கே ஷைலஜாவின் கைகளால் நிகேதனின் எண்ணங்கள் தட்டப்பட்டன. டில்லியில் நரம்பு மருத்துவத்தை முதற்முக்கிய பாடமாக எடுத்துப் படித்து வரும் நிகேதன், தன் இரவு நேரச் சேவைக்காக கிளம்பும் வேளையில் அவனைப் பிடித்துவிட்டாள் தமக்கை!

வீட்டு எண் கைப்பேசியில் ஒளிர்ந்ததுமே "ஹே குயின் ஆப் தி கிங்! பேத்திங்க வந்த குஷியல மகனை மறந்துட்டீங்க போல! இது நியாயமா? தர்மமா? இது அடுக்குமா? இங்கேயாவது நடக்குமா?" என நாடக பாணியில் பேசிக் கொண்டே போக,

"ஹே ஹே நிறுத்து! ஒரு டாக்டர் மாதிரியாடா இருக்கே...வாயைத் திறந்தா ட்ராக்டர் மாதிரி ஒரே சத்தம்!" என ஷைலஜா சிரிக்க;

"ஹலோ ஜலதோஷ சிரோன்மணி! எப்படி இருக்கே? நீ இல்லாம அத்தான் ரொம்ப ரொம்ப நிம்மதியா...ஜாலியா இல்லையாமே...அழுது வடியுறார்...இன்னும் அம்மா வீட்டில என்ன கொஞ்சல்? ஊர் போற வழியைப் பாரு!" என்று அவன் செல்லமாய் துரத்த, அவன் இல்லாத (வர இயலாத) நேரத்தில் தான் இங்கே வந்தது அவனுக்குக் கோபம் என்றுணர்ந்த ஷைலஜா, "போடா! நான் எங்க அப்பா-அம்மாவோட நிம்மதியா

தனியா...பங்குக்கு யாருமில்லாம இருப்பேன்! உனக்கேன் எரியுது? வேணும்னா நீ வா! எப்படியும் அடுத்த மாசத்தில என் பங்கில ரெண்டு பாகம் காலியாகிடுமே!" என வருத்தம் கொண்டாள் தமக்கை.

"ஏனாம்? நவீ வரனா என்ன? அவன் வந்தாலும் நான் வரமாட்டேன்பா...எனக்கு நிறைய வேலையிருக்கு...நான் என்ன உன்னை மாதிரி வெட்டி ஆப்பிசரா? டாக்டர்மா டாக்டர்" என அவன் சிலிர்க்க,

"வராம இருக்க மூஞ்சியை பார்க்கத் தானே போறோம்! பாருமா உன் செல்லப் பையன் உன் மஹா புத்திரன் கல்யாணத்திற்கு வரமாட்டானாம்! என்னன்னு கேளு" என அவள் சிரிக்க, "நீ விஷயத்தையே சொல்லாம வான்னா அவன் எப்படி வருவான். பாவம் பிள்ளை" எனப் பரிந்தது தாய் மனம்.

"ஹே நவீக்குக் கல்யாணமா? எப்போ? ஒரு வார்த்தை கேட்க ஒரு வருஷம் காத்திருந்தேன்னு பாடப்போற கானக்குயில் யாரு? யாரு? யாரு அந்த பாவப்பட்ட ஜென்மம்?" என ஆயிரம் "யார்" போட்ட நிகேதன், "செல்வி!" என்ற பெயரைக் கேட்டதும், ஒரே நிமிடம் மௌனித்து "நம்ம வீட்டு நேஷனல் ஃபிளவரா? ஊ...ஹூ..." என்றான் சந்தோஷமாய்!

எல்லோருக்கும் மனநிறைவைக் கொடுத்த திருமணம் மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டிருக்க, செல்வி-நவீ யின் உரையாடல் செவ்வனே தொடர, கல்யாணம் என்ற பந்தத்தால் பின்னிப் பிணைய போகும் அந்த இளநெஞ்சங்கள் நட்பு எனும் வலையில் சந்தோஷமாய் விழுந்து, எழ மனமற்று இருந்தனர்.

தொலைப்பேசி மட்டுமல்லாது இணைய தளமும் அவர்களது நட்பை உரமிட்டு வளர்க்க, facebook-இல் "engaged to ThamaraiSelvi Selliyappan" என்ற தகவலைத் தாங்கியிருந்த நவநீதனின் இணையதளக் குறிப்பு செல்வியின் நட்பு செடியில் காதலெனும் மொட்டை முளைக்கவைத்தது.

அத்தியாயம் 3

திருமணத்திற்குப் பின்னர் தந்தையை விட்டு வெகு தொலைவு செல்லப் போகிறோம் என்பதே மிகுந்த வருத்தத்தை அளித்தாலும், அதற்கு முன்னரான தினங்களை மட்டுமேனும் தந்தையுடன் கழிக்கலாம் என்றெண்ணிய செல்வி, வேலையை ராஜினாமா

செய்துவிட்டு செம்பட்டி வந்து சேர்ந்தாள்.

மகள் தன்னுடன் இருப்பதே அத்தந்தைக்கு மகிழ்வு தரும் என்கையில், அவளது வருங்கால மாமியார் வீட்டிலிருந்து கல்யாண நகை, புடவை, வெளிநாடு செல்லும் அவளுக்குத் தேவையான பொருட்கள் என வாங்கிக் குவித்த வண்ணம் இருந்தது பெரும் சந்தோஷத்தை அளித்தது. பணம், பொருளாய் மட்டுமல்லாது அன்பையும் பாசத்தையும் அவர்கள் மாரியாய் பொழிந்ததைக் காண்கையில் மகளின் வாழ்வை எண்ணி சிறு கலக்கம் கூட தோன்றவில்லை அவருக்கு! மாமனார், மாமியார், நாத்தனார் என சுற்று உறவுகளின் பாசத்தை நேரில் கண்டவருக்கு, மாப்பிள்ளையும் இதே போல் பெண்ணிடம் நன்றாக இருக்க வேண்டுமே என்ற வேண்டுதலைக் கண்டு கொண்டவன் போல் - செல்வியிடம் பேசும்போது மாமனாரிடமும் இரண்டு வார்த்தைகள் பேசி அவரை மகிழ்வித்தான் நவநீதன்!

இப்படி எல்லாம் நன்றாக போய்க் கொண்டிருக்க, திருமணத்திற்கு இரு தினங்கள் முன்னர் வந்திறங்கிய நவநீதனை, திருமணத்திற்கு முன் தினம் இரவு வரை செல்வியால் பார்க்கமுடியவில்லை; ஆனால் பேச முடிந்தது!. அவன் வீட்டிற்கு வரும் நேரத்தைக் கணக்கிட்டு (கூடுதலாய் ஓர் ஒரு மணி நேரம் விட்டு - வீட்டினருடன் பேசுவதற்காம்!), நவநீதனின் இந்தியா நம்பருக்கு அழைத்தாள் செல்வி. (இந்தியா வரும்போது தன் தாயின் கைப்பேசி எண்ணை தான் உபயோகிக்கப் போவதாக ஏற்கனவே நவநீதன் கூறியது நினைவில் நின்றதால் மங்கையின் எண்ணிற்கு அழைத்தாள் அவள்)

சில நிமிடங்களுக்குப் பின்னர் கைப்பேசி எடுக்கப்பட, "ஹலோ!" என்ற ஒற்றை சொல் கேட்டதுமே, "ஹலோ, எப்போ வந்தீங்க? பிரயாணம் நல்லபடியா இருந்ததா?" என்றாள் செல்வி மென்குரலில்.

"யா யா வந்தாச்சு! ஏர் ஹோஸ்டசை சைட் அடிச்சிட்டே வந்ததில் ஜெர்னி செம சூப்பரா இருந்தது!" என்ற குதூகலக் குரலில் குழம்பிப் போனாள் செல்வி. நவநீதனா இப்படி பேசுவது? அவனுக்கு இப்படி பேசத் தெரியுமா என்ன? தெரிவது தெரியாமல் போவது இருக்கட்டும் - கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணிடம் சைட் கைட் என்று...ம்ம் சரியில்லையே என எண்ணியவள் "சாப்பிட்டீங்களா?" என்றாள் அடுத்த கேள்வியாய்.

"இதுவல்லவோ பாசம்! எங்க வீட்டு குயின்கிட்ட எனக்குக் கொஞ்சம் சோறு போடச் சொல்லி சிபாரிசு பண்ணுங்க மேடம்! ப்ளீஸ் மேடம்!" என அந்தப் பக்கம் கெஞ்ச,

"ஹய்யோ நிகேதன் சார்!" என நாக்கைக் கடித்துக் கொண்டாள் செல்வி.

"ஹய்யோ நிகேதன் இல்லை...டாக்டர் நிகேதன்! எங்க சொல்லு பார்ப்போம்... ம்ம் சொல்லு" என அவன் அதட்ட, "சாரி, சாரி! நீங்கன்னு தெரியாம..." எனத் தடுமாறினாள் செல்வி.

"என்னமோ மூணு பக்கத்துக்கு முக்கி முக்கி லவ் டயலாக் பேசினமாதிரி!! சும்மா வந்தீங்களா...சாப்பிட்டீங்களான்னு சப்பையா ரெண்டு கேள்வி கேட்டுட்டு எதுக்கு இத்தனை சாரி? சொல்றதை செய்யமா...கேட்காத சாரியை வாரி இரைச்சிட்டு இருக்கே! ம்ம் சொல்லு...டாக்டர் நிகேதன் வாழ்க! அவரது மருத்துவப்பணி வளர்க! அப்படின்னு சொல்லு" என நிகேதன் சிரிக்க,

"ம்ம் டாக்டர் நிகேதன் சார் அப்படின்னு தானே சொல்லச் சொன்னீங்க...இப்போ நிறைய சேர்க்கிறீங்க!"

"அது நான் முதல சொன்னதுமே சொல்லியிருந்தா... நான் சொன்னதை சொல்லாம "சாரி" சொன்னதற்குத் தான் எக்ஸ்ட்ரா வார்த்தைகள். இப்போ இன்னும் கொஞ்சம் எக்ஸ்ட்ரா...டாக்டர் நிகேதன் வாழ்க! அவரது மருத்துவப்பணி வளர்க! நிகேதனின் மக்கள் சேவை பெருகுக!" என அவன் சிரிக்க, வேறு வழியின்றி அவன் சொன்னதைச் சொல்லி முடித்த செல்வியும் மனம் விட்டுச் சிரித்தாள்.

"என்னை மாதிரி அப்பாவிகளை இப்படி மிரட்டித் தான் உங்க பேரை நிலைநாட்டுறீங்க போல? இதெல்லாம் தானா வரணும்...கேட்டு வாங்கக் கூடாது!" எனச் சின்ன சிரிப்புடன் செல்வி கேலி செய்ய, "இதெல்லாம் டாக்டர் வாழ்க்கையில் சகஜமப்பா...போ...போ...வேற வேலையிருந்தா பாரு! இந்தா அமுக்குணி அமிர்தராசன் கண்ணை உருட்டி நோட்டம் விட்டுட்டே வரான்...அவன் கிட்ட தரேன்! பக்கம் பக்கமா இல்லைனாலும் ரெண்டு வார்த்தையாவது லவ்ஸ் கலந்து பேசுங்கப்பா!" என கவுண்டமணி குரலில் பேச ஆரம்பித்து, அவர் பாணியிலேயே நவநீதனை சீண்டிவிட்டு அவனிடம் கைப்பேசியைக் கொடுத்துவிட்டு வெளியேறினான் நிகேதன்.

சில நொடிகளில் "ஹலோ" என்ற குரல் கேட்டதும், நிகேதனா நவநீதனா எனக் குழம்பி, மீண்டும் நவநீதன் என எண்ணி நிகேதனிடம் பேசிவிடக் கூடாதே என்ற ஜாக்கிரதை உணர்வில் "நவ...நவநீத் தானே?" என்றாள் செல்வி மெதுவாக.

"நவீ ஓட சேர்ந்ததில் உனக்கு மூளை மழுங்கிடுச்சோன்னு நினைச்சேன்...பரவாயில்லை...நல்லா பிரகாசமா தான் இருக்கே! இப்படியே டியூப்லைட்டாய் வாழ உன்னை ஆசிர்வதிக்கிறேன்!" என நிகேதனே மீண்டும் சிரிக்கவும்,

"உங்க அண்ணாக்கு மூளை மழுங்கிடுச்சுன்னு என்கிட்டேயே சொல்றீங்களே? தைரியம் தான்!" எனச் செல்வி சிலிர்த்து சிரித்தாள்.

"அடேங்கப்பா! உமது பதி பக்தியைக் கண்டு யாம் உள்ளம் குளிர்ந்தோம்... ஜலதோஷத்தோட ட்ரைனிங்கா?" என அவளை மெச்சிய கையோடு தன் தமக்கை ஷைலஜாவை வம்பிற்கு இழுத்தான் நிகேதன்.

"நாங்கெல்லாம் தானாவே யோசிச்சு தானாவே பேசுவோம். மித்தவங்களோட வசனத்தைச் சுட்டு எங்களோடது மாதிரி பேசமாட்டோம்" என அவனை மீண்டும் கிண்டல் seithaval, "ரொம்ப நாளா கேட்கணும்ன்னு இருந்தேன்...அதென்ன அழகா "ஷைலஜா" என்கிற பெயரை இப்படி கொலை பண்றீங்க?" எனக் கேள்வியும் கேட்டாள்.

"மித்தவங்க வசனத்தையும் தகுந்த நேரத்திற்கு எடுத்து விடுற திறமை வேணும்ல!" எனக் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில் பெருமை பேசிய நிகேதன், "அது ஒண்ணுமில்லை நேஷனல்... உன் செல்ல ஷைலு அக்கா இருக்காளே...நார்மலா இருக்கும் போது ஒழுங்கா இருப்பா...பேசுவா! ஏதாவது காரியம் ஆகணும்னா போதும்...உடனே மூக்கால ராகம் இழுக்க வேண்டியது...ஜலதோஷம் பிடிச்சவமாதிரி. அதான் அப்படி!" எனப் காரணக் காரியம் சொல்லி பெயருக்குப் புராணம் கூறினான் கொழுந்தன்.

அதற்குள் அந்தப் பக்கம் "யாருடா ஃபோன்ல" என்ற குரல் கேட்க, "நேஷனல் பேசுறா, குயின்!" என்றான் நிகேதன்.

"அடி பின்னிடுவேன் படவா! அண்ணியை பேர் சொல்லியே கூப்பிடக் கூடாது...இதில

உன்னோட நக்கல் பேரு வேற... ஒழுங்கு மரியாதையா "அண்ணி"ன்னு கூப்பிட்டுப் பழகு! ம்ம் கூப்பிடு...கூப்பிடுடாங்கிறேன்!!! அண்ணின்னு கூப்பிட்டாத் தான் மதியம் சோறு! இல்லன்னா துரத்திடுவேன்!" என மங்கை அவன் பின்னே ஓடுவது செல்விக்குக் கேட்டது.

"அண்ணியா...இந்த வாண்டையா? நோ சான்ஸ்!"

"என்னம்மா நான் அவளோட டீச்சர் ரேஞ்ச்ல இருக்க ஆளு...என்னைப் போய்!"

"நீங்க சோறு போடலைன்னா போங்க! என் பாசத்திற்குரிய அண்ணியார் எனக்கு அன்னம் போடுவாங்க...அப்படித் தானே அண்ணி! வீட்டுக்கு வந்தா "நீ யாருடா"ன்னு கேட்டு என்னைத் துரத்திட மாட்டீங்களே? எனக்காக ஸ்பெஷல்லா எதுவும் சமைக்க வேண்டாம்...மீன் குழம்பு, முட்டை ரோஸ்ட், ஏதாவது ஒரு காய் (முடிஞ்சா உருளைக்கிழங்கு), அப்படியே ஒரு சாம்பார், காரமா மிளகு ரசம், கேட்டியா கொஞ்சமே கொஞ்சம் தயிர், அப்புறம் கண்டிப்பா அப்பளம் இருக்கணும் - இதெல்லாம் இருந்தா போதும்! சமைச்சு வைங்க. நான் வரேன்." எனச் செல்வியிடம் வம்பு செய்துவிட்டு, மங்கையின் அடிக்கு மாட்டாமல் கீழே ஓடிவிட்டான் இளையவன்.

அவனது மெனுவில் வியந்து, செல்வி அடக்கமாட்டாமல் சிரித்துக் கொண்டிருக்கும் போது "தப்பா நினைக்காதே செல்விம்மா! நிக்கி எப்போதுமே விளையாட்டுத் தான். இனிமேல் அண்ணின்னு கூப்பிடச் சொல்றேன்! இத்தனை நாள் கூடவே இருந்தது முதல ஒரு மாதிரி இருந்தாலும் போகப் போகச் சரியாகிடும்!" என மங்கை, சற்று சங்கடமான குரலில் மொழிய,

"ஹய்யோ என்னம்மா நீங்க? நான் ஏன் தப்பா எடுத்துக்கப் போறேன்! அதெல்லாமில்லை...நிகேதன் சார் எப்படி வேணும்னாலும் என்னைக் கூப்பிடட்டும். நீங்க வருத்தப்படாதீங்க!" - வருங்கால மாமியாரை அவள் சாமாதானம் செய்து முடிதப்போது, வருங்காலக் கணவன் வந்து சேர்ந்திருந்தான்.

"ஹை செல்வி! எப்படி இருக்கே? கீழ குட்டீஸ்கூட விளையாடிட்டு இருந்தேன். அதுக்குள்ளே நிக்கி வந்து இங்க விளையாடிட்டான் போலவே! சாரி!" என்ற நவநீதனின் குரலில் என்றுமில்லா உற்சாகம் கரை புரள, செல்வியும் அதில் திளைத்தாள்.

"ம்ம். அதானால பரவாயில்லை! குட்டீஸ் ரெண்டு பேரும் எப்படி இருக்காங்க? என்ன செய்றாங்க?" எனக் குழந்தைகளைப் பற்றி பேச்சுக் கொடுத்தாள் மனைவியாகப் போகும்

மகராசி.

"ரெண்டு மாமாவும் வாங்கிட்டு வந்த டாய்யஸ் வச்சு ஒரே விளையாட்டு! செம குஷியா இருக்காங்க! அவங்களோட இருந்தா நேரம் போறதே தெரியல... ஆனா, அந்த நேரத்திலையும் உன்னை எப்போ பார்ப்போம்ன்னு இருக்கு!" என முதன்முறையாக அவளைப் பார்க்க வேண்டும் என்பது போன்ற வசனத்தைப் பேசினான் நவநீதன்.

இதற்கு முன்னர் இருவரும் பேசும் வேளைகளில் அன்றைய தினம் நடந்தது, திருமணத்திற்கான ஏற்பாடுகள், பின்னர் அமெரிக்க வாழ்க்கைமுறை, அவனது வேலை அனுபவங்கள் எனப் போகும் பேச்சில் "உன்னைக் கண் தேடுது!" போன்ற காதல் வசங்கள் அவ்வளவாக இடம் பெற்றதில்லை. ஒரு சில சமயம், "என்னமோ சீக்கிரமே கல்யாணம் செய்துட்டு உன்னை என்னோட அழைச்சிட்டு வந்திடனும் போல ஒரு எண்ணம்! அதான் அடுத்த மாசமே நாள் பார்க்கச் சொல்லிட்டேன்..." என அவன் பேசியது உண்டென்றாலும், இப்படி நேரடியாக உருகல் வசனங்களை அவன் பேசி செல்வி கேட்டதில்லை. ஆதலால் இப்போது என்ன பதில் சொல்வதென தெரியாமல் வெறுமே "ம்ம்" மட்டும் கொட்டினாள், அவள்.

"நாளைக்கு சாயங்காலம் மண்டபத்தில தான் பார்க்கமுடியுமாம். அதுவரைக்கும் வெளிய போகக் கூடாதுன்னு அம்மா சொல்லிட்டாங்க. அதுக்கு நிக்கி வேற காவல்...ஹ்ம்ம்" என அவன் மெலிதாய் பெருமூச்சு விட, மலர்ந்த அத்தாமரைப்பூ ரோஜாவானது!

அடுத்த நாள் மாலை மண்டபத்தில் நலங்கு வைக்கும் போது, மேடையின் ஓரத்தில் அவளைப் பார்த்தபடி நின்றிருந்த நவநீதனை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை செல்வியால். கன்னத்தில் பூசியிருந்த சந்தனத்தையும் மீறி கன்னங்களில் சிவப்பு பளபளத்தது! அதுவும் "எங்க நவீ உனக்காக வாங்கிட்டு வந்திருக்கான்" எனக் கூறி, சிறு வைர லாக்கெட் ஊஞ்சலாடிய பிளாட்டினச் சங்கலியை மருமகளின் கழுத்தில் அணிவித்த கையோடு "அழகுக்கு அழகு சேர்கிற மாதிரி அம்சமா இருக்குடா நவீ" என மங்கையர்க்கரசி பாராட்டிய போது செல்விக்கு வானில் பறக்கும் உணர்வு ஏற்பட்டது!

புகுந்த வீட்டினர் யாவரும் நலங்கு வைத்து முடித்ததும், மகளை வாழ்த்தி, பூ தூவுமாறு செல்லியப்பனை அழைத்தார் மங்கை. சிறு சங்கோஜத்திற்குப் பின்னர் மேடையேறியவரின் முகத்தில் மலர்ந்திருந்த சந்தோஷத்தைக் காண அங்கிருந்த அனைவருக்கும் நெகிழ்ச்சியாய் இருந்தது எனும்போது, மகளின் தலை மீது கை வைத்து

ஆசிர்வதித்த தந்தைக்கும் மகளுக்கும் இடையே மௌனமாய் ஓர் அன்பு பரிமாறல் செவ்வனே நடந்தேறியது.

தாய் வீட்டுச் சீதனமான சந்தன நிறப் பாட்டில், சிவப்பும் பச்சையும் மாறி மாறி பளபளக்க எழில் பாவையாய் உருமாறி வீற்றிருந்த மகளின் அழகை மனதிற்குள் நிரப்ப, செல்லியப்பனுக்கு இரண்டு கண்கள் கூட குறைவாய் தோன்றியதோ! குறைந்த செல்வநிலையிலும் மகளை ராணியாய் வைத்திருந்தவர், இப்போது மாப்பிள்ளையின் கைகளைப் பிடித்துக் கொண்டு "மாப்பிள... நீங்களும் எங்க பாப்பாவும் ரொம்ப நாளுக்கு நல்லா இருக்கனும்ங்கயா. அந்த கடவுள் உங்களைக் காப்பாத்துவார்!" என்ற சொல்லோடு கீழிறங்கி வந்தவரைக் கவனிக்கச் சென்றுவிட்டார். வாத்தியார் வீட்டுப் பிள்ளை, தன் மகளின் மனம் கோணாமல் நடந்துகொள்வார் என்ற எண்ணத்தில் அத்தந்தை "என் மகளை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கூறாமல் விட்டுவிட்டாரோ? அல்லது அந்த கிராமத்து மனிதருக்கு வீட்டின் ஒரே மாப்பிள்ளையிடம் ஆணையிடத் தெரியவில்லையோ? எதுவாக இருப்பினும், அன்றைய தினத்தில் அனைவரது மனதையும் குளிர்விக்கும்படி செல்வி-நவநீதனின் திருமணம் இனிதே நடந்தேறியது.

அக்னி சாட்சியாய், அன்னை-தந்தையின் ஆசியுடன், உடன் பிறந்தோரின் கேலியுடன், சுற்றத்தாரின் வாழ்த்துடன் செல்வியின் செந்தாமரை கழுத்தில் பொன் மஞ்சள் தாலியை அணிவித்து, "என் துணைவி" என்ற பட்டதை அவளுக்கு இனிதே வழங்கினான் நவநீதன்!

அதன் பின்னர், மணமக்களை வாழ்த்தவென உறவுகள் குமிய, கடைசியாய் மணமகனின் உடன் பிறந்த செல்வங்கள் இருவரும் தத்தம் பரிசோடு மேடையேறினர். ஷ்யாம்சுந்தரும் ஷைலஜாவும் மணமக்கள் இருவருக்கும் வைர மோதிரம் பரிசளித்த கையோடு, செல்விக்குப் பிறந்த வீட்டு சீராய் பொன்னாலான காசு மாலையைப் பரிசளித்தனர்.

"ஹே ஷைலு! இதெல்லாம் ஒர வஞ்சனை! எனக்கு வெறும் மோதிரம் மட்டும் தானா?" என சிறு சிரிப்புடன் வினவிய நவநீதனைப் பார்த்து, "உனக்கு இப்படியெல்லாம் பேசத் தெரியுமாடா மாப்பிள்ளை?" என்று ஷ்யாம் வியக்க, "எனக்கும் சேர்த்துத் தான் உங்க வைஃப் பேசுறாளே! அது போதாதா?" எனக் கேட்டது நவநீதே தான்.

"செல்வி...உன்னை என்னமோன்னு நினைச்சேன். கல்யாணமான இரண்டு மணி நேரத்திலேயே என் தம்பியைப் பேச வச்சுட்டியே! கெட்டிக்காரி தான் போ!" எனப் பெருமை பட்ட ஷைலஜாவிடம் செல்வியின் மெல்லிய மறுப்பு எடுபடவே இல்லை. அதன்

பின்னர், பெரியவர்கள் நால்வரும் குழந்தைகள் இருவருடன் மாறி மாறி புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் போது, தாய் தந்தை சகிதம் அங்கு வந்துசேர்ந்தான் நிகேதன்.

அவர்கள் வந்ததும் மேடையை காலி செய்ய எத்தனித்த தமக்கையின் கைப்பிடித்து நிறுத்திய இளையவன், "இருக்கா!" என்ற ஒற்றை சொல்லில் அவளை இருத்தியும் கொண்டான். தனது பரிசாக அவன் கொடுத்த ஜோடி கடிகாரங்களின் அழகைவிட, அதன் அட்டையின் மேல் எழுதப்படிருந்த கவிதை செல்வியை வெகுவாக ஈர்த்தது.

"தேசத்தின் சின்னமாய் இருந்தபோதும்

கர்வத்தின் சாரலின்றி
பாசத்தின் பிரதிபலிப்பாய்
நேசத்தின் தூண்டுகோலாய்
புரிதலின் பிறப்பிடமாய்
அடக்கத்தின் உருவாய்
நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் தாமரையே!
சூர்யனார் வந்திருக்கார்
மொட்டவிழ்ந்து, மலர்ந்து, மகிழ்ந்து, அவனை மகிழ்வி - காலமெல்லாம்!"

பரிசை செல்வியின் கையில் கொடுத்துவிட்டு "என் மனமார்ந்த வாழ்த்துக்கள், நவி!" எனத் தமையனை ஆரத் தழுவி, தன் அன்பு வாழ்த்துக்களை அவனிடம் கூறியவன், குடும்பத்தினர் அனைவரையும் (செல்லியப்பன் உட்பட) மணமக்களுடன் நிற்கச் செய்து ஓர் குடும்பப்புகைப்படம் எடுக்கச் செய்தான்.

எல்லாம் இனிதே செல்ல, புது மணமக்களின் கலப்பை எதிர்நோக்கியிருந்த முதலிரவும் மெல்ல கனிந்தது!

மாம்பழ வண்ண மைசூர் சில்க் புடவை அணிந்திருந்த தங்கத்தாலியுடன் போட்டியிட்டு மின்ன, அடர்த்தியாய் கோர்த்த ஜாதிமல்லி பூச்சரம் கழுத்துப் பக்கம் விழுந்து அவளை எழிரசியாக்க, சிவப்பேறிய கன்னங்களும், சிறு பயமேரிய கண்களுமாய் முதலிரவு அறைக்குள் நுழைந்தாள் திருமதி.தாமரைச்செல்வி நவநீதன்!.

உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டுவிட்டு, அவள் கணவனைத் தேடும்வரை அவன்

அவள் கண்களில் படவில்லை. சிறு யோசனையுடன் பால்கனி பக்கம் சென்றவள், அங்கே கைப்பேசியில் யாருடனோ மிக தீவிரமான குரலில் அவன் உரையாடிக் கொண்டிருப்பது கண்ணில்பட, ஓசையின்றி கட்டிலில் வந்தமர்ந்தாள்.

பத்து நிமிடங்கள் கழித்து உள்ளே வந்த நவநீதனின் முகத்திலிருந்து எதுவும் கண்டுபிடிக்கமுடியாமல் போனது ஒரு புறம் ஏமாற்றத்தைக் கொடுத்தாலும், தான் இருப்பதைக் கணவன் கண்டுகொள்ளவே இல்லை என்பது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியது. அவன் போக்கில் அறைக்குள் நுழைந்தவன், அங்கிருந்த எழுதும் மேசைக்குச் சென்று, மடிகணினியை எடுத்துவைத்து என்னவோ செய்ய ஆரம்பித்துவிட்டான்.

தனக்கு முதுகு காட்டி அமர்ந்திருப்பவன், திரும்புவான்...திருப்புவான் எனக் காத்திருப்பதிலேயே மேலும் அரை மணி நேரம் செல்ல, "நவீ..." என்றாள் செல்வி மெல்ல - தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு.

அப்போதும் பதில்லாமல் போக, ஐந்து நிமிடம் கழித்து "நவீ" என்றாள் இன்னும் உரக்க.

"ஹான்...ஹோ நீயா? சாரி. எனக்குக் கொஞ்சம் பர்சனல் வொர்க் இருக்கு. லேட் ஆகும்ன்னு நினைக்கிறேன். நீ தூங்குறதுன்னா தூங்கு!" என்றவன், அவ்வளவு தான் என்பது போல் மீண்டும் கணினிக்குள் தலையை விட்டுக் கொள்ள, செல்விக்கு முகத்தில் அறைந்தது போலிருந்தது. முதலிரவில் மனைவியிடம் பேசுவதை விட ஒரு கணவனுக்கு என்ன சொந்த வேலை இருக்கமுடியும்? என மனம் கொதித்தப்போதும், அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை. "கணினியை அணைத்துவிட்டு என்னை அணைக்கவா!" என்று வெட்கத்தைவிட்டு அவனை அழைக்கும் வழியறியாத அந்த இளம் மனைவியும், தரையைப் படுக்கையாக்கி உறங்கிப் போனாள் - நீண்ட நேரத்திற்குப் பின்னர்!

காலையில் அவள் விழித்துக் கொண்டபோது, அவளது கணவனும் கண் மலர்ந்திருக்க "சாரி செல்வி! நேத்து நைட் என்னோட க்ளோஸ் ஃபிரண்ட் ஒருத்தருக்கு சின்ன பிரச்னை. அதனால தான்..." என்றான் விளக்கம் போல்.

"ம்ம். பரவாயில்லை" என்ற செல்வி நகர முற்பட, "தேங்க்ஸ்! அம்மா...அக்கா கேட்டா....எல்லாம்...முடிஞ்சதுன்னு..." என அவன் மேலும் இழுக்க, செல்வியின் மனம் கோணியது. ஆனால், அவனிடம் தர்க்கம் செய்வது அவசியமற்றது எனத் தோன்ற

"நம்மளோட சொந்த விஷயத்தில அம்மாவோ அக்காவோ தலையிட மாட்டாங்கன்னு தோணுது! அதையும் மீறி கேட்டா நான் பதில் பேசலை" என்றதோடு குளியலறைக்குள் புகுந்து கொண்டவளின் மனதில் யோசனையும், குழப்பமும் வண்டிவண்டியாய் புகுந்து கொண்டது.

ஆனால், அவையெல்லாம் அன்றைய இரவு கணவனின் பேச்சில் மறைந்து போயின! மறந்து போகவில்லை!

"யூ.எஸ் போனதும் நமக்கான வாழ்க்கையைத் தொடங்கலாம் செல்வி! அங்க போய் நீயும் நானுமா இருக்கும்போது வர க்ளோஸ்நஸ் இன்னும் நல்லா இருக்கும்ன்னு எனக்குத் தோணுது! நீ என்ன சொல்ற?" எனக் கூறிய கணவன், உடனே "இங்க இருக்க இருபது நாளை குடும்பத்திற்காக செலவு செய்யலாமே? இதுக்கு அப்புறம் எப்போ வருவோமோ? அங்க போய் நீயும் நானும் தானே!" என்றதும் சந்தோஷமாய் தலையாட்டிய செல்விக்கு, அதே காரணத்தைக் கூறி தேனிலவையும் அவன் தவிர்த்தப்போது பெருமையாகக் கூட இருந்தது செல்விக்கு!

அத்தியாயம் 5

நவநீதன் – தாமரைச்செல்வி திருமணம் முடிந்து, குல தெய்வம் கோவிலில் வழிபாடு, உறவினர்கள் வீடுகளில் விருந்து, குடும்பத்தினருடன் பழனி ஆண்டவனின் தரிசனம் என ஓடி மறைந்தன இருபது நாட்களும்.

திருமணம் முடிந்து இரண்டு தினங்கள் வீட்டிலிருந்த நிகேதன் - தன் படிப்பைக் காரணம் காட்டித் தலைநகருக்குக் கிளம்பிவிட, ஷ்யாமும் தன் வேலையைக் காரணம் காட்டி மூன்றாம் நாள் மாலை விமானம் ஏறினான். இருவருக்கும் இருந்த வித்தியாசம் - "ஹே நேஷனல், நவீயைப் பார்த்துப் பயப்படாம...கூடவே அவனையும் பயமுறுத்தாம நல்ல பிள்ளையா இரு!" என நண்பனாய் நிகேதன் கூற, ஷ்யாமோ "புது நாடு, புது மனுஷங்க... பார்த்து இருந்துக்கோ செல்விம்மா. எதுனாலும் என்னை நீ கூப்பிடலாம். டேக் கேர்!" என்றான் ஷ்யாம், ஒரு தந்தையின் கனிவுடன்.

ஷ்யாமும் நிகேதனும் கிளம்பிச் சென்றபின்னர், சென்னைக்குக் கிளம்பிச் சென்ற தம்பதியர் இருவரும் செல்வியின் விசாவிற்கு விண்ணப்பித்துவிட்டு ஊர் திரும்பினர்.

அந்த இரு தினங்களில் ஜலதோஷம் நிஜமான ஜலதோஷத்தால் காய்ச்சலில் விழுந்திருந்தது. அதாகப்பட்டது ஷைலஜாவிற்கு காய்ச்சல் வந்து, அது குழந்தைகளுக்கும்

பரவியிருந்தது - தாயிடம் பால் குடிக்கும் கன்றுகள் அல்லவா! பெற்றோருக்கு பிள்ளைகளின் சுகவீனம் பலவீனத்தைக் கொடுக்கும் என்பதற்கிணங்க, மங்கையும் தர்மராஜனும் தவித்திருந்தனர் என்றால் இரண்டு தினங்கள் முன்னர் தான் சிங்கப்பூர் கிளம்பிச் சென்றிருந்த ஷ்யாம், தன் மூன்று பிள்ளைகளையும் காண ஓடிவந்திருந்தது செல்வியை வியப்படைய செய்தது!

"என்னடா! சொல்லச் சொல்லக் கேட்காம நவீ கல்யாண டைம்ல எத்தனை ஐஸ்கிரீம் சாப்பிட்டே? அதான் உடம்பு சரியில்லாம வந்துடுச்சு!"

"காய்ச்சல் கொதிக்குது பாரு...ஊசியும் வேண்டாம்...மாத்திரையும் வேண்டாம்ன்னா நான் என்னடா செய்யட்டும்? அம்முவும், அப்புவும் கூட சமத்தா ஊசி போட்டுக்கிறாங்க...ப்ளீஸ்டா! இந்த ஒரு தடவை மட்டும் ஊசி போட்டுக்கோ. அப்புறம் எப்படியாவது டாக்டர்கிட்ட பேசி மருந்து எழுதி வாங்கிடலாம்!"

"நீ குணமானா தானே குழந்தைகளைப் பார்த்துக்க முடியும். அத்தையால மூணு பேரையும் பார்த்துக்க கஷ்டமா இருக்காதா?"

"கொஞ்சமே கொஞ்சம்...உனக்குப் பிடிச்ச ரசம் சாதம்...மசிய பிசைஞ்சிருக்கு...கஞ்சி மாதிரி குடிச்சிடுடா"

"நீ ஒழுங்கா மாத்திரை மருந்து சாப்பிட்டா...நாளைக்கு உருளைக் கிழங்கு காய் பண்ணச் சொல்றேன். ப்ளீஸ் மா!"

என விதவிதமாய் கெஞ்சிக் கொஞ்சிய ஷ்யாமின் பார்வை ஒரு நொடி கூட கனிவிலிருந்து கோபத்திற்கு மாறவே இல்லை என்பது செல்வியின் மனதில் ஓர் ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் உண்டாக்கியது. அவளது ஏக்கத்தை உண்டாகிய சம்பவத்தை மனம் லேசான வலியுடன் அசைபோடத் துவங்கியது!

சென்னை சென்றிருக்கும் போது அமெரிக்க தூதரகம் அருகே செல்வி தடுக்கி விழுந்துவிட, பெருவிரல் நகம் பிய்ந்து ரத்தம் சொட்டத் துவங்க, தனக்கு ஐந்து அடி முன்னர் நடந்துகொண்டிருந்த நவநீதனை "நவீ" எனப் பலவீனமாய் அழைத்து நிறுத்தியவளுக்குப் பதிலாய் "என்ன?" என்ற ஒற்றை கேள்வி மட்டுமே வந்தது; அதுவும் கையிலிருந்த கோப்பிலிருந்து கண்கள் அகற்றப்படமாலே!

அவன் அங்கிருந்து நகரப் போவதில்லை என்பது புரிய "கால் பயங்கரமா வலிக்குது! ஒரு பிளாஸ்டர் வாங்கி..." எனத் தொடங்கியவளை, "இப்ப அதுக்கெல்லாம் நேரமில்லை செல்வி. சொன்ன நேரத்திற்குப் போகலைன்னா விசா கிடைக்கிறதில பிரச்னை ஆகிடும். சீக்கிரம் நட! ம்ம்" என வேகமாய் இடைவெட்டியதோடு காத்திருப்போர் வரிசையில் சென்று நின்றும்விட்டான்.

அவன் சென்றபின்னர், செல்வி மட்டும் நடு ரோட்டில் அவனை முறைத்துக் கொண்டு நின்று என்ன பயன்? விண் விண் எனத் தெறித்த நகக்கண்ணை ஆயாசமாய் ஓர் பார்வை பார்த்துவிட்டு, அவனுடன் சென்று நின்றுகொண்டவளின் அப்போதையை வலியை விட, விசாவிற்கான நேர்முகத்தேர்வு முடிந்த பின்னர் கூட கணவன் அவளது காயத்தைப் பற்றி விசாரிக்காதது தான் மிகுந்த வலியை ஏற்படுத்தியது.

செல்வியின் பயணம் உறுதியாகிவிட்ட செய்தியை அப்பா-அம்மாவிடம் பகிர்ந்துகொள்வதிலும், இந்த வேலைகளில் உதவியாய் இருந்த நிகேதனின் தோழனுக்கு நன்றி உரைப்பதிலும் தன் காயத்தை மறந்துவிட்டான் என செல்வி முதலில் எண்ணியிருக்க, அன்றிரவு உணவிற்கென உணவகத்திற்குச் சென்றபோது செல்வி மீண்டும் ஓர் மேசையில் இடித்துக் கொள்ள, அவளையும் மீறி "அம்மா" என்ற அலறல் வந்தபோது தான், நவநீதனுக்கு அவளது காயமே நினைவு வந்தது.

அப்போதும் கூட, "காலையில வேற இடிச்சுகிட்டே இல்ல...இனிமேல் பார்த்து...கவனமா நட!" என்பதோடு தன் கடமை முடிந்ததென மேசையில் அமர்ந்து, தன் கைப்பேசியைக் குடைய ஆரம்பித்துவிட்டான்.

உணவுண்டு முடித்ததும் "காலையிலேயே பிளாஸ்டர் கேட்டே இல்லையா? இப்போ போகும் போது வாங்கிடலாம்!" என அவன் வினவியபோது வருத்தத்தை விட கோபமே மேலோங்கியது; "ஹப்பா, எவ்வளவு சீக்கிரம் நியாபகம் வந்திடுச்சு!" என்ற கோபம் தான்.

"நான் மதியமே வாங்கிப் போட்டுட்டேன்!" என முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டு பதில் கூறிய செல்விக்குக் கோபமென நவநீதன் புரிந்து கொள்ளவில்லையா? இல்லை அவனுக்குப் புரியும் விதத்தில் இவள் கோபத்தைக் காட்டவில்லையா என்பது கடவுளுக்கே வெளிச்சம்! மொத்தத்தில், மனைவிக்குக் கோபம் என்பதை உணராத நவநீதன் - "குட்!" என்ற ஒற்றை சொல் பாராட்டோடு முடித்துக் கொண்டான்.

அதன் பின்னர் இந்த இரு நாட்களில் அந்தக் காயத்தைப் பற்றி என வாய் வார்த்தைக்காக கூட அவன் வினவாதது மனதை உறுத்தினாலும், "ஒவ்வொருவரும் ஒரொரு மாதிரி - எல்லாரும் அப்பாவைப் போல் நம் மேல் உயிராய் - கண்ணும் கருத்துமாய் இருப்பார்களா என்ன? நமக்கு ஒன்றென்றால் நாமே தான் பார்த்துக் கொள்ளவேண்டும்!" என அப்போதைக்கு எதோ காரணம் தேடி மனதை சாமதானம் படுத்திக் கொண்டவளுக்கு, ஷைலஜாவிற்கு உடம்பு சரியில்லை என்றதும் வேலைகள் அனைத்தையும் இரண்டாம் பட்சமாக்கிவிட்டு, மனைவியும் குழந்தையும் தான் முக்கியமென ஓடிவந்திருக்கும் ஷ்யாமை பார்க்கப் பார்க்க ஏக்கம் மேலோங்கியதில் புது மணப்பெண்ணுக்கே உரிய எதிர்பார்ப்பு அல்லாமல் வேறேது?

இந்த ஏக்கமும், எதிர்பார்ப்பும் ஒரு புறம் அவளைக் குடைந்து கொண்டிருக்க, மறு புறமோ வெளிநாடு செல்வதற்காக ஷாப்பிங் படு மும்மரமாக நடந்தேறி, கணவனுடன் அவள் தனியே பயணிக்கப் போகும் நாளும் இனிதே வந்து சேர்ந்தது.

பேசவும் திராணியற்று செல்லியப்பன் மௌனத்தால் மகளை வழியனுப்ப, பிறந்தது முதல் தந்தையை விட்டு வெகு தொலைவு சென்றிராத மகளும் அடைத்த தொண்டையை சீர் செய்ய முயற்சி செய்யாமல் அவரது கையணைப்பிலேயே நாள் முழுதும் இருந்தாள்.

"பாப்பா...சூதானமா போயிட்டு வாடா!"

"அப்பாவைப் பத்தி கவலைப்படாதே! நீ சந்தோசமா இருக்கேன்கிற சேதியே என்னையே நிம்மதியா வச்சுக்கும் கண்ணு..."

"புது ஊரு! மாப்பிள்ள கூடவே போ பாப்பா... தனியா எங்கேயும் போகாத தாயி."

"அவுக ஆம்பிளைக...வேலைக்குப் போற இடத்தில...வெளியில ஏதாவது பிரச்சனையில கடுசா ரெண்டொரு வார்த்தை பேசிட்டாலும் நீ தான் பாப்பா பொறுத்துப் போகணும்!" என்றவருக்கு அறிவுரை கூறி பழக்கமில்லை என்பது அவரது திக்கலிலும், திணறலிலும் துல்லியமாய் தெரிந்தது!

முடிவில், அறிவுரைகளைக் கைவிட்டு மகளின் தலையை வருடி "உனக்கு நான் சொல்லத் தேவையில்லை. என்னையே பார்த்துக்கிட்டவ நீ! நல்லா இருடா பாப்பா!" என்றதோடு முடித்துக் கொண்டார் அந்த தந்தை.

அவரிடம் ஆயிரம் முறைக்கும் மேலாக, வேலைக்குப் போகவேண்டாம் எனக் கூறிய தாமரைச்செல்வி, தன் மாமியாரிடம் வந்து "அம்மா, அப்பாவை..அப்பாவை...உங்களால முடியும் போது போய் பார்த்துக்கோங்கம்மா. ப்ளீஸ்" என்றவளின் கைகளை அவர் பிடித்துக் கொடுத்ததிலேயே ஆயிரம் ஆதரவு வார்த்தைகள் பொதிந்திருக்க, "நீ

சொல்லனுமா?" என்ற கேள்வியிலேயே பல பதில்கள் மறைந்திருந்தன.

அனைவரிடமும் பிரியா விடை பெற்று, லண்டன் செல்லும் விமானத்தில் ஏறிய தாமரைச்செல்வியின் மனது மேலும் புண்படாமல் இருக்கும் வண்ணம் நவநீதனின் செயல்கள் அவளைக் காயப்படுத்தவில்லை. ஏன், நன்றாகவே நடந்துகொண்டான் என்று கூடச் சொல்லலாம்!

அது செல்வியின் முதல் விமானப் பயணம் என்பதால், இயல்பான பதட்டம் அவளை ஆட்கொண்டதை கவனித்தானோ, அல்லது சற்று முன்னர் அவளது கண்ணீரைக் கண்டதால் வந்த தாக்கமோ, அவளுக்கு சீட் பெல்ட் போட உதவுவது; விமானம் கிளம்பும்போது ஏற்படும் காற்றழுத்தத்தால் காது வலி ஏற்படும் அபாயம் இருக்குமென கூறி - அவளைத் தயார் செய்தது; விமானம் வானில் பறக்கத்துவங்கியதும் தங்கள் சேவையைத் தொடங்கிய பணிப்பெண்களிடம் செல்வியின் விருப்பத்தைக் கேட்டு உணவு வாங்கிக் கொடுத்தது என அவளைக் குளிர்விக்கவே செய்தான்.

நீண்ட விமானப்பயணத்தின் நடுவே செல்வி மெல்ல கண்ணயர்ந்தபோது, அவளது தலை தானாக நவநீதனின் தோளில் சாய்ந்துகொண்டது. அந்த ஸ்பரிசம் கொடுத்த இதத்தாலோ அல்லது ஏங்கியிருந்த பெண்மையின் சிலிர்ப்பாலோ, செல்வி மேலும் கணவனை ஒட்டி அமர்ந்துகொண்டாள். அவளது நெருக்கத்தைக் கண்ட கணவனோ "குளிருதா செல்வி?" என அதற்கு அர்த்தம் கொண்டு, போர்வையை எடுத்து மனைவியை மூடிவிட்டான்.

கண் விழித்தப்பின்னர், கணவனின் அருகாமை சிறு கூச்சத்தைக் கொடுக்க மெல்ல விலகி அமர்ந்தாள் புத்தம் புதிதாய் மணமானவள். "பாக்-கிலிருந்து ஜெர்க்கின் எடுத்துக் கொடுக்கட்டுமா? ரொம்ப குளிருதா?" என்றவனை மெல்லிய தலையசைப்பில் அமர்த்தியவளின் மீதி பிரயாணம் மிக நன்றாகவே சென்றது - சுவாரஸ்யமாக கூட!

நவநீதன் - தனது முந்தைய பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு மட்டுமல்லாது, லண்டன் விமான நிலையத்தில் அவர்கள் இருந்த நான்கு மணி நேரத்தையும் சந்தோஷமாகவே கழிக்கும்படி செய்தான்.

லண்டன் ஹீத்ரோவ் விமானநிலையத்தை சுற்றி பார்பதற்கே தம்பதியர் இருவருக்கும் இரண்டு மணிநேரம் பிடித்தது. ஒரு சில கடைகளில், செல்வியை வற்புறுத்தி சில பரிசுகள் கூட வாங்கிக் கொடுத்தான் கணவனாகப்பட்டவன். "ரொம்ப விலையா இருக்கே...நவீ!" என செல்வி தயங்கியபோதும், "இதெல்லாம் ஒரு விலையே இல்லை, செல்வி. யோசிக்காதே!" என்றதோடு முடித்துக் கொண்டவனின் கண்களில் தெரிந்ததை காதல் என எடுத்துக் கொண்டாள் - அவனது அரவணைப்பான பேச்சிற்காக ஏங்கியிருந்த மனைவி.

ஆனால் இந்த இதமும், மனதில் குடி கொண்டிருந்த ஏகாந்த நிலையும் நியூயார்க் விமான நிலையத்திலிருந்து வீடு செல்லும் வரையே நீடித்தது. விமானத்தை விட்டு இறங்கியதும், நுழைவு வழிமுறைகள்; பெட்டிகள் சேகரிப்பு என இரு மணி நேரங்கள் கழிய, விமானநிலையத்திலேயே நிறுத்திவைக்கப் பட்டிருந்த நவநீதனின் காரில் வீடு போய்

சேரும் வழி தோறும் - நவநீதனின் கண்கள் பாதி நேரம் சாலையிலும், மீதி நேரம் கைப்பேசியிலுமே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

திறக்கற்றை சாதனத்தைப் பயன்படுத்தி, யாருடனோ பேசிக் கொண்டே வந்த நவநீதனின் முகத்தில் தீவிரம் ஏறியிருப்பது வெகு துல்லியமாய் புரிந்தபோதும், அவர்கள் பேசிய பாஷை இன்னதென செல்வியால் வரையறுக்க முடியவில்லை.

முதலிரவு அன்று நவநீதன் பேசியது கூட இது போல தானே இருந்தது...என்ன பாஷை என அவனிடம் கேட்கலாமா? வேண்டாமா? என யோசித்தவள், சில நிமிடத்திற்குப் பின்னர் "நீங்க பேசுறது என்ன பாஷை?" என்றாள் மெல்ல.

தனது முக்கிய பேச்சுவார்த்தையில் அவளது இடைவெட்டல் அபசுவரமாய் பட்டதோ, அப்படி இருந்தாலும் "ஸ்பானிஷ்" என ஒற்றை வார்த்தை பதிலை அவன் சொல்லத் தவறவில்லை.

பாடத்தை மட்டுமல்லாது பிற மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பான் போலவே! நிகேதன் சொல்வது போல் "படிப்ப்ஸ் தான்! நம்மையும் விட அதிகமாய்!" என எண்ணிய செல்விக்கும் பெருமையுடன் சிரிப்பும் சேர்த்தே வந்தது. ஆனால், அவளது பெருமைக்கு ஆளானதையோ அல்லது மயக்கம் கொடுக்கும் அவளது சிரிப்பையோ ரசிக்கும் மனநிலையில் இல்லாத நவநீதனின் கைகளில் கார் வேகம் பிடித்தது. ஒரே மூச்சில் வீட்டு வளாகத்தை எட்டியவன், காதிலிருந்து அந்த திறக்கற்றை சாதனத்தை அகற்றாமலே "இறங்கு செல்வி" என்றான்.

அதில் பேசியவாறே சாமான்களை இறக்கியவன், மனைவியை கண்களால் வழிநடத்தி பத்தாம் தளத்திலிருந்த அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்தவன், மின்னல் வேகத்தில் கையிலிருந்த பொருட்களை உள்ளே வைத்துவிட்டு (எறிந்துவிட்டு), தன் பின்னே நின்றிருந்த மனைவியிடம் "நான் இப்போ வெளிய போறேன், செல்வி. வர லேட் ஆகும்...அதனால சாவியை எடுத்திட்டுப் போறேன். நீ படுத்து ரெஸ்ட் எடு! " என்றானே பார்க்கலாம்! செல்விக்கு உதறிவிட்டது!

"இப்போவா?" "நான் எப்படி தனியா இருக்கிறது?" என அவள் திகைத்து விழித்துக் கொண்டிருக்கும் போதே, நவநீதன் அவர்களது அபார்ட்மென்ட்டை விட்டு வெளியேறி இருந்தான்.

செல்வியும் அவனுடனே வெளியே வர எத்தனிக்க, "ஹே செல்வி, என்ன செய்ற? அது ஆட்டோமாடிக் டோர். அதுவா லாக் ஆகிக்கும். உள்ளே போம்மா...எனக்கு நேரமாச்சு!" என ஒரே தள்ளாக அவளை உள்ளே தள்ளியவன், கதவை இழுத்துச் சாற்றிவிட்டு சென்றும் விட்டான்.

மூடிய கதவை வெறித்துப் பார்த்த செல்வியின் கண்கள் அவளையும் மீறி கலங்கின!

திருமணம் முடிந்து ஒரு மாதம் கூட ஆகாத நிலையில், அதுவும் ஓர் அந்நிய பூமியில், வந்திறங்கிய முதல் தினமே...கட்டிய மனைவியை விட்டுவிட்டு அப்படி என்ன வேலை?

விமானப் பயணத்தின் போது கூட நன்றாக தானே இருந்தான் - இயல்பு நிலையையும் மீறி சிரித்துப் பேசியது போல் கூட...கரிசனமாய் இருந்தது போல் கூட தோன்றியதே!

அவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையா? ஆனால், அவன் தானே இந்த திருமணத்திற்கு முதன்முதலாக - அதுவும் சில வினாடி நேரங்களில் சம்மதம் கூறியது!

சில சமயம் யாரோ போன்ற உணர்வில் பேசினாலும்...பல சமயம் ஒரு நண்பனாய், நல்ல வழிகாட்டியாய் கனிவுடன் தானே பேசுகிறான்? பின்னே என்ன?
ஆனால், ஒரு சில சமயங்களில் மட்டும்...ஏன் அந்த யாரோ போன்ற உணர்வு?

இருந்த இடத்தை விட்டு அசையாமல், எண்ணங்களை மட்டும் தொலை தூரம் ஓடவிட்ட செல்வியின் சிந்தனை அந்த ஒரு சில சமயங்களை கூடுதல் கவனத்துடன் ஆராய ஆரம்பித்தது. அந்த சமயங்களில் தான் ஏதும் தவறு செய்துவிட்டோமோ? என எண்ண ஆரம்பித்த மனம், அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர் - அந்த நேரங்களில் நவநீதனை கைப்பேசியோ, மடி கணினியோ ஆக்கிரமித்திருந்தது ஏனோ உறுத்தியது! உறுத்தலை உறுதி செய்யவிடாமல் மனம் தவிக்க, சோர்ந்து போய் வீட்டினுள் திரும்பினாள் அவ்வீட்டின் அரசி!

எடுத்தும் சமையலறை, அங்கிருந்து ஒரு சில படிகள் கீழே சாப்பிடும் பகுதி, அதையும் தாண்டி வரவேற்பறை என இருந்த அமைப்பின் வலது புறம் ஒரு சிறு நடைபாதை சென்று - இரு அறைகளையும், ஓர் குளியலறையையும் தன் கிளைகளாக்கியிருந்தது. ஐந்தே நிமிடத்தில் வீட்டை வலம் வந்து முடித்தவளுக்கு, எந்த அறைக்குள்ளும் (இரு அறைகளிலும் மெத்தை இருந்தது! கட்டிலுடன் சேர்ந்து மெத்தை விரித்திருந்த அறையை நவநீதனின் படுக்கையறை என்ற முடிவிற்கு வந்திருந்தாள் செல்வி.) சென்று படுக்கப் பிடிக்கவில்லை.

மணந்து கொண்டவன் வழிநடத்திச் சென்று படுக்கவேண்டிய அறை என எண்ணினாளோ? வந்த முதல் தினமே, அவன் தன்னை அத்துவான காட்டில் விட்டுச் சென்றது போல் புதிய வீட்டில் தனித்து விட்டுச்சென்றது அவளை அப்படி எண்ண வைத்ததோ? ஏதோ ஒன்று மனதிற்கு ஒப்பாமல் போக, வரவேற்பறைக்கு வந்தவள் - சோபாவில் கூட படுக்காமல் தரைவிரிப்பின் மீது படுத்துக் கொண்டாள்.

படுப்பதற்கு முன்னால் ஊரிலிருக்கும் பெற்றோரிடம் வந்த விவரம் சொல்லலாம் எனத் தொலைப்பேசியைத் தேடினால், உன் கணவனைப் போல் உனக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் நான் தொலைந்தே போனேன் என அங்கே தொலைப்பேசி தொல்லைப்பேசி வேலையை செய்ய இருக்கவில்லை!

"ப்ச்" என்ற ஒற்றை சொல் - உள்ளுக்குள்ளிருந்த அலைகழிப்பை வெளிக்கொண்ர, கைகளைத் தலையணையாக்கி, உறங்க முற்பட்டாள் அன்றைய பயணத்தால் மட்டுமின்றி, அதிகமாக்கப்பட்ட யோசனையாலும் உழன்றிருந்தவள்.

கிட்டதட்ட நான்கு மணி நேரங்கள் முன்னர், விமானத்தில் கொரித்த உணவு இப்போது செமித்து, வயிற்றை கூடாக்கியிருக்க, பசியின் ஓலம் நெஞ்சு வரை கேட்டது - தாமரைச்செல்விக்கு! உலமிட்டு என்ன பயன்? உண்ணவோ சமைக்கவோ ஏதாவது இருக்கவேண்டாமா? மங்கையர்க்கரசி கொடுத்துவிட்ட இனிப்புகளும், காரவகைகளும் இருந்தன தான் - ஆனால், இரண்டு வாய்க்கு மேல் அவற்றை உண்ண முடியாமல் செல்விக்குத் திகட்டியது! போக, அவர் கொடுத்துவிட்ட பருப்பு பொடியையும், ரசப்பொடியையும் வெறும் வாயில் உண்ணமுடியுமா என்ன? ஆயாசமாய் வீட்டை ஒரு முறை பார்வையால் சுழற்றியவளுக்கு, குளிர்சாதனப்பெட்டி கண்ணில் பட, உணவு தேடி அதை திறந்தவளின் கண்களில் - சாப்பிடும் நிலையில் ஏதுமில்லை - எதை திறந்தாலும் மாமிச வாடை அடிப்பது போல் ஓர் பிரமை ஏற்படவே - கடைசி வழியாய் தண்ணீரைக் குடித்துவிட்டு அதே இடத்தில் போய் முடங்கிக் கொண்டாள்.

எப்போது உறங்கினாள் என அவளாலே வரையறுக்க முடியாமல் எண்ணங்களின் அலைக்கழிப்பால் அயர்ந்து உறங்கியவளுக்கு, போக போக குளிர் தெரிய தொடங்கியது! கை-கால்களை முடக்கிக் கொண்டும், ஜெர்க்கின் அணிந்து அவள் குளிரை விரட்ட முற்பட, குளிர் மிரண்டு ஓடிவதற்குப் பதிலாக தூக்கம் ஓடியே போனது!

பசியும், குளிரும், இருட்டும், அதையும் மீறி தனிமையும் பயமுறுத்த சோபாவில் அமர்ந்தவள் -தனித்து விழித்திருந்த நேரம் - சரியாக சொல்லப் போனால் நான்கு மணி, முப்பத்தைந்து நிமிடங்கள், ஆறு வினாடிகள். அதன் பின்னரும் விழித்திருந்தாள் தான் - ஆனால், நவநீதன் வந்துவிட்டிருந்தான்!

கதவின் பூட்டு நீக்கப்படும்போதே "யாரு? யாரு?" (பாவம், சிறு பெண். அதுவும் புது ஊர்

அல்லவா? வீட்டிற்குள் நுழைவது யாரென்ற பயத்தில் கேட்கப்பட்ட கேள்வி அது!) என செல்வி பதற, "நான் தான்!" என உள்ளே நுழைந்தவனை, பதிலின்றி வெறித்தாள் அவனது மனைவி.

"என்ன செல்வி...தூங்கலையா? உனக்குத் தான் அந்த சின்ன ரூம் ரெடி பண்ணி இருக்கேனே...அதில் தூங்கியிருக்கலாமே!" என்றவனைப் பார்த்து சிரிப்பதா? அழுவதா? எனத் தெரியவில்லை. அவள் என்ன அந்த வீட்டில் காலம் காலமாய் வாழ்கிறாளா - சின்ன ரூம்;பெரிய ரூம் பற்றி அறிந்து கொள்வதற்கு!
அதையும் தாண்டி "அச்சோ...ஹீட்டர் போடலையா? இந்த குளிர்லேயா இத்தனை நேரம் இருந்தே?" என அவன் வருந்த, செல்விக்கு இப்போது கோபம் வந்தது.

"நான் இதுக்கு முன்னாடி இந்த வீட்டுக்கு வந்ததில்ல. அதான் இதெல்லாம் தெரியலை! ஒரு நாள் இருந்து இதெல்லாம் சொல்லிக் கொடுத்திட்டுப் போயிருக்கலாமே? வந்தவுடனே என்னை இப்படி தவிக்கவிட்டுட்டு போகணுமா?" எனத் தன் ஆதங்கத்தை வாய் விட்டே கேட்டுவிட்டாள்.

அவள் இப்படி கேட்பாள் என நவநீதன் எண்ணவில்லை என்பது லேசான அதிர்ச்சி மேலோங்க; நவநீதன் ஏறிட்டதிலேயே செல்விக்குப் புரிந்தபோதும், பதில் வேண்டி அவளது முகமும் கணவனை எதிர்நோக்கிக் காத்திருந்தது.

"க்ளோஸ் ஃப்பிரண்ட்  ஒருத்தருக்கு என்னோட ஹெல்ப் தேவைப்பட்டது. அவாய்ட் பண்ணமுடியலை" என்ற நவநீதன் அடுப்பில் ஏதோ செய்ய முற்பட, முதலிரவு அன்றும் அவன் இதே காரணத்தைக் கூறியது கெட்ட நேரத்தில் செல்விக்கு நினைவு வந்துதொலைக்க

"க்ளோஸ் ஃப்பிரண்ட்ன்னா? அவங்க பேர் என்ன? என்கிட்டே சொல்லக்கூடாதா?" என என்றுமில்லா தீவிரத்துடன் செல்வியும் கேள்வி கேட்டாள். பசியோ, தனிமையோ, ஏக்கமோ ஏதோவொன்று அவளைப் பேசவைத்து வேடிக்கை பார்த்தது - அந்தோ பரிதாபம் தான்!

"சந்தேகமா?" எனக் கணவன் - ஒரு மாதிரி குரலில் எதிர் கேள்வி கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது எனக் குழம்பிப்போனாள் திருமதியாள்!

அத்தியாயம் 6

தன் மேல் சந்தேகமா என்ற அவனது கேள்வியில் செல்வியின் கோபம் அதிகரிக்கவே செய்தது. "தப்பு செய்தவன் அவன். ஆனால், கேள்வி என்னவோ தன்னை குற்றவாளி ஆக்குவது போலல்லவா இருக்கிறது?" என்றெண்ணிய வினாடி

"நீங்க ஏன் அதை சந்தேகம்ன்னு எடுத்துக்கிறீங்க? ஒரு கணவன் மேல் மனைவிக்கு இருக்கிற உரிமை - அப்படி எடுத்துக்கலாமே!" என்றவளின் கண்கள் கணவனை நேர் கோட்டில் சந்தித்திருந்தன; நான் கேட்டதில் ஒரு சதவீதம் கூட தவறில்லை என்பது போன்ற நிமிர்வு!

அவளது இந்த நேரடி தாக்குதலை நவநீதன் எதிர்பார்கவில்லை என்பது சில நிமிடங்கள் அவன் காத்த மௌனத்திலேயே விளங்கிய போது, "சாரி செல்வி! தவிர்க்க முடியாத சூழ்நிலை. இனிமேல் இதுபோல் நடக்காமல் பார்த்துக்கிறேன். " என அவன் சட்டென தழைந்து போகவே, செல்விக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தப்பு செய்ததற்கு மன்னிப்பு கேட்டுவிட்டான் சரி, ஆனால் அந்த நண்பர் யாரென சொல்லவில்லையே? என மனம் கேள்வி மேல் கேள்வி கேட்டப்போதும், அதை வெளியே கேட்க நா எழவில்லை. அவன் தழைந்து போகும்போது, மீண்டும் மீண்டும் அந்த நபரை பற்றி துருவினால் அவன் சொல்வது போல் தான் சந்தேகப்பிராணி ஆகிவிடுவோமோ? என்று கூட தோன்றிவிட்டது - செல்விக்கு!

அவனது மன்னிப்பிற்கு பதில் சொல்ல தோணாமல், முன்னர் அமர்ந்திருந்த சோபாவில் மீண்டும் சோர்வுடன் சாய்ந்தாள் மனைவி.

"உள்ள போய் படுத்துக்கோ, செல்வி. லெப்ட்ல இருக்க முதல் ரூம் உனக்காக ரெடி செய்திருக்கேன். மாட்ரெஸ் எல்லாம் புதுசு தான்" என்றவன், "அங்க என்னோட புக்ஸ், சி.டிஸ் கொஞ்சம் இருக்கு. நாளைக்கு எடுத்துக்கிறேன்" என முடித்தான்.

ஏன் தனி அறை? என்ற அடுத்த கேள்வி மண்டையை குடைந்தாலும், "நானும் நீயும் ஒரே அறையில் ஏன் படுக்கவில்லை?" என அப்பட்டமாய் கேட்கமுடியாமல் "ம்ம். நீங்க?" என்றாள் செல்வி மேல் பூச்சுடன்.

அவளது கேள்வியின் அர்த்தத்தை உணராதது போல் "எனக்கென்ன? நான் என்னோட ரூம்ல படுத்துக்கிறேன்!" என்ற கணவன் மகாராசனும், மனைவியின் எழில் முகம் பாராது,

தணலாய் எரியும் அடுப்பின் மீதே கண்ணாய் இருந்தான்.

அதற்கு மேல் என்ன, எப்படி பேசுவது எனத் தெரியாமல் படுக்கையறையின் பக்கம் திரும்ப முற்பட்டவள், கணவன் இன்னமும் சமையற்கட்டிலேயே நிற்பது பட அங்கே நகர்ந்தாள்.

"ஏதாவது ஹெல்ப் வேணுமா?" - கடமை மனைவியாய் உதவ முன் வந்தவளிடம்

"நோ... தேங்க்ஸ்! சான்ட்விச் தான்...நானே பண்ணிட்டேன்" என்றவன், அவளது கடமையில் பருக்கையளவு கூட தனதாக்கிக் கொள்ளாமல், தானே தயாரித்த சான்ட்விச்சை தன் வாயில் தானே அடைத்துக் கொண்டு வரவேற்பறை பக்கம் நகர்ந்தான்.

அப்படி செல்பவனை நிறுத்தி "எனக்கு எங்கே சான்ட்விச்?" எனக் கேட்கும் ஜாதியா நம் கதாநாயகி? கேட்க எண்ணினாலும், அவனிடமிருந்து விட்டேறியான பதிலே வரும் என மனதில் தோன்றியதோ என்னவோ, அதை கேட்டு தன்னைத் தானே புண்படுத்திக் கொள்ளாமல், மீண்டும் ஒரு குவளை தண்ணீரை தன் உணவாக்கிக்கொண்டு, தனக்கான அறைக்குள் சென்று முடங்கினாள். இரண்டே வினாடிகளில் பரபரவென ஓடிவந்தவள் - "நாம சௌகிரயமாய் வந்துசேர்ந்ததை வீட்டில சொல்லணுமே? ஃபோன் தரீங்களா?" என்றாள்.

"அவங்களே பேசிட்டாங்க. நான் சொல்லிட்டேன்" என்றவனிடம், "தந்தையிடம் பேசவேண்டும் போலிருக்கிறதே..." என்ற தவிப்பை வார்த்தையில் அல்லாமல் முகத்தில் மட்டும் காட்டி அவள் நிற்க, அங்கே அதை கவனிக்க தான் ஆளில்லாமல் போனது! வேறு வழியின்றி மீண்டும் படுக்கையறை அவளது சரணலாயம் ஆனது!

பசியும், கணவனின் அக்கறையின்மையும், புது ஊரும், பாடாய் படுத்திய குளிரும், முற்றிலும் மாறுபட்ட நேரக் கணக்கும் உறக்கத்தை தூரவிரட்ட, படுக்கையில் புரண்டவாறே அடுத்த இரு மணி நேரங்களைக் கழித்தவள் அதற்கு மேல் பொறுக்க முடியாமல், வெளியே வந்தாள்.

கும்மிருட்டாய் இருந்த வீட்டை ஒளிபெறச் செய்யும் வகையறியாமல், ஒரொரு மின்விசையையும் போட்டுப் போட்டுப் பார்த்தவளுக்கு - இந்தியாவில் மின்விசையை

அணைக்கும் நிலை அமெரிக்காவில் அதை உயிர் பெறச் செய்யும் என்பதை கண்டுபிடிக்கவே பதினைந்து நிமிடங்கள் பிடிக்க, அவளது உருட்டல் சத்தத்தில் கணவன் எழுந்துவந்தான்.

"தூங்கலையா செல்வி? என்ன செய்றே?" என்றவனிடம், "தூக்கம் வரல" என்ற முணுமுணுப்பின் பின்னர் "உங்களுக்கு காபி போடவா?" என்றாள் மனைவி.

"ம்ம். பால் இருக்கான்னு தெரியல. ஆனா, பால் பவுடர் இருக்கும்" என்றவன், குளியலறைக்குள் புகுந்து கொள்ள, செல்விக்கு அந்த சமையலறை அடுத்த ஆராய்ச்சிக்கூடமானது. ஒரோர் அலமாரியாக திறந்து பார்த்தவளுக்கு பால் பவுடர் எதுவென்றே கண்டுபிடிக்க முடியாமல் போக, குளியறையிலிருந்து வெளியே வந்த கணவனிடம் "எனக்கு பால் பவுடர் எதுன்னு கண்டுபிடிக்க முடியல. இந்த பழக்கமெல்லாம் பிடிபடுற வரைக்கும் கொஞ்சம் ஹெல்ப் பண்றீங்களா? ஒரு தடவை சொல்லிக் கொடுத்தா கூட போதும். அப்புறம் நானே பார்த்துக்கிறேன்" என்றவளின் குரல் கெஞ்சிற்று.

இவையெல்லாம் அவளுக்குத் தெரியாதது நவநீதனுக்கு பெருத்த ஆச்சிரியதைக் கொடுக்க, "ம்ம் சரி" என்றவன் அங்கிருந்த மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தும் முறை பற்றியும், அவன் வைத்திருந்த பொருட்கள் பற்றியும் பத்தே நிமிடத்தில் சொல்லி முடித்தான்.

நல்ல மனைவியாய் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள விரும்பிய அந்த மாணவியும், கர்மசிரத்தையாய் அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டாள். படித்து முடித்ததன் பலனாக, அவள் காபி தயாரிப்பைத் தேர்வாகக, தேர்வின் மதிப்பெனை அறிய கணவனிடம் அதை நீட்டினாள்.

அருந்திவிட்டு "நாட் பாட்" என்றவனின் சொற்கள் செல்வியின் காதுக்கு அமுதமாக, நிஜ அமுதமாய் இருந்த காபியை ரசித்துக் குடிக்க முடிந்தது.

"டிபனுக்கு என்ன செய்யட்டும்?" என்ற செல்வியிடம், "வெளியே போய்டலாம். எனக்கு நாளையிலிருந்து வேலை ஆரம்பிச்சிடும். அதனால, இன்னைக்கு உனக்கு தேவையானது எல்லாத்தையும் வாங்கிட்டு வந்திடலாம்" என்றவன், "குளிச்சு கிளம்பு. கொஞ்சம் கனமான

டிரஸ் போட்டுக்கோ!" என முடித்துக் கொண்டு, தன் உடன்பிறப்பான மடிகணினிக்குள் புதைந்துபோனான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் நியூயார்க்கின் பிரபல பண்கடை கட்டிடம் ஒன்றில் நின்றிருந்தனர் தம்பதியர். அங்கிருந்த கடைகளும், தொங்கிய துணி வகைகளும், சுற்றியிருந்த மக்களும் புதிதாய் இருக்க, செல்விக்கு அவற்றை பார்க்க சுவாரஸ்யமாய் இருந்தது. கண்கள் விரிய அவற்றை பார்த்துக்கொண்டே வந்தவள், இரண்டடி முன்னே நடக்கும் கணவன் தன் மின்னல் வேகத்தை நிறுத்தியிருப்பான் என்பதை உணராமல் அவன் மீது முட்டிக் கொண்டு, தடுமாறி விழப்போனாள்.

"ஹே, ஹே பார்த்து!" என்றவன், அவளது தலை அடிபடும் முன்னர் அவளைத் தாங்கிப் பிடித்து நிறுத்திவைத்தான். "சாரி...அங்க பார்த்துட்டே...தெரியாம!" என செல்வி முகம் சிவக்க, "பரவாயில்லை. முதல டிரஸ் வாங்கிடலாம். அப்புறம் க்ரோசரி, காய் எல்லாம் பார்த்துக்கலாம்...சரியா?" என்றவன், தொடர்ந்த மூன்று மணி நேரமும் செல்வியின் கைகளைப் பைகளால் நிரப்பினான் - துணிகள் நிரம்பிய பைகளால்.

அவன் நன்றாக இருக்கிறது என எடுத்துக் கொடுத்து, அணிந்து பார்க்கச் சொன்ன துணிகளை எல்லாம் போட்டுக் கொண்டு செல்வியால் துணிமாற்றும் அறையிலிருந்தே வெளி வரமுடியவில்லை.

"இதெல்லாம் ரொம்ப இறுக்கமா...குட்டியா இருக்கு நவீ! ப்ளீஸ்" என்ற கெஞ்சலுடன் அவள் வெளியேற, "மற்றதெல்லாம் விலை குறைவா இருக்கே செல்வி!" என்றவனின் வார்த்தைகளை - அன்பால் மட்டுமே வளர்க்கப்பட்டிருந்த அந்த ஜீவனால் ஒத்துக்கொள்ளமுடியவில்லை.

உனக்கு நன்றாக இருக்கும் எனக் கூறி, அவன் மறுத்திருந்தால் அந்த வலி அவளுக்கு வந்திருக்காதோ? விலையைக் கணக்கிட்டு அவன் பேசியது உறுத்த, அதன் பின்னர் அவன் எடுத்துக் கொடுத்த உடைகளை போட்டுப் பார்க்காமலே எடுத்துக் கொண்டாள். ஆனால், வார்த்தையால் அல்லாமல் செய்கையால் மனைவி காண்பித்த ஒத்துக்கொள்ளாமை போராட்டத்தை நவநீதன் கண்டுகொண்டது போலவே தெரியவில்லை என்பது அங்கே செல்வியின் நிலையை மேலும் பரிதாபமாக்கியது!

ஒருவேளை அவனுக்கு அவளது கோபம் புரியவேஇல்லையோ? எதுவாக இருப்பினும், செல்வியின் மனது அலைபாய ஆரம்பித்தது நிஜம்!

அவன் வாங்கிக் குவித்த பொருட்களை ஓர் நிராசையுடன் பார்த்திருந்த செல்வி, இன்னபிற கடைகளிலும் அவன் "வேண்டுமா?" என எதை கேட்டாலும் ஓர் தலையசைப்புடன் மறுக்க ஆரம்பித்தாள். பெண்களுக்கே உரிய காலணிகள், கைப்பைகள், கடிகாரங்கள், அழகு சாதனங்கள் போன்ற கடைகளிலும், அவன் விலை அளவிலேயே பொருட்களை மதிப்பிட்டு வாங்க, தன் விருப்பம் என ஒன்றை அவன் மதித்தாகவே இல்லையே என மனம் இடிக்க ஆரம்பித்தது.

ஒரேடியாய் மனைவியின் விருப்பத்தை மதிக்கவே இல்லை என குற்றம் சாற்றாதே செல்வி! வாழ்வின் மிக முக்கிய நிகழ்வான திருமணத்திற்கே உன் சம்மதம் முக்கியமென கூறியவனும் இவனே தான்! நினைவிருக்கட்டும் என நியாயப்புத்தி கொண்ட மனசாட்சி குட்டியது.

ம்ம்...ஆமாம்! கேட்டான் தான்! ஆனா....ஆனா...அதுக்கு அப்புறம் ஒரு தடவை கூட "உனக்கு இது பிடித்திருக்கிறதா?" என அவன் கேட்கவில்லையே! எனத் தேள் கொடுக்காய் தலை நிமிர்த்திய கேள்விக்குத் தான் பதிலின்றி தவித்தாள் அந்த அறியா பேதை! கேட்காத கேள்விகளுக்கு பதில் கிடைப்பதில்லை என்பதை யார் அவளுக்கு எடுத்துச்சொல்வது?

அன்றைய தினம் முழுதும் கொள்வனவிலேயே சென்றுவிட, காலை-மதியம் என இருவேளை உணவும் வெளியில் முடிய, இரவு வீடு திரும்பும் போதே நவநீதனின் காதுகளில் திறக்கற்றை குடியேறியிருந்தது. "ம்ம். இனிமேல் இவனின் செயல்களை நம்மால் கணிக்க முடியாது" என்ற செல்வியின் பெருமூச்சு, நெஞ்சு கூட்டை விட்டு வாய் வழியே வெளிவருவதற்குள், "செல்வி, ஆபீஸ்ல இருந்து ஃபோன். ஒரு மூணு மணி நேரத்தில் வந்துடுறேன். நீ சாப்பிட்டு படு" என்றவன், அவளின் "சரி"யைக் கூட கேட்க நிற்காமல் பறந்துவிட்டான்.

அவன் போவதை ஓர் ஏக்கத்துடன் பார்த்திருந்தவள், வாங்கி வந்த பொருட்களுடன் சேர்த்து ஊரிலிருந்து கொண்டு வந்த பொருட்களையும் - தனக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் அறையிலுள்ள அலமாரியில் அடுக்கிமுடித்தாள். பின்னர் சமையற்கட்டில் புது

பொருட்களை தோதாக, தனக்கு ஏதுவான வகையில் அடுக்கி முடித்தப்போது ரெண்டு மணி நேரமே சென்றிருந்தது.

மீதி நேரத்தை எப்படி போக்குவது எனத் தெரியாமல், வீட்டை வலம் வந்தவளின் கண்களில் நவநீதனின் மடிகணினி பட, அதை உயிர்பெறச் செய்த வினாடி, அதிசியக்கத்தக்க விதமாய் நவநீதன் வந்துசேர்ந்தான்.

கதவைத் திறந்துகொண்டிருந்தவனின் கவனம் செல்வியிடம் இருக்கவில்லை - செல்வியின் மடியிலிருந்த கணினி மேல் இருந்தது.

"என்ன பண்ணிட்டு இருக்கே?"

"போர் அடிச்சது...ஈ-மெயில் செக் பண்ணலாம்ன்னு..."

"என்னைக் கேட்காம என்னோட பொருளை எடுக்கிறது எனக்கு சுத்தமா பிடிக்காத விஷயங்களில் ஒன்னு" என்றவனின் குரலில் கோபம் அப்பட்டமாய் கொப்பளித்தது.

"அது...அது..." என செல்வி இழுக்க, அவளிடமிருந்து கணினியைப் பறித்துக் கொண்டு விடுவிடுவென உள்ளே சென்றவனின் காதுகளில், கண்ணீருடன் கூடிய செல்வியின் "சாரி" விழவே இல்லை. ஆனால், அவன் கூறிய "கொஞ்சம் கூட மானேஸ் தெரியாம...சை" என்ற சலிப்பு கண்ணீரையும் மீறி செல்வியின் மூளையை எட்டியது.

இதுநாள் வரை, இப்படிப்பட்ட ஓர் நிராகரிப்பை அவள் அடைந்ததே இல்லை; சரியாக சொல்லப்போனால் நிராகரிக்கப்படும் நிலையில் அவள் தன்னை நிறுத்திக் கொண்டதே இல்லை எனலாம்!

செல்வம் குறைந்திருந்தபோதும் தங்கள் செல்வமான செல்வியை ஓர் அவச் சொல்லுக்கு ஆளாக்காமல் வளர்த்த பெற்றோர்;
அவளுக்கு கல்வி மேலிருந்த ஆர்வத்தை தூண்டிவிட்டு சுடர்விட செய்த ஆசிரியர்கள்;
வித்தியாசம் பாராட்டாத நட்பு;

அவளது பணியாற்றும் ஆற்றலை உற்சாக வார்த்தைகளால் வளர்த்த அலுவலக பெருமக்கள்; என யாருமே அவளை அவமானப்படுத்தாத நிலையில் - தன் கணவனின் பொருள் தானே என்ற எண்ணத்துடன் அவள் செயல்பட, அவனது வார்த்தைகள் கூர்முள்ளாய் குத்தின.

அவனது அந்த வார்த்தைக்குப் பின்னர், அந்த வீட்டில் இருப்பதே இங்கிதமற்ற செயல் போல் தோன்றியது! அது அவன் வீடல்லவா?
ஆனால், சூழலும் சுற்றியிருக்கும் மக்களும் அன்னியராய் இருக்கும் ஊரில் எங்கே என்று போவது?
அப்படி போவதென்றாலும், அதற்கு இந்த ஊர் பணம் வேண்டாமா? அவளிடம் இந்தியப்பணம் கொஞ்சமிருக்கிறது தான்...
ஆனால்...அதை எங்கே...எப்படி..சை கணவனின் ஒற்றை சுடு சொல்லுக்கே வீட்டை விட்டுப் போகும் அளவு யோசிக்கவேண்டுமா?
பின்னே அவன் மட்டும் இப்படி பேசலாமா? மனைவி என்பவள் அவனுள் பாதி அல்லவா? பாதி-கால் என பாகம் பிரிக்கவேண்டாம், ஓர் சகமனுஷியாய் நடத்தலாமே! - எண்ணங்களின் ஊர்வலம் நடந்தேறிக் கொண்டிருந்த சமயம் கண்ணீரின் ஊர்வலம் கன்னங்களில் நடந்தேறியது.

வழிந்த கண்ணீரை துடைக்கக் கூட தோணாமல், தன் எண்ணத்திலேயே மூழ்கியிருந்த செல்வியின் முன்னே கைப்பேசியை நீட்டிய நவநீதன், "செல்வி, அம்மா பேசுறாங்க...ஹே ஏன் அழறே? என்னாச்சு? சரி...சரி அம்மாவோட முதல பேசிடு. அழாம பேசு" என்றவன், கைப்பேசியிலிருந்து ஊமைத்தன்மையை எடுத்துவிட்டு அவளிடம் நீட்டினான்.

கைப்பேசியின் வாய் மீது கைவைத்து மறைத்த செல்வி, "இது கூட உங்களது தானே! நான் பேசலாமா?" எனக் கேட்டு, "ஹோ, நான் அப்படி சொன்னதுக்கு தான் கோபமா? அது ஆபீஸ் லேப்டாப், நிறைய வேலை சம்பந்தப்பட்ட விஷயமெல்லாம் இருக்கு...அதான்! முதல அம்மாவோட பேசு... அம்மாக்கு எதுவும் தெரியவேண்டாம்" என்றான் மெதுவாக.

'சத்புத்திரன் தான்!' என்ற நொடிப்பை மனதிற்குள் நிகழ்த்திவிட்டு, மாமியாரிடம் பேசினாள் செல்வி. அடுத்த அரை மணிநேரமும் நொடியில் சென்றுவிட, அறைக்குள்

சென்றுவிட்டிருந்த கணவனிடம் கைப்பேசியைக் கொடுக்க அங்கே சென்றாள் செல்வி. கதவைத் தட்டாமல் வந்தால் அதற்கும் இங்கிதம் பற்றிய விமர்சனம் வருமோ என்றெண்ணியவள் போல், சொந்த வீட்டிலேயே திறந்திருந்த கதவைத் தட்டி, அனுமதி பெற்று கொண்டு உள்ளே சென்று, கணவனின் முகம் பாராமல் கைப்பேசியை அவனுக்கு எதிரே இருந்த மேஜையில் வைத்துவிட்டு, தனக்கான அறைக்குள் சென்று மறைந்தாள்.

ஊரிலிருந்து வந்த மறுநாளே ஊருக்குப் போகவேண்டும் என்று தோன்றிய எண்ணத்தை, பெற்றோர் இருவரும் தங்கள் வாழ்வின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை தகர்க்க, மேலே என்ன செய்வது என்ற புரியாத நிலையில் மேலும் பல நாட்கள் சென்று மறைந்தன.

அந்த நாட்களின் முக்கிய நிகழ்வுகள் இதோ

நவநீதன் - காலை ஏழு மணிக்கு வேலைக்குக் கிளம்பிச் சென்றால் வீடு வந்து சேர ஒன்பது முதல் பத்து மணியானது.

மூன்று வேளை உணவுகளில் - பல நாட்கள் காலை வேளை மட்டுமே செல்வியின் கையால் என்றானது. வெகு சில நாட்களில் மட்டுமே இரவு உணவிற்கு வீட்டில் இருந்தான்; அப்போதும் ஓரிரு வார்த்தைகளில் அவனது அன்றைய அட்டவணை, ஒற்றை வார்த்தை பதில்கள்.

உணவிற்கு என்றில்லை - பல நாட்களில் செல்வி மட்டும் தனித்திருக்கும்படி நவநீதனுக்கு முக்கியவேலை முளைத்தது, இல்லை அவனது க்ளோஸ்ஃபிரண்ட்க்கு உயிர் போகும் அவசரம் வந்து சேர்ந்தது.

அப்படியே அதிசயமாய் வீட்டிலிருந்தாலும் அவனது உலகம் ஒன்று தொலைக்காட்சியில் சுழன்றது அல்லது கணினியில் மிதந்தது.

அடுத்த முக்கிய விஷயம் - செல்வியை அவன் அழைத்துச் சென்றது வீட்டிற்கான பொருட்கள் வாங்குவதற்கும், காய் வாங்கவும் மட்டுமே. நண்பர்கள் வீடு, கோவில், சுற்றுலா தளம் என அவளை இங்கே அங்கே அழைத்துப் போனானில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, பேச்சு, நட்பு, விருப்பு, வெறுப்பு போன்றவற்றில் தொடங்கி படுக்கை வரையில் தனது வாழ்வை செல்வியுடன் பகிர்ந்துகொள்ளவே இல்லை, நவநீதன்!!

அவனுக்கு எப்படியோ, இரண்டு நாளுக்கு ஒரு முறை வீட்டில் பேசும் அரை மணி நேரம் தவிர செல்விக்கு வாழ்வு நரகமானது - சிறைவாசமிருப்பது போல் தோன்றிவிட்டது. இதற்கு மேல் மூச்சு முட்டி செத்துவிடுவோமோ என்ற நிலையில், "விசேஷம் ஏதும் உண்டா செல்விம்மா?" என மங்கையர்கரசியும், "என்னை மாதிரி தள்ளிப்போடாம சீக்கிரம் பெத்துக்கோ செல்வி!" என ஷைலஜாவும் ஒரே நாளில் கூற, "அதுக்கு ஒன்னு தான் குறைச்சல். ஹய்யோ கடவுளே!" எனக் கத்த வேண்டும் போலிருந்தது செல்விக்கு.

கைப்பேசியையே வெறித்துக் கொண்டிருந்த செல்வியிடம் "என்ன செல்வி? பேசிட்டினா ஃபோனை தா..." என நவநீதன் வினவ, சுர்ரென கோபம் தலைக்கேற

"இந்தாங்க...இதையும் வச்சுக்கோங்க! ஏன் ஏன் இப்படி நடந்துக்கிறீங்க? இந்த நடப்பில உங்கம்மாவும், உங்கக்காவும் பிள்ளை பெத்துக்கோ...அதுவும் சீக்கிரமே பெத்துக்கோன்னு சொல்றாங்க. நீங்களும் நானும் வாழற வாழ்க்கைக்கு பிள்ளை எங்கிருந்து பிறக்கிறது? எனக்கு பைத்தியம் தான் பிடிக்கணும்...ஏங்க ஏங்க? ஏங்க இப்படி இருக்கீங்க? என்னைப் பிடிச்சுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?" என்றவள் முகத்தை மூடிக் கொண்டு அழுதுவிட,

"ஹ்ம்ம். குழந்தை பத்தி பேச்சு வந்தாச்சு. இந்த வாரம் கைனக் (gynaec) கிட்ட போயிட்டு வந்திடலாம்" என்றவனை விநோதமாய் பார்த்தாள் செல்வி - கண்ணீரினூடே!

கல்யாணமே ஆகலையாம் அரச மரத்தை சுத்திவந்து அடி விதை தொட்டுப் பார்த்தாளாம் ஓர் புண்ணியவதி - என்ற ரீதியில் வாழ்வையே தொடங்கவில்லையாம் - இதில் மருத்தவரின் ஆலோசனை என்ன மண்ணிற்கு? என்ற ரீதியில் ஓடிய மலரின் எண்ணங்களின் முடிவில் "எதுக்கு" என்ற ஒற்றை வார்த்தை மட்டுமே வந்தது.

"டெஸ்ட் டியூப் பேபி பத்தி பேசிட்டு...அதுக்கான செய்முறை பற்றி தெரிஞ்சிட்டு வந்திடலாம் செல்வி!" எனக் கணவன் கொர்ரியபோது, மலரின் அழுகை முற்றிலுமாய் நின்றுவிட்டது.

## அத்தியாயம் 7

ஆய்வுக்குழாய் முறையில் குழந்தை பெற்று கொள்ளாமல் என நவநீதன் கூறியதை செல்வியால் நம்பக் கூட முடியவில்லை. "இவனுக்கென்ன பைத்தியமா?" என மனதில் தோன்றிய முதல் வார்த்தையை அவள் பளிச்சென கேட்டுவிட, அவனது முகம் கருத்தது!

"ஏதாவது வாயைத் திறந்து பேசுங்க..."

"என்னால உங்க நிராகரிப்பை தாங்கிக்க முடியல...ரொம்ப கஷ்டமா இருக்கு!"

"ஏதோ ஜெயில்ல இருக்கமாதிரி...வெளி உலகத் தொடர்பே இல்லாம"

"வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன்...ஏன் என்னை எல்லா விஷயத்திலையும் ஒதுக்கியே வைக்கிறீங்க?"

"உங்களுக்கு நான்...எனக்கு நீங்கன்னு இருக்க இந்த உறவு பிடிக்கலையா? என்ன தான் உங்க பிரச்னை?" என்றவள் கடைசி வாக்கியத்தில் - தன் நிலை இத்தனை தாழ்ந்து விட்டதா என்ற குன்றல் ஏற்பட, பொங்கி அழுதாள்.

அவளது கதறலை மௌனமாய் பார்த்திருந்த நவநீதன், பதிலின்றி உள்ளே நகர முற்பட "நில்லுங்க. நான் பேசிட்டே இருக்கேன்...நீங்க பாட்டுக்கு போயிட்டே இருந்தா என்ன அர்த்தம்? எனக்கு நீங்க பதில் சொல்லியே ஆகணும். சொல்லிட்டுப் போங்க!" என அவனது வழியை கைகளால் மறித்து நின்றாள்.

அவன் கூறப்போகும் பதில் கத்தியின்றி ரத்தமின்றி தன் வாழ்வை ரணமாக்கப்போவதை அறிந்திருந்தால், செல்வி அந்த கேள்வியை கேட்டிருக்கவே மாட்டாளோ? விதி வலியதோ? கொடூரமாய் விளையாடிவிட்டதே!

"நீ இதை எப்படி எடுத்துப்பேன்னு தெரியல...I am in a relationship. அதை மறந்துட்டு உன்னோட புருஷனா...ஒரு நார்மல் செக்ஸ் வாழ்க்கை வாழ என்னால முடியும்னு தோணலை..." என்றவனை வெறித்த செல்வி, "ரிலேஷன்ஷிப் - அப்படின்னா? யார் கூட?" என்றபோது கடைசி வார்த்தைக்குப் பதிலாய் காற்று தான் வந்தது. தொண்டை அடைத்து...கண்ணில் நீர் கட்டி...எல்லாவற்றுக்கும் மேலாய் அஸ்திவாரமே ஆடிவிட்டதில் உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டது.

"ம்ம். ரொம்ப டென்ஷன் ஆகாதே செல்வி! இதுனால எந்த பிரச்னையும் வரப்போறதில. உன்னோட லைஃப்க்கு எந்த பாதிப்பும் வராது..." என மேலும் பேசிக்கொண்டே போக,

அவனது பதிலில் வெகுண்டு "என்னோட லைஃப்க்கு எந்த பாதிப்பும் இல்லையா? அதை சொல்ல நீங்க யார்? அதை முழுசா கெடுத்த உரிமையா?" என்றவளின் குரல் அவளது இயல்பிற்கு மீறி உயர்ந்திருந்தது - மிக அதிகமாகவே.

அவனது பதிலை எதிர்பார்க்காதவள் போல் "எனக்கு பதில் சொல்லுங்க...யாரு கூட...

என்ன ரிலேஷன்ஷிப்?" என்றவளின் குரலில் மிகுந்த தீவிரம் இருந்தது.

"என்னோட வேலை பார்க்கிறவன்..." நவநீதன் முடிக்கவில்லை - "..........னா? கடவுளே! என்ன பேசுறீங்க?" எனத் தலையில் கை வைத்துக் கொண்டு அப்படியே மடிந்து உட்கார்ந்தாள் செல்வி.

"ஆமா, நான் ஒரு ஹோமோ செக்ஸ்சுவல்!"

அதற்கு மேல் அவன் பேசிய எதுவுமே செல்விக்கு கேட்கவில்லை. "கடவுளே! எனக்கு இந்த கொடுமை செய்தாயே!" என்ற மறுகல் தவிர, அவளது மூளைக்குள் எதுவுமே செல்லவில்லை.

"செல்வி...இதை நினைச்சு நீ கவலைப்பட வேண்டியதில்லை...உனக்குத் தேவையான எல்லாத்தையும் என்னால..." - பெரிய தர்மகர்த்தா போல் அவன் பிச்சையிட,

"எனக்கு வாழறதுக்கு வாழ்க்கை வேணும்! இந்த மாதிரி நரகமில்லை..." எனப் பட்டென வந்துவிழுந்தது செல்வியின் பதில்.

"உனக்கு இங்க என்ன குறைச்சல்...வாழ வசதியான வீடு...போட்டுக்க நல்ல டிரஸ், யூ.எஸ் வாழ்க்கை...உன்னோட குடும்ப நிலைக்கு இதுவே பெருசு தானே?" என்றவனை எழுந்து, பளார் பளார் என நான்கு அறை விடவேண்டும் போல் கை பரபரத்தாலும், அதை செய்ய முடியாமல் தலை சுற்றி, கை கால்கள் அதன் போக்கிற்கு இழுப்பது போலிருந்தது அச்சிறுபெண்ணிற்கு!

"சை...யாருக்கு வேணும் இந்த பணமும், துணியும்? காசு பணம் இல்லைனாலும் நானும் எங்க அப்பாவும் வாழ்ந்த வாழ்க்கை இதுக்கு ஈடாகுமா?" என அவனிடம் உமிழ்ந்தவள்,

"நீங்க எப்படி தர்மா சாருக்கு பையனா பிறந்தீங்க? ஒரு வேளை...ஒரு வேளை...உங்க குடும்பத்தில எல்லாருக்குமே இந்த விஷயம் தெரியுமா? தெரிஞ்சே...என்னை...என்னை இப்படி தள்ளி விட்டாங்களா?" எனத் தவித்தப்போது, அவசரமாய் இடைவெட்டிய அவளது உயிர்த்திரு கணவன் "ஹே...யாருக்கும் தெரியாது. சொல்லிடாதே! அவங்ககிட்ட இந்த விஷயம் போகவே கூடாது" என்றான் பதட்டத்துடன்.

அவனது வேண்டுதலை சற்றும் சட்டை செய்யாமல், "என்ன எண்ணத்தில என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க? நான் உண்டு...என் வேலை உண்டுன்னு நிம்மதியா இருந்தேனே...ஏன் இப்படி ஒரு கொடுமை செஞ்சீங்க?" என்றவளின் குரலில் பெரும் தவிப்பிருந்தது.

"செல்வி, நீ இவ்வளவு கண்ணீர் விட்டு கதற அளவுக்கு எதுவுமே பெருசா நடந்திடலை. ஜஸ்ட் தட் உனக்கும் எனக்கும் உடல் ரீதியான தொடர்பிருக்காது. மற்றபடி நாம நல்ல ஃபிரண்ட்சா இருக்காலாம்..."

"எது...எது பெருசில்ல...கருமம் பிடிச்சாப்ல உங்க குப்பை கலாச்சார சீரிழவு...உங்களுக்கு பெருசில்லையா? உங்களுக்கு அது புண்ணிய காரியமா இருக்க்கலாம்...ஆனா எனக்கில்ல!" என்றவள்,

"இந்த கருமத்தில என்னை இழுத்துவிடுற விடுற உரிமையை யார் உங்களுக்குக் கொடுத்தா? என்ன நினைச்சு இந்த கல்யாணத்துக்கு சரி சொன்னீங்க?"
"ஏங்க என் வாழ்க்கையை இப்படி கெடுத்தீங்க?"
"உங்களுக்கும்...உங்க குடும்பத்திற்கும் நாங்க நல்லது தானே நினைச்சோம்...ஏன் ஏன் ஏன் இப்படி பண்ணிட்டீங்க? ஹய்யோ...கடவுளே! என்னால தாங்க முடியலையே...நெஞ்செல்லாம் பதறுதே! நான் என்ன பாவம் செய்தேன்? நாங்க ஏழைபபட்டவங்கன்னு தானே இந்த கொடுமை செய்ய துணிந்தீங்க..." என்றவளுக்கு எங்கிருந்து தான் அந்த வேகம் வந்ததோ, எழுந்து அவனின் சட்டையைப் பிடித்து தாறு மாறாய் உலுக்க ஆரம்பித்தாள்.

"ஹே...ஹே நிறுத்து! சின்னப்பொண்ணுன்னு பொறுமையா போனா...கை நீட்டுற அளவுக்கு உனக்கு திமிரா? இழுத்து ஓர் அடி வச்சேன்னு வை...தாங்க மாட்டே!" என்றவன், ஒரே மூச்சில் அவளை உதறிவிட்டு சோபாவில் போய் அமர்ந்தான்.

"இங்க பாரு செல்வி... உணர்ச்சிவசப்படாம...வாழ்க்கையே முடிஞ்சமாதிரி ஓவர் சீன் போடாம... நான் சொல்றதை பொறுமையா கேளு! இந்த வாழ்க்கை உனக்கு எப்படிப்பட்ட ஒரு வரப்பிரசாதம்ன்னு புரியும்" என்றவன், அவளது ஓய்ந்த தோற்றத்தைப் பார்த்து தொடர்ந்து ஏதும் பேசாமல், தனக்கு எதிர் இருக்கையை கை காட்டினான்.

"முதல ஜாக்சன் பத்தி சொல்லிடுறேன். இத்தனை நாள் அது உனக்கு தேவையில்லாத விஷயம்ன்னு நினைச்சேன்...ஆனா, இப்போ நீ இவ்வளவு தூரம் வருத்தப்படும்போது, இதோட எல்லாமும் உனக்குத் தெரிஞ்சாதான் உனக்கு என்னோட நிலைமை புரியும்!" எனப் பெரிய வேதாந்தி போலவும், மனைவியின் குற்றத்தைப் போருக்க முடியாதவன் போலவும் பேசிய நவநீதன் தொடர்ந்தான்.

"எனக்கு ஜாக்சன்னோட அறிமுகம் வேலைக்கு சேர்ந்து கொஞ்ச நாளிலேயே கிடைச்சிடுச்சு..."

"இந்த வீடு வாங்குறதுக்கு முன்னாடி நான் ஒரு அபார்ட்மென்ட்ல வாடகைக்கு இருந்தேன்...அதோட லீஸ் முடிஞ்சு நான் வேற வீட்டுக்காக தேடிட்டு இருந்தப்போ தான் ஜாக்சன் அவனோட வீட்டுக்கு வந்து தங்கும்படி சொன்னான்."

"அவனோட தங்கியிருந்த ஒரு சில மாசத்திலேயே எனக்கும் அவனுக்கும் நிறைய விஷயங்களில் ஒத்துப்போறதை எங்களால உணர முடிஞ்சது!"

"அப்போ கூட அது வெறும் ஃபிரண்ட்ஷிப் லெவல்ல தான் இருந்தது! ஆனா, என்னோட பாஸ் ஒருத்தரின் ஹோமோ ரிலேஷன் பார்த்திட்டு...நாங்களும்! அன்னையிலிருந்து இன்னைக்கு வரைக்கும்...எந்தவித பிரச்சனையுமில்லாம வாழ்க்கை நல்லாவே...ரொம்ப நல்லாவே போயிட்டிருக்கு"

"படிப்பு, பணம், வேலை, உணவு, புத்தகம், பொழுதுபோக்கு - எல்லாத்திலும் எங்களோட விருப்பு ஒத்துப்போக...வீ ஆர் ஹாப்பி நொவ்"

"நடுல..."கல்யாணம் பண்ணிக்கோ...கல்யாணம் பண்ணிக்கோ"ன்னு அம்மா நச்சரிக்காம இருந்திருந்தா இன்னும் நல்லாயிருந்திருக்கும்"

"அம்மாகிட்ட ஜாக் விஷயத்தைச் சொல்லி...அவங்களை சமாதானப்படுத்துறது ரொம்ப கஷ்டமான காரியமா இருந்தது! நம்ம நாட்டில இதெல்லாம் இன்னும் சகஜமாகலையே...அங்கங்கே இப்போ தலைதூக்கி இருக்குத் தான். ஆனா, அம்மா-அப்பா ரெண்டு பேருமே ரொம்ப ஒர்தொடாக்ஸ்!"

"அதுவும் அப்பா காதலுக்கே பெரிய நோ சொல்லுவாங்க...இன்னும் கொஞ்ச நாள் போயிருந்தா நிக்கியை எப்படியாவது சரிகட்டி, அம்மா-அப்பாவை சமாதனப்படுத்த

சொல்லியிருப்பேன். ம்ம் நல்லவேளை, அதுக்கெல்லாம் அவசியமே இல்லாம போச்சு"

"ரெண்டு வருஷமா நானும்...இப்போ...அப்போன்னு தள்ளிட்டே வர, அம்மா உன்னோ பேரைச் சொன்னதும் - ஒரு நிமிஷம் யோசிச்சேன்"

"உன்னோட குடும்பநிலைக்கு அமெரிக்க வாழ்க்கையையே பெருசா நினைப்ப...இந்த விஷயம் பெருசா தெரியாதுன்னு தோணுச்சு..."

"அதோட நானும் ஜாக்கும் தொடர்ந்து சந்தோஷமா இருக்க...அதாவது அம்மாவோட கல்யாணப்பேச்சில்லாம சொல்றேன்...கல்யாணம் பண்ணிக்கிறது...அதுவும் எங்க வீட்டு மேலையும் என் மேலையும் ஏகப் பட்ட மரியாதையா இருக்க நீ தான் சரியா வருவேன்னு முடிவு பண்ணினேன்"

"அம்மாகிட்ட உடனே "சரி' சொல்லிட்டாலும், உன்னோட மனநிலை எனக்குத் தெரியவேண்டியிருந்தது. அமெரிக்க மாப்பிள்ளை...அதுவும் லட்சக்கணக்கில் சாம்பதிக்கிற மாப்பிள்ளை என்றதும் உங்கப்பா தலையாட்டிடுவார்ன்னு தெரியும்...ஆனா, நீ மாறியிருந்தா எனக்குக் கஷ்டமில்லையா? அதான் அம்மாகிட்ட ஃபோன் நம்பர் வாங்கிப் பேசினேன்!"

"நான் பார்த்த / நினைச்ச அளவில் தான் நீ இருந்தே...அப்பா-அம்மா மேல மரியாதையா! அக்கா மேல பாசமா...என்னையும் உனக்குப் பிடிச்சிருந்தது!"

"உனக்குத் தேவையா இருந்த படிப்பு, உங்கப்பாவுக்கு நீ கொடுக்க நினைச்ச பணம் - இது இரண்டுக்கும் மேலா சொகுசு வாழ்வும், சமூகத்தில் ஓர் உயர்ந்த இடமும் உனக்கு நான் கொடுக்கும் போது...நீ என்னோட பழக்கத்தை ஆதரிச்சு தானே ஆகணும்! என்னோட எதிர்பார்ப்பில என்ன தப்பிருக்கு...நீயே சொல்லு!"

"நம்மளோட வாழ்க்கையில் இயற்கை முறையில குழந்தை பிறக்க வாய்ப்பிருக்க மாதிரி எனக்குத் தோணலை...அதனால் தான் டெஸ்ட்டியூப் பேபி பத்தி விசாரிச்சிட்டு கல்யாணத்திற்கு ஒத்துக்கிட்டேன்!"

"சோ, குழந்தை விஷயத்திலையும் நீயும் எங்கம்மாவும் ஏங்க வேண்டியதில்லை பாரு?

எவ்வளவு தூரம் யோசிச்சு...உன்னை நலனையும் கணக்கில் எடுத்துட்டு...நீ இப்படி குற்றம் சுமத்துவதில் நியாயமே இல்லைம்மா"

"ம்ம்...ஒரே ஒரு விஷயத்தில நான் நினைச்சதை என்னால செய்யமுடியல. உன்னோட ஒரு நண்பனா இருக்கனும்னு நினைச்சேன்...ப்ச்...ஜாக் இஸ் நாட் லைகிங் இட். உன்னோட நெருங்கிப் பழகுவதால் அவனைத் தவிற்கிறதா நினைக்கிறான். என்ன சொல்லியும் சமாதனம் ஆகுற மாதிரியில்லை...அதான் நம்ம முதலிரவு அன்னைக்கு அத்தனை டென்ஷன்! ப்ச்"

"அவனை இந்த கல்யாணத்திற்கு ஒத்துக்க வைக்கவே ரொம்ப கஷ்டப்பட்டேன். அம்மா-அப்பா -- இந்திய கலாச்சாரம் -- உன்னைப் பத்தின விவரம் -- நம்மக்குள்ள இருக்கப் போற உறவு - அது எங்களை எந்த வகையிலும் பாதிக்கதுன்னு அவனுக்குப் புரிய வைக்கவே ரொம்ப கஷ்டமாகிடுச்சு! அதுக்கு மேல, நீ இங்க வந்ததும் அவனுக்குள்ள ரொம்ப காம்ப்ளெக்ஸ் வந்துடுச்சு"

"அதை சரி பண்றதுக்கு வழக்கத்திற்கும் மாற அவனோட நிறைய நேரம் செலவழிக்க வேண்டியதா போச்சு!

"இனிமேல் கொஞ்சம் குறைச்சுக்கிறேன். உன்னோட அந்த நேரத்தை செலவழிக்கிறேன்!"

அதோடு தன் பேச்சு முடிந்தது என்பது போல் நவநீதன் செல்வியை ஏறிட, அவனது அந்த நீண்ட உரையின் முடிவில் செல்வியின் நொந்து மருகிய மனதின் ஒரே எண்ணம் - "என்ன ஒரு சுயநல பிண்டம் இவன்?" என்பதாக மட்டுமே இருந்தது!

## அத்தியாயம் 8

நவநீதனின் தன்னிலை விளக்கத்தில் தன்னலம் தவிர வேறேதுமே செல்வியின் கண்களில் படவில்லை. நொந்த நெஞ்சத்துடன் அவனை வெறித்திருந்தவளின் பார்வை, எப்போது தொலை தூரத்திலிருந்த தொடு வானத்தின் மீது நிலைத்ததோ - சற்று நேரம் அவள் ஏதும் பேசுவாள் (தன் 'அக்கறையைக்' கண்டு புகழ்வாள்) என எண்ணியிருந்த நவநீதன் அவளது மௌனத்தில் மௌனியாகி, தன் அறைக்குள் எழுந்து சென்றான்.

கண்களில் கண்ணீரும், "ஏன் இப்படி ஆகிவிட்டது?" என்ற கேள்வியும், தன்

சந்தோஷத்தை அவரின் வாழ்வாய் எண்ணும் தந்தை என்ன ஆவார்? என்ற தவிப்புமாய், செய்வதறியாது சோபாவிலேயே முடங்கியிருந்தாள் தாமரைச்செல்வி.

தவிப்பும் கண்ணீரும் ஒரு புறம் மனதை ஆட்கொள்ள, தன் வாழ்க்கை பிறரின் முடிவுகளால் தீர்மானிக்கப் படுவதை எண்ணி கோபமும் வருத்தமும் வானளவு உயரத்தான் செய்தது!

நவநீதன் சுயநலமாய் அவனது நல்வாழ்வை கணக்கில் கொண்டு தன் உணர்ச்சிகளைக் கொன்றுவிட்டான் என்பதோடு, அவனது குடும்பத்தின் மீதும் கோபம் வந்தது. இவர்களால் தானே? இவர்கள் என்னை மருமகளாய் ஆக்கிக் கொள்ள ஆசைப்பட்டதால் தானே இந்த கொடுமை எல்லாம் நிகழ்ந்துவிட்டது? அதுவுமில்லாமல், இவர்களிடம் கெட்ட பெயர் வாங்கக் கூடாது என்ற எண்ணத்தில் தானே இவன் என் வாழ்வை கெடுத்துவிட்டான்! என்ற எண்ணமும் மனதில் ஆழமாய், அழுத்தமாய் பதிந்துபோனது. புண்பட்ட மனதின் கோபம் - அவளைப் பொறுத்தவரையில் நியாயம் தானே?! பட்ட காயம் - உயிரின் அடி அவரை சென்று உதிரம் உறையும் வலியை உண்டுபண்ணும் போது அந்த சிறு மனமும் என்ன தான் செய்யும்?!

அடுத்து என்ன? என யோசிக்கக் கூட முடியாதபடி, மனமும் உடலும் ஒரே நாளில் வாழ்வு சூன்யமாகிவிட்ட அவலத்தை எண்ணி எண்ணி மருக ஆரம்பித்தது!

பணமும் பொருளும் கொட்டிக் கிடைக்கவில்லை என்றாலும், அன்பும் அக்கறையும் அள்ள அள்ள குறையாமல் நிரம்பி வழிந்த வீட்டிலிருந்து விட்டு, சில்லென காற்று வீசிய அந்த இரவிலும் செல்வியின் மூச்சு முட்டி, கண்களின் காவேரி இதயத்தின் ரணத்தைக் கழுவ முயன்று தோற்றது!

சுய பட்சபாத்தின் விளைவாக செல்வியின் கண்களில் தூக்கம் குடியேறி இருக்கவேண்டிய தருணத்தில் கண்ணீர் அங்கே மொத்த குத்தகை எடுத்திருக்க, விழிகள் விழித்திருந்து தொலைந்த வாழ்வைத் தேடிக்கொண்டிருந்தன - விடியல் வரையில்!

நடுவில் இருமுறை "செல்வி!" என அழைத்துப் பார்த்த அவளது காதல் கணவனும், பதில் என்ன எந்தவொரு உணர்ச்சியையும் காட்டாத செல்வியின் முகத்தை யோசனையுடன் பார்த்துவிட்டு உள்ளே சென்று மறைந்தான்.

அடுத்த நாள் காலை, நவநீதனின் உறக்கத்தை கைப்பேசியின் மெல்லிய சிணுங்கல் எழுப்பிவிட, செல்வியின் மோன நிலை துளியும் கலையவில்லை. அழைத்திருப்பது பெற்றோர் எனத் தெரிந்தவுடன், கைப்பேசியை அணைக்காமல் எடுத்துப்பேசிய நவநீதனிடம், நிகேதனுக்கு சிங்கப்பூரில் இருக்கும் பிரபல மருத்துவ ஆராய்ச்சிக்கூடத்தில், நரம்பியல் ஆய்வுடன் கூடிய வேலை (neuro research assistant) கிடைத்திருப்பதாக கூறி, தாங்களும் அவனுடன் செல்ல இருப்பதாகக் கூறினார். மகன் - மகள் - முக்கியமாய் பேத்திகளுடன் வசிக்கப்போகும் மகிழ்ச்சி மங்கையின் குரலில் கொப்பளித்தது. கடந்த மூன்று மாதங்களில், இரண்டு மாதங்களுக்கும் மேலாக மகளின் மகள்களைக் கொஞ்சும் வேலையை அவர்களுடனிருந்தே செய்திருந்தாலும், பயணமில்லா நிரந்தர மகிழ்வு கிடைத்திருப்பதில் தர்மராஜனுக்கும் சந்தோஷமே! வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட அவருக்கும் வேறென்ன பொழுதுபோக்கு இருக்க முடியும்?

தந்தையும், தாயும் கூறிய விஷயத்தைக் கேட்டு சந்தோஷமடைந்த நவநீதனை, மங்கையின் "நீயும் செல்வியும் ஒரு நல்ல சேதி சொல்றவரைக்கும் நாங்க அங்க இருக்கோம். சொன்னதும் உடனே செல்வியைப் பார்த்துக்க வந்துடுறோம் கண்ணா! பாவம் தாயில்லா பெண்ணில்லையா?" என்ற உருகல், தன் மன்மத மண்டையையும் தாண்டி தீவிர யோசனையில் ஆழவைத்தது.

அவனது பலத்த யோசனையை "சரி நவீ, செல்விகிட்ட கொடுப்பா!" என்ற மங்கையின் உத்தரவு கலைக்க, "ம்ம் ஒரு நிமிஷம்மா" என்றவன், செல்வியிடம் கைப்பேசியை நீட்டி, "அம்மா பேசுறாங்க செல்வி! நேத்து நடந்தது எதுவும் அவங்களுக்குத் தெரியவேண்டாம். ப்ளீஸ்" என்றான்.

அவனுக்குப் பதிலே சொல்லாமல், கைப்பேசியையும் வாங்காமல், இருந்த இடத்தை விட்டு நகராமல், பார்வையை தொலை தூரத்தில் நிறுத்தியிருந்த செல்வியை, நவநீதன் அடுத்து பேசிய எதுவுமே அசைக்கக்கூட இல்லை; கைப்பேசியை வாங்கி அவள் பேசினாளுமில்லை!

"அம்மா, செல்வி...தூங்குறாமா...எழுப்பி எழுப்பி பார்த்தேன்..." என நவநீதன் இழுக்க, "பரவாயில்லை...தூங்கட்டும் கண்ணா! நான் நாளைக்கு காலையில கூப்பிடுறேன்" எனக் கூறி கைப்பேசியை துண்டித்தார் மங்கையர்க்கரசி.

"ஹே செல்வி, என்ன திமிரா? எங்கம்மா லைன்ல இருக்காங்க பேசுன்னு சொன்னா

உன்னால பேச முடியாதா? இது தான் உனக்குச் சோறு போட்டு, உன்னைப் படிக்க வச்சவங்களுக்கு நீ செய்ற மரியாதையா?" எனக் கணவன் குரலை உயர்த்த,

இது வரை பேசாமலே இருந்த செல்வி, "அவங்க என்னை படிக்க வைக்கலை. நான் நல்லா படிச்சேன்...உபகாரச்சம்பளம் கிடைச்சது...அவ்வளவு தான்! அப்புறம் சோறு போட்டாங்களா? நானும் எங்கம்மாவும் வேலை பார்த்தோம்..அதுக்குப் போட்டாங்க! ஒன்னு தெரிஞ்சுக்கோங்க...எங்க வீட்டில சோறில்லாம உங்க வீட்டில பிச்சையெடுக்க நாங்க வரலை" - இரவு முழுதும் நெஞ்சில் காய்ந்து கொண்டிருந்தவற்றை கொட்டியவள், "என்ன நல்லது செய்திருந்தாலும்...என்னை உருக்குலைக்கும் உரிமையை உங்க குடும்பத்திற்கு யார் கொடுத்தா?" என்றாள் கடைசி கேள்வியாய்.

"ஹே, நான் தான் சொல்றேனே! அவங்களுக்கு இந்த விஷயம் எதுவும் தெரியாது...அப்படியே இருந்தாலும், உனக்கு இப்போ என்ன குறை வந்திடுச்சு?" என்றான் அந்தத் தான்தோன்றி.

"பெருசா ஒண்ணுமில்லை. நான் உள்ளுக்குள் செத்துப்போயிட்டேன்" என்றவள், அவன் முகத்தைக் கூட பார்க்கப் பிடிக்காதவள் போல், தனக்கென அவன் ஒதுக்கியிருந்த அறைக்குள் சென்று முடங்கினாள்.

நேற்று இரவு முழுதும் - "ஏன், ஏன், ஏன், ஏன் இப்படி நடந்துவிட்டது?" என்று மட்டுமே உழன்று தவித்த தாமரைச்செல்வி, இன்று காலையிலிருந்து தான் "இதிலிருந்து எப்படி வெளிவரலாம்?" என யோசிக்க ஆரம்பித்தாள்.

ஆம், வெளிவர வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதிற்குள் எப்படி புகுந்தது, எந்த வினாடி புகுந்தது என்பதைப் பகுத்தறிய முடியாவிட்டாலும், வெளிவருவதில் அவளது உறுதி பலமாய் இருந்தது.

"மனைவி என்ற ஸ்தானத்தில், உணர்ச்சிகள் தொலைத்த ஓர் மனுஷி வேண்டும்" என எப்போது நவநீதன் சொன்னானோ, அப்போதே அவனை விட்டு வெளியேறிவிட வேண்டுமென முடிவெடுத்திருக்கவேண்டும் - செல்வி!

இங்கிருந்து - அமெரிக்கா - நவநீதனின் பாஷையில் சொர்க்கபுரியிலிருந்து வெளியே செல்ல அவளுக்கு முதலில் பணம் வேண்டும்;

டிக்கெட் வாங்கும் அளவிற்கு அவளிடம் பணமில்லை என்றாலும் நண்பர்கள் சிலரை அணுகினால் அது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது;
அடுத்து நவநீதனிடம் இருக்கும் தனது பாஸ்போர்ட்டை வாங்கவேண்டும்;
அங்கே சென்றதும் ஓர் வேலையைப் பார்த்துக்கொண்டு, தந்தையையும் உடன் அழைத்துக்கொண்டு சென்னையா இல்லை வேறு எந்த ஊருக்கோ போய் விடவேண்டும்;
நவநீதனிடமிருந்து சட்டரீதியாக விடுதலை கிடைத்தப்பின்னர் - அந்த குடும்பத்தைப் பார்க்கும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படக்கூடாதல்லவா - அதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும்; - இப்படியாய் கோட்டை மேல் கோட்டை கட்டியவள் - கோட்டையைத் தான் உப்பில் கட்டிவிட்டாளோ? அவளது கண்ணீரில் கரைந்து நாசமாவது தெரியாமல்?

உப்பு கோட்டைக்கு அஸ்திவாரம் போடும் எண்ணத்தில் - நவநீதனிடமிருந்து பாஸ்போர்ட்டும், நண்பர்களுடன் பேசுவதற்கு கைப்பேசியும் கேட்பதென முடிவு செய்தாள். எதிரியே என்றாலும், அவன் காலில் விழுந்தால் ஒழிய இவை இரண்டையும் பெற முடியாதல்லவா?

தன் குடும்பத்திற்கு தான் இன்னொருத்தருடன்...அதுவும் ஓர் ஆணுடன் குடும்பம் நடத்துவது தெரியக்கூடாது என்று நினைக்கும் அவன் - எப்படி தன்னை வெளியேற விடுவான் என மனம் கேள்வி கேட்டப்போதும், என்ன தான் சுயநலவாதி என்றாலும் அவனுக்கும் சிறிதளவேனும் மனது இருக்கும், தாய்-தந்தைக்குப் பயப்படுபவன் கொஞ்சமேனும் மனிதனாய் இருப்பான் தானே! என்ற எண்ணத்தில் அறையை விட்டு வெளியே வந்த செல்வியை, உணவு மேஜையின் முன்னே அமர்ந்திருந்த நவநீதன் வரவேற்றான் - "சாப்பிடு செல்வி" என்ற உபசரிப்புடன்.

அவனது விருந்தோம்பலை மதிக்காமல் "நான் ஊருக்குப் போறேன்" என்றாள் செல்வி மொட்டையாக.

அவளது எண்ணம் புரியாதவன் போல "எந்த ஊருக்கு?" என்றான் நவநீதன், மிகுந்த ஆச்சிரியத்துடன்.

அவனது ஆச்சிரியம் எரிச்சலைக் கொடுக்க "எங்க வீட்டுக்கு!" என்றாள் செல்வி மீண்டும் நறுக்குத்தெறித்தார் போல.

"இது தானே உன் வீடு? வேற எங்க போறே?" என்ற நவநீதனுக்கு செல்வி பதில்

சொல்லும் முன்னர், "இந்த வீட்டை விட்டு நீ எங்கேயும் போகப்போறதில்லை, செல்வி! அதோட, நேத்து நான் சொன்ன விஷயத்தை சாதரணமா எடுத்துக்கப் பழகு! நான் வரேன்" என்றதோடு வேலைக்குச் செல்ல ஆயத்தமாகிவிட்டான்.

அவனது பதிலில் அதிர்ந்து, "என்னை வீட்டை விட்டுப் போகக் கூடாதுன்னு சொல்ல நீங்க யாரு? நான் என்ன உங்க அடிமையா?" எனச் சீறியவள், "ப்ளீஸ், உங்களோட ரிலேஷன்ஷிப் பத்தி நான் எதுவுமே சொல்லலை...அது என்னவா இருந்தாலும் உங்களோட சொந்த விஷயம். அதுக்காக என்னை...என்னோட வாழ்வை பாழ் பண்ணாதீங்கன்னு தானே சொல்றேன்! ப்ளீஸ்...இது வரைக்கும் எனக்கு நல்லதுன்னு நினைச்சு நீங்க செஞ்சது எல்லாமே உங்க நன்மையை மனசில வச்சு தான்...இப்போவாவது என்னோட நல்லதை மனசில வச்சு பேசுங்களேன்..." என்றாள் அவனுக்குப் புரிய வைத்துவிடும் வேகத்தில்.

"என் விஷயம்...உன் விஷயம்ன்னு பிரிச்சு எதுவுமே இல்லை செல்வி! என்னோட திட்டப்படி...நீ இந்த அமெரிக்காவை விட்டு நகரணும் என்றால் நான் கூட வரும்போது தான்...அது நடக்கும்!" என்றவனிடம்

"ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க! எனக்கு ஒரே அருவெறுப்பா...கூச்சமா...மனசு வலிக்குது! இங்க இருந்தா நான் மூச்சு முட்டி செத்துடுவேன்...ப்ளீஸ் எங்க அப்பாகிட்ட அனுப்பிடுங்க. ஃபிளைட்க்குக் கூட பணம் வேண்டாம். பாஸ்போர்ட் மட்டும் தாங்க...நான் போய்டுறேன்!"

"செல்வி, ஸ்டாப் இட். எனக்கும் ஜாக்கிற்கும் இருக்க உறவை - அருவெறுப்பு என்று என்ன தைரியமிருந்தா என்கிட்டேயே சொல்லுவே? கொன்னுடுவேன்... " என கண்கள் பளபளக்க கர்ஜித்தான் கணவன்.

ரொம்ப புனிதமான உறவு முறை தான்! என்று மனதில் தோன்றினாலும், அவனிடமிருந்து விடுதலை பெறுவதே முக்கியம் என்பது போல் "நான் தான் சொன்னேனே...உங்க வாழ்க்கை முறையை நான் ஒண்ணுமே சொல்லலை...இப்படி ஏமாந்துட்டோமேன்னு தான் மனசு வலிக்குது! ப்ளீஸ் நான் போய்டுறேன்...நீங்க இங்க நிம்மதியா இருங்க..." என்றாள் செல்வி, கூப்பிய கைகளுடன்.

"இல்ல செல்வி! எங்க வீட்டுக்கு இந்த விஷயம் தெரியிறதை நான் சுத்தமா விரும்பலை. நீ

இங்கிருந்து கிளம்பிட்டா...நேரா உங்கப்பாகிட்ட போய் நிற்ப...எங்க வீடென்ன? ஊரெல்லாம் இந்த விஷயம் பரவிடும். சோ, தர முடியாது!" என்ற நவநீதன், கதவை அடைத்துக்கொண்டு வெளியேறிவிட்டான்.

இவன் பேசுவதில் இவனுக்கே முரண்பாடுகள் தோன்றவில்லையா? - ஒரு நிமிடம் அவனது உறவைப் புனிதம் என்பவன், மறு நிமிடமே அந்த புனித உறவு ஊருக்குத் தெரியக்கூடாது என்றும் சொல்கிறான்! உறவு புனிதம் என்கையில் பறைசாற்றுவதில் என்ன பயம்? என எரிச்சலாய் வந்தது செல்விக்கு!

அந்த உறவு எவ்வளவு உயர்ந்ததாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகிறது - என் வாழ்வின் போக்கைத் தீர்மானிக்கும் உரிமையை இவனுக்கு யார் கொடுத்தது? என மீண்டும் நேற்று இரவின் கேள்விக்கும்,அதை தொடர்ந்த சுய அலசலுக்கும், திருமணத்திற்கு முந்தின சந்தோஷ வாழ்வும் - பெரும் தாக்கத்தை உண்டு பண்ண செய்வதறியாது திணறினாள் என்றே சொல்லலாம்.

இரண்டு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், ஏதோ தோன்றியவள் போல் நவநீதனின் அறைக்குள் சென்றவள் - அங்கிருந்த அலமாரிகள், மேசை அறைகள், கட்டில், பெட்டி என எல்லாவற்றையும் ஆராய்ந்தபோதும் பாஸ்போர்ட் மட்டும் கண்ணில் படவே இல்லை. மடி கணினி இருக்கும் பட்சத்தில், நண்பர்கள் யாருக்காவது தொடர்புகொண்டு விஷயத்தைக் கூறலாம் என்றால் அதற்கு வழியில்லாமல் கணினியும் இருக்கவில்லை; என்றுமே இல்லாதது இன்று மட்டும் வீட்டிலிருக்கும் என்றெண்ணியது அவளின் முட்டாள் தனம் தானே! ப்ச்

தான் தேடுவேன் என்று தெரிந்து, அவற்றை எடுத்துக்கொண்டு அலுவலுக்குச் சென்றுவிட்டானோ என்ற கேள்விக்கு, தான் பாஸ்போர்ட் வேண்டும் என்று கேட்டப்போது வரவேற்பறையில் இருந்தவன், அதன் பின்னர் படுக்கையறைக்கு வரவே இல்லையே? பின்னே, தான் விடுதலையை வேண்டக்கூடும் என்ற எண்ணத்தில் தான் இவற்றையெல்லாம் முடக்கி வைத்திருக்கிறானா? என மற்றொரு கேள்வி விடையானது.

கேள்விக்கு கேள்வி விடையாக, விடையறியா பல கேள்விகள் விளங்கத் துவங்கின!

வீட்டில் தொலைப்பேசி இல்லாதது, அவனுக்கு மட்டுமே கைப்பேசி இருந்தது, தன்

தந்தையுடன் பேசவேண்டும் என்றாலும் அவனே அவரது எண்கள் அழுத்திக் கொடுத்தது, மடிகணினியை அவனதாக மட்டுமே பாவித்து அவளிடமிருந்து புறக்கணித்து வைத்தது, கோவில்; நண்பர்கள் வீடு; வெளியிடம் என எதற்குமே அவளைப் பழக்காமல் இருந்தது — எனப் பல புதிர்கள் பூதகரமான உண்மையை வெளியெடுத்து வந்து அவளைப் பயமுறுத்தின!

"அவனிடம் சொன்னது போல்...தனிமையில் உணர்வுகள் மங்கி செத்துவிடுவோமோ?" என செல்வி பயந்தபோது, ஊரில் இருப்போரிடம் பேசும் அந்த அரை மணி நேரம் நினைவில் வந்து - லேசான நிம்மதி பெருமூச்சை கொடுக்க, ஊரிலிருந்து வரும் அழைப்பிற்காக நடுக்கத்துடன் காத்திருக்க ஆரம்பித்தாள் அவள்.

செய்த உதவிக்கு கைமாறாய் வாழ்வை வாங்கிக்கொண்ட குடும்பத்திடம் மீண்டும் உதவிக்கு நிற்கும் அவலத்தை எண்ணி மனம் கனத்தாலும், நாதியற்ற நிலையில் கௌரவம் ஆகாது என நவநீதனின் குடும்பத்திடம் உதவி கேட்க தயாரானாள் செல்வி!

ஆனால், இரவு ஒன்பது மணியளவில் வீடு திரும்பிய நவநீதனின் கைப்பேசியில் ஒன்பதரை மணிக்கு இந்திய எண்ணின் அழைப்பு வரும்வரை, சாதாரணமாய் இருப்பதே பெரும்பாடாய் போனது செல்விக்கு!

தடதடத்த நெஞ்சத்துடன், நவநீதன் தன்னிடம் தரும் தருணத்திற்காக அவள் காத்திருக்க "இதோ கொடுக்கிறேன்மா!" என்ற சொல்லோடு நீட்டப்பட்ட கைப்பேசியை மின்னல் வேகத்தில் வாங்கிக்கொண்டு "என்னை காப்பாத்துங்கம்மா...இங்க உங்க பையனுக்கு வேற ஒரு குடும்பம் இருக்கு...என்னை சும்மா பேருக்காக கல்யாணம் பண்ணிட்டு வந்திருக்கார். ப்ளீஸ் என்னை இங்கிருந்து அனுப்பச் சொல்லுங்கம்மா! ப்ளீஸ் மா...ப்ளீஸ்" என அவள் அலற, அந்தப் பக்கமிருந்து ஒரு அரவமும் இல்லாமல் வெறும் "ஹலோ" மட்டுமே கேட்க, அதோடு சேர்த்து நவநீதனின் நமட்டுச்சிரிப்பும் கேட்டது!

குழப்பத்துடன் கைப்பேசியைக் காதிலிருந்து எடுத்துப் பார்த்தவளுக்கு, அதிலிருக்கும் "மியூட்" விசை அழுக்கப்பட்டிருப்பது புரிய, அதை வேகமாய் எடுக்க முனைந்தாள். அதற்குள் அவளிடமிருந்து கைப்பேசியைப் பறித்திருந்த நவநீதன், அதை அணைத்தும்

போட்டிருந்தான்.

"உன் முகத்தைப் பார்த்தப்போதே ஏதோ செய்யப்போறேன்னு தோணுச்சு! செல்வி...இது தான் கடைசி எச்சரிக்கை...என்னை மீறி ஏதாவது செஞ்சு என்னை கை நீட்டவைக்காதே! அது எனக்குப் பழக்கமில்லாத ஒன்னு..." என்றவனிடம், எனக்கும் கெஞ்சுவது பழக்கமில்லாத ஒன்று என்று செல்வி சொல்லவா முடியும்? அப்படியே சொன்னாலும், அதற்கும் அவனது சித்தாந்தில் பல பதில்கள் இருக்குமே! நிராசையாய் அவனை ஏறிட்டவளின் கண்களில் கண்ணீர் சுரக்க ஆரம்பித்தது - கட்டிவைத்து அடி வாங்குவது போன்ற உணர்வில் சுரந்த கண்ணீர்!

"கை நீட்டுவேன்" என்ற அவனது எச்சரிக்கையையும் மீறி, அடுத்த பத்தாவது நிமிடம் வந்த அழைப்பை காதுக்குக் கொடுத்த செல்வியின் வாயிலிருந்து "என்னை கா..." என்ற வார்த்தைகள் வரும் முன்னர், கைப்பேசி பறிக்கப்பட்டது; கூடவே கன்னத்தில் மின்னல் வேகத்தில் ஓர் அறையும் விழுந்தது! பச்சை ரணமாய் இருந்த வலியின் உயிர் வாதனையை உடல் வாதனையாக்கிய அடியால் நிலைகுலைந்த செல்வியின் கண்களின் முன்னே பூச்சி பறந்தது.

"செல்வி, திரும்பத் திரும்ப சொல்றேன்...என்னை மிருகமாக்காதே! நீ ஒழுங்கா...நான் சொல்றதை கேட்டுட்டு இருக்க வரைக்கும் நானும் ஒழுங்கா இருப்பேன்...என்னை மீறி ஏதாவது செய்ய நினைச்சே..." என்றவன், அடுத்த அறையை அவளது பூக்கன்னத்தில் இறக்கிவிட்டு, "நினைக்காதே!" என்ற சொல்லோடு தாயை அழைத்துப் பேசினான்.

பிறந்தது முதல் ஏழை வீட்டு ராணியாய் இருந்த செல்வியை யாருமே அடித்தததில்லை எனலாம். தெரியாமல் தவறு செய்தபோதும், கண்டிப்பான வார்த்தைகளால் திருத்திய தாயும் தந்தையும், அன்பால் மட்டுமே அவளை அடித்திருக்கின்றனர். இப்போதும் கணவன் என்ற பதவியைத் தானாய் எடுத்துக்கொண்ட ஒருவன், கை நீட்டி அவளைக் காயப்படுத்த, செல்விக்கு யோசிக்கும் திறனே மங்கிவிடும் போல் பயம் தொற்றிக்கொண்டது.

அதற்குள் மங்கையின் அடுத்த அழைப்பு வந்துவிட, "இந்தா...ஒழுங்கா பேசு" என்றவனை மீற முடியாமல் "ஹலோ!" என்றவளின் குரலை வைத்தே, "என்ன செல்விம்மா! உடம்பு சரியில்லையா? குரல் ஒரு மாதிரி இருக்கே??" எனப் பரபரத்து விட்டார் மங்கை.

"ஆமா, கொஞ்சம் முடியல!" என்ற செல்வியிடம் உடம்பைப் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லியவர், அவளை அதிகம் சோதிக்காமல் மகனிடம் கைப்பேசியைக் கொடுக்கச் சொல்லி, மருமகளை கவனித்துக் கொள்ளுமாறு மகனிடம் வேண்டிவிட்டு அழைப்பை வைத்தார்.

அவனது அடியில் மனதின் நம்பிக்கை ஆட்டம் கண்டிருந்தாலும், "எத்தனை அழைப்புகளை இப்படி தவிர்க்க முடியும்? ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் சொல்லிவிடலாம்! சொல்லவேண்டும்!" - செல்வி பற்றியிருந்த ஒற்றை கயிறை, கொஞ்சம் கொஞ்சமாய் அறுந்துபோய் சிறு சணல் அளவு நிற்கும் நிலைக்குக் கொண்டு வந்த பெருமை நவநீதனுக்கே சேரும்!

அடுத்த நாள் காலை, அலுவலுக்குக் கிளம்பிச் செல்வது போல் கிளம்பிச் சென்றவன், அதன் பின்னர் வந்தது சரியாக பத்து நாட்கள் கழித்து! இதில் குறிப்படத்தக்க விஷயம் என்னவென்றால் - வீட்டை வெளியிலிருந்து பூட்டிக் கொண்டு சென்றுவிட்டான் மகராசன்!

முதலிரண்டு நாட்கள் - இதோ வேலை நிமித்தமாக வரமளிருக்கிறான் என்றெண்ணிய செல்வியின் பயத்தையும், தனிமையையும் கொஞ்சம் கொஞ்சமாய் கூட்ட நவநீதனும் வரவில்லை; அதே சமயம் இது நாள் வரை கூட்டி வைத்திருந்த செல்வியின் தைரியமும் கொஞ்சம் கொஞ்சமாய் வடிய ஆரம்பித்தது.

எந்த வீட்டில் கதவு திறக்கும் ஒலி கேட்டாலும் தன் வீட்டுக் கதவு தான் திறக்கப்படுகிறதா என்ற அவளது அணுக்கள் ஏங்க ஆரம்பிக்க, கதவு திறக்கும் ஒலியல்லாது சின்னதாய் என்ன ஒலி கேட்டாலும், கண்களும் நெஞ்சமும் அந்த பக்கம் அலைபாய்ந்தன - தனிமைச் சிறையிலிருந்து வெளிவரும் வழி தேடி!

உலகமறியா அச்சிறு பெண்ணோ - பூட்டிய வீட்டின் தனிமையில் தன்னை தொலைத்து, கொஞ்சம் கொஞ்சமாய் பயந்து, வீட்டிற்குள்ளே சமாதியாகிவிடுவோமோ என்ற பயத்தில் நடுங்க ஆரம்பிக்க, அவளது நடுக்கத்தை ஒடுக்கமாக்கி உயிரை உறைய வைக்க, நவநீதன் உடனழைத்து வந்த நபர் - ஜாக்சன்!

கதவின் குமிழ் திறந்த ஒலி கேட்டதுமே, உடம்பின் மொத்த அணுக்களையும் சேர்த்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாசலை நோக்கியிருந்தவளின் கண்களில் நவநீதன் பட, அவன் மீதிருந்த வெறுப்பையும் மீறி நன்றியுணர்வு எழுந்தது.

"எங்க போனீங்க?" என அவள் நா தழுதழுக்க, "செல்வி, இவன் தான் ஜாக்சன்! ஜாக், திஸ் இஸ் செல்வி!" எனப் பரஸ்பர அறிமுகத்தை சர்வ சாதாரணமாய் செய்துவைத்தான் கணவனாகப்பட்டவன்.

"நான் ரொம்ப பயந்து போயிட்டேன். ஏன் இப்படி செய்றீங்க? என்னை விட்டுடுங்க...ப்ளீஸ்! என்னை தயவு செய்து விட்டுடுங்க...உங்க விஷயத்தை நான் யார்கிட்டயும் சொல்லலை...ப்ளீஸ் நான் எங்க ஊருக்குக் கூட போகலை...வேற எங்கேயாவது போய்க்கிறேன்...உங்க காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கிறேன்...என்னை விட்டுடுங்க! இன்னும் கொஞ்ச நாள் இதில இருந்தா நான் செத்துடுவேன்...கடவுளே!" எனக் கைகளை ஏந்தினார் போல் வைத்துக் கொண்டு செல்வி கெஞ்ச, அதை கண்ட நவநீதன் பதில் சொல்லும் முன்னர், அவனது தோழன் "இவ ஏன் இப்படி கத்துகிறாள்? நான் அவள் மேல ஆசைப்பட்டு உன்னை விட மாட்டேன்னு நீ சொன்னதை நான் இப்போ நம்புறேன்...நவீன்" என்றான் முகத்தில் எரிச்சல் கோடுகளுடன் - ஆங்கிலத்தில்.

செல்வியின் கெஞ்சலை மீறி, தோழனின் வார்த்தைகளின் அர்த்தம் புரிய, "தேங்க்ஸ் ஜாக்! அது தான் எனக்கு வேண்டும்!! இங்க வந்து செல்வியைப் பார்த்தாலே, நான் அவ பின்னாடி போயிட்டு உன்னைக் கைவிட மாட்டேன்னு உனக்குப் புரியும்ன்னு சொன்னேன் இல்லையா? நான் சொன்ன மாதிரியே நடந்துடுச்சு. இப்போ நீ சந்தோஷமா இருக்கியா?யாருமே நம்மளை பிரிக்க முடியாது" என்றவனின் குரலில் துளி கூட பரிதாபம் இருக்கவில்லை - மாறாக முகம் முழுதும் சந்தோஷத்தில் நிரம்பி வழிந்தது!

அவர்களது உரையாடலில் உடல் மேலும் கூனிக் குறுக, அங்கிருந்து நகர முற்பட்ட செல்வியின் நினைவே அப்போது தான் நவநீதனுக்கு வந்தது போலும் - "சாரி செல்வி. ஜாக்கும் - நானும் ரொம்ப நாளா பிளான் பண்ணியிருந்த விடுமுறை. அதான் போகவேண்டியதா போச்சு...உன்னைக் காரணம் காட்டி நான் வேண்டாம்ன்னு சொல்லத் தான் செய்தேன்...ஆனா, அவனுக்கு செம எரிச்சல் வந்திடுச்சு...ஒன்னும் பண்ண முடியல...போயிட்டேன்!" என்றவனின் விளக்கத்தைக் கேட்க அவள் அங்கே இருக்கவில்லை. கூடவே அவன் சேர்த்துச் சொன்ன "ஜாக்-கிற்கு கொஞ்சம் உடம்பு முடியலை. உடம்பு சரியாகிற வரைக்கும் நம்மளோட தான் இருப்பான்" என்ற தகவல், அவளது செவிகளின் வழியே இதயத்தைப் பழுது செய்ய - இலக்கின்றி வெளியே வெறித்தாள் அவள்!!

இது நாள் வரை தனிமை வாட்டியது என்றால், இப்போது உடனிருக்கும் மனிதர்கள் வாட்ட, வாழ வழியின்றி மறுகித் தான் போனாள் அப்பெண்பாவை!

முதல் பத்து நாட்கள் தனிமையில் சென்றது என்றால், அடுத்த பத்து நாட்கள் நவநீதன் மற்றும் ஜாக்சனின் அன்பு பரிமாறல்களை நேரில் காணும் கொடுமை நிகழ்ந்தேறியது! முந்தைய வாரம், கதவு திறக்கும் ஒலியில் தனக்கு விடுதலை கிடைக்கும் என எண்ணியிருந்த தாமரைக்கு, இந்த வாரம் கதவின் ஒலி ஓர் நரகத்திற்கான வாசலாய் இருக்கவே - அந்த ஒலி கேட்டாலே காதுகளை மூடிக் கொண்டு, கண்ணீர் வடிக்கும் அளவிற்கு மனதளவில் பாதிக்கப்பட்டாள்!!

பெற்றோரிடம் என்ன சொல்லி வைத்திருந்தானோ, ஊரிலிருந்து வரும் அழைப்புகள் மிக குறைவாய் இருந்தன! அப்படியே வந்தாலும், செல்வியின் பயந்த மேனி அவனின் அடிக்குப் பணிந்து ஒழுங்காய் பேசியது சொல்ல முடியாத கொடுமை தான்!

குறுகிய நாளில் வாழ்வின் துன்பங்கள் அனைத்தையும் அனுபவித்து முடித்த செல்விக்கு, விடிவு காலம் போல் நவநீதனும் - ஜாக்சனும் தங்களது அறையில் தங்களுள் திளைத்திருக்க, நவநீதனின் கைப்பேசி கேட்பாரின்றி வரவேற்பறையில் கிடந்தது

அத்தியாயம் 9

நவநீதனின் கைப்பேசி கேட்பாரற்று வரவேற்பறையில் கிடைந்ததை பார்த்ததும் செல்வி அடைந்த நிம்மதிக்கு அளவே இல்லை எனலாம்! நிம்மதியுடன் சேர்த்து நவநீதன்

வருவதற்குள் விஷயத்தை யாரிடமாவது பகிர்ந்து கொண்டு தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுதலும் சேர்ந்துகொள்ள, யாருக்கு அழைப்பது என்பதை முதலில் முடிவு செய்தாள்.

தந்தைக்கு அழைத்து அவருக்கு வேதனையைக் கொடுப்பது ஒரு புறம் இருந்தாலும், அவரால் தன்னை காக்கும் முயற்சியில் துரிதமாய் ஈடுபட முடியாது எனத் தோன்றவே, தந்தையின் வருத்தத்தைத் தற்காலிகமாய் ஒத்திவைத்தாள் செல்வி. மங்கையும் தர்மராஜன் சற்று உயர்ந்த நிலையில் இருந்தாலும், ஷ்யாமிடம் விஷயத்தைக் கூறினால் இன்னும் வேகமாய் கைகள் நகரும் என வினாடிகளில் முடிவு செய்த செல்வி - கைப்பேசியை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்றாள்.

வீட்டில் வேறு எங்கு நின்று பேசினாலும், நவநீதனுக்குக் கேட்டுவிடும் என்ற பயத்தால் குளியலறைக்குள் சென்று கதவை அடைத்தவள், ஒரு கையால் தண்ணீர் குழாயை திறந்துவிட்டுக் கொண்டே மறு கையால் ஷ்யாமின் எண்களை அழுத்தத்துவங்கினாள் (தொலைதூர அழைப்பு அட்டை மூலமாக).

"காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க" - கந்தர் சஷ்டி கவசத்தின் அடிகளை பாடிக் கொண்டே, ஷ்யாம் எடுப்பதற்காக காத்திருந்தவள் - அது அவனது வீட்டு எண் என்பதும், இந்த நேரம் சிங்கப்பூரில் அதிகாலை நேரம் என்பதையும் அறிந்துகொள்ளும் மனநிலையில் இருக்கவில்லை.

"ஹய்யோ, எவ்வளவு நேரம்! ப்ளீஸ் எடுங்க ஷ்யாம் அண்ணா" என அவளது குரலின் கண்ணீர் கந்தனை அசைத்ததோ, அங்கே தொலைப்பேசி எடுக்கப்பட்டு "ஹலோ" என்ற குரல் தூக்கத்தில் தோய்ந்திருந்தாலும், செல்விக்கு அது கடவுளின் குரல் போலிருந்தது.

"நான்...நான் செல்வி பேசுறேன். ஷ்யாம் அண்ணா தானே?" எனத் தொடங்கியவள், "அண்ணா, இங்க...இங்க...நவீ...நவநீதன் சரியில்லை அண்ணா, ஒரு பையனோட...சை... என்னை அடைச்சு வச்சு சித்ரவதை செய்றார்...என்னை எப்படியாவது காப்பாத்துங்க!" என ஒரே வரியில் செல்வி முடிக்க, அங்கே சத்தமே இல்லாது போனது.

"அண்ணா...அண்ணா...இருக்கீங்களா? ஹய்யோ கடவுளே! இருக்கீங்களா? இருக்கீங்களா?" என அவள் பரபரக்க,

"செல்வி, நான் நிகேதன் பேசுறேன். பதறாதேம்மா! நவீ எங்கே? அவன் உன்னை என்ன செய்றான்...நான் வரேன்மா "

நிகேதன் என்றதும் "சை இவனா?" என்றிருந்தது செல்விக்கு. அதற்கு காரணம் - நவநீதனின் தன்னிலை விளக்கத்தில் "நிக்கியிடம் சொல்லி அப்பா-அம்மாவிடம் பேசச்சொல்லுவேன்" என்ற வாக்கியம் தான். முறைகேடான (இயற்கைக்குப் புறம்பான) ஓர் உறவுமுறையை அங்கீகரித்து, அதற்கு ஆதரவாய் தாய்-தந்தையிடம் பேசியிருப்பான் என்றால் அவனும் தான் என்ன நல்லவன்? என்ற வெறுப்பு தான்.

"நான் ஷ்யாம் அண்ணாகிட்ட பேசணும். ப்ளீஸ் நேரத்தை வீணாக்காம அவர்கிட்ட கொடுங்க...இங்க இவர் வந்துட்டா என்னை அடிப்பாரே...ப்ளீஸ் கொடுங்க" என்ற செல்வியின் குரலில் எரிச்சலும், தவிப்பும் சரி பாதியாய் இருந்தன.

"செல்வி...பதறாதே! அத்தான் டோக்யோ போயிருக்காங்க. என்கிட்டே சொல்லுமா...ப்ளீஸ்...அங்க இருக்க சூழ்நிலையைச் சொல்லு!" என அவன் அங்கே பதற,

"ஷ்யாம் அண்ணாகிட்ட கொடுங்க" என அவன் சொன்னதை காதிலேயே வாங்காமல் கத்தினாள் செல்வி (சத்தம் அதிகமின்றி)

"செல்வி, நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு! நவீ வந்துடுவான் என்றால் நேரத்தை வீணாக்காதேமா... என்ன நடந்தது? ப்ளீஸ் சீக்கிரம் சொல்லு...நான் கண்டிப்பா உன்னை வந்து காப்பாத்துறேன். என் மேல நம்பிக்கை வைமா!

"நான் சொல்றதை ஷ்யாம் அண்ணாகிட்ட சொன்னா கூட போதும். இங்க...இங்க உங்க அண்ணனுக்கு வேற ஒரு தொடர்பு..." என்ற போது குரல் கம்மி, அவமானமாய் இருந்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டு தன்னை சமாளித்தவள் - "ஒரு பையனோட தொடர்பிருக்கு. இதை வெளிய சொல்ல இது பண்ணிட்டு...என்னை...என்னை...கல்யாணம் பண்ணிட்டாராம்...இப்போ அந்த தொடர்பு தெரிஞ்சு நான் பிரிஞ்சுபோறேன்னு சொன்னா...அடிக்கிறார்...நிகேதன் சார்" என்ற போது கண்ணில் நீர் தானாய் வழிந்தோடி, குரல் கரகரத்தது.

"உங்களுக்கெல்லாம் இந்த விஷயம் தெரியக்கூடாதுன்னு என்னை அடைச்சு சித்ரவதை

செய்றார். இதை விட கொடுமையா...அந்த பையனை...இங்கவே கூட்டிட்டு வந்து...சை....எப்படியோ போகட்டும்...என்னை எப்படியாவது எங்க வீட்டில கூட்டிட்டுப் போய் விட்டுடுங்க. அதுக்கு அப்புறம் உங்க குடும்பத்தை நாங்க எந்த விதத்திலேயும் தொந்தரவு செய்யமாட்டோம்"

"தயவு செஞ்சு ஒரு சக மனுஷியா என்னை மதிச்சு இந்த உதவியை செய்ங்க!" என அவள் முடித்தப்போது நிகேதனின் மனம் பேரதிர்ச்சிக்கு ஆளாகியிருந்தது.

தன் தமையானா இப்படி? என்ற கேள்வி மனதை புரட்டிப் போட்டாலும், அங்கே துன்புறும் ஓர் ஜீவனின் நிலை அவனை வேகமாய் யோசிக்க வைத்தது.

"செல்வி, தைரியமா இரு! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நான் அங்க வரேன்."

"கண்டிப்பா வருவீங்க தானே? இல்ல ஷ்யாம் அண்ணாகிட்ட சொல்லி...அவரை வரச் சொல்றீங்களா?" என்றபோது அதிலிருந்த நம்பிக்கையற்ற தன்மை, ஊசியாய் தைக்க

"நிச்சயம் செல்வி. என்னை நம்பும்மா. அப்பு..." என நிகேதன் முடிக்கவில்லை, அதற்குள் "ப்ச்" என்ற ஒற்றை சொல் அவளது நம்பிக்கையின் அளவைக் கோடிட்டுக் காட்டியது.

"நீ என்கிட்டே பேசின விஷயம்...நவீக்குத் தெரியவேண்டாம்!" அத்தோடு நிறுத்தியிருக்கலாம் நிகேதன், அத்தோடு "பெரியவங்க யாருக்கும் தெரியவேண்டாம் செல்வி" என்பதையும் அவன் சேர்க்க, செல்விக்குப் பொங்கி விட்டது.

"பெரியவங்க...பெரியவங்க...பெரியவங்க...அவங்களுக்காக நான் வாழலை...எனக்குன்னு ஒரு மனசு இருக்கு...உணர்வுகள் இருக்கு...இதெல்லாம் உங்க வீட்டில யாருக்குமே புரியாதா? சை" என அவள் கோபத்தில் வெடிக்க, அவளது தந்தையை மனதில் வைத்து பேசிய நிகேதனுக்கு கோபம் வரவில்லை - மிக அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறாள் போலவே! என்ற பரிதாபமும், அவளை எப்படியும் மீட்டு விட வேண்டுமென்ற உத்வேகமும் உண்டாயிற்று.

"சாரி செல்வி! நீ கொஞ்சம் தைரியமா இரு...ப்ளீஸ் எனக்காக! அப்புறம் நவீ

எப்போவெல்லாம் வீட்டில இருக்கான்? எத்தனை மணிக்கு வேலைக்குக் கிளம்புவான்" என சில விவரங்கள் கேட்டான்.

"அவர் இல்லாதப்போ வந்தா...என்னால கதவைத் திறக்க முடியாதே....அவர் கொஞ்ச நாளா வெளியில பூட்டிட்டு போய்டுறார்" என செல்வி பரிதாபமான தன் நிலையை எடுத்துரைக்க, நிகேதனின் கண்களில் அவனையும் அறியாமல் கண்ணீர் சுரந்தது.

"சரி, நான் பார்த்துக்கிறேன்! நீ மட்டும் தைரியத்தை விட்டுடாதே...நாங்க எல்லாரும் உனக்காக இருக்கோம். சரியா? ப்ளீஸ், உடம்பையும் மனசையும் தளரவிடாம இரும்மா. அங்கிருந்து சீக்கிரமே...ரொம்ப சீக்கிரமே வெளிய வந்துடலாம்" என்றவனுக்குப் பதில் சொல்லும் முன்னர், கதவின் ஒலி போல் ஏதோ கேட்க, செல்வியின் கைகள் நடுங்க ஆரம்பித்தன.

"அவ..அவர் வ..வரமாதிரி இரு...இரு..இருக்கு...வை..வைக்கிறே...கிறேன்" என்றவளின் நடுக்கத்தை மனக்கண் முன்னால் கொண்டுவந்த நிகேதன், "பயப்படாதே செல்வி. வந்துடுறேன்!" என்றான் உறுதியுடன்.

"அவ..அவர் வ..வரமாதிரி இரு...இரு..இருக்கு...வை..வைக்கிறே...கிறேன்" என்றவளின் நடுக்கத்தை மனக்கண் முன்னால் கொண்டுவந்த நிகேதன், "பயப்படாதே செல்வி. வந்துடுறேன்!" என்றான் உறுதியுடன்.

ஆனால் கதவு திறக்கும் ஒலிக்குப் பின்னர் ஆள் நடக்கும் அரவம் சிறிதுமில்லாததால், சட்டென குனிந்து குளியலறைக் கதவின் சிறு இடைவெளி வழியாக யாரும் நடக்கிறார்களா எனப் பார்த்தாள்.

சில வினாடிகள் நடந்த தேடலின் முடிவில், யாரும் வரவில்லை என்பதை அவள் உணர்ந்தபோது, உயிரை உறைய வைக்கும் குளிரில் கூட அவளது பூமேனி நனைந்திருந்தது - வேர்வையால்!!

"வைக்கிறேன்!" என்றவள் அழைப்பைத் துண்டிக்காமலே இருக்கவும், அவளைப் போல் தானும் மௌனம் காத்த நிகேதன், மிகுந்த கவனத்துடன் கைப்பேசியின் சத்தநுணுக்கங்களை ஆராய ஆரம்பித்தான்.

பதட்டமாய் வெளி வந்த அவளது மூச்சு, சில வினாடிகளில் அங்குமிங்கும் அலைபாய்ந்து, அடுத்த சில வினாடிகளில் பெருமூச்சாய் வெளிவரவே - அதிலிருந்த தப்பித்துவிட்ட உணர்வு நவநீதன் வராததை நிகேதனுக்கு வார்த்தைகளின்றி வரைந்து காட்டியது. தமையன் வரவில்லை என்பதை உணர்ந்ததும், மேலும் சில அறிவுரைகளை செல்விக்கு வழங்க எண்ணினான் இளையவன்.

"செல்வி, ஒரு நிமிஷம். நவீக்குத் தெரியாம கால் பண்ணியிருக்கே இல்லையா? பேசி முடிச்சதும் டயலட் நம்பர்ஸ்ல இருந்து இந்த கால்லை அழிச்சிடு. மறந்துடாதே! தைரியமா இரு. எதும்னாலும், 911 கூப்பிடும்மா!"

"இப்போ கூட ரொம்ப கஷ்டமா இருந்ததுன்னா.... நான் வரவரைக்கும் காத்திருக்க முடியாதுன்னு தோணுச்சுன்னா 911 கால் பண்ணிடு! எதுக்கும் தயங்காதே! உன்னோட பாதுகாப்பு தான் முக்கியம். என்ன சரியா? இருக்கியா செல்விம்மா?" என நிகேதன் பரபரக்க

அவனது அறிவுரைகளில் புதிதாய் ஓர் பயம் தோன்ற, "இரு..இருக்க்கேகேன், 911 ல யார் இருப்பா? நீங்க வர ரொம்ப நாள் ஆகுமா? உடனே வரமுடியாதா? ஷ்யாம் அண்ணா...இப்ப வருவாங்க...ஹய்யோ என்னால ரொம்ப நாள் இதை தாங்கமுடியாதே...கடவுளே!" என்றவளின் குரலில் நிராசை நூறு சதவீதமாய் விரவி, பரவியிருந்தது!

அவளது நிராசை மனதைப் பிழிந்தெடுக்க, "கண்டிப்பா வந்துடுறேன், செல்வி! நான் வரதுக்குள்ள ஏதாவது பிரச்னை வந்தா 911 கூப்பிடுன்னு சொன்னேன். அதில போலீஸ் இருப்பாங்கம்மா. உன்னோட பிரச்சனையை சொன்னா உன்னை காப்பாத்தி அங்க இருக்க இந்தியன் கான்சலேட்ல விட்டுடுவாங்க. சரியா? நவீ உன்னை அடிச்சான்னா உடனே அவங்களை கூப்பிட்டுவிடு" என்றவன் தன் வேதனையை மறைத்துக் கொண்டு அவளைத் தெளிய வைக்க முயன்றான்.

"போலீசா? அங்க வரைக்கும் போனா...இவர் என்னை என்ன செய்வாரோ? கொன்னு போட்டா கூட கேட்க நாதியில்லாம போயிடப்போகுது...." எனத் தனக்குளே பேசுபவள் போல் பேசியவள், நிகேதன் "நாங்கெல்லாம்...." எனத்

தொடங்கியதை வேகமாய் இடைமறித்து,

"என்கிட்டே தான் ஃபோன் இல்லையே...அப்புறம் எப்படி கூப்பிடுறது? நீங்க வருவீங்க தானே...ஷ்யாம் அண்ணாகிட்ட நான் சொன்னதை சொல்லுங்க...ப்ளீஸ் என்னை இங்கிருந்து காப்பாத்துங்க...வருவீங்க தானே? வந்துடுங்க...நான் காத்துக்கிட்டே இருப்பேன். ப்ளீஸ் தயவு செஞ்சு! இதுக்கு அப்புறம் எந்த உதவிக்கும் உங்ககிட்ட வரமாட்டேன்...இது மட்டும் தான்...ப்ளீஸ்" என்றவளின் வார்த்தைகள் அவளது அவநம்பிக்கையை, பதட்டத்தை, அவள் அனுபவிக்கும் வேதனையை, மனஉளச்சலை என்று எல்லாவற்றையும் படம்பிடித்துக் காட்ட, கனத்த நெஞ்சோடு "சர்வ நிச்சயமா செல்வி! பயப்படாதே! ரொம்ப நேரமாச்சு... நவீக்கு சந்தேகம் வந்திடப்போகுது. நீ பத்திரமா இரு...என்கிட்டே பேசின மாதிரி முகத்தில கூட காண்பிக்காதே! மற்றதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்!" என அவளுக்கு நம்பிக்கையூட்ட முயன்றான், நிகேதன்.

"தேங்க்ஸ்" என்றவளின் குரலில் நன்றியுடன் சேர்த்து "வந்துவிட வேண்டுமே" என்ற தவிப்பும் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டதில், நிகேதனின் நெஞ்சம் அவளை விரைவில் காக்க வேண்டும் என்ற எண்ணத்தை மிக உறுதியாய் தன்னுள் பதிய வைத்துக்கொண்டது!

செல்வியின் அழைப்பு துண்டிக்கப்பட்ட வினாடி, நிகேதனின் மனமிருந்த நிலையை அவனால் உணரக்கூட முடியவில்லை. "தன் உடன் பிறந்தவனா இப்படி?" என்ற கேள்வி ஒரு புறமும், "இந்த சிறு பெண்ணை எப்படியாவது மீட்டுவிட வேண்டுமே?" என்ற தவிப்பு ஒரு புறமும் மனதை குடைய, தலையை இருகைகளாலும் தாங்கியவாறே, சோபாவில் தொப்பென விழுந்தான்.

டெல்லியில் தன் மேற்படிப்பு முடியும் தருவாயில் இருக்கும்போதே, சிங்கப்பூரின் புகழ்பெற்ற மருத்துவ ஆய்வு மையம் ஒன்றில் ஆய்வுக்காக அவன் விண்ணப்பித்திருக்க, அவனது விண்ணப்பம் ஏற்கப்பட்டதோடு மட்டுமில்லாமல் அத்துடன் சேர்த்து வேலையும் செய்யும் படி உத்தரவு வந்து சேர்ந்தது.

மேலும் சில பல்கலை கழகங்களும் அவனது விண்ணப்பத்தை ஏற்று, ஆய்விற்கு அழைத்திருந்தபோதும் தன் தமக்கை இருக்கும் ஊரில் கிடைத்த வாய்ப்பு அவனைக் கவர்ந்திழுக்கவே மறு யோசனையின்றி சிங்கப்பூர் கிளம்பும் வேளைகளில் ஈடுபடத் துவங்கினான் நிகேதன். இரு செல்லக் குழந்தைகள் அங்கே துள்ளிவிளையாடும் நிலையில் தாய்-தந்தையை அங்கே அழைத்துச் செல்வது அனைவரது மகிழ்ச்சியையும் இரு மடங்காக்கும் என்பது ஒரு புறம் இருக்க, கடந்த சில ஆண்டுகளாய் மூன்று பிள்ளைகளும் வெவ்வேறு இடங்களில் இருக்க - பெற்றோர் மட்டுமாய் தனித்திருந்த வாழ்விற்கு முற்றுபுள்ளி வைக்கும் எண்ணம் மறு புறம் இருந்து நிகேதன் இயக்கியதில், மங்கை மற்றும் தர்மராஜனுக்கும் சிங்கப்பூர் விசா எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இரு தினங்கள் முன்னர் விசா கிடைத்துவிட, இன்று தான் சிங்கப்பூர் மண்ணை மிதித்திருந்தனர் நிகேதனின் குடும்பத்தினர். விசா வந்தவுடன் கிளம்புவதில் சில நடைமுறை சிக்கல்கள் இருந்தபோதும், வியாபார விஷயமாக ஷ்யாம் இருபது நாட்கள் டோக்யோ செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட, ஷைலஜா மற்றும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவென அவளது பிறந்த வீட்டார் பறந்து வந்திருந்தனர். மனைவியின் பாசமிகு சொந்தங்கள் வந்ததில் நிம்மதியடைந்த ஷ்யாமும் கவலையின்றி ஜப்பான் கிளம்பிச் சென்றிருந்தான் - அதுவும் அன்று மாலை தான்!

முதற்கட்ட அதிர்விலிருந்து வெளிவரவே ஒரு மணிநேரத்திற்கும் மேல் பிடித்தது நிகேதனுக்கு. கையைத் திருப்பி மணி பார்த்தவனுக்கு தன் மீதே கோபம் வந்தது - அங்கே ஓர் ஜீவன் தன்னை நம்பி காத்திருக்க, வெட்டியாக ஒரு மணி நேரத்தைப் போக்கிவிட்டோமே என்ற பதைப்பு தான் அது!

அவளை மீட்பதற்கு தான் அங்கே செல்லவேண்டும் என்ற முடிவிற்கு அவன் வந்து கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரமாகியிருந்தபோதும், ஷ்யாமை அழைத்து விஷயம் சொல்வதா வேண்டாமா எனக் குழம்பினான் நிகேதன். யோசித்துக் கொண்டிருப்பதில் பிரோயோஜனமில்லை;இப்போதில்லை என்றாலும் கூடிய சீக்கிரம் ஷ்யாமிற்கு நடந்தவைகளை சொல்லியே ஆகவேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிட, ஷ்யாமின் எண்களை ஓர் தீர்மானத்துடன் அழைத்தான் மைத்துனன்.

"அத்தான், நான் நிகேதன் பேசுறேன். உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்" என்று அவன் துவங்கியபோதே, ஷ்யாமிற்கு விஷயம் விபரீதமானது என்பது புரிந்துவிட்டது. ஏனென்றால், என்ன முக்கிய விஷயம் என்றாலும் நிகேதனின் குரலில் இந்த தீவிரம் இருக்காது; மேலும் அவன் அழைத்த நேரம் அப்படி.

"சொல்லு நிக்கி!" என்பதோடு ஷ்யாம் நிறுத்திக்கொள்ள, மடமடவென செல்வி பேசியதின் சாராம்சத்தை எடுத்துக்கூறி முடித்தான்.

மைத்துனன் சொல்வதை குறுக்கே பேசாமல் கேட்டிருந்த ஷ்யாமிற்கு, நவநீதன் மீது கட்டுக்கடங்கா கோபம் தோன்றினாலும், செல்வியின் நிலையை எண்ணியே மனம் பதைத்துப்போனது.
அந்த சிறு பெண்ணின் வாழ்வு பாழாக தானும் ஓர் காரணமாகிவிட்டோமோ என்ற குற்ற உணர்வு எழுந்த வினாடி - அவளது உயிருக்கு எந்த ஆபத்தும் நிகழ்ந்துவிடக் கூடாதே என்ற வேண்டுதலை ஷ்யாமின் நல்ல உள்ளம் நிகழ்த்த ஆரம்பித்திருந்தது.

"நான் உடனே கிளம்பிவரேன், நிக்கி! எனக்கு சிங்கப்பூர்ல இருந்தே யூ.எஸ் விசா எடுக்க முடியும். நீ இந்தியா போய் விசா எடுத்திடு. யாருக்கு முதல விசா கிடைக்குதோ அவங்க முதல போய்டலாம்..." என ஷ்யாம் வேகமாய் முடிவுகள் எடுக்க,

"அத்தான், நான் அக்காவை கூட்டிட்டுப்போகலாம்ன்னு பார்க்கிறேன்!" என நிகேதன் தன் கருத்தைச் சொல்ல, "சரி நிக்கி. ஷைலுவோட விசாவிற்கு நான் ஏற்பாடு பண்ணிடுறேன். நீ உடனே இந்தியா கிளம்பு. ஷைலுகிட்ட நீ சொல்றியா? இல்ல நான் சொல்லவா? இல்ல விஷயத்தை சொல்லவே போறதில்லையா?" என்ற ஷ்யாம் தன்னை எதிர்கேள்வி கேட்காமல், சட்டென புரிந்துகொண்டது அந்த நேரத்திலும் நிகேதனின் மனதை நிரப்பியது.

"சொல்லிடலாம்ன்னு பார்க்கிறேன் அத்தான். நீங்க என்ன சொல்றீங்க?" என்ற நிகேதனிடம், "பார்த்து பதமா சொல்லு. என்கிட்டே சொன்ன மாதிரி பட்டுன்னு

விஷயத்தை உடைச்சிடாதே. அவளால தாங்கமுடியாது. அப்புறம் முக்கியமான விஷயம் - அவ உடனே நவீ...நவநீதனுக்கு ஃபோன் பண்ணி, கத்தினாலும் கத்திடுவா...பார்த்துக்கோ... இப்போவே எழுப்பி சொல்றதுன்னாலும் சொல்லிடு...அத்தை-மாமா எழுந்துக்கிரதுக்கு முன்னாடி பயண விவரம் முடிவு செய்றது நல்லதுன்னு தோணுது. ஷைலு எங்க போறா, என்ன விஷயம்ன்னு மாமா கேட்டா, டோக்யோ வரான்னு சொல்லிக்கலாம். நீ கிளம்புறதுக்கு ஏதாவது காரணம் கண்டுபிடி. சீக்கிரம் நிக்கி! நான் ஷைலுவோட ஃபோன்காக காத்திருப்பேன்" என்ற ஷ்யாமின் முடிவான பேச்சில் நிகேதன், அழைப்பைத் துண்டித்துவிட்டு தமக்கையின் அறை நோக்கிச் சென்றான்.

சரியாக அரை மணி நேரத்தில், ஷ்யாமின் கைப்பேசி கிணுகிணுக்க, முதல் மணியின் தொடக்கத்திலேயே அதை எடுத்த ஷ்யாமிடம் அழுது தீர்த்துவிட்டாள் ஷைலஜா. "ஹய்யோ, செல்வியோட இந்த நிலைமைக்கு நான் தான் ஷ்யாம்...முழுக்க முழுக்க காரணம். அந்த எருமைமாடுக்கு வேற பொண்ணு பார்க்கிறேன்னு தான் அம்மா சொன்னாங்க...நான் அந்த நேரத்தில செல்வி பேரை இழுக்கப்போய் தான் இப்படி ஆகிடுச்சு...ஹய்யோ...பாவம் ஷ்யாம் அந்த சின்னப்பொண்ணு! என்ன பாடு படுறாளோ? அடிக்கிறானாம்...வீட்டை பூட்டிட்டு போயடுறானாம்...அந்த பையனை வீட்டுக்கே கூட்டிட்டு வந்திருக்கானாம்...ஏன் ஷ்யாம்? இவனோட புத்தி இப்படி போகுது? சை நினைக்கவே அருவெறுப்பா இருக்கே...அவ எப்படி இருக்காளோ...நானே இந்த கொடுமை செய்தேனே?" என அவள் இடைவிடாமல் புலம்ப,

"ஷைலு...ப்ளீஸ் அமைதியா இரு..." என ஷ்யாம் ஒரு புறமும், "அக்கா, மெதுவா பேசு! குழந்தைங்க எழுதுக்க போறாங்க!" என நிகேதன் ஒரு புறமும் அவளை சமாதானப்படுத்திய போதும் ஷைலஜா தன்னை அடக்கிக் கொள்வதை இல்லை. மேலும், மேலும் பொங்கிய குற்ற உணர்வை கண்ணீரிலேயே கரைத்துவிடுபவள் போல் அழுதுகொண்டே இருந்தாள்.

சில நிமிடங்கள் அவளை அவள் போக்கில் விட்ட நிகேதன் "அக்கா, அழுகையை நிறுத்தப்போறியா இல்லையா? நடந்து முடிஞ்சதை நினைச்சு...ஹய்யோ ஹய்யோன்னு குதிக்கிறதை விட, அவளை எப்படி இங்க கூட்டிட்டு வரதுன்னு

யோசிக்கா" - அழுத்தமாய் ஓர் அதட்டல் போட, ஷைலுவின் கண்ணீர் மெதுவாய் என்றாலும் நின்றது.

"இப்ப என்ன ஷ்யாம் பண்றது ?" எனப் பரிதாபமாய் வினவியவளிடம் "இங்க நம்ம பிசினஸ் விஷயமா ஒரு கான்ஃபிடன்சியல் அக்ரீமென்ட்ல நீயும் ஒரு பார்ட்னர் என்பதால் கையெழுத்து போடணும்...அதுக்காக நீ ரெண்டு நாள் அட்லீஸ்ட் இங்க வரணும்ங்கிற மாதிரி அத்தை-மாமாகிட்ட சொல்லிடுறேன். குழந்தைங்களை அவங்ககிட்ட விட்டுட்டு நீ நிக்கி கூட போ. ரொம்ப அழாதே! செல்வியை இங்க அழைச்சிட்டு வரவரைக்கும் அத்தைக்கு இந்த விஷயம் போகாம பார்த்துக்கோ... மனசு உடைஞ்சு போய்டுவாங்க!" என நாளையும் யோசித்துப் பேசினான் ஷைலஜாவின் காதல் கணவன்.

"எப்படியும் சொல்லித் தானே ஆகணும்? எத்தனை நாளுக்கு மறைக்க முடியும்? படுபாவி...இவனெல்லாம் எப்படி தான் அம்மா வயித்தில பிறந்தானோ..." என்ற ஷைலஜாவின் பற்கள் நரநரத்தன!

"பொறுமையா இரு...ஷைலு. நமக்கு செல்வியோட பக்கம் மட்டும் தான் தெரியும்...நவீ...நவநீதன் என்ன விளக்கம் வச்சிருக்கான்னு தெரியாதில்லையா?" என்ற ஷ்யாமிற்கு செல்வியை குறைகூற வேண்டும் என்ற எண்ணம் சுத்தமாய் இல்லையென்றாலும், ஒரு பிரச்சனையைப் பற்றிய ஒருவரின் கண்ணோட்டம் மற்றவரின் கண்ணோட்டத்தைக் கட்டிலும் முற்றிலுமாய் வேறுபடலாம் என்ற கருத்து இருந்தது நிஜம். "மனிதர்கள் பலவிதம். அவர் நல்லவராவதும் கெட்டவராவதும் நீ காணும் விதத்தில்" என்பதை குறிக்கோளின் அடிப்படையில் விளைந்த கருத்து என்பதாலேயே மனைவியை அடக்கினான், இல்லை இல்லை அடக்க முயன்றான் அவன்.

ஆனால் அவளோ "ஒரு பொண்ணு "என் புருஷன்கிட்டே இருந்து காப்பாத்துங்க"ன்னு அழறான்னா அதில ஒரு சதவீதமாவது உண்மையிருக்க தாங்க செய்யும். அதுவும் செல்வி...எனக்கு அவளைப் பத்தி நல்லா தெரியும் விஷயம். தன்னோட சுயநலத்திற்காக யார் மேலேயும் அபாண்டமா பழி போன்ற ஆளில்லை...அவ!" என வாதாடினாள்.

"உனக்கு உன் தம்பியைப் பதியும் தான் நல்லா தெரியும்" என்ற ஷ்யாமிற்கு என்ன பதில் சொல்வது என சில வினாடிகள் யோசித்தாலும், "என்னைக் குழப்பாதீங்க ஷ்யாம்" என முடித்தாள் ஷைலஜா.

"குழப்பலைடா. அங்க போய் பார்த்திட்டு என்னானாலும் முடிவு பண்ணிக்கலாம். அதுக்கு முன்னாடி நவநீதனுக்கு ஃபோன் போட்டு எதுவும் பேச வேண்டாம்...அதுக்கு தான் சொல்றேன்" எனத் தான் நினைத்த விஷயத்தை, குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போல் அழகாகவே சாதித்துக் கொண்ட ஷ்யாம், அவளது விசா மற்றும் பயண விவரங்களைக் கவனித்துக் கொள்வதாக சொல்லி, அழைப்பைத் துண்டித்தான்.

கணவனிடம் பேசியது...புலம்பியது பத்தாது என்று தம்பியிடம் "என்னடா நிக்கி?" என ஆரம்பித்தவள், அவன் முகத்திலிருந்த தீவிரம் பார்த்து துணுக்குற்றாள். முகத்தில் தீவிரத்துடன் சேர்த்து கோபமும் இருந்தது சிவந்திருந்த கண்கள் பறைசாற்ற, தம்பியின் கைகளைப் பிடித்து அழுத்திக்கொடுத்தவள், "என்ன நிக்கி?" என மெதுவாய் கேட்டதற்கு பதிலாய் நிகேதன் பொங்கி எழுந்தான்.

"செல்வியோட குரலை எத்தனை பயம் தெரியுமாக்கா? நாம வந்து அவளைக் காப்பாத்துவோம்ங்கிற நம்பிக்கையே இல்லைக்கா... சை...பெண்ணை அதுவும் மனைவியை கை நீட்டி அடிக்கிற அளவுக்கு நம்ம நவீ மிருகமாகிட்டானா? சை...இவனை என்ன செய்றது? அவ கூட பேசவே எனக்கு அவமானமா இருக்குக்கா...நம்பிக்கை துரோகம் செஞ்ச மாதிரி மனசே வலிக்குது...அம்மா எப்படி தாங்குவாங்க?" எனப் பொரிந்து தள்ளியவனுக்கு என்ன மாதிரி பதில் சொல்வது எனத் தெரியாமல், "ஷ்யாம் சொல்றமாதிரி...அங்க முதல போகலாம்...அங்க போய் பார்த்திட்டு என்னானாலும் முடிவு பண்ணலாம்" என்ற தமக்கை, "நான் கண்டிப்பா வரணுமா நிக்கி?" என்றாள் அடைத்த தொண்டையுடன்.

ஷ்யாமின் "மனிதர்கள் பலவிதம்" என்ற சித்தாந்தில் நம்பிக்கையில்லை என்றாலும், அங்கே வந்து செல்வியின் நிலையைக் கண்டால் தன்னையும் மீறி நவநீதனை ஏதும் சொல்லிவிடுவோமோ என்ற பயத்தினால் எழுந்த கேள்விக்கு நிகேதன்

கூறிய பதில், இருக்கும் வலியை அதிகரித்ததே ஒழிய சிறிதும் குறைக்கவில்லை.

"செல்விக்கு என் மேல சுத்தமா நம்பிக்கையில்லைக்கா...நவீயாலன்னு நினைக்கிறேன்! நான் மட்டும் அங்க போய் என்னைப் பார்த்து அவ மிரண்டு ஒதுங்கிறதைவிட , நீயும் கூட வந்தா நல்லா இருக்கும்! அதோட அவ இருக்க நிலைமையில ஒரு பெண் துணை தேவை! நீ வாக்கா" என்று முடித்தவன், "கொஞ்சம் நேரம் தூங்க முயற்சி பண்ணு! நான் இந்தியா போறதுக்கு டிக்கெட் இருக்கான்னு பார்க்கிறேன்" எனப் போய்விட்டான்.

அங்கே நிகேதனுடன் பேசிவிட்டு கைப்பேசியை அணைத்த செல்விக்கு, மனம் நிம்மதி பெறவே இல்லை. ஷ்யாம்சுந்தருடன் பேசியிருந்தால் எப்படி உணர்ந்திருப்பாளோ? நிகேதனுடன் பேசியதால் மனம் "தான் காப்பாற்றப்பட்டு விடுவோமா? இல்லை இந்த சிறை இன்னும் கொடூர குகையாகி விடுமோ?" என்ற பயத்திலேயே இருந்தது.

"கண்டிப்பாக வந்துவிடுகிறேன்" என நிகேதன் கொடுத்த நம்பிக்கையில் செல்விக்குத் தான் நம்பிக்கை வரவில்லை!

இந்த நவநீதனுடன் பிறந்தவன் தானே அவனும்? நவநீதனின் காரியத்திற்கு துணை போகும் அளவில் அவனது மனம் இருக்குமெனில், தான் பேசியதை நவநீதனிடம் கூறிவிடுவானோ?
என்னை மீறி என் வீட்டிற்கு அழைத்தாயா? என்று இவன் இங்கே என்னை கொன்றுவிடுவானோ? என பற்பல கற்பனைகளில் மனமும் உடலும் துவண்டது!

ஆனால் மனதின் தடுமாற்றத்தை அடியோடு துடைத்தெடுக்கும் வண்ணம், கதவுகள் திறக்கும் ஓசை கேட்க, இந்த முறை அது போலியான பயமுறுத்தல் இல்லை என்பதை உணர்ந்த செல்வியின் இதயம் கிடுகிடுவென தடதடத்தது.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, அவள் காத்திருக்க அவசரமான காலடி ஓசை காதை பிளக்க, மரண பயம் என்றால் என்னவென்பதை உணர்ந்தாள் செல்வி.

சில நிமிடங்கள் தொடர்ந்த அக்காலடி ஓசை, கதவு மூடும் ஓசையுடன் சேர்த்து மறைய சீராய் மூச்சுவிட்ட செல்வி - நிகேதன் சொன்னதை மெல்ல நிறைவேற்றினாள். கைப்பேசியிலிருந்து அழைக்கப்பட்ட எண்கள் இருக்கும் பட்டியலில் போய் தான் தற்போது அழைத்த சர்வேதேச அழைப்பு எண்ணை அழித்தவள், கைப்பேசியை எடுத்துக்கொண்டு வரவேற்பறை நோக்கி விரைந்தாள் - சத்தமின்றி!

நவநீதன் வைத்திருந்தது போலவே கைப்பேசியை மேசை மீது வைத்தவள், வேர்வையால் நனைந்த உள்ளங்கால்களுடன் சமையலறை நோக்கித் திரும்ப, நவநீதன் அங்கே நின்றிருந்தான்!

"ஹய்யோ கடவுளே! என்னை கைவிட்டுவிட்டாயே!" - செல்வியின் மனதிட்ட ஓலம் தொண்டை வழியே வெளிவரும் அபாயத்தை நவநீதனின் அடுத்த செயல் கொண்டுவந்தது! அதாகப்பட்டது, நவநீதன் கைப்பேசியை எடுத்திருந்தான்.

"போச்சு...போச்சு...அடிக்கப் போகிறான். கடவுளே! எத்தனை நாள் தான் இவன்கிட்ட வதைபடுறது..." துடித்து தவித்த சிறியவளை மேலும் துன்புறுத்தாமல் கடவுள் துணைக்கு வந்துவிட்டார் எனது - நவநீதன் யாருடனோ நடத்திய உரையாடலிலும், அதன் பின்னர் அதை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று மறைந்ததிலும் வெளிவர, செல்வி சற்றே நிம்மதியுற்றாள்.

அதே போல் அவளது ரத்த அழுத்தத்தையும், பயத்தையும் சட்டென உயரத்திற்கு இட்டுச் சென்று, அதை சடாரென இருக்கும் வேலையை நவநீதனின் தமக்கையும் செய்துபார்த்தாள்.

அன்றிரவு ஷைலஜாவிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது என்பதை "ஹாய் ஷைலு...எப்படி இருக்கே?" என்ற நவநீதனின் விசாரிப்பு பறைசாற்றவே, செல்வி இன்னுமொரு நடிப்பிற்குத் தயாரானாள்.

நவநீதனின் விசாரிப்பிற்கு அந்த பக்கம் என்ன பதில் வந்ததோ "செல்வி இதோ இருக்கா...கொடுக்கிறேன்." என்றவனின் புருவங்கள் சுருங்கியிருந்தன.

அதை பார்த்த செல்வியின் "ஹலோ"வே நடுங்கியிருக்க, "செல்விம்மா, எப்படி இருக்கே? ரொம்ப கஷ்டமா இருக்கா?" என்ற நிகேதனின் குரலில் அக்கறை நிரம்பி வழிந்தது. ஷைலஜாவிடமிருந்து நிகேதனிடம் கைப்பேசிய விந்தையை வியந்த வேளையிலும் "நான் நல்லா இருக்கேன். அவரும் நல்லா இருக்கார்" என்ற பதிலிலேயே அவன் அருகில் இருப்பதை உணர்த்த முயன்றாள் செல்வி.

நீ சொல்லவருவதை புரிந்து கொண்டுவிட்டேன் என உணர்த்துவது போல் "ஃபோன் ஸ்பீக்கர் மோடுல இருக்கா என்ன?" என்றான் நிகேதன்.

"இல்லைக்கா. இங்க தான் பக்கத்தில இருக்கார். கொடுக்கவா?" என்ற செல்விக்கு, எப்போது நவநீதன் தன் கையிலிருந்து கைப்பேசியை பிடுங்கப்போகிறானோ என்ற பயமே பிரதானமாய் இருந்தது.

ஸ்பீக்கர் மோடில் இல்லாவிட்டாலும் நவநீதனின் காதுகளில் தங்களது உரையாடல் விழுந்துவிடுமோ எனப் பயப்படுகிறாள் போல என்றெண்ணிய நிகேதன், நுணுக்கமாய் வார்த்தைகளைக் கோர்த்தான். "நானும் நிக்கியும் இங்கிருந்து கிளம்புறோம்." என்ற நிகேதன் - எங்கே எப்படி என்று எதுவும் சொல்லவில்லை என்றாலும் செல்விக்கு அவன் கூற வரும் விஷயம் புரியவே, வாய் தானாக "தேங்க்ஸ்" என நன்றி நவின்ற வேளையில் குரல் நடுங்கிவிடாமல் காப்பது அவளுக்குப் பெரும் பாடாய் தான் இருந்தது!

"டேக் கேர், செல்வி! சீக்கிரம் அப்பாவை பார்த்துடலாம். அம்மாக்கு உங்ககிட்ட தினம் பேசலைன்னா தூக்கம் வரலையாம்...இனிமேல் தினம் தினம் கூப்பிடுறேன். உன்னோட நலத்தை அவங்களுக்கு சொல்லிடு" என்ற நிகேதன், அவளது "சரி"யைப் பெற்று கொண்டே வைத்தான்.

அணைக்கப்பட்ட கைப்பேசியை மேசையில் வைத்துவிட்டு செல்வி நகர, "செல்வி, உன்கிட்ட அக்கா நல்லா பேசினாளா?" என்றான் நவநீதன் நெரித்த புருவங்களுடன்.

உள்ளே ரயில் ஓடினாலும் "ம்ம்" என்ற ஒற்றை சொல்லில் செல்வி முடித்துவிட,

"நல்லா பேசினாளா? என்கிட்டே சரியாவே பேசலையே? பேசுறது என்ன... எடுத்ததும் உன்கிட்ட கொடுன்னு சொல்லிட்டா...என்னை விட அவளுக்கு நிக்கி மேல பாசம் ஜாஸ்தி தான்னு எனக்குத் தெரியும்...அதுவே எனக்கு எரிச்சலா வரும்...இப்போ உன்னையும் எனக்கு முன்னாடி கொண்டு போயிட்டாளா? ஹ்ம்ம்...சரியில்லையே" என்ற நவநீதனின் புலம்பலில் "எல்லோர் நினைவிலும் தான் உயர்ந்திருக்க வேண்டும்...தான் மட்டுமே உயர்ந்திருக்க வேண்டும்" என்ற அவனது குறிக்கோள் புரிந்தது. இந்த குறிக்கோள் தான் அவனை நிறைய தகிடுதத்தங்களை செய்ய வைக்கிறதோ என்றெண்ணிய செல்வி, அந்த ஆராய்ச்சி இப்போதைக்கு அவசியமில்லாத ஒன்று என்ற முடிவுடன் அதை ஒதுக்கிவைத்துவிட்டு, நிகேதன் மற்றும் ஷைலஜாவின் வரவிற்காக காத்திருக்க ஆரம்பித்தாள் - நம்பிக்கை பாதி; அவநம்பிக்கை மீதியாக.

அவளது நம்பிக்கையை ஆட்டம் காணச் செய்யும் வண்ணம் நிகேதனும் ஷைலஜாவும் ஒரு வாரம் சென்ற பின்னரும் வரவில்லை; தனது அழைப்பு கிடைத்த மறு நாளே அவர்கள் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இல்லையென்றாலும், இரண்டு மூன்று நாட்களில் அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தவள், நாட்கள் செல்லச் செல்ல துவள ஆரம்பித்தாள்.

என்னதான் நிகேதனும் ஷைலஜாவும் தினம் ஒரு முறை அழைத்து - "விசா கிடைக்க நேரம் எடுக்கிறது. கூடிய சீக்கிரம் வந்துவிடுவோம்" எனத் தைரியம் கூறியபோதும் நெஞ்சம் பதறத் தான் செய்தது.

செல்வியின் பதட்டத்தை தங்களதாய் எண்ணிய நல்ல உள்ளங்கள் இருவரும் - செல்வியின் அழைப்பு வந்த ஐந்தாவது நாள் நியூயார்க் செல்லும் விமானத்தில் அமர்ந்திருந்தனர் - தங்கள் உடன் பிறந்தவனின் குணம் பற்றிய அலசலுடன்!

## அத்தியாயம் 10

விமானத்தில் ஏறி அமர்ந்து, அது லண்டன் நோக்கிப் பறக்க ஆரம்பிர்ததுமே "நிக்கி, நம்ம நவீயா இப்படி?" என ஐந்தாவது நாளில் ஐநூறாவது முறையாக, தன் இளைய தம்பியிடம் மூத்த தம்பியைப் பற்றி அங்கலாய்த்தாள் - ஷைலஜா.

தனக்கு மற்றோர் தாயாய் இருந்து வளர்த்தவளின் தாயுள்ளம் புரிந்தவன் என்பதால், இது நாள் வரை "தெரியலைக்கா, ரொம்ப நாள் வீட்டை விட்டு...அம்மாவை விட்டு...நாட்டை விட்டு இருந்தது அவனை மாத்திடுச்சோ என்னவோ? போய் பார்க்கலாம்" எனக் கூறிக் கொண்டிருந்தவன், கிளம்பும் தருவாயில் செல்வியிடம் பேசியபோது - அவளது நிராசை குரல் கேட்ட "இன்னைக்குத் தான் கிளம்புறீங்களா?... அதான் சென்னைக்குப் போறேன்னு சொல்லிட்டு இருந்தீங்க இல்லையா?" என்ற கேள்வி மனதை படுத்தியெடுக்க, "எப்போ பார்த்தாலும் என்ன அவன் பேச்சு? அங்க ஒரு பொண்ணு உயிரைக் கையில பிடிச்சிட்டு இருக்கா...உன் தம்பி ஏன் அப்படி ஆனான்கிற ஆராய்ச்சி இப்போ ரொம்ப முக்கியமாக்கும்?" என எரிந்து விழுந்து விட்டான்.

"ஹே என்னடா நிக்கி...இப்படி சொல்லிட்டே? செல்வியை நினைச்சு நான் வருத்தப்படாத நிமிஷமே இல்லை நிக்கி...அந்தச் சின்னப் பொண்ணுக்குப் போய் இப்படி ஒரு கொடுமை செய்தோமேன்னு மருகிட்டு இருக்கேன்...என்னடா நீ" என்ற ஷைலஜாவின் கண்களில் கண்ணீரின் சாரல் தெரியவே, தன்னையே நொந்து கொண்ட நிகேதன்

"சாரி அக்கா. நாம போறதுக்கு இத்தனை நாள் தாமதமானதில் செல்விக்கு நம்ம மேல இருக்க நம்பிக்கை ரொம்பவே குறைஞ்சு போய்டுச்சு போல...அந்த தவிப்பை எல்லாம் கோபமா கொட்டிட்டேன். சாரிக்கா! நாம பேசினதை வச்சு நவீக்கு ஏதும் சந்தேகம் கிளம்பி...அவளை இன்னும் படுத்திடுவானோன்னு வேற பயமா இருக்கு. நீ வேற அவன்கிட்ட சாதாரணமா பேசுன்னா பேசவும் மாட்டேங்கிற...ப்ச்" - மன்னிப்பில் தொடங்கி ஆற்றாமையில் முடித்தான் இளையவன்.

"என்னை என்ன செய்யச்சொல்றே? எனக்கு அவன் குரலைக் கேட்டாலே பத்திக்கிட்டு வருது...எருமைமாடு...பொண்ணை கை நீட்டி அடிக்கிறதெல்லாம் ஒரு பிழைப்பா...கல்யாணமாகி இந்த எட்டு வருஷத்தில உங்க அத்தான் என்னை ஒரு தடவை கூட அடிச்சதில்லை தெரியுமா? ஏன் சத்தம் போட்டு அதட்டினது கூட இல்லை...பாவம் செல்வி...எத்தனை ஆசையோட கல்யாணம் பண்ணிகிட்டா..." என்ற ஷைலஜாவின் கண்களில் தெரிந்த கோபம், அவள் "தம்பி ஏன் மிருகம் போல் நடந்துகொள்கிறான்?" என்ற சகோதரப்பாசத்திற்கும் - "நான் பார்த்து வளர்ந்த ஓர் நல்ல பெண்ணின் வாழ்வு பாழாகிவிட்டதே!" என்ற மனிதத்தன்மைக்கும் இடையே கிடந்து அல்லாடுகிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டியது.

©Bhuvana's Story

"விடுக்கா. நாம ரெண்டு பேரும் மாத்தி மாத்தி புலம்புறதால எதுவும் நடக்கப் போறதில்லை... உருப்படியா ஏதாவது யோசிக்கலாம்" என்ற இளையவன், "செல்வியை அங்கிருந்து சிங்கப்பூருக்குக் கூட்டிட்டுப் போக முடியாது...இந்தியா தான் போகணும். ஆனா, அங்கிள் இதை எப்படி தாங்குவாரோ? அவர்கிட்ட பக்குவமா எடுத்துச் சொல்லணும்...ஹ்ம்ம் பார்க்கலாம்!" என அடுத்த கட்ட வேலைகளைத் திட்டமிடத்துவங்கினான்.

"நவீ...நிஜமாவே அப்படி செய்திருப்பானாடா?" என்ற தமக்கையைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா எனத் தெரியவில்லை நிகேதனுக்கு. நவநீதன் குற்றம் புரிந்திருப்பான் என்பது போல் பேசினால் - "தம்பியா அப்படி?" எனக் கேள்வி கேட்பவள், அவன் குற்றமற்றவன் என்பது போல் பேசினால் "ஒன்றுமில்லாமலா செல்வி இப்படி பயப்படுகிறாள்.. தம்பியிடம் தான் தப்பிருக்கிறது" என்பது போல் பேசினாள். நிலைமையை நேரில் காணாத அவளது தடுமாற்றம் நிகேதனுக்கு புரியவே செய்தது!

"என்ன பிரச்சனையா இருந்தாலும் அதை ஃபேஸ் பண்ணித்தான் அக்கா ஆகணும். முடிஞ்சவரைக்கும் அமைதியா இருக்கப் பாரு...இப்போ கொஞ்சம் தூங்கு...ஃபிளைட்ல தூங்கினா தான் உண்டு" என்ற நிகேதன், ஷைலஜா சொல்லச் சொல்ல கேட்காமல், கறுப்புத்துணி ஒன்றை அவளது கண்களில் மாட்டி, அவளுக்கு உறக்கத்தைப் புகட்ட முயன்று, அதில் வெற்றியும் கண்டான்.

தமக்கையின் உறக்கத்தை உறுதி செய்தவனின் மனம், தமையனைச் சுற்றி சுற்றியே வந்தது.

இளம் வயது முதல் நவநீதன் அதிகம் பேசமாட்டான் தான். ஆனால், அவனுக்கு வேண்டும் என்பதை தாயிடம் சொல்லி எப்படியாவது நடத்திக் கொண்டுவிடுவான் என்பது குடும்பத்தினர் அறிந்ததே. "வாயைத் திறந்து பேசவே செய்யாத! மூஞ்சியையும் முகத்தையும் நீட்டியே காரியம் சாதிச்சிடு!" என மங்கை அலுத்துக்கொள்வது வாடிக்கையாய் நடப்பதே ஆகும்!

அத்துடன் சேர்த்து, நவநீதனின் எந்த ஒரு முடிவும் "எடுத்தோம் கவிழ்த்தோம்" என்று இருக்காது. நிகேதனின் முடிவுகளுள் பல...ஏன் எல்லாமே அவனது அந்த நேர சிந்தனை தான். முடிவென்று ஒன்றை எடுத்துவிட்டால், அதை ஏன் எடுத்தோம் என்ற வருத்தம் சிறிதுமில்லாமல், கடைசி வரை போராடும் குணம் கொண்டவனின் அண்ணனோ,

சின்னதாய் ஓர் பேனா வாங்கவேண்டும் என்றாலும் ஆயிரம் முறை யோசித்து, நல்லது கெட்டது ஆராய்ந்து, முழுதாய் தெளிந்தபின்னரே தன் முடிவை மற்றவருக்கே சொல்வான்.

தர்மராஜனுக்கு அவனது அக்குணம் மிக பிடித்தம் என்றே சொல்லலாம்; அலசி ஆராய்ந்து நல்ல முடிவாய் எடுத்துவிடுவான்; அவன் எடுக்கும் முடிவுகளில் எப்போதுமே ஓர் தெளிவிருக்கும் என்பது அவரது கருத்து! "எல்லாத்தையுமே ஈஸியா எடுத்துக்காதே நிகேதா!" என நிகேதனுக்கு அவர் அறிவுரை கூறுவது கூட நவநீதனின் தெளிவை மனதில் கொண்டு தான். ஆனால், "எல்லாத்தையும் சீரியஸ்சாகவும் எடுத்துக்கக் கூடாது அப்பா" என நிகேதன் ஓர் தோள் குலுக்கலோடு மறுப்பதை, புன்னகையோடு எடுத்துக் கொள்ளும் தந்தைக்கு நவநீதனின் அக்குணத்தினாலையே அவன் மீது அதிக பற்றுதல் தான்.

மங்கைக்கும் நிகேதனின் ஓயாத பேச்சும், சீண்டலும், தமக்கையின் மேல் அவன் கொண்ட பாசமும் என இளைய மகனைப் பிடித்தாலும், அதிர்ந்து பேசத் தெரியாத; அதிகமாய் சிந்திக்கக் கூடிய பெரிய மகன் மேல் அலாதி பிரியம் என்று தான் சொல்லவேண்டும். அதிலும் அவன் அதிக நாட்கள் வீட்டை விட்டு வெளியே இருந்ததால், அவனைப் பார்க்கும் நேரங்களில் நிகேதன் இரண்டாம் பட்சம் தான்! ஏன் செல்ல மகள் ஷைலஜாவிற்கு கொடுக்கப்படும் சலுகைகள் கூட, நவநீதன் வீடு வரும் நேரம் வெகுவாய் வலுவிழந்து விடும்.

அப்படிப்பட்ட குடும்பச்சூழலில் வளர்ந்திருந்த நவநீதன், ஒரு பெண்ணின் வாழ்வை வீணாக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறான் என்றால் யோசிக்காமலா இருந்திருப்பான்? ஒரு வேளை அதிகமாய் யோசித்ததால் தான் இந்தளவிற்கு திட்டமிட முடிந்ததோ? என நிகேதனின் எண்ணங்கள் செல்வியின் வாழ்வு கேள்விக்குறி ஆனதற்கான கரணங்கள்; அது சம்மந்தமாய் தன் அண்ணனின் குணங்களின் ஆராய்ச்சி என ஊர்வலம் நடத்திக் கொண்டிருக்க, அவர்களது விமானமும் தனது வான் ஊர்வலத்தை முடித்துக்கொண்டு லண்டன் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

சிங்கப்பூர் முதல் லண்டன் வரை செல்வியின் வாழ்வு பாழானதற்கான காரணங்களை அலசி ஆராய்ந்த நிகேதன், லண்டன் முதல் நியூயார்க் வரை நவநீதனின் இந்தியக் கலாசார மீறல் குறித்து தன்னுடனே விவாத்திக்கொண்டிருந்தான். என்னதான் விவாதித்தாலும், தகுந்த காரணமாய் எதுவும் கிடைக்காமல் போக, செல்வியின் நலம் வேண்டி கடவுளை வேண்டியாவறே மீதி பயணத்தைத் தொடர்ந்தான் அவன்.

செல்வியின் நிலையை கலிபோர்னியாவிலிருக்கும் தன் நண்பன் ஒருவனிடம் அடிகோடிட்டு காட்டி, தனக்கு அவனது உதவி தேவையென்றும், இன்ன தேதியில் அவன் நியூயார்க் நகரிற்கு வரமுடியுமா என்றும் நிகேதனின் விண்ணப்பத்திற்கு ஏற்ப, அவனது நண்பன் நிஷாந்தும் அவர்களுக்காக விமான நிலையத்தில் காத்திருந்தான்.

நிகேதனும், ஷைலஜாவும் வந்திறங்கிய நேரம் மாலை ஏழு மணி என்பதால், அன்றைய நாளை கடத்தாமல் அன்றே செல்வியை சென்று பார்த்துவிட எண்ணினர் இருவரும்.

நவநீதனின் வீட்டு முகவரி தெரிந்தபோதும், அவர்கள் இருவரும் வருவதை அவன் அறியக்கூடாது என்றே நிகேதன் நினைத்தமையால் - தன் நண்பனை விட்டு நவநீதனின் கைப்பேசிக்கு அழைக்கச்செய்தான்.

அந்த பக்கம் நவநீதன் கைப்பேசியை எடுத்ததும், "ஹலோ, மிஸ்டர்.நவநீதனா?" எனப் பேச்சை ஆரம்பித்த நிஷாந்த், "நான் நிக்கியோட ஃபிரண்ட் நிஷாந்த் பேசுறேன். இப்போ பேசலாமா?" என அனுமதி கேட்டான்.

அங்கே ஆமோதிப்பாய் பதில் வந்ததும், " நான் இப்போ நியூயார்க் ஏர்போர்ட்ல இருக்கேன். ஒரு சின்ன ஹெல்ப் வேணுமே?" என்றான் நிஷாந்த் தயவாய்.

"சொல்லுங்க. கண்டிப்பா செய்றேன்!" என நவநீதன் வாக்குக் கொடுக்க, தான் இங்கே ஓர் விமானத்திற்குக் காத்திருப்பதாகவும், அந்த விமானம் நான்கு மணி நேரங்கள் தாமதமாய் கிளம்புவதாகவும் கூறியவன்

"ஒரு ரெண்டு மணி நேரம் உங்க வீட்டில இருக்கலாமா? வெளிய ரொம்ப குளிரா இருக்கு...என்னோட வின்ட்டர் க்ளோத்ஸ் வேற சரியா இல்லை...உங்களுக்கு ஏதும் பிரச்சனையில்லைனா நான் வரேன்...அப்படியிருந்தா ஒன்னும் பிரச்சனையில்லை" என்றான் மிக மிக தயவாய்.

"இதில என்ன பிரச்சனை? தாராளமா வாங்க...இந்தாங்க அட்ரஸ் நோட் பண்ணிக்கோங்க. இங்க வந்ததும், கீழ இருக்க அக்செஸ் ஃபோன்ல இருந்து 512 டயல் பண்ணுங்க. நான் டோர் ஓபன் பண்ணிவிடுறேன்" என்ற நவநீதன், "ஆமா, என்னோட ஃபோன் நம்பர் உங்களுக்கு எப்படி கிடைச்சது?" என்றான் சிறு சந்தேகத்துடன்.

"அது...அதுவா...நிக்கி தான் சொன்னான்" என நண்பன் மழுப்ப,

"ஹோ..சரி சரி...எப்போ? என்கிட்டே நீங்க ஃபோன் பண்றதா சொல்லவே இல்லையே?" என அவன் மீண்டும் ஓர் கேள்வி கேட்க

"அது...அது வந்து...இப்போ தான் வாங்கினேன்" என அடுத்த மழுப்பல் வந்துவிழ

"நான் இப்போதானே வீட்டிற்குப் பேசினேன்...நிக்கி இந்தியா போயிட்டதா சொன்னாங்களே!" என அவன் மேலும் குடைய

"நான்...நான் சாட்ல வாங்கினேன். ஆன்லைன்ல இருக்கானே? நீங்க பார்க்கலையா?" என மழுப்பலுக்குப் பதிலாக ஓர் சந்தேக கேள்வி வந்ததும் தான், நவநீதன் அடங்கினான்.

"ஹோ, சாரி நிஷாந்த்! ரெண்டு மூணு நாளா அவன் கூட பேசமுடியாமலே போய்டுச்சு.

அதான் உங்ககிட்ட பேசியிருக்கான் என்றதும் என்ன...எங்க என்று கேள்வி வந்துடுச்சு. சாரி. நீங்க கிளம்பி வாங்க! டாக்ஸில வந்துடுவீங்க இல்லையா? இல்ல நான் ஏர்போர்ட் வரட்டுமா?" எனத் தன் முந்தைய சந்தேகங்களை மறைக்கும் வண்ணம் புதிதாய் ஓர் விண்ணப்பமிட்டான் நவநீதன்.

"குடி கெட்டது போ" என மனதிற்குள் நினைத்துக்கொண்ட நிஷாந்த், "உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம். நானே வந்துடுறேன்." என்றவன், ஓர் சத்தமில்லா பெருமூச்சுடன் அழைப்பை வைத்தான்.

சரியாக ஒரு மணி நேரத்தில் நவநீதனின் அபார்ட்மென்ட் வளாகத்தின் முன் நின்றவர்கள், நவநீதன் கூறியது போலவே அக்செஸ் ஃபோனில் வீட்டு எண்ணை அழுத்திவிட்டுக் காத்திருக்க, "ஹாய் நிஷாந்த்! இதோ கதவு ஓபன் பண்றேன். லிப்ட்ல பத்தாவது மாடிக்கு வந்தீங்கன்னா...லிப்ட்ல இருந்து ரைட் சைடுல ஆறாவது வீடு. நம்பர் - 1006. நீங்க வந்துடுவீங்களா? இல்லை நான் கீழே வரட்டுமா?" என்றான் பெரிய வாக்கியமாய்.

"நானே வந்துடுறேன். தேங்க்ஸ்!" என்ற நிஷாந்துடன் சேர்ந்து, நிகேதனும் ஷைலஜாவும் நவநீதனின் வீட்டின் முன்னே நின்ற சமயம், கதவு திறந்தது. நிஷாந்த் ஏறிவர எடுத்துக்கொள்ளும் நேரத்தை உத்தேசித்து, கதவைத் திறந்த நவநீதன் அங்கே தன்

உடன்பிறந்தோர் இருவரும் உடனிருப்பதைக் கண்டதும் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளானான்.

"அக்கா...நிக்கி...நீ...நீங்க ரெ...ரெண்டு பேரும்...." எனத் திக்கித் திணறியவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்ற ஷைலஜா, பேசிக்கொண்டிருந்த தம்பியிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் "செல்வி...செல்விம்மா" எனக் கூப்பிட்டாள் தவிப்புடன்.

அவளது தவிப்பு கேட்டிருந்தவளுக்கு அமுதமாய் விளைய, "ஷைலுக்கா!" என்ற கூவலுடன் தன் அறையிலிருந்து ஓடிவந்த செல்வியைக் கண்ட ஷைலஜாவிற்கு, தம்பி மேல் தான் தப்பு என்பதை உறுதி செய்வதற்கு அரை வினாடி நேரம் கூட பிடிக்கவில்லை. செல்விக்கு முன்னரே ஒல்லியான உடல் வாகு தான் என்றாலும், இப்போது உடம்பில் வெறும் எழும்பும்; போர்த்தினார் போல் மெல்லிய தோலும் மட்டுமே இருந்தது. தாமரையாய் மலர்ந்திருக்கும் அவள் மேனி ரத்தப்பசையே இல்லாமல் வெளித்திருந்தது.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைக்கிறார் போல் அவளது கன்னத்தில் தெரிந்த நவநீதனின் கைவிரல் பதிவுகளும், பயத்தை மட்டுமே பிரதானமாய் தேக்கி வைத்திருந்த கண்களும் - ஷைலஜாவிற்கும், நிகேதனிற்கும் தங்கள் சகோதரனின் உண்மை முகத்தைப் படம் பிடித்துக் காட்டின.

"ஹே...எப்படி....இவளா? இவ தான் உங்களுக்கு விஷயம் சொன்னாளா? ஹோ மை காட்...சண்டே அன்னைக்கு சிங்கப்பூருக்கு ஃபோன் பண்ணது நீ தானா? ஷிட்! இத்தனை தடவை கேட்டேன்...வாயைத் திறந்து சொல்லாம எல்லாரையும் சிரமப்பட வச்சுட்டியே...இடியட்!" என்ற நவநீதனின் கர்ஜனையில் செல்வியின் இடது கை அவளது வலது கன்னத்தைத் தாங்கிப் பிடிக்க, வலது கை ஷைலுவின் இடுப்பை இறுக்கப்பிடித்துக்கொண்டது!

"இவ சொல்றதை நம்பி சிங்கப்பூர்ல இருந்து இவ்வளவு தூரம் வந்தீங்களா? தனக்கு நல்லது பண்றதை புரிஞ்சுக்கத் தெரியாத இடியட்!" என செல்வி மேல் அவன் குற்றம் சொல்ல,

கணவன் மீது பார்வையை வைத்துக் கொண்டே "அக்கா...ப்ளீஸ்...என்னை இங்கிருந்து...ஊர்ல அப்பாகிட்ட விட்டுடுங்க அக்கா! ப்ளீஸ் தயவு செஞ்சு கெஞ்சிக்கேட்டுக்கிறேன் அக்கா! ஷைலுக்கா என்னை இங்கேயே விட்டுட்டுப்

போய்டாதீங்க...ப்ளீஸ் உங்க காலில வேணும்னாலும் விழறேன்" என்ற செல்வி, ஷைலஜாவின் பாதங்களைப் பிடிக்கப் போக

"ஹய்யோ என்ன செல்விம்மா? எழுந்திருடா! உன்னை இப்படி ஒரு நிலைமையில பார்த்தப்பிறகு விட்டுட்டு போவோமா?" என்ற ஷைலஜாவை செல்வியின் நன்றி உலுக்க,

"என்ன பெரிய நிலைமை? அவ இங்க எப்படி இருக்கான்னு உனக்குத் தெரியுமா? சும்மா ஏதாவது பேத்தாதே ஷைலு. இவளை ஊருக்குக் கூட்டிட்டுப் போனா அம்மா எத்தனை வருத்தப்படுவாங்க" என நவநீதனின் வார்த்தைகளோ மிக பயங்கரமாய் வந்து விழுந்தன.

இத்தனை நேரம் செல்வியின் நிலைமையில் உறைந்து, தமையனின் பேச்சில் அதிர்ந்து நின்றிருந்த நிகேதன் முதல் முறையாய் வாய் திறந்து பேசினான், இல்லை எச்சரித்தான் - "அம்மா வருத்தப்படுவதை பத்தி பேச உனக்கு எந்த மண்ணாங்கட்டி உரிமையும் கிடையாது! கட்டின பொண்டாட்டியை வருத்தப்பட வைக்கிற நீ... அம்மாவோட வருத்தத்தைப் பத்தி பேசாதே!"

"பெரிய இவன் மாதிரி பேசாதேடா. என்ன தெரியும்னு இந்த கத்து கத்துறே? ஜஸ்ட் ஷட் அப் நிக்கி!" என்ற நவநீதனுக்கு நிகேதன் கூறிய பதில்கள் பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணின.

"என்ன தெரியாதுன்னு கேளு... நீ இங்க உனக்கு வேற ஒரு குடும்பம்...சை குடும்பம்னு கூட சொல்லக்கூடாது...ஒரு தொடர்பு... அதுவும் மகா மகா உத்தமமான தொடர்பு...ஒரு பையனோட இருக்கிறது தெரியும். அதை எங்க எல்லார்கிட்டயும் மறைச்சு...செல்வியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தது தெரியும்...அதோட நிறுத்தமா அவளை வீட்டில அடைச்சு வச்சது தெரியும்...எல்லாத்துக்கும் மேலா அவளை அடிச்சு கொடுமை பண்றது தெரியும். இதுக்கு மேல வேற என்னடா தெரியணும்?" என்ற நிகேதனின் கை முஷ்டிகள் இறுகிப் போயிருந்தன.

"அவ சொல்றதை மட்டும் வச்சு கண்டபடி உளறாதே! என்ன நடந்ததுன்னு நான் சொல்றேன்" என்ற நவநீதனின் வாக்கியம் முடிவதற்குள் "அங்கே என்ன சத்தம், நவீ?" என்ற கேள்வியுடன் ஜாக்சன் வந்து சேர, நவநீதனின் முகம் செங்குரங்காய் சிவந்தது.

"என்ன நடந்தது என்று நான் சொல்கிறேன்" என நவநீதன் சொன்ன வினாடி, நடந்ததை அவன் திரித்துக் கூறி, வந்தவர்கள் தன்னை நம்பாமல் இங்கேயே விட்டுச் சென்று விடுவார்களோ என்ற பயம் அப்பட்டமாய் பிடித்துக் கொள்ள "அக்கா, அவர் சொல்றதை நம்பாதீங்கக்கா. என்னை...என்னை...சும்மா பேருக்காக கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வந்திருக்கார்! உங்க வீட்டில அவரோட பேர் குறைஞ்சிடக் கூடாதுன்னு...டெஸ்ட் டியூப் பேபி அளவுக்குப் போய்ட்டார் அக்கா! உங்ககிட்ட இந்த விஷயத்தை சொல்லக்கூடாதுன்னு என்னை அடிக்கிறார் அக்கா...பாதி நாள் என்னை தனியா விட்டுட்டு போய்டுறார்...இப்போ...இப்போ இந்த பையனை..இங்கேயே...சை... இன்னும் கொஞ்சநாள் இங்க இருந்தா எனக்கு பைத்தியம் பிடிச்சிடும்...இல்லைன்னா இவர் என்னை அடிச்சே கொன்னுடுவார்...என்னை எங்க வீட்டில விட்டுடுங்க...ப்ளீஸ் என்னை இங்க விட்டுட்டு போய்டாதீங்க" எனக் கதறி துடித்த செல்வியைக் கல் கண்டிருந்தால் கூட கரைந்து கண்ணீர் வடித்திருக்கும் எனும் போது நெஞ்சம் முழுதும் அன்பை மட்டுமே நிரப்பி வைத்திருந்த ஷைலஜாவின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தோடியது.

"ஷைலு...அவ சொல்றது..." எனத் தொடங்கிய நவநீதனை கை மறித்து "இந்த பையன் யாரு?" என்ற கேள்வியைக் கேட்டாள் ஷைலஜா.

"அது எதுக்கு இப்போ? அவ சொல்ற..."

"அவன் யாருடா?" என்ற ஷைலஜாவின் கைகள் அவனது காலரை பிடித்திருந்தன.

"என் ஃபிரண்ட். பேர் ஜாக்சன்"

"ஃபிரண்ட்ன்னா?"

"ஃபிரண்ட் தான்" என்ற போது நவநீதனின் குரல் சற்றே இறங்கிவிட்டது.

அவர்கள் பேசும் பாஷை புரியாவிட்டாலும், அதிலிருந்த சில ஆங்கிலச்சொற்களும், ஷைலஜாவின் பார்வையும் கையும் அவனைப் பற்றி பேசுவதை உணர்த்த "I am his homo partner. Just stop shouting like a devil" என இடைப்புகுந்தான்.

"ஜாக்!" என நவநீதன் கத்த, "mind your words!" என எச்சரிக்கை குரலில் கர்ஜித்தான் நிகேதன்.

தன்னை ஒருவன் திட்டியதைக் கூட மனதில் ஏற்று கொள்ளாத அளவிற்கு, அவனது வாக்கியத்தின் முதல் பாதி ஷைலஜாவை பாதித்திருந்தது.

"சை...சை...சை" என்பது தவிர அவளது உதடு வேறெதையும் உதிர்க்காமல் இருக்க, தமக்கையை அவன் திட்டியதில் முதலில் கோபம் கொண்ட நிகேதனுக்கும் அந்த அதிர்வை தாங்கிக் கொள்ளத் தான் முடியவில்லை.

அதன் பின்னர் நிகேதன் அந்த வீட்டினுள் இருந்தது ஒரே நிமிடம் தான். "போலாம் அக்கா. இதுக்கு மேல உனக்கு வேற ஏதாவது தெரியனுமா என்ன? செல்வியை கூட்டிட்டு கிளம்பு!" என்றவனிடம் மறுத்துப் பேசாமல் "வா செல்விம்மா போகலாம்! எங்க எல்லாரையும் மன்னிச்சிடு செல்வி...இவன் இப்படின்னு தெரியாம உன்னை இதில கொண்டு வந்து தள்ளிட்டோம்..." எனத் தழுதழுத்தாள் பெரியவள்.

"ரொம்ப நன்றிக்கா! என்னை இந்தியால விட்டுடுங்க. இனிமேல் வேற எதுக்காகவும் உங்களை தொந்தரவு செய்யமாட்டேன்! ரொம்ப நன்றி...தேங்க்ஸ்...கடவுளே! என்னை காப்பாத்தினதுக்கு நன்றி! கடவுளே மருக! ரொம்ப நன்றியப்பா சாமி..." என்ற செல்விக்குப் பெரும் விடுதலை உணர்வு தோன்றியது. இரண்டு நாட்களாக தன் தமக்கையும் தம்பியும் தன்னிடம் ஒழுங்காக பேசவில்லை என்பதில் கோபம் கொண்டு, அதற்கு காரணம் தேடியவனின் கண்களில் சர்வதேச அழைப்பு அட்டையின் அழைப்புகள் பட, அதிலிருந்த சிங்கப்பூர் அழைப்பு தான் அழைத்ததாய் இருக்கமுடியாதே என்ற ஐயம் தோன்ற, செல்வியைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு, அடிகள் மேல் அடிகள் வைத்து உண்மையை அறிய முற்பட்டவனுக்கு, "நான் உங்க ஃபோனை எடுக்கலை" என்ற ஒரே பதிலையே கொடுத்த செல்விக்கு, இப்போது கிடைத்திருக்கும் விடுதலை எவ்வளவு பெரிது? எத்தனை அரிது? என்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. நடப்பதை நம்பக்கூட முடியாமல் அவளுக்கு நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டன!!

"உன்னோட பொருள் ஏதாவது எடுக்கணுமா, செல்வி?" என்ற ஷைலஜாவிடம் "இல்லைக்கா...ஒண்ணுமில்ல...இங்கிருந்து போய்டலாம் அக்கா. சீக்கிரம் போய்டலாம்...அம்மா ஃபோட்டோ மட்டும் எடுத்திட்டு வந்திடவா....நீங்களும் கூடவே வரீங்களா?" என வேண்டியவளின் வார்த்தைகள் பயத்தில் முக்கியெடுக்கப்பட்டிருப்பது கேட்டிருந்த மூன்று நல்ல உள்ளங்களுக்குமே வலித்தது (நிஷாந்த் உட்பட)

"வாம்மா" என்ற ஷைலஜாவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, நடுங்கிய பாதங்களுடன் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்றவள், மின்னல் வேகத்தில் தன் தாயின் புகைப்படத்தை எடுத்துக் கொண்டு, வெளியே வந்துவிட்டாள்.

"செல்வியோட பாஸ்போர்ட் வேணும். எடுத்திட்டு வா" என நிகேதன் கட்டளையிட, "தர முடியாது! அவ ஏதோ உளறன்னா நீங்களும் பைத்தியம் மாதிரி....இப்ப அவளை நீங்க கூட்டிட்டுப் போனா...ஊர்ல நம்ம மானம்...மரியாதை..." என்று மிரட்டிப்பார்த்தான் நவநீதன்.

"அந்த அக்கறை எங்களுக்கு இருக்கவேண்டியதில்லை. உனக்கு இருந்திருக்கணும்" என நறுக்குத் தெரித்தார் போல் பதில் கொடுத்த இளையவன், "நேரத்தை வீணாக்காதே! பாஸ்போர்ட்டை எடு" என்றான் மீண்டும் கட்டளையாகவே.

"அவ என்னோட மனைவி. என்னை மீறி இங்கிருந்து யாரும் அவளைக் கூட்டிட்டுப் போக முடியாது!" என நவநீதன் தன் கணவன் பட்டத்தை நிலைநாட்ட,

"மனைவி? அந்த பேருக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு? என்னை வரம்பு மீறி பேச வைக்காதே! தயவு செஞ்சு பாஸ்போர்ட் எடுத்திட்டு வா" என்ற நிகேதனின் வர்தைகளிருந்த நடுக்கம், அவனது கோபத்தின் அளவைத் துல்லியமாய் காட்ட, நிஷாந்தின் கைகள் நண்பனின் தோளில் ஆதரவாய் விழுந்தன.

செல்வியின் அறையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த ஷைலஜாவின் காதுகளில் இந்த உரையாடல் துல்லியமாய் விழ, சற்றும் யோசிக்காமல் செல்வியின் கழுத்திலிருந்த பொன் மஞ்சள் தாலியை கழட்டியவள், தம்பியின் முகத்தில் வீசிவிட்டு "இதுக்கு என்ன மரியாதை கொடுக்கணும்ன்னு தெரியுமாடா உனக்கு? அதை கொடுக்கத் தெரியாதவன்...மனைவின்னு உரிமை கொண்டாட வந்துட்டான்! இதோ இங்க நிக்கிறானே அவனுக்குக் கட்டி அவனோட குடும்பம் நடத்து...சை...பொறுக்கி....பொறுக்கி...எனக்கு நினைக்கவே அருவெறுப்பா இருக்கே...என்னோட தம்பி நீ...சை கருமம்!" என்றாள் மிகுந்த வெறுப்புடன்.

அவளது செயல்கள் அங்கிருந்த அனைவரது (ஜாக்சன் தவிர்த்து) உள்ளங்களையும் உலுக்கியிருக்க, செல்விக்குப் பெரும் பாரம் இறங்கிய உணர்வு தான் தோன்றியது. நிகேதனின் "அக்கா, கொஞ்சம் அமைதியா இரு!" என்ற ஒற்றை சமாதானம் ஷைலஜாவை

©Bhuvana

இயல்பு நிலைக்கு எடுத்து வரவில்லை என்றாலும், தான் செய்த காரியத்தை எண்ணி கலங்கவைத்தது.

கோபத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செல்வியின் மாங்கல்யத்தை இறக்கியிருந்த ஷைலஜா, "செல்விம்மா, இவன் கட்டின இந்த தாலியும் வேண்டாம், இவனும் வேண்டாம்டா. நாம போய்டலாம்...என்ன? இவனோட உன் கல்யாணம் நடக்கிறதுக்கு காரணமான நானே...இந்த தாலியை எடுத்து வீசிட்டேன். கோபமா செல்வி?" என்றாள் கெஞ்சலாக.

"இல்லைக்கா!" என்ற செல்வியின் வார்த்தையில் தெளிவிருந்தது - அன்றைய தினத்தில் முதன் முறையாக!!

"பாஸ்போர்ட் எடுத்திட்டு வரியா? இல்லை 911 கால் பண்ணட்டுமா?" என்ற நிகேதனின் விரல்கள், நண்பனின் கைப்பேசியில் எண்களை அழுத்தத் தொடங்க, தன்னிடம் ஸ்பானிஷில் விவரம் சேகரித்துக் கொண்டிருந்த ஜாக்சன்னிடமிருந்து தம்பியிடம் கவனத்தைத் திருப்பிய நவநீதனின் கால்கள் தாமாய் தனது அறைக்குள் சென்று செல்வியின் பாஸ்போர்ட்டை எடுத்து வந்தன.

அவன் உள்ளே சென்றபோதே, வீட்டை விட்டு வெளியேறியிருந்த செல்வியின் கண்களில் கண்ணீர் நின்றிருப்பது நிகேதனுக்குப் பயத்தையும், வருத்தத்தையும் ஒருங்கே கொடுத்தன. பெண்கள் தங்களது உயிருக்கும் மேலாய் மதிக்கும் திருமாங்கல்யத்தை இழந்ததில், அவளது கண்களில் ஓர் வெறுமை குடி கொண்டு விட்டதோ? தமக்கை தப்பு செய்துவிட்டாளோ? நவநீதனிடம் பேசி விஷயத்தை சீர் செய்திருக்கவேண்டுமோ? என்ற கவலை அவனை ஆட்டிவைக்க, அதை அதிகரிப்பதை போல் காவல்துறைக்குச் செல்வோமே என நிகேதன் இரண்டு மூன்று முறை பேச்செடுக்க "ஹய்யோ போலீஸ் எல்லாம் வேண்டாம்! வேணாம்...நாம இந்தியா போய்டலாம்..." எனச் செல்வி பயந்து நடுங்கவேற செய்தாள்.

"என்னை அப்பாகிட்ட விட்டுடுங்க" என இடைவிடாமல் தொடர்ந்து கொண்டிருந்த செல்வியின் புலம்பலின் விளைவாக அடுத்த நாளே இந்தியா செல்வதற்கு விமானம் ஏறியவர்கள், செல்வியின் மேனி கதவு திறக்கும் / மூடும் ஒவ்வோர் ஒலிக்கும் அதிர்ந்து

©Bhuvana's

நடுங்குவதையும், அவளது கைகள் இமை பொழுதும் ஷைலுவின் கைகளை விடாமல் பற்றியிருந்ததையும், குளியலறைக்கு செல்லும் போது கூட ஷைலுவின் துணியை அவள் நாடியதையும் பார்த்தப்போது தனது கவலை அவசியமற்றது என்பதையும், தமக்கையின் செயல் சரியே என்பதையும் உணர்ந்தான் நிகேதன்.

அத்தியாயம் 11

விமானத்தில் தமக்கையை ஒட்டி அமர்ந்திருக்கும் சிறு பெண்ணைப் பார்க்க பார்க்க நிகேதனுக்கு உள்ளம் வலித்தது! கண்களில் எப்போதும் இருக்கும் பிரகாசம் சூன்யமாய் மாறியிருக்கும் கொடுமையை நிகழ்த்தியது தன் குடும்பத்தவன் என்பதே பெரும் குற்ற உணர்வை ஏற்படுத்த, தன் இயல்பிற்குப் புறம்பாய் தீவிரம் காட்டி அமர்ந்திருந்தான் அவன்.

தன் தமையனின் வீட்டிலிருந்து கிளம்பிய இந்த முப்பத்தியிரண்டு மணி நேரங்களில், செல்வி கூறிய விஷயங்களைப் பற்றி மட்டுமே அவனது எண்ணங்கள் சுற்றி வந்தன. நவநீதனின் வீட்டிலிருந்து வெளியே வந்ததும், "எங்கே தங்குவது?" என்ற கேள்வி எழ, தன் மனைவியின் தங்கை வீடு இங்கிருப்பதாகவும், அவர்களுக்கு ஆட்சேபனை இல்லையெனில் அங்கே தங்கிக்கொள்ளலாம் என்றும் கூறிய நிஷாந்திடம், செல்வியின் மனநிலைக்கு அவளால் புதிய மனிதர்களை எதிர்கொள்ள முடியாது என்பதை எடுத்துரைத்த நிகேதன், அருகிருக்கும் தங்கும் விடுதிகளில் இடம் பார்த்துக் கொள்ளலாம் என  முடித்துவிட்டான்.

வாடகைக்கு இரு அறைகள் எடுத்து, அதில் ஒன்றில் இரு பெண்களையும் இருக்க வைத்த நிகேதனுக்கு நவநீதனின் குணமாறுபடுகள் உண்டுபண்ணியிருந்த அதிர்ச்சியிலிருந்து வெளிவரவே வெகு நேரம் பிடித்தது! இப்படியொரு கலாசார சீர்கேட்டிற்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளும் அளவில் நவநீதனின் மனதை எது கவர்ந்தது? சரி கவர்ந்து தொலைத்துவிட்டது...அதை குடும்பத்தினரிடம் சொல்லத் தயங்கிக் கொண்டு ஒரு பெண்ணின் வாழ்வைத் தன் கையில் எடுத்து...அநியாயமாய் விளையாடி...இந்த பாவத்தை என்ன செய்து கழிக்கப் போகிறானோ? என அவனது எண்ணங்களை அண்ணனிடமிருந்து செல்வியின் மீது மாத்துவதற்காகவே, நள்ளிரவில் அவனது கதவுகளைத் தட்டினாள் ஷைலஜா.

©Bhuvaneswari

வெளியே தமக்கையை கண்டதும் "என்னக்கா? தூங்கலையா?" என்றவனை தள்ளிக்கொண்டு உள்ளே விரைந்தவள், "நிக்கி, என்னால முடியலைடா! செல்வி பேசுறதையெல்லாம் கேட்கும் போது...கடவுளே! அவங்க ஏழைங்க என்ற ஒரே காரணத்திற்காக என்ன ஒரு கொடுமை செய்துட்டான்..."

"அமெரிக்க வாழ்க்கையும், கை நிறைய பணமும், சமூகத்தில் ஒரு அந்தஸ்தும் போதுமாடா? இவனுக்கு இருக்கிற மாதிரி தானே அவளுக்கும் ஒரு மனசிருக்கும். ஜடம் மாதிரி வாழ அவ என்ன இவனுக்கு விளையாட்டு பொம்மையா?"

"இது எல்லாத்தையும் விட கொடுமை என்ன தெரியுமா? ஒரு நாள் கூட அவன் அவகூட வாழலடா - கல்யாணம் முடிஞ்சு அமெரிக்கா போவதற்கு முன்பு நம்மலோட இருக்கும் போது கூட! எல்லாம் அங்கே போயி பாத்துக்கலாம்ன்னு சொல்லி அவள ஏமாத்திருக்கான். அங்கும் அவளுக்கு தனிமை தான். நானும் அம்மாவும் குழந்தை பத்தி கேட்டதும், டெஸ்ட் டியூப் பேபி பெற்றுகலாம்ன்னு சொல்லியிருக்கான்டா! அப்போ தான் செல்விக்கே விஷயம் தெரியும் போல... அது வரைக்கும் அவளை ஒரு ஜடப்பொருள் மாதிரி நடத்தியிருக்கான். எந்தளவுக்கு யோசிச்சு, எல்லாரையும் நம்ப வச்சு... சை...எனக்கு இவனை தம்பின்னு சொல்லவே வெட்கமா இருக்கு!"

"டெஸ்ட் டியூப் பேபின்னு சொன்னதும் செல்விக்கு எப்படி இருந்திருக்கும்? அவ என்ன குழந்தை பெத்து போடற மெஷினா?"

"சை...சை...சை" அதற்கு மேல் பேசமுடியாமல் ஷைலஜாவின் குரல் நடுங்கி நின்று விட, தமக்கையின் கைகளை ஆதரவாய் பிடித்திருந்த நிகேதன் "இவனோட கலாச்சாரச் சீரழிவிற்கு விலை ஓர் ஏழைப் பெண்ணின் வாழ்க்கையா?" என்ற நிதர்சனத்தில் மேலும் அதிர்ந்தான்

இருவரும் தங்கள் எண்ணத்தினுள் மூழ்கியிருக்க, கதவு படபடவென அடிக்கும் ஓசை கேட்க, நிகேதன் வாசலருகே விரைந்தான்!

வெளியே விரவியிருந்த கடுங்குளிரினால் நடுங்கினாலோ அன்றி உள்ளே பரவியிருந்த பயத்தினால் நடுங்கினாலோ, கண்களில் அச்சத்துடன் நின்றிருந்த செல்வி "என்னை

விட்டுட்டு போயிட்டீங்களோன்னு நினைச்சேன். போக மாட்டீங்க தானே?" என்றாள் கைகளை ஏந்தினார் போல் வைத்து.

அவளது அக்கோலத்தைக் காணச் சகிக்காமல் "இல்லை, போகலை! அக்கா இங்க தான் இருக்கா...உள்ள வா" என்றதோடு, அவளை உள்ளே விட்டான்.

"தூங்கிட்டு இருந்தியேன்னு நான் இங்க வந்தேன் செல்விம்மா! தூங்கலையா நீ?" என்ற ஷைலஜாவிடம் கண்ணீரைத் துடைக்கும் மாறு சைகையில் கேட்டுக்கொண்டான் நிகேதன்.

"திடீர்னு முழிப்பு வந்திடுச்சு அக்கா!" நடுக்கத்தில் மூழ்கி இருந்தது அவள் குரல்

"நான் இல்லைன்னதும் பயந்துட்டியா? சாரி செல்வி! இன்னைக்காவது கொஞ்சம் நிம்மதியா தூங்குவேன்னு நினைச்சேன்...ஒரு வாரமா நாங்க வரப்போகும் விஷயம் அவனுக்குத் தெரிஞ்சுடுமோன்னு பயந்துகிட்டே இருந்திருப்பே இல்லையா ?" என வாஞ்சையாய் செல்வியின் தலையை ஷைலஜா வருடிக் கொடுக்க,

"ம்ம் ஆமா, எங்க வராமா போய்டுவீங்களோன்னு பயந்துட்டேன். இங்க அவருக்கு வேற நான் ஃபோன் பண்ணியிருப்பேனோன்னு சந்தேகம் வந்துச்சா.... எப்ப என்ன செய்வாரோன்னு ஒரே திகிலா இருந்தது! ரொம்ப நன்றிக்கா...நான் சொன்னதை நம்பி இவ்வளவு தூரம் கிளம்பி வந்ததற்கு ரொம்ப நன்றி" என அந்த நாளின் நூறாவது நன்றியை, முதல் நன்றியிலிருந்த அதே நன்றியுணர்வோடு கண்கலங்கியவாறு சொல்லி முடித்தாள் செல்வி.

"நீ ஃபோன் பண்ணினது அவனுக்கு எப்படி தெரிஞ்சது? எனக்குக் கூப்பிட்டதை ஃபோன்ல இருந்து அழிச்சிட சொன்னேனே?" என நிகேதன் தன் மௌனத்தைக் கலைக்க,

"அழிச்சுட்டேனே! ஆனா, அவருக்கு வேற எப்படியோ தெரிஞ்சுடுச்சு...கேள்வி மேல கேள்வி கேட்டு..." - அடித்தான் என்று சொல்லாமல் கன்னங்களைத் தாங்கிக் கொண்டாள் இளையவள்.

"ப்ச்!" என்ற விரக்தியுடன், "கால்லிங் கார்டு பில்லில் பார்த்திருப்பான்! இந்த கஷ்டத்திலும் எனக்கு ஒரே ஒரு சந்தோசம் தான்...செல்வி நமக்கு ஃபோன் பண்றதுக்கான வாய்ப்பை

கடவுள் ஏற்படுத்திக்கொடுத்தாரே! இல்லைனா இன்னும் எத்தனை நாள் இவ இந்த நரகத்தில இருந்திருக்கணுமோ!" என ஷைலஜா இடைப்புக

"சொல்லப்போனா செல்விக்கு கால்லிங் கார்டுல பின் நம்பர் போட்டு, சிங்கப்பூருக்குக் கால் பண்ணத் தெரிஞ்சதே எனக்கு இன்னும் ஆச்சிரியம் தான். எல்லா விதத்திலும், அவளை முடக்கி வச்சிருந்தவன்...ஃபோன் பண்ண மட்டும் எப்படி சொல்லிக்கொடுத்தானோ? அந்த நேரத்தில் மட்டும் மூளை மட்டுப்பட்டிடுச்சு போல!" என்றான் நிகேதன் விரக்தியாய்.

"பின் (pin) எல்லாம் போடவேண்டாமே...அப்பாக்கு ரெண்டு மூணு தடவை அதிலிருந்து பேசச் சொல்லிக் கொடுத்தார். அதனால தெரியும்!" என்ற செல்வியும், அதற்காக கடவுளுக்கு நன்றியே சொன்னாள்.

"ம்ம்" என அதை உள்வாங்கிய மற்ற இருவருக்கும், செல்வியிடம் வேறென்ன பேசுவது என்று தெரியவில்லை. எந்த விஷயத்தை எடுத்தாலும் சுற்றி சுற்றி நவநீதனின் குற்றத்திலேயே வந்து நின்று, அவளது அழுகையையும், தங்களின் குற்ற உணர்வையும் பெருக்கிக் கொண்டிருந்ததில் நாக்கு பேச மறுத்தது!

"சரிக்கா. நீங்க ரெண்டு பேரும் போய் படுங்க. ரொம்ப லேட் ஆகிடுச்சு" - நிலவிக் கொண்டிருந்த நிசப்தத்திற்கு முற்று புள்ளி வைத்தான், நிக்கி.

இரு பெண்களும் தங்கள் அறைக்குச் சென்றுவிட, நிகேதனின் கண்களில் துளி உறக்கம் கூட குடியேறவில்லை. செல்வியின் தந்தைக்கும், தன் பெற்றோருக்கும் இந்த விஷயத்தை எப்படி சொல்வது? என்பதிலும், செல்வியின் மனநிலை பற்றிய ஆராய்ச்சியிலுமே அந்த இரவு விடியா இரவாய் கடந்து சென்றது!

விடியாத அந்த இரவின் தொடக்கமாய் தொலையா ஒரு பகல் சென்று மறைய, அடுத்த விடியலுக்கு முன்னர் மூவரும் இந்தியா எனும் விடிவெள்ளி நோக்கிப் பயணப்பட்டிருந்தனர்.

விடியலை நோக்கிய அப்பயணத்திலும் கடந்து சென்ற இருட்டின் தாக்கத்தில் செல்வி அரண்டு விழித்திருக்க, அவளுடன் பயணம் மேற்கொண்ட இருவரும் அதை உள்ளம் பதற பார்த்திருக்கத் தான் வேண்டியிருந்தது.

கதவின் குமிழ் திறக்கப்பட்டாலோ, அல்லது கதவு வேகமாய் சாற்றப்பட்டாலோ அவளது உடம்பில் ஓர் அதிர்வு ஓடி மறைந்ததை காணும் போது, இத்தனை நாட்கள் அவளிருந்த தனிமை வாசம் அவளது புலன்களை எந்த அளவு பாதித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது!

மூவரும் ஒரே பிரச்சனையை தங்கள் பாணியில் அசைபோட்டு வருத்தத்தை கூட்டியும், குறைத்தும் கொள்ள முயன்றிருக்க, சென்னையும் இனிதே வந்து சேர்ந்தது! சென்னை விமான நிலையத்தை வந்தடைந்ததும், "செல்வி, இப்போ வீட்டுக்கு போகணுமா? மாமாவிற்கு இந்த விஷயம் ரொம்ப அதிர்ச்சியா இருக்குமில்லையா? யோசிச்சு பண்ணலாமே! சிங்கப்பூர் போய்டலாமா?" - இந்தக் கேள்வியை நிகேதன் கேட்டிருக்கக் கூடாது, கேட்டது மிக பெரிய தப்பு என்பது வரும் நாளில் உணரும் வகையில் அமைந்தது செல்வியின் பதில்.

அது வரை பேசா மடந்தையாய் இருந்தவளின் மனதிலும் தந்தையைப் பற்றிய கவலையே பிரதானமாய் இருக்க , அவனது அக்கேள்வியில் கொதித்து விட்டாள் "என் வாழ்க்கையை பத்தின முடிவுகளை என்னை எடுக்க விடுங்க! படிக்க வச்சீங்கன்னு என்னை உங்க அண்ணனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தீங்க. இப்போ என்னை அங்கிருந்து காப்பாத்திட்டு வந்தீங்கன்னு சிங்கப்பூர் வரச் சொல்றீங்களா? உங்க குடும்பத்து மேல நாங்க வச்சிருந்த மரியாதைக்குப் பலனா தான் என் வாழ்க்கையே போச்சே! இனியும் என்னை சுயமா இருக்க விடுங்களேன்! ப்ளீஸ்" என்றபோது கேட்டிருந்த இருவருக்குமே அதிலிருந்த உண்மை சுட்டது.

"சாரி செல்வி!" என்ற நிகேதன் தன் வார்த்தைகளைக் கட்டுப்படுத்த, ஷைலஜா தான் "எத்தனை நாளுக்குத் தான் மாமாகிட்ட இருந்து இதை மறைக்க முடியும், நிக்கி? ஊருக்கே போய்டலாம். அது தான் செல்விக்கும் நல்லது" என்று முடித்தாள்.

ஷைலஜாவின் பேச்சில் செல்விக்கு சற்றே குற்ற உணர்வு தோன்றியதோ என்னவோ "சாரிக்கா!" என்றாள் இறங்கிவிட்டக் குரலில்.

©Bhuvis

"மன்னிப்பு கேட்கிற அளவுக்கு நீ எந்த தப்பும் செய்யலைமா. எங்களைத் தான் மன்னிக்கணும்" என்ற ஷைலஜாவின் மன்னிப்பிற்கு அவளைப் போல் "நீங்க எந்த தப்பும் செய்யலைக்கா" என்ற பதிலை செல்வி உதிர்க்கவில்லை என்பதை ஷைலஜா கவனித்தாளோ இல்லையோ நிகேதன் கவனிக்கத் தவறவில்லை.

மனதில் திக் திக்-குடன் செம்பட்டியை அவர்கள் அடைந்தபோது, செல்வியின் தந்தை வீட்டிலிருக்கவில்லை - கல்லுடைக்கும் வேலைக்குச் சென்றிருந்தார்.

"நான் போய் அவரைக் கூட்டிட்டு வரேன்" எனச் சென்ற நிகேதன், செல்லியப்பனைப் பார்த்த வினாடியில் அவனது நிலைமையைக் கண்டு அவனுக்கே பயமாய், பரிதாபமாய் இருந்தது!

கல்லுடைக்கும் குவாரியின் நிர்வாக அலுவலகத்தில் சொல்லி, ஆள் விட்டு அவரை அழைத்து வரச் செய்தவனைக் கண்ட செல்லியப்பன் "யாரு? நிகேதன் தம்பியா? என்ன தம்பி இவ்வளவு தூரம்? போன வாரம் தானே ஷைலு பாப்பா வீட்டுக்குக் கிளம்பிப் போனீங்க? அப்பா-அம்மா நல்லா இருக்காங்க தானே? ஒன்னும் பிரச்சனை இல்லையே?" எனத் தன் படப்படப்பை அவர் கேள்விகளாய் வடிக்க, அவரது பெண்ணைப் பற்றி சற்றும் யோசிக்காமல் தனது பெற்றோரை பற்றி நலம் விசாரிக்கும் இந்த நல்ல உள்ளத்திற்கு என்ன பதில் சொல்வது என்று திணறிப்போனான் இளையவன்.

"அப்பா-அம்மா எல்லாரும் நல்லா இருக்காங்க மாமா. செல்வி..."என அவன் இழுக்க,

"பாப்பா வந்திருக்குதா? போன வாட்டி என் கூட பேசினபோது வரதா சொல்லலையே? குரல் ஒரு மாதிரி கரகரன்னு இருக்குதேன்னு கேட்டதற்கு – 'உன்னைப் பார்க்கணும் போலிருக்குப்பா'ன்னு சொல்லிச்சு. வந்திருக்கா என்ன?" என ஆவலே உருவாய் அவர் வினவ,

"ஆமா"என்றான் நிகேதன் மெல்ல.

"வந்திருக்குதா? நிசமாலுமா? மாப்பிள்ளையும் வந்திருக்காரா தம்பி? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா வீட்டிலேயே இருந்திருப்பேனே! என்னைப் பார்க்கனும்ன்னு ஆசைப்பட்டுச்சுன்னு இம்புட்டு தொலவுக்கு கூட்டியாந்தாரா?" என்றவரின்

வார்த்தைகளிலிருந்த பெருமிதத்திற்கு தன் தமையன் தகுதியானவன் அல்ல என்பதை சொல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் மௌனம் காத்த நிகேதன், ஆழமாய் ஓர் மூச்சை எடுத்துவிட்டுக் கொண்டு ஆரம்பித்தான்.

"இல்ல, நவநீதன் வரலை! செல்வியை மட்டும் தான் கூட்டிட்டு வந்திருக்கோம்"

"மாப்பிள்ளை வரலையா?" என்று லேசாய் வியந்த செல்லியப்பன், மாப்பிள்ளையை விட்டு மகளிடம் தாவினார்.

"கூட்டிட்டு வந்திருக்கீங்களா? பாப்பாக்கு மேலுக்கு ஏதுமா? பாப்பா...நல்லா...நல்லா தானே இருக்கா..." என அவர் திக்க

"செல்வியோட உடம்பிற்கு ஒண்ணுமில்லை" என வார்த்தைகளைக் கவனமாய் கோர்த்தான் நிகேதன்.

"பிறவு என்ன? புள்ள ஏன் தனியா வந்திருக்கு? என்ன தம்பி...விஷயத்தை உடைச்சு சொல்லுங்க? எம் புள்ளக்கு ஒன்னுமில்லையே? ஒரு வேளை...ஒரு வேளை...மாப்பிள்ளைக்கு ஏதுமா? என்ன தம்பி? உங்க முகமே சரியில்லைங்களே?" என அவன் முகத்தில் இருந்த கவலை கண்டு, அவர் கண்டதையும் யோசித்து பதற,

"அவனுக்கு ஒண்ணுமில்ல. கல்லு குண்டா தான் இருக்கான்" என்றான் நிகேதன் எரிச்சலாய்.

"தம்பி!" என அவர் வியக்க, "மாமா, இப்போ நான் சொல்லப்போற விஷயம் உங்களுக்கு ரொம்பவே அதிர்ச்சியா இருக்கும்! ஆனா, செல்வி உங்களை...உங்களை மட்டுமே நம்பி இருக்கிறதால நீங்க கொஞ்சம் தைரியமா இருந்து அவளைத் தேத்துங்க" என்றவன், "கடந்த ஆறு மாசமா செல்வி வாழ்க்கையில நடந்தது எதுவும் நடக்கவே இல்லைன்னு நினைச்சுக்கோங்க, மாமா! அவளோட கல்யாணம் உட்பட. ஏன்னா அது ஒரு தகுதி இல்லாதவனோட நடந்த கல்யாணம்!" எனத் தொடங்கி, நவநீதனின் திட்டத்தில் ஆரம்பித்து செல்வியின் தனிமைச் சிறைவரை இரண்டே நிமிடத்தில் சொல்லி முடித்தான்.

கை முஷ்டிகள் இறுக, முகத்தில் கடுமை பரவியிருக்க, கண்களில் பெரும் வலியுடன் அந்தப் பாசமிகுந்த வெள்ளந்தி மனிதரிடம் - அவரது மகள் அறையுயிராய் இருப்பதை சொல்லி முடித்தவன், செய்வதறியாது அவரை வெறித்திருந்தான்.

அவன் சொன்னதை ஜீரணிக்கும் சக்தி பெற்றிராத செல்லியப்பனோ "கடவுளே!" என்ற ஒற்றை சொல்லோடு உறைந்து நின்றார்.

சிலையாய் நின்ற அவரை நிகேதன் மெல்ல உலுக்கி "மாமா" என அழைக்க, அவனை உதறியவர் வீடு நோக்கி பதட்டமாக செல்ல ஆரம்பித்தார். "பாப்பா...தப்பு பண்ணிட்டேன்டா ராசாத்தி! பாப்பா! பாப்பா!" என்ற அரற்றலுடன் வீடு நோக்கி விரைந்தவரை நிகேதன் ஓட்டத்தில் தான் பிடிக்க முடிந்தது.

இருபது நிமிடங்கள் நடையிலிருந்த வீட்டை, ஐந்தே நிமிடத்தில் அவர் அடைந்திருக்க, அங்கே வீட்டுத் திண்ணையில் தலை சாய்த்திருந்த மகள் "அப்பா" என்ற கதறலுடன் அவரிடம் சரண் புகுந்தாள்.

இளைத்து, கருத்து, கண்களில் ஜீவனற்று முக்கியமாய் கன்னங்களில் தடையத்துடன் வந்து சேர்ந்த மகளைப் பார்க்க எந்த தந்தைக்குத் தான் வலிக்காது? அதிலும், சொந்தமென மகளை மட்டுமே கொண்டிருந்த அந்த வெள்ளை உள்ள மனிதருக்கு நெஞ்சில் ரத்தமே வடிந்தது!

"என் தாயீ...இப்படி நடக்கும்ன்னு நான் நினைக்கலையே!" என புலம்பியவர்

"நீ உண்டு உன் ஜோலி உண்டுன்னு இருந்தியே! நான் தான்...பெரிய இடம்...வாத்தியார் வீடு...நல்ல மனுசங்கன்னு கரையா கரையா கரைச்சு உன்னைக் கட்டிக் கொடுத்தேன்!" என தன் முகத்தில் அறைந்து கொண்டார்.

"நல்ல மனுசங்கன்னு நினைச்சதுக்கு இப்படி ஒரு பாடமா?" எனக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்த படி,

"எம் புள்ள உடம்பை எப்படி புண்ணாக்கி இருக்கானே? பாவி...படு பாவி...நல்லா இருப்பானா அவன்? வலிக்குதா ராசாத்தி..." அவள் கன்னங்களை தன் முரட்டு கைகளால்

அப்போதுதான் பிறந்த குழந்தையை தொடுவது போல் மென்மையாக தடவினார்.

"உன் ஆயி இருந்திருந்தா பார்த்து பதமா பண்ணியிருப்பாளோ...நான் தான் கோணங்கித்தனமா அவசரப்பட்டு உன்னை படு குழில தள்ளிட்டேனோ?" என்று அரற்றியபடி அவளை இறுக்கமாக அணைத்துக்கொண்டார்.

போற்றி வளர்த்த மகளைத் துற்றி அனுப்பிய கையவன் மேல் கட்டுக்கடங்காமல் கோபம் பொங்கி வழிந்தது! அவரது கோபத்தைத் எதிர்கொள்ள வேண்டிய அக்கையவன் அங்கில்லாமல் போகவே, அவனது குடும்பத்தாரின் மீது அதை காட்டிய தந்தை, கூட்டி வந்திருந்த இருவரையும் மகளைப் பார்க்க கூட விடவில்லை.

"உங்க மேல வச்ச நம்பிக்கைக்கு நாங்க பட்டதெல்லாம் போதும்! தயவு செஞ்சு திரும்ப வராதீங்க!" எனக் கையெடுத்து கும்பிட்டவர், துவண்டிருந்த மகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்று கதவை அடைத்துக்கொண்டார்.

அவர்களின் நிலைமையே மேல் என்பது போல், அடுத்த நாள் வந்திறங்கிய மங்கையர்க்கரசி - தர்மராஜன் தம்பதியருக்கு அவர் வீட்டின் கதவு திறக்கவே படவில்லை!

## அத்தியாயம் 11

செல்வி தாய் வீடு திரும்பியதில் பலருக்கு வருத்தம் என்றால் ஒருவருக்கு மட்டும் பெரும் கோபம்! ஒற்றை ஆளாய் தான் தீட்டிய திட்டக்கோட்டை சீட்டுக் கட்டு மாளிகையாய் உடைந்து உதிர்ந்ததில் நவநீதனுக்குப் பெரும் கோபம் உண்டானது!

தன்னை மீறி, தான் அளித்த பெருவாழ்வை மதிக்காமல், தன் பெருந்தன்மைக்கு மதிப்பு கொடுக்காமல், அதற்கும் மேலாய் தான் கட்டிய தாலிக்கு மரியாதை அளிக்காமல் செல்வி கிளம்பிச் சென்றதில் உண்டான கோபம் ஒரு புறமிருக்க, அதற்குத் துணை சென்ற தன் உடன்பிறந்த துரோகிகள் மேல் கட்டுக்கடங்கா கோபம் உண்டானது.

அவர்கள் தாய் நாடும் திரும்புவதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பல வழிகளில் அவர்களைத் தேடி தோற்றவன், வீணான தேடலில் நேரத்தை செலவழிப்பதை விட

இந்த பிரச்சனையிலிருந்து இனியும் தன்னை எப்படி காப்பாற்றிக்கொள்வது எனத் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்து முடிவில் தாய்-தந்தையிடம் தானே பேசுவது என்ற முடிவிற்கு வந்து சேர்ந்தான்.

உடன் பிறந்தோர் மூலமாக தாய்-தந்தையிடம் இந்த விஷயம் போவதை விட, செல்வி ஊருக்குச் சென்றிருக்கும் விஷயத்தை 'தனது' வாய்மொழியாய் சொல்லிவிடலாம் என்றெண்ணியவன் தமக்கையின் வீட்டு எண்ணிற்கு அழைப்பு விடுத்தான். அவனது கணக்குப் படி தாய்-தந்தையின் காதுகளுக்கு விஷயம் போகவில்லை; ஏனென்றால் விஷயம் அவர்களை எட்டிய வினாடி மகனிற்கு அழைப்பு விடுத்து "என்ன, ஏது" என்று விசாரித்திருப்பார்களே என்ற நினைப்பு அவனுக்கு!

சில தினங்களாய் அவனது கணக்குகளின் மேல் பெரிதாய் பெருக்கல் குறி விழுவதை போல், தற்போதைய அவனது கணக்கும் பொய்த்துப் போனது அந்தோ பரிதாபம் தான்! அவனது கணக்கைத் தகர்த்தெறிவது போல், மங்கையின் காதிற்கு விஷயம் போகாமல் இருக்கவில்லை. அதாவது, மகனின் சுயநல ரூபம் பெற்றோருக்கு எடுத்துக்காட்டப் பட்டிருந்தது - அதுவும் அவரது மருமகன் வாய்மொழியாக!
நவநீதனின் குரலைத் தொலைப்பேசியில் கேட்ட ஷ்யாம், தொலைப்பேசியின் வாய் பகுதியை மூடிக் கொண்டு "மாமா, நவநீத் பேசுறான். நீங்க பேசுறீங்களா?" என்றான் மென்குரலில்.

ஒரு மணி நேரத்திற்கு முன்னர் சிங்கப்பூர் வந்திறங்கிய அவர்களது மருமகன், மகனைப் பற்றிய செய்திகளை உணர்ச்சிகள் ஏதுமற்ற முகத்துடன் சொல்லி முடித்திருக்க - மங்கைக்கும் தர்மராஜனுக்கும் அதிர்ச்சியிலிருந்து மீளும் வகை தெரியவில்லை. இப்போது அவனே அழைத்திருக்கிறான் என்றபோதும் "என்ன விஷயம் நவீ? மாப்பிள்ளை என்னவோ சொல்கிறாரே?" என விசாரிக்கும் அளவிற்கு, அவர்களுக்கு மருமகன் மேல் அவநம்பிக்கை இருக்கவில்லை என்பதோடு ஐந்து நிமிடங்கள் முன்னர் பேசிய மகளின் "நவீயை என் தம்பின்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கும்மா. செல்லியப்பன் மாமா முகத்தில் அடித்த மாதிரி கதவை சாத்தும் போதெல்லாம், அவனை இழுத்து நாலு அறை விடனும் போலிருக்கு! எருமை மாடு!" என்ற வசவே மங்கையின் காதுகளில் எதிரொலித்துக்கொண்டிருந்தது!

பாலூட்டி வளர்த்த தாய் - மகனின் உடலில் ஓடும் பாலுடன் சேர்த்து, மனதில் கலந்திருக்கும் நஞ்சிற்கும் தானே காரணம் என ஸ்தம்பித்து அமர்ந்திருக்க, அறிவூட்டி வளர்த்த தந்தையோ - மகனின் சீரழிவிற்கு அவனுக்குத் தான் கொடுத்த சுதந்திரமே காரணம் என அதிர்ந்து போயிருந்தார்.

"நவநீதன் பேசுகிறான்" என்ற செய்தி மங்கையை சற்றும் அசைக்கமாலிருக்க, மருமகனின் கையிலிருந்து தொலைப்பேசியை வாங்கிய தர்மராஜன் "எங்களுக்கு ரொம்ப நல்ல பேர் வாங்கிக் கொடுத்துட்டே நவநீதா! அதுக்காக ஒரு பொண்ணை சீரழிச்சிருக்க வேண்டாம்!" என்றார் நடுங்கிய குரலில்.

"அப்பா, நான் எந்த தப்பும் செய்யலைப்பா. செல்விக்குத் தான் நல்லது கெட்டது புரியலைன்னா...நிக்கிக்கும் ஷைலுக்கும் கூட புரியலை. அவளுக்கு நல்ல புத்தி சொல்றதை விட்டுட்டு...சை...ஷைலு செல்வியோட தாலியை கழட்டி என் மூஞ்சில வீசுராப்பா..." எனத் தன் கோபத்தை வெளியிட்டான் மகன்.

"அவளா இருந்ததால தாலியை உன் மூஞ்சில வீசினதோட நிறுத்திட்டா...நானா இருந்தா செருப்பால அடிச்சிருப்பேன், ராஸ்கல்!" என தர்மராஜன் குரல் உயர்த்த,

"என்னப்பா? எல்லாரும் எனக்கு எதிராவே பேசுறீங்க? என் பக்கமிருக்க நியாயத்தையும் கேளுங்க" என மகனும் குரல் உயர்த்தினான்.

"சரி, உன் பக்கமிருக்க நியாயத்தை நான் கேட்கிறேன். அதுக்கு முன்னாடி எனக்கு ரெண்டு கேள்விக்குப் பதில் சொல்லு. ஆனா, இந்த ரெண்டு கேள்விக்கும் எனக்கு உண்மையான பதில் வேணும். உண்மையான பதில் தான் சொல்வேன்னு எனக்கு சத்யம் பண்ணு" என்றார் தர்மராஜன் ஓர் ஆசிரியரின் கண்டிப்புடன்.

அவரது குரல் ஏதோ செய்ய "ம்ம். உண்மையான பதில் சொல்றேன்" என்றான் நவநீதன் தானாய்.

"உனக்கு கல்யாணத்திற்கு முன்னாடியே வேறொரு பை..பையனோட தொடர்பிருந்ததா?" என அவர் முடிக்க

"அது...அது வந்து" எனத் தடுமாறினான் மகன்.

"ஆமாவா இல்லையா?"

"ஆமா"

"ஹோ, செல்வியை எதுக்கு அடிச்சே?" என்றார் அடுத்த கேள்வியாய்

"அது...நான் அடிக்கலை..." என்ற மகனை இடைவெட்டிய தந்தை "உண்மை பேசணும்ன்னு சொன்னேன் நவநீதா! நீ அடிச்சது அப்பட்டமான நிஜம். அதை மறைக்க முயற்சி செய்யாதே" என்றார் தந்தை.

"ம்ம், அது...உங்களுக்கு விஷயம் தெரியக் கூடாதுன்னு..." என இழுத்தான் மகன்.

"இப்போ விஷயம் தெரிஞ்சுடுச்சு. இனிமேல் எங்ககிட்ட பேசவோ, எங்களைப் பார்க்கவோ நீ வரத் தேவையில்லை" என்ற தர்மராஜன்,அவனது பதிலை எதிர்பாராதவர் போல் தொலைப்பேசியை அணைத்துவிட்டு, அருகிருந்த இருக்கையில் துவண்டு விழுந்தார்.

"மாமா! மாமா!" என ஷ்யாம் உலுக்க, "எந்த இடத்தில தப்பு செய்தேன்னு தெரியலையே மாப்பிள்ளை! இப்படி ஒருத்தனை மகனாய் பெத்து...செல்லியப்பன் முகத்தில எப்படி முழிப்பேன்?" எனத் தனது அமர்ந்த தோற்றத்திலிருந்து தளர்ந்து விழுந்து புலம்பியது - பல சிறார்களுக்கு வழிகாட்டியாய் இருந்த அச்சிகரம்!

உலக அனுபவமிக்க தர்மராஜனுக்கே மகனின் செயல்கள் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது என்றால், வீட்டையே உலகமாக்கி - கணவனை மூலவராக்கி - பிள்ளைகளை உற்சவ மூர்த்திகளாய் கொண்டாடிய மங்கையின் நிலையோ மிக மிக பரிதாபமாய் இருந்தது! வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூட பேசாமல், வெறித்த பார்வையுடன் மகனின் செயல்களை எண்ணி எண்ணி மறுகிக் கொண்டிருந்தவரை தேற்றும் வகை தெரியாமல் ஷ்யாம் தான் தவித்துப் போனான்.

தன் பெற்றோருக்கு இணையாய் அவன் மதிக்கும் மாமனார்-மாமியாரை தன் வாய்மொழியாகவே ஊமையாக்கியத்தில் நெஞ்சு வலித்தது ஷ்யாமிற்கு! இந்த வேதனைக்கு ஆதிமூலக் காரணமான மூத்த மைத்துனனிடம் கோபத்தைக் காட்ட முடியாத

நிலையில், தமையனின் தப்பை தாய்-தந்தையிடம் சொல்லும் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைத்த இளைய மைத்துனன் மேல் கோபம் வந்து,  இந்தியாவிலிருக்கும் அவனைத் தொலைப்பேசியில் பிடித்தான்!

"டேய் நிக்கி, அத்தையையும் மாமாவையும் பார்க்கவே சகிக்கலைடா. நீங்க ரெண்டு பேரும் அங்கிருந்துகிட்டு...என்னால அவங்களை இப்படி பார்க்கவே முடியல. ரொம்பவே நொந்து போய்ட்டாங்க...பேசாம இந்த விஷயத்தை அவங்ககிட்ட சொல்லாமலே இருந்திருக்கலாம்...சை" என ஒரே மூச்சில் புலம்பி முடித்தான் ஷ்யாம்.

"எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்...அத்தான்? என்னைக்கு என்றாலும் அவங்களுக்கு விஷயம் தெரியத்தானே வேணும். அதுக்கும் மேலா, நவநீதன் பண்ணி வச்சிருக்க காரியத்திற்கு...செல்வி வீட்டில மன்னிப்பு கேட்க வேண்டாமா? பொண்ணு கேட்கும் போது படியேறி வந்து பொண்ணு கேட்டவங்க...இப்போ பொண்ணை கொடுமை படுத்தி திருப்பி அனுப்பியிருக்கும் போது படியேறி மன்னிப்பு கேட்க வேண்டாமா?"

"ம்ம். கண்டிப்பா கேட்கத்தான் வேணும். ஆனா...பெரியவங்களை..." என ஷ்யாம் இழுக்க,

"வேதனை தான் அத்தான்! நான் இல்லைன்னு சொல்லலை...செல்வியப்பன் மாமா நிலைமையை யோசிச்சுப் பாருங்க... செல்வியும் அவரும் இவ்வளவு தூரம் கஷ்டப்படணும்ன்னு என்ன இருக்கு?" என்ற நிகேதன், "என்னையும் அக்காவையும் அவ கண்ணெடுத்து பார்க்கிறது கூட இல்லை அத்தான். இல்லைன்னா...நானே அவர் காலில் விழுந்து அப்பா-அம்மாக்காக மன்னிப்பு கேட்டிருப்பேன். ஆனா, நாங்க போனா காரித் துப்பாதது ஒன்னு தான் குறைச்சலா இருக்கு..." என்றான் வருத்தத்துடன்.

"நமக்கு என்னன்னு வந்துடலாம், அத்தான்! ஆனா, மனுஷத்தன்மை...குற்ற குறுகுறுப்புன்னு நிறைய இருக்கே! அதை ஒரு சதவீதம் கூட குறைச்சுக்காம எனக்கு இங்கிருந்து வரதில் இஷ்டமில்லை. அதோட சேர்த்து, நாம அப்பா-அம்மாகிட்ட விஷயத்தை சொல்லலைன்னா...நவநீதே ஃபோன் பண்ணி அதை திரிச்சு சொல்லவும் வாய்ப்பிருக்கு... எதுக்கு வீண் வாக்குவாதம்? குற்றம் நிரூபிப்பு எல்லாம் இல்லையா?" என நிகேதன் முடித்தப்போது

"ம்ம். நீ சொல்றது கரெக்ட் தான்! இன்னும் கொஞ்ச நேரத்தில மாமா ஒரு நிலைக்கு வந்திடுவாங்கன்னு தோணுது. அவங்க சரியானது அத்தைகிட்ட பக்குவமா எடுத்துச்

சொல்லி இந்தியா கூட்டிட்டு வந்துடுறேன்" என்ற ஷ்யாமிற்கு "நாங்க நவீயைப் பத்தி அம்மா-அப்பாகிட்ட சொல்றதைவிட, நீங்க சொன்னா கோபமில்லாம, பக்குவமா, வார்த்தைகள் கூட குறைய போய்டாம சொல்வீங்கன்னு தோணுது அத்தான். நவீ மேல எனக்கிருக்க கோபத்திற்கு வார்த்தைகள் மேல எனக்கு கட்டுப்பாடு இருக்கும்ன்னு தோணலை...அதான் உங்களைக் கேட்கிறேன். எனக்காக அவங்ககிட்ட பேசுறீங்களா, அத்தான்?" என்ற நிகேதனின் வேண்டுகோள் நினைவு வந்து, "இவனுக்கா வார்த்தைகளின் மீது கட்டுப்பாடில்லை? ஓரிரு வார்த்தைகள் அதிகமாய் பேசினாலும் சொல்ல வரும் விஷயத்தை எதிரே இருப்போர் மனம் புண்படாத வண்ணம் சொல்லிவிடும் இவனுக்கு நான் உதவி செய்யவேண்டுமா?" என அவனை அந்த நேரத்திலும் எண்ணவைத்தது.

மைத்துனனிற்குக் கொடுத்த வாக்கின்படி மங்கை - தர்மராஜன் தம்பதியர் மற்றும் தன் இரு பிள்ளைகளுடன் இந்திய விமானம் ஏறிய ஷ்யாம் - தன் பிள்ளைகளின் உணவைப் பார்த்த அதே கவனத்துடன் தன் மனைவியின் பெற்றோரையும் கவனித்துக்கொண்டான்!

தம் கணவர் மகனுடன் நடத்திய உரையாடலிலிருந்தே மகன் மீது தப்பிருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது! அவனது கலாச்சார சீரழிவு ஒரு புறம் நெஞ்சை அறுத்தாலும், ஒரு சிறு பெண்ணை கை நீட்டி அடித்திருக்கிறான் என்பது ஓர் பெண்ணின் தாயான அவரை மிகவும் கோபப்படுத்தியது!

எல்லாவற்றுக்கும் மேலாக, மகன் மீது அவருக்கு வெறுப்பை ஏற்படுத்திய செய்தி - ஷைலு செல்வியின் தாலியை கழட்டி வீசியபோது செல்வி அதை மனதார ஏற்றுகொண்டாள் என்பது தான். என்ன தான் படித்திருந்தாலும், செல்வியைப் போல் குடும்பத்தை மதித்து நடக்கும் ஓர் இந்தியப்பெண், தாலியை துச்சமாய் மதித்து அதை துறக்கிறாள் என்றால் கணவன் மீதும் திருமணத்தின் மீதும் அவளுக்கு எத்தனை வெறுப்பு உண்டாகியிருக்க வேண்டும் என மனம் கணக்கிட்டு கலங்கியது! அந்தத் திருமணத்தை நடத்தி வைத்த தன்னையே நொந்து கொண்டவரால், பேசவே முடியவில்லை.

மகனின் முறைகேடான வாழ்வு பற்றி அறிந்ததிலிருந்து, ஒரு தாயாய் உள்ளே உடைந்து போயிருந்தார் மங்கையர்க்கரசி. அவனது முறைகேடான வாழ்விற்கு தன் முறைகேடான வளர்ப்பே காரணமென அவர் தவித்திருக்க, அந்த தவிப்பைக் கூட்டும் வண்ணம்

தாமரையின் நினைவுகள் வேறு அவரை வதைத்துக் கொண்டிருந்தன. தன்னிடம் நல்ல பேர் வாங்கவேண்டும் என்பதற்காக மகன் ஓர் இளம் பெண்ணின் வாழ்வை சுக்கு நூறாய் நாறடிதிருக்கிறான் என்பது வேறு மனதை அறுக்க, தன் உற்ற துணையான கணவனின் தோள் மீது தலை சாய்த்து பயணம் செய்த மங்கை - அவர்களது சொந்த மண்ணை மிதித்து - செல்வியின் வீட்டை அடைந்ததும் மேலும் நொந்து போனார்.

செல்வியின் தாயார் இறந்தபோது, தாயின் சேலையைக் கூடாக்கி அதில் தன்னை அடைகாத்து கொண்டிருந்த சிட்டுக்குருவி, இப்போதும் தாயின் சேலையை விரித்து அதிலேயே படுத்திருந்தாள் - உணவு, உறக்கம் ஏதுமின்றி! அத்துடன் சேர்த்து, அந்த சிறு வீட்டை விட்டு செல்லியப்பன் இந்த பக்கம், அந்த பக்கம் நகர ஆரம்பித்தால் "அப்பா, என்னைத் தனியா விட்டுப் போகதேபா. என்கூடவே இரு" என அவரைத் தடுத்து நிறுத்தி, தன் வேதனையை அவருக்கும் இடம் மாற்றினாள்.

இப்படியாய் அவள் செல்லியப்பனை தடுத்து நிறுத்திய போது தான், மங்கையும் தர்மராஜனும் வந்து சேர்ந்தனர். மகளின் வேதனையைக் கண்டு உடைந்து போயிருந்த அந்த தந்தைக்கு அவர்களின் வருகை மேலும் கோபமூட்ட, திறந்து கொண்டிருந்த கதவை அறைந்து சாற்றிவிட்டு, மகளின் அருகே வந்தவர் அவளின் தலையை மெல்ல வருடிக் கொடுத்து "உன்னை விட்டுப் போகலைடா பாப்பா. இங்கனவே இருக்கேன். நீ அனத்தாம நிம்மதியா தூங்கு....எல்லாம் சரியாகிடும்" என்றார்.

"அப்பா, இந்த ஊர் வேணாம்பா. நாம வேற எங்கயாவது போய்டலாமா? ரொம்ப தூரமா போய்டலாம்பா" என மகள் அழ,

"அழாதேடா பாப்பா. ஊர் பயலுக பேசுறதை மனசில வச்சுக்காதேடா" என்றவரால் தன் அறிவுரையை தானே கடைபிடிக்க முடியவில்லை.

சுற்றியிருப்போரில் சில நல்ல உள்ளங்கள் செல்விக்காக உருகியபோதும், பலர் செல்வியின் இந்த நிலையை ஓர் சர்ச்சைக்குரிய விஷயமாக்கி செல்லியப்பன் மற்றும் செல்வியை வார்த்தைகளால் குதறி எடுத்தனர்.

"பெரிய பணக்கார இடம்ன்னு தலைகால் புரியாம ஆடினான்... இப்போ பொண்ணு வாழவெட்டியா வந்து நிக்கிறாளே? என்ன செய்வானாம்?"

"வாத்தியார் வீட்டுப் பிள்ளை எப்படி தப்பு செய்யும்? செல்லியப்பன் மக மேல தான் ஏதாவது தப்பிருக்கும்...பொட்டைப் புள்ளையை படிக்க வைக்கிறேன்னு என்ன ஆட்டம் போட்டான்...படிச்சா படிப்புக்கு புத்தியை காட்டிட்டா!"

"வாத்தியாரை நல்லா காக்கா பிடிச்சு பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுத்தான். இப்போ பொண்ணு வாழலைன்னு அழுது புலம்பி என்ன செய்றது" - இப்படிப்பட்ட வசவுகள் தான் செல்வியின் பேச்சிற்கு அடித்தளம் அமைத்தன.

"இல்லைப்பா. இந்த ஊர் வேண்டாம். நாம போய்டலாம்" என அவள் சொன்னதையே திருப்பிச் சொல்ல,

"எங்க ராசாத்தி போறது? இந்த பொழைப்பை விட்டா எனக்கு வேற தெரியாதே!" என மறுகினார் தந்தை.

"நீ வேலைக்குப் போக வேண்டாம்பா. நான் போறேன்..." என்ற மகளை ஆச்சிரியமாய் பார்த்தார். ஒரு அரை மணி நேரம் கூட தனித்திருக்க முடியாமல் தவிக்கும் நிலையில் எங்கிருந்து வேலைக்குச் செல்வது?

ஆனால், எண்ணியதை சொல்ல முடியாமல் "பார்க்கலாம் ராசாத்தி! ரெண்டு மூணு நாள் கழியட்டும்" என்றார் ஒத்திப்போடும் நோக்குடன்.

ஓர் விரும்பத்தகாத சூழ்நிலையிலிருந்து தப்பியிருந்த செல்விக்கு, அதை ஏற்படுத்திக் கொடுத்த நவநீதன் மேல் கடும் வெறுப்பும் கோபமும் நெஞ்சம் முழுதும் இருந்தபோதும், தன் வேதனை தந்தையையும் அதிகமாய் பாதிப்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. அவருக்காகவேனும் இதிலிருந்து மீண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தை மேலும் உறுதியாக்கவே ஊரிலிருக்கும் சில 'நல்லவர்கள்' பல விதமாய் பேசுகிறார்களோ என்று கூட தோன்றியது!

"இந்த ஊரை விட்டு வெகு தூரம் சென்றுவிடவேண்டும்" என்ற உறுதி மனதில் ஆழமாய் பதிந்திருந்தபோதும், தனிமை மேல் அவள் கொண்டிருந்த பயம் செல்லியப்பனைப் போல் அவளையும் பயமுறுத்தியது நிஜம்!!

பயமும், வெறுப்பும், வேதனையும், கோபமும் என எதிர்மறையான உணர்வுகளே

ஆட்கொண்டிருந்த நெஞ்சத்தில், "இதிலிருந்து மீள வேண்டும்" என்ற ஒரே நேர் நிலையான உணர்வு போட்டியிட, எதிர்மறை உணர்வுகளும் சளைக்காமல் போட்டியிட்டன.

நேர் நிலை உணர்வின் வலுவிழந்த நிலையை எண்ணி செல்வியின் மனமே பதைத்ததோ என்னவோ அவளே தன் உறுதியால் துணை நின்றாள்.

"இல்லபா. இங்கிருந்து போய்ட்டாலே எல்லாம் சரியாகிடும். என்னைப் படிக்க வச்சததற்காக நீயும் அம்மாவும் பேச்சு வாங்குறதை சகிக்க முடியலப்பா. போய்டலாம்பா" என்பதையே திருப்பித் திருப்பிச் சொல்லித் தன்னுடன் சேர்த்து, தந்தைக்கும் வலுவூட்ட முயன்றாள்.

'சரி பாப்பா! நீ என்ன சொல்றியோ அப்படியே செய்துக்கலாம். இனிமேல் உன் இஷ்டப்படி நடக்கட்டும் கண்ணு...ஒரு தடவை என் ஆசையை உன் மேல தினிச்சு உனக்கு உயிர் நோவைக் கொடுத்ததே போதும்!" என செல்லியப்பன் தழுதழுக்க

"நானும் சம்மதிச்சு தானேபா எல்லாமே நடந்தது! நமக்கு நம்ம வாழ்க்கையை வாழத் தெரியாதுன்னு நினைச்சு அவங்க நம்ம வாழ்க்கையை வாழ்ந்ததுக்கு நீயும் நானும் என்ன செய்ய முடியும். அழாதேபா!" எனத் தான் அழுவதை உணராமல், தந்தையின் கன்னங்களைத் துடைத்த மகளை வாரி எடுத்துக் கொண்ட தந்தை "அழலை பாப்பா! நீ இந்த வாதனையிலிருந்து வெளிய வந்தா...அதை விட எனக்கு வேறென்ன வேணும்?"

தந்தையின் விரல்கள் கண்ணீரைத் துடைத்ததுமே, மிகவும் கஷ்டப்பட்டு தன் கண்ணீரை கட்டுப்படுத்தினாள் மகள். மகளின் தெளிவில்லாத முகத்தில் தெளிவு கொஞ்சம் கொஞ்சமாய் என்றாலும் மெதுவாய் குடியேறுவதை சின்ன நிம்மதியுடன் பார்த்த தந்தை "நான் போய் சாப்பிடுறதுக்கு ஏதாவது வாங்கிட்டு வாரேன். நேத்திலிருந்து வயித்தைக் காயப்போட்டுட்டு இருக்கியே? எனக்கு மனசு நோவுது பாப்பா!" எனப் பெண்ணின் தலையை தன் மடியிலிருந்து கீழிறக்கி வைத்துவிட்டு, எழுந்தார்.

போன நிமிடம் வரை தந்தையைத் தேற்றிக் கொண்டிருந்த மகள், இந்த நிமிடம் அந்த உறுதியை எல்லாம் கைவிட்டு, அவரது வேஷ்டியை இறுகப்பிடித்துக் கொண்டு "சாப்பாடு வேணாம்பா. இங்கேயே இரு" என்றாள் சிறு பிள்ளை போல்.

"ராசாத்தி, ரெண்டே நிமிட்ல ஓடியாந்துறேன் கண்ணு. வெறும் வயித்தோட இருக்கியே!" என அவரும் உருக, பெண் தான் விடுவதாய் இல்லை.

முடிவில் தந்தை தான் இறங்கிவர வேண்டியதாய் போனது, "பக்கத்துக்கு வீட்டு பரமேஸ்வரிகிட்ட சொல்லி...இட்லி வாங்கியார சொல்றேன். வாசல இருந்தே சொல்லிட்டு ஓடியாந்துறேன். எங்கனயும் போவல...இந்த வாசலேயே சொல்லிடுதேன். சரியா பாப்பா? அப்பா எங்கயும் போவல." என அவளைக் கரையாய் கரைத்து வெளியே வந்தவரின் கண்களின் மங்கை மற்றும் தர்மராஜன் பட, எரிச்சல் பொங்கியது.

திறந்த கதவை வேகமாய் அடைத்த தந்தையை கேள்வியாய் நோக்கிய மகள் "யாருப்பா?" என வினவ, "யாருமில்லைடா பாப்பா. நீ படுத்துக்கோ!" என்ற தந்தை, வெளியே செல்லாமல் வீட்டினுள்ளே இருக்கவும் நவநீதன் வீட்டிலிருந்து யாரோ வந்திருக்கிறார்கள் என்பது செல்விக்கு விளங்கியது.

அவளுக்குமே அந்த குடும்பத்திலிருந்து யாரையும் பார்க்கவே இஷ்டமில்லை என்பதால் பேசாமல் படுத்திருந்தாள். அந்த நரகத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியவர்கள் தான் என்றாலும், அது நரகமாய் அமைய காரணமானவர்கள் என்ற காரணமே வெறுப்பை அதிகரிக்க போதுமானதாய் இருந்தது!

மௌனமாய் கழிந்த ஒரு மணி நேரத்தின் முடிவில், தர்மராஜன் குடும்பத்தின் மேல் செல்லியப்பனுக்கு இருந்த  தார்மீக வெறுப்பை அவரது செல்வமகளின் பசி வெல்ல, கதவைத் திறந்தார் அவர்.

இத்தனை நேரம் தான் கதவைத் திறக்காமல் இருந்ததால், தர்மராஜனும் மங்கையும் வந்த வழியே சென்றிருப்பர் என்ற அவரது கணக்கை மீறி, இருவரும் அங்கேயே நின்றிருந்தனர் - அவர்களுடன் நிகேதனும், ஷ்யாமும் இருந்தது மட்டும் தான் மாற்றம்!

இப்போதும் கதவை அடைக்க எண்ணியவரின் கண்களில் மகள் படுத்திருந்த வாக்கிலேயே சுருள்வது தெரிய, பாசம் நிறைந்த அத்தந்தையோ அச்செயல் பசியினால் என்றே எண்ணி, வெளியே நின்றவர்களின் மீது பார்வையை பதிக்காமல், பக்கத்துக்கு வீடு நோக்கியே வெளியே வந்தார்.

அவர் வீட்டிலிருந்து வெளிவந்ததே பெரிய விஷயம் என்றெண்ணிய தர்மராஜன், சுற்றியிருந்த யாரையும் மனதில் ஏற்காமல் சாஷ்டாங்கமாய் அவரது காலில் நீள விழுந்து "என்னை மன்னிச்சுடுங்க செல்லியப்பன்" என்றபோது சூழ இருந்த அனைவருமே அதிர்ந்து போயினர்.

மகளின் வாழ்வை சூறையாடிய குடும்பம் என்ற வெறுப்பு இருந்தபோதும் வயதில் பெரிய மனிதர் தன் காலில் விழுந்ததும், பதறிப் போனார் செல்லியப்பன். "கடவுளே ஈசா! என்ன இது?" என அவர் ஓரடி பின்னே நகர, "என் மகன் செய்து வச்சிருக்க காரியத்திற்கு உங்க காலடியிலேயே விழுந்து கிடந்தாலும் தீராது. எனக்கு வேற வழி தெரியல செல்லியப்பன்...மன்னிச்சுடுங்க" என்றார் தர்மராஜன் மீண்டும்.

"எழுந்திருங்க சாமி...எழுந்திருங்க" என்ற செல்லியப்பனைத் தொடர்ந்து, "அப்பா, ப்ளீஸ்!" என்ற சொல்லுடன், தந்தைக்குத் தோள் கொடுத்து தூக்கிவிட்டான் மைந்தன்.

"என்னை மன்னிச்சுடுங்க அண்ணா. இப்படி நடக்கும்ன்னு நான் கனவில கூட நினைக்கலை அண்ணா...தயவு செஞ்சு செல்வியை ஒரு தடவை பார்க்க விடுங்க!" எனத் தன் மௌனத்தைக் கலைத்த மங்கையிடம் மறுக்க முடியாமல் அவர் நிற்க, அவரது மௌனத்தை சம்மதமாய் எடுத்துக்கொண்டு உள்ளே சென்ற மங்கையை செல்வி தன்னை தொடக் கூட விடவில்லை.

"போய்டுங்க...போய்டுங்க...உங்க மகன் மேல இருக்க கோபத்தை உங்க மேல நான் கொட்டுறதுக்கு முன்னாடி போய்டுங்க...ப்ளீஸ்!"
"உங்ககிட்ட நல்ல பேர் வாங்குறதுக்காக என்னை அவர் கஷ்டப்படுத்தினார்...அது மாதிரி நானும் அவர் மேல இருக்க வெறுப்பை, கோபத்தை உங்க மேல வீசி அடிக்கிறதுக்கு முன்னாடி தயவு செஞ்சு போய்டுங்க..."

"உங்களுக்கு ஒரு தடவை சொன்னா புரியாதா? என்னைப் பேச வைக்காதீங்க...போங்க...போங்க...அப்பா இவங்களைப் போகச் சொல்லுப்பா" என முகத்தை மறைத்துக் கொண்டு, ஈன சுவரத்தில் அவரை விரட்டினாள்.

"தயவு செய்து போய்டுங்க தாயி!" எனக் கையெடுத்துக் கும்பிட்ட செல்லியப்பனை மீறி அங்கே நிற்கவும் முடியாமல், செல்வியை விட்டுச் செல்லவும் முடியாமல் தவித்திருந்த

மங்கையின் தோள் தொட்டுத் திருப்பிய ஷ்யாம், அவரை ஆதரவாய் அணைத்து வெளியே கூட்டிவந்தான்.

மைத்துனனின் கையில் அவரை ஒப்படைத்தவன், "அத்தை-மாமா வை கூட்டிட்டு நீ வீட்டுக்குப் போ, நிக்கி! நான் கொஞ்ச நேரத்தில வந்துடுறேன்!" என்றான். அவனிடம் தலையசைத்து விடைபெற்ற நிகேதன் "நான் சொன்னது நியாபகம் இருக்கட்டும், அத்தான்! பார்த்து பதமா பேசுங்க! எப்படியாவது சம்மதிக்க வச்சுடுங்க...ப்ளீஸ்" என்றதோடு நகர்ந்தான்.

மைத்துனனின் வேண்டுகோளிற்கு ஓர் தலையசைப்பை மட்டுமே பதிலாய் சொன்ன ஷ்யாம், செல்வியின் வீட்டிற்குள் நுழைய "என்ன தம்பி? உங்களுக்கு வேற தனியா சொல்லனுமா? எங்களைக் கொஞ்சம் தனியா விடுங்க தம்பி. போயிருங்க..." என்றார் செல்லியப்பன் கோபத்தைக் கட்டுப்படுத்தி.

அவரை நிதானமாய் ஓர் பார்வை பார்த்து "ஒரு அப்பாவா உங்க பொண்ணு மேல நீங்க வச்சிருக்க பாசத்தில, ஒரு பங்காவது இந்த அண்ணனுக்கு இருக்காதாப்பா?" என்ற அவனது கேள்வியில் செல்லியப்பன் சற்றே மலைத்துப் போனார்.

"அது...அது வந்து...இல்ல தம்பி...பாப்பா ரொம்பவே கலங்குது...அதேன்...எனக்கு அதை பார்க்கதுக்கே முடியலங்க தம்பி! மனசு வலிக்குதுங்க! வாத்தியார் வூட்டு ஆளுங்க யாரைப் பார்த்தாலும்.... " என அவர் திணற,

"என்னை அந்த வீட்டு மனுஷனா பார்க்காம உங்க வீட்டு பையனா பாருங்கப்பா! அஞ்சு நிமிஷம் செல்விகிட்ட பேசிட்டு போய்டுறேன்" என்றவனிடம் அதற்கு மேல் மறுக்க முடியாமல் வழிவிட்டார் பெரியவர்.

"செல்வி!" என அவன் மெல்ல அழைக்க, லேசாய் தலையை மட்டும் தூக்கிப் பார்த்தவள் "உங்களுக்கு இப்போ என்ன வேணும்?" என்றாள் சிறு எரிச்சலுடன்.

"ஒன்னும் வேண்டாம். கொஞ்ச நேரம் உன்கிட்ட பேசிட்டுப் போகலாம்ன்னு வந்தேன். இரு...இரு...நான் பேசப்போறேன் தான். ஆனா அதை நீ கேட்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லை சரியா?" நிதானமாய் தன் பேச்சைத் துவங்கினான்.

பதிலேதுமின்றி செல்வி வெறித்திருக்க, "முதல, நான் நவநீதன் வீட்டு மனுஷனா இங்க வரலை. உன்னோட அண்ணனா வந்திருக்கேன்" என்றான் அவன்.

"அவங்க வீட்டுக்கு நீங்க மாப்பிள்ளை ஆனதால தான் எனக்கு நீங்க 'அண்ணன்'. அதனால நீங்க அந்த வீட்டு மனுஷன் தான்" என்றவளின் மென் குரலில் பிடிவாதம் இருந்தது.

"உனக்கே உன்னோட எண்ணங்களில் முரண்பாடு தெரியலையா செல்வி? உன்னை அந்த நரகத்திலிருந்து மீட்கும் போது மட்டும் "ஷ்யாம் அண்ணா"வா நியாபகம் வந்த நான்...அங்கிருந்து வந்து அப்பாகிட்ட சேர்ந்ததும் அந்த வீட்டு மாப்பிள்ளை ஆகிட்டேனா?" என்ற அவனது நேர் கூர் கேள்வியில் செல்வி தடுமாறிப்போனாள்.

"அது...அது...ஆனா, நீங்க தான் வரலையே?" என அவள் ஏதோ காரணம் தேட,

"அப்போ உன்னை அங்கிருந்து மீட்ட நிக்கி, ஷைலு மேல உனக்கு கோபமில்லையா?" என்றான் ஷ்யாம் அடுத்த ஆயுதமாய்.

"கோபமில்லைன்னு நான் சொன்னேனா?" என அவள் சீற, "உன்னை அங்கிருந்து கூப்பிட வரததால தானே என் மேல கோபம்ன்னு சொன்னே...அப்போ மீட்ட அவங்க மேல கோபம் இருக்கக்கூடாது தானே?" என அவன் மடக்க,

"உங்க மேல கோபம்ன்னு நான் சொன்னேனா?" என இப்போது தன் பதிலிலேயே அவன் வலையில் விழுந்தாள் இளையவள்.

"அப்போ கோபமில்லை...ரொம்ப நன்றிமா!" என ஷ்யாம் வாக்கியத்தை முடிப்பதற்குள், "அதுக்காக நீங்க சொல்ற எதையும் என்னால கேட்க முடியாது. அவங்க வீட்டுல யார்கிட்டயும் என்னால பேச முடியாது. பேச முடியாது. பேச முடியாது" என இடைப்புகுந்தவளின் தார்மீக கோபம் ஷ்யாமிற்கு வேதனையைக் கொடுத்தபோதும்,

"என்னைத் தவிர வேற யாருக்காகவும் நான் இங்க பேச வரலை. ஒரு அண்ணனா உன்கிட்ட இருந்து ஒரு உதவி வேணும். அதை கேட்டு வாங்கத் தான் வந்திருக்கேன்! "

என்றான் சிறு கெஞ்சலுடன்.

"என்ன உதவி?" என அவள் சந்தேகமாய் பார்க்க

"சிங்கப்பூர்ல இருக்க என்னோட கம்பெனிக்கு கம்ப்யூட்டர் தெரிஞ்ச ஒரு நம்பகமான ஆள் வேண்டும். குழந்தைங்க பிறக்கிற வரைக்கும் ஷைலு செஞ்சிட்டு இருந்த வேலை தான்...குழைந்த பிறந்ததும் அதை வேற யார்கிட்டயும் கொடுக்க முடியாம இருந்தது. அதை நீ செஞ்சு தரமுடியுமா?" என்றான் நயமாக.

"இது என்ன புது வழி?" என்பது போல் செல்வி பார்க்க, "இந்த உதவியை நீ காலேஜ் முடிச்சதுமே நான் கேட்டேன் நியாபகம் இருக்கா? என்ன நான் கேட்டது உனக்கு வேலை கிடைச்சதுக்கு அப்புறம்...அதை காரணம் காட்டி நீ மறுத்ததும் விட்டுட்டேன்!" என்றான் அவசரமாய்.

அவன் சொன்னதில் உண்மை இருந்தபோதும், வேதனை படர்ந்த இந்த நேரத்தில் அவனது வேண்டுகோள் அபத்தமாய் பட்டது செல்விக்கு. "இப்பவா?" என அவள் தன் சந்தேகத்தைக் கேட்க,

"எத்தனை நாளுக்குத் தான் இதையே நினைச்சிட்டு மருகிட்டு இருப்பே? எந்த ஒரு வேதனை என்றாலும்...ஒரு முடிவிற்கு வரணும் செல்வி! அதையே நினைச்சு நினைச்சு இன்னும் நோவதை விட, எப்படி வெளிய வரலாம்? இதற்கு காரணமானவனை எப்படி பழி வாங்கலாம்?ன்னு நினைக்க வேண்டாமா? சும்மா வீட்டுக்குள்ளே இருந்தா இதெல்லாம் முடியுமா?" என்றவனின் பதிலிற்கு "ஆமா, இந்த ஊரை விட்டு எங்கயாவது தூரமா போய்டணும்" என்றாள் செல்வி தனக்குள்ளே பேசிக் கொள்பவள் போல்.

"சிங்கப்பூர் ரொம்ப தூரம் தான்...செல்வி! இங்கிருந்து வெளிய வா...எல்லாரும் வியக்கிற மாதிரி வாழ்ந்து காட்டு...உன்னை ஒரு விளையாட்டுப் பொருளாய் நினைச்ச நவநீதனை இப்படி ஒரு நல்ல பெண்ணை இழந்துட்டோமேன்னு ஃபீல் பண்ண வைக்கணும் இல்லையா?"

"அவருக்காக நான் வாழலை. எனக்காக நான் வாழ்றேன்" - அவனது கடைசி வாக்கியம் தனக்குப் பிடிக்கவில்லை என்பதை கோபத்துடன் வார்த்தைகளாய் வெளியிட்டாள்

செல்வி.

"சரி, அவனுக்காக வேண்டாம். உனக்காக, எனக்காக, முக்கியமா அப்பாக்காக! அவரால இந்த வேதனையை தாங்க முடியலை செல்விம்மா. நீ வீட்டுக்குள்ள முடங்க, முடங்க அவர் சோர்ந்து போய்டுறார். அவருக்கும், உனக்கும் ஒரு மாறுதலா இருக்கும். சிங்கப்பூர் போய்டலாம்" என்றவனை எதிர்த்துப் பேசாமல், செல்வி மௌனம் காத்ததே பெரிய வெற்றியை பட, இந்த வெற்றிக்கு வித்திட்ட மைத்துனன் மீது பெரும் மதிப்பு கூடியது! அத்தோடு நில்லாமல், எந்த இடத்தை தொட்டால் எந்த மனம் இளகும் என்ற சூட்சமம் தெரிந்த அவன், நரம்பியலுக்குப் பதிலாக மனோதத்துவம் படித்திருக்கலாம் என்றும் தோன்றியது!

ஏனென்றால், அண்ணன் என்ற முறையில் செல்வியை அணுகி, தாய் நாட்டிலிருந்து அவளை அசைத்துவிடும் யோசனையை கொடுத்த மகராசன், அதற்கு ஏற்ற வார்த்தைகளையும் தமக்கை கணவருக்கு எடுத்துக் கொடுத்தே அனுப்பி வைத்திருந்தான்! அந்த சோகச்சூழலிலும் "எனக்கும் கொஞ்சம் அறிவிருக்குடா. நீ டைரக்ட் பண்றே சரி...டயலாக் எழுதுற வேலையாவது நான் செய்றேன்டா. எனக்கும் என் தங்கச்சி மேல அக்கறை இருக்கு" எனக் கிண்டல் செய்த ஷ்யாமிடம் "உங்க டயலாக் திறனைத் தான் நாங்க எட்டு வருஷமா பார்க்கிறோமே? "சரி ஷைலு" என்ற டயலாக்கையே வேற வேற மாடுலேஷன்ல பேசுற ஆள் தானே நீங்க!" என்ற பிரதி கிண்டலிலேயே காரியம் சாதித்தான் அந்த மருத்துவன்.

அத்தியாயம் 13

செல்வி மேற்கொண்ட மௌனமே அவளது சம்மதத்தை எடுத்துரைக்க "எப்போ கிளம்பலாம் செல்விம்மா?" என்றான் தமையனான ஷ்யாம் சுந்தர்.

அவனது அந்த கேள்வியில் தனது சம்மதம் அவனுக்குத் தெரிந்து விட்டது புரிய "அப்பாகிட்ட பேசிட்டு சொல்றேன்" என்றாள் செல்வி மொட்டையாக.

"நீ இன்னும் என்னை அண்ணனா நினைக்கலை இல்லையா? இவ்வளவு நேரத்தில் ஒரு தரம் கூட "அண்ணா"ன்னு நீ கூப்பிடவே இல்லையே?!" என ஷ்யாம் லேசாய் வருத்தம் கொள்ள,

"உங்களை அண்ணன் ஸ்தானத்தில் வைத்திருப்பதால் தான் உங்களிடம் பேசவேணும் செய்கிறேன். வேறொரு ஆணாய் இருந்தால், வீட்டிற்குள்ளே அனுமதி கிடைத்திருக்காது!" என்பதை வெளியே சொல்லாமல், "அப்படியில்லை அண்ணா" என்ற போது, அதிலிருந்த "அண்ணா" மட்டும் சிறு தயக்கத்தோடு வெளி வந்தது.

"தேங்க்ஸ் செல்விம்மா! உன்னோட நிலைமை எனக்குப் புரியுது. இதிலிருந்து நீ வெளிவர என்னாலான உதவிகளை நான் கண்டிப்பா செய்வேன். நீ அப்பாகிட்ட பேசிட்டு சொல்லு...நான் நாளைக்கு வரேன்" என்ற ஷ்யாம், பெண்ணிற்கு உணவு வாங்கிக் கொண்டு வீடு திரும்பியிருந்த செல்லியப்பனிடம் "வரேன்ப்பா!" என்ற தலையசைப்புடன் விடைபெற்றான்

அவனுக்கு ஓர் தலையசைப்பை பதிலாய் கொடுத்த செல்லியப்பன், மகள் அருகே அமர்ந்து, வாங்கி வந்த உணவை எடுத்து அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தார். "நானே சாப்பிட்டுக்கிறேன்பா. நீயும் சாப்பிடு!" என்ற செல்வியால், உணவை சரிவர எடுக்கவே முடியவில்லை என்றபோது எடுத்த உணவில் பாதியளவு கூட அவளது வாய்க்குள் செல்லாமல் (செல்ல முடியாமல்) அவளது மென்கரங்கள் நடுங்கின.

"நா அள்ளித் தாரேன் பாப்பா" என்ற செல்லியப்பன், வடிய துடித்த கண்ணீரை உள்ளுக்கு இழுத்தப்படி பெண்ணிற்கு உணவூட்டினார்.

தான் உணவை எடுத்து உண்பதில் இருக்கும் கஷ்டத்தை விட, தான் படும் துன்பத்தைப் பார்த்து தந்தை கஷ்டப்படுவதை பொறுக்கமுடியாமல் அவரை நெருங்கி அமர்ந்த மகள், அவரின் தோளில் தலை சாய்த்து உணவை உட்கொள்ளத்தொடங்கினாள். இரண்டு கவளம் உணவு உள்ளே சென்றதும், "அப்பா, நாம இந்த ஊரை விட்டுப்போய்டலாம்பா. சிங்கப்பூர் போய்டலாமா?" என்றாள் செல்வி மெல்ல.

தந்தை பதிலேதும் பேசாமலிருக்க, "என்னப்பா ஒண்ணும்மே சொல்ல மாட்டேங்கிற? இங்க இருந்தா...இருந்தா...ஊர்ல எல்லாரும் நாக்குல பல்லு படாம ஏதாவது பேசுவாங்க...இல்லை பரிதபாப்படுவாங்க...இல்லை உன்னை குத்தம் சொல்லுவாங்க...இது எதுவுமே நமக்கு வேண்டாம்பா. போய்டலாம்" என்றாள் மகள் மீண்டும்.

"போலாம் பாப்பா" என்றவரின் குரல் மிக மிக மெதுவாய் வெளிவர, அவரின் முரட்டு கைகளோ மகளின் தலையை தந்தை தடவிக்கொடுத்தது. அவரது மௌனத்திற்கும் மென்குரலுக்கும் "அம்மா இருந்த இடத்தை விட்டு போகனும்ன்னே இருக்காப்பா?" என்றாள் மகள் தானாய் ஓர் காரணத்தை யூகித்து.

அவள் கூறும் காரணத்தால் தான் மௌனம் காக்கவில்லை என்று எடுத்துரைப்பதற்காக "இல்லை கண்ணு! எங்க இருந்தாலும் உன் ஆயி நம்மளோடதான் இருப்பா! இந்த வீட்டில தான் இருக்கொனும்ன்னு இல்லை. நீ நிம்மதியா இருந்தா போதும், எங்க வேணும்னாலும் போகலாம்" என்றார் தந்தை அவசரமாய்.

"உனக்கு இஷ்டமில்லைன்னா சொல்லுப்பா. நாம வேற எங்கனாலும் போலாம்..." என மகள் இறங்கிவர, "என் இஷ்டப்படி கண்டதையும் நடத்தி தான் உன்னை உருகுலைச்சு வச்சிருக்கேன். இனிமேல் நீ சொல்றதை நான் கேட்கிறேன் பாப்பா" என்ற தந்தை மேலும் உடைய

"ஷ் அப்பா. சும்மா சும்மா உன்னை நீயே என் குற்றவாளியாக்கிக்கிறே? அதை செய்ய தான் நிறைய பேர் இருக்காங்க இல்ல" எனக் கடிந்து கொண்ட மகள், நிமிர்ந்து அமர்ந்து "நாம சிங்கப்பூர் போகலாம். ஷ்யாம் அண்ணாகிட்ட சம்மதம் சொல்லிடுறேன். உனக்கு முதல பாஸ்போர்ட் எடுக்கணும்." என வேகமாய் திட்டமிட்ட மகளிடம்

"நான் இங்கனவே இருக்கட்டா பாப்பா?" என்றார் செல்லியப்பன் மெல்ல. அவருக்கு மகள் மீனும் உடைந்துபோனால் சரண் புக ஓர் இடம் வேண்டுமே என்ற எண்ணம். அதையே அவர் வெளியிட, "இனிமேல் உன்னையும் என்னையும் தவிர என் வாழ்க்கையில் யாருமே இல்லைப்பா. அதனால உடைந்து போறது, யாருக்கும் பயந்து ஓடி வரதுன்னு எதுவுமே...எதுவுமே இனி நடக்காது! நடக்கவிடமாட்டேன்!" என்ற செல்வியின் குரலில் ஆத்திரமும், உறுதியும் ஒரு சேர கலந்திருந்தது செல்லியப்பனின் மனதை குளிர்விப்பதற்கு பதிலாக, வருத்தப்படுத்தியது. பெற்றவர் அல்லவா? பெண்ணிற்கு ஏற்ற துணை அமையாமல் போனதிலே உடைந்திருந்தவர், இப்போது அதற்கு வாய்ப்பே இல்லை என்பது போல் மகள் பேசியதும் நொந்து போகத் தானே செய்வார். ஆனால், மகளிடம் மறுத்து வாதாடுவதோ அல்லது சமாதானப்படுத்தி வேறோர் வாழ்விற்குத் தயார் செய்வதோ இப்போதிருக்கும் சூழலில் நடக்கமுடியாத காரியம் என்பதால், "சரி பாப்பா.

நான் சியாம் தம்பிட்ட பேசுதேன்" என்றதோடு முடித்தார்.

அடுத்த நாள் வீட்டிற்கு வந்த ஷ்யாமிடம், சிங்கப்பூர் வருவதற்கு ஒப்புக்கொண்டவள் "அண்ணா, என் மேல பரிதாபப்பட்டு இந்த வேலையை எனக்குத் தரீங்களா? ஒரு வேலை இது எனக்காகவே சும்மா உருவாக்கின வேலையா? அப்படியேதும் செய்திருந்தா எனக்கு வேண்டாம். நானே பார்த்துக்கிறேன்" என மென்குரலில் என்றாலும் தெளிவாக சொன்ன செல்வியைப் பார்க்க பெருமையாய் இருந்தது ஷ்யாமிற்கு, அதே சமயம் சிறு வருத்தமும் நெஞ்சில் எழுந்தது நிஜம்.

"நான் சொன்னது எல்லாமே நிஜம். ஷைலு பார்த்திட்டு இருந்த வேலையை இப்போ இன்னொருத்தங்க பார்க்கிறாங்க தான். ஆனா, எனக்கு அதை ஒரு நம்பகமான ஆள்கிட்ட கொடுக்கணும்...அந்த நம்பகமான ஆள் நீயானதோ...அதை நான் கேட்ட சமயமோ தற்செயலா அமைந்தது தான். நீ கண்டதையும் மனசில போட்டு குழப்பிக்காதே! அப்பாவும் கூட வராங்க இல்லையா? அவங்களோட பாஸ்போர்ட், உங்க ரெண்டு பேரோட விசா எல்லாம் நான் பார்த்துக்கிறேன். சரியா?" என்றவனுக்கு ஓர் தலையசைப்புடன் கூடிய "நன்றி" பதிலாய் வந்துவிழுந்தது.

"செல்வி, இந்த வேலையை நான் உனக்காகவே உருவாக்கியிருக்கேன்னு வச்சுக்கோயேன்...ஒரு அண்ணனா நான் இதை செய்யக்கூடாதா?" எனத் தன் வருத்தத்தை அவன் கேள்வியாக்க

"ஒரு உதவிக்காக - அது பணமோ, பாசமோ, வேலையோ எதுக்காக என்றாலும் இனிமேல் யார்கிட்டயும் போய் நிற்கக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கேன். அதுக்கு பிரதியா ஓங்கி ஒரு அடி வாங்கியிருக்கேனே! அதுவே வாழ்க்கை முழுதுக்கும் போதும்!" என்ற செல்வியின் கண்களில் கண்ணீரின் சாரல் மெலிதாய் எட்டிப்பார்த்தது.

"சாரி செல்வி. நீயே அடக்க நினைக்கும் வேதனையை தூண்டிவிட்டதுக்கு மன்னிச்சுடு! நான் அப்பாவோட பாஸ்போர்ட்க்குத் தேவையான விபரமெல்லாம் அவர்கிட்ட வாங்கிக்கிறேன்" என ஷ்யாம் எழ, "தட்கல்-ல தானே பாஸ்போர்ட் அப்ளை செய்யணும் அண்ணா? அதுக்கு வேண்டிய பணம்...நா...நான் தரேன்" என அவள் முடிக்க, மறு வார்த்தை கூறாமல் "சரி" எனச் சென்றான் ஷ்யாம்.

செல்வியின் வீட்டிலிருந்து வெளியே வந்தவன், மாமனார் வீட்டில் நுழையும் போது மைத்துனன் காரன் விரைந்தோடி வந்தான்.

"செல்வி, என்ன சொன்னா அத்தான்? வரேன்னு சொல்லிட்டா தானே?" என அவனின் ஆர்வத்திற்கு ஓர் புன்னகையை உதிர்த்தவன், "சரின்னு சொல்லிட்டா. ஆனா, ரொம்பவே நொந்து போயிருக்கிறது வெளிப்படையா தெரியுது" என்றான் அந்தப் புன்னகையை வருத்தமாய் மாற்றி.

"நொந்து போகலைன்னா தான் ஆச்சரியப்படனும்! இந்த வருத்தம் அவளை சோர்ந்து போக வைக்காம, வெளிய வர வைக்கிறது நிம்மதியான விஷயம் தான்" என்றான் நிகேதன், புருவத்தில் லேசான முடிச்சுடன்.

"சோர்ந்து போகலை. நவநீத் பண்ணி வச்சிருக்க காரியத்தில ரொம்ப காயப்பட்டு யாரையும் நம்பவே கூடாது என்ற முடிவிற்கு வந்திருக்க மாதிரி தெரியுது. காலம் தான் அவளைத் தேற்றனும்" என்ற ஷ்யாமை அவனது செல்வா மகள்களின் சிணுங்கல் இழுத்துவிட, "காலம் ஆற்றுவுதா? காலம் மருந்தாகும் எனில் இந்த உலகில் மனிதர்கள் எதற்கு? சுற்றி நின்று காலம் மருந்தாவதை பார்த்து பார்த்து வியப்படைந்து பாராட்டுவதற்கு மட்டுமா?" என்றெண்ணினான் வயதில் இளையவன்.

செல்விக்கு ஓர் இட மாற்றம் தேவை என்பதை உணர்ந்த நிகேதன், அவள் மாறிவரும் இடம் அவர்கள் அருகிலிருக்குமெனில் அவளின் பாதுகாப்பை தங்களது பொறுப்பாக்கிக்கொள்ளலாம் என்பது அவனின் திட்டம். ஏனென்றால், நவநீதனால் செல்விக்கு மேலும் தொல்லைகள் ஏற்படுமோ என்ற பயமும், இந்த சின்ன வயதில் அவள் புண்பட்டு நிற்பதற்கு தங்கள் குடும்பமே காரணம் என்ற குற்ற உணர்வும் தான் அவனை ஷ்யாமிடம் பேசி, செல்வியை சிங்கப்பூருக்கு அழைத்துவர வைத்தது. இந்த இக்கட்டான சூழலில், நவநீதனின் ரத்த உறவுகளான தாங்கள் யாரும் அவளை நெருங்குவது கூட நினைத்துப்பார்க்க முடியாத காரியம் என்றபோது ஷ்யாம் செல்வியின் மேல் கொண்டிருந்த பாசத்தையும், அவளுக்கு ஓர் நல்லது செய்துவிட வேண்டும் என்ற அவனது தவிப்புடனான துடிப்பையும் தனக்கு சாதகமாய் பயன்படுத்திக்கொண்டு செல்விக்காய் காய் நகர்த்திக்கொண்டிருந்தான் அவன்.

சற்று நேரம் கழித்து ஷ்யாமிடம் பேசியதில், பயணத்திற்கான செலவுகளை செல்வி தானே செய்வதாக கூறியது தெரிய வந்தது! கூடவே ஷ்யாமின் வருத்தமும்! ஆனால், அதை கேட்டதில் நிகேதனின் முகத்தில் மலர்ச்சியே நிரம்பியிருக்க "நவநீதனின் சுயநலத்தால் செல்வியின் சுயகௌரவம் / சுயமரியாதை அழிக்கப்பட்டு விடக்கூடாதுன்னு பயந்துட்டு இருந்தேன். அதோட முதல்படியா மேடம் சிலிர்த்து எழும்புறாங்க போலவே! வெரி குட்!" என மனதிலும் சரி வாய்விட்டும் சரி மனதார மெச்சிக்கொண்டான் அவன்.

ஆனால், அவனது மலர்ச்சி வீட்டிலிருந்த யாரையும் தொற்றி கொள்ளாததோடு, மேலும் வேதனையே படவைத்தது. தாய் மடியில் ஆறுதல் தேடும் குழந்தை - என்ற நிலை மாறி, மகனின் தோளில் சாய்ந்துகொண்டு "எனக்கு மனசே ஆற மாட்டேங்குதே நிக்கி கண்ணா! எந்த இடத்தில தப்பு செய்தேன்னு தெரியலையே? ரொம்ப நாளா அவனை வீட்டிலிருந்து ஒதுக்கி வச்சதுதான் அவனை இப்படி தான்தோன்றியாய் நினைக்க வச்சுடுச்சா?

இயல்பான மனிதத்தன்மை கூட இல்லாம போய்டுச்சே... ஒரு சின்னப்பெண்ணை அடைச்சு வச்சு...அடிச்சு...எல்லாத்துக்கும் மேலா என்னிடம் நல்ல பேர் வாங்கன்னு எத்தனை பெரிய விஷயத்தை மறைச்சு...எங்க தப்பு செய்தேன்னு தெரியலையே? எனக்கு மனசெல்லாம் வலிக்குதே!" என மருகிய தாயை சமாதனம் செய்யும் வழி தெரியாமல், அவரைத் தோளோடு இறுக்கிக்கொண்டவன், மிளிர்ந்து கொண்டிருந்த நிலவில் பார்வையைப் பதித்து

"அம்மா, தப்பு செய்தவன் அதை தப்புன்னே உணராம இருக்கும்போது நீங்க ஏன் மா? நடந்து முடிஞ்சதை நினைச்சு நினைச்சு எத்தனை நாள் தான் உங்களையே வருத்திப்பீங்க?" என்றான் நிகேதன். ஆனால் அவனின் குரலோ "நவநீதனின் கலாச்சார சீர்கேட்டிற்கு தாம் காரணமில்லை என்றாலும், செல்வியின் வாழ்வை அவனது விளையாட்டு பொம்மையை ஆக்கியதில் தங்களுக்கும் பெரும்பங்கு இருக்கிறது" என்ற செய்தியால் சுருதி குறைந்தே ஒலித்தது.

மகனின் வாதத்தை ஒத்துக்கொள்ளாமல் "ஒரு குழந்தை நல்லவனாவதும், கெட்டவனாவதும் தாயின் வளர்ப்பில் இல்லையா கண்ணா? அப்போ நவீ இப்படி சுயநலாம சிந்திக்கிறதுக்கு என்னோட வளர்ப்பு தானே காரணம்?" என்றார் மங்கை கண்ணீரின் ஊடே!

அதற்கு பதில் சொல்ல முடியாமல் "ஷ் அம்மா!" என்ற சொல்லில் அவரைத் தேற்ற முயன்றவன், "என்னையும் அக்காவையும் கூட நீங்க தான் வளர்த்தீங்க! நாங்க நல்ல பிள்ளைங்களா இல்லையா? ஹய்யோ நல்ல பிள்ளைங்களா நீங்களா அப்படின்னு ஒரு ஷாக் அப்ஃபெக்ட் கொடுத்து என்னை கவுத்துடாதீங்க! நான் ஓரளவிற்கு நல்லவன் தான்...நீங்க நினைக்கிற மாதிரி இந்த எறும்பெல்லாம் நசுக்காம, ஒரு கன்னத்தில அடிச்சா இன்னொரு கன்னத்தை காட்டிட்டு, அப்பா சொல்றதை அச்சு பிசகாம கேட்டுட்டு ஒரு அசமஞ்சமா இல்லாம நானும் ஓரளவிற்கு நல்லவன் தான்...நம்புங்க மங்கை மேடம்!" என நிலைமையை சகஜமாக்க முயன்றவன், அப்போது தான் மாடியேறி வந்து கொண்டிருந்த தமக்கையின் குடும்பத்தை நோக்கி

"எல்லாரும் கேட்டுக்கோங்க, நானும் நல்லவன் தான்! நானும் நல்லவன் தான்! இந்த ஊர்ல மழை பெயறதே என்னால தான்...எல்லாரும் கேட்டுக்கோங்க!" என அவன் கத்த, "சும்மா இருடா! நிலைமை புரியாம" என்ற மங்கையின் குரலில் கண்ணீர் குறைந்திருந்தது, சொல்லப்போனால் சிறு சிரிப்பும் சேர்ந்திருந்தது.

"என்ன நிலைமை? நடந்ததையே ஏன் நடந்துச்சு ஏன் நடந்துச்சுன்னு உருப்போட்டுட்டு இருக்காம, இதிலிருந்து எப்படி மீண்டு வரதுன்னு யோசிங்கம்மா. கஷ்டம் தான்...நான் இல்லைன்னு சொல்லலை...அடுத்து என்னன்னு பாருங்கம்மா. எல்லாத்துக்கும் ரொம்ப யோசிக்கக் கூடாது. டக்கு டக்குன்னு அடுத்ததற்கு போயிட்டே இருக்கணும். ஒரு 'படிச்ச' டாக்டர் சொல்றேன், மங்கை! கேட்டுத் தான் பாரேன்! 'அன்றோர் வாக்கு அரிய வாக்கு'ன்னு ஒரு பழ...ச்சே ச்சே புது...பழ-புதுமொழியே இருக்கு தெரியுமா?" என அவன் மேலும் இளக்க, அவன் "படிச்ச", "அன்றோர்" போன்ற வார்த்தைகளில் கொடுத்த அழுத்தத்திற்கு வேண்டிய மொத்து அவனுக்கு இனிதே வந்து சேர்ந்தது.

"உனக்கு டாக்டர் பட்டம் கொடுத்ததற்கு பதிலா ஸெல்ப் டப்பான்னு கொடுத்திருக்கலாம். உன்னை மாதிரி யாருமே தற்பெருமை பேசமாட்டாங்க" என்ற ஷைலஜாவின் குரலிலும் பல நாட்களுக்குப் பின்னர் கேலி புகுந்திருந்தது.

"என் அருமை தமக்கையார் எனக்கு அளிக்கும் பட்டங்கள் அனைத்தையும் நான் எப்போதுமே தலை வணங்கி வாங்கிக்கொண்டிருக்கும் போது, இந்த 'அழகிய' பட்டதை மறுக்கலாமா? அப்படி செஞ்சா என் தமக்கையின் மனசு உடைஞ்சு போய்டாதா?

அவளோட மனசு உடைஞ்சு போச்சுன்னா ஷ்யாம் அத்தானோட மனசு கஷ்டப்படதா? அருமை மாப்பிள்ளைக்கு முள்ளு குத்தினாலே துடிக்கும் எங்கப்பா இதை கேட்டா கண்ணுல நீர் வச்சுக்க மாட்டாரா? அவர் கண்ணில நீர் வச்சா அவரது தர்மபத்தினியான என்னோட அம்மாவோட முகம் வாடாதா? இப்படி எல்லாரையும் கஷ்டப்படுத்தாம..." என அவன் பேசிக்கொண்டே போக

"கொஞ்சம் கூட அடங்காம...பேசிட்டே இருக்கான் பாருங்களேன்" என்ற ஷைலஜா, நிகேதனின் முதுகில் ஓர் அடி வைக்க, அவளின் செல்வ மகள் ப்ரீத்தி கைகொட்டிச் சிரித்தாள். "அச்சோ என் அப்பு சிரிக்கிறாடா... ரெண்டு அடி வாங்கிக்கொயேன்" என்ற இளம் தாய், மேலும் தன் தம்பியை அடிக்க, மங்கை சிரிப்புடன் பார்த்திருந்தார்.

"அம்மா, இதெல்லாம் அநியாயம்! அவ பொண்ணு சிரிக்க உங்க பையன் அடி வாங்கனுமா? பெரிய கே.ஆர்.விஜயான்னு நினைப்பு...வாயெல்லாம் பல்லை காட்டிட்டு என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு!" என்ற நிகேதன், மங்கையின் தோளில் சிறு அடி வைக்க, ஷ்யாமின் கையிலிருந்த ஆர்த்தியோ, தன் ஆள் காட்டி விரலை மட்டும் உயர்த்திக்காட்டி அவனை மிரட்டினாள்!

"அச்சோ என்னை அடிச்சா...ஆர்த்திகுட்டிக்கு கோபம் வருது பாருடா! நவி கூட இப்படி தான்...என் மேல பாசமா இருந்தான்னு நினைச்சேனே! அம்மா மேல பாசமா இருக்கிறவன் எப்படிடா..." என அங்கே சுற்றி, இங்கே சுற்றி மூத்த மகனிடம் வந்து நின்ற தாயை பார்க்க, நிகேதனுக்கு பரிதாபமாய் இருந்தது.எழுந்த பரிதாபத்தை அவனிடம் காட்டாமல், மேலும் சிறு கேலி பேச்சினாலே அவரை சரியாக்க முயன்று, கீழே அழைத்துச் சென்று படுக்க வைத்தான்.

அடுத்த ஒரு வாரத்தில் நடந்த நிகழ்வுகளின் தொகுப்பு

1 . முதலாவதாய் செல்லியப்பனின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) துரித முறையில் வந்து சேர்ந்தது.

2 . அடுத்ததாக ஷ்யாம் தன் குழந்தைகளையும், மனைவியையும் கூட்டிக்கொண்டு சிங்கப்பூர் பறந்து சென்றான்.

3 . மூன்றாவதாக மங்கையும், தர்மராஜனும் செல்வியிடம் பேச முயன்று தோற்றனர். ஆனால் முன்னர் போல் அவர்களின் முகத்தில் அடித்தார் போல் கதவை அடைக்காமல் "தயவு செய்து என்னை சங்கடப்படுத்தாதீங்க. உங்க மேல இருக்க வருத்தத்தில் வார்த்தைகள் கூடுதாலா போச்சுன்னா ரெண்டு பேருக்குமே சங்கடம். ப்ளீஸ் போய்டுங்க" என மிக தெளிவாய் பேசினாள் செல்வி.

4 . நான்காவதாக நிகேதன் செல்வியை சந்திக்க முயலவே இல்லை.

5 . செல்லியப்பனின் கடவுச்சீட்டு வந்து சேரவும், ஷ்யாம் சிங்கப்பூர் செல்லவும் சரியாக இருக்க செல்வி மற்றும் அவளின் தந்தைக்கான சிங்கப்பூர் விசைவு (விசா) விண்ணப்பிக்கப்பட்டது.

6 . தங்கள் பயணத்திற்கான செலவு முழுவதையும் தன் கையிருப்பிலிருந்தே செல்வி கொடுத்ததை ஷ்யாம் தடுக்கவோ, முகம் சுளிக்கவோ இல்லை.

7 . முக்கியமாய் ஊராரின் நாக்கு நாளா பக்கமும் சுழன்று இரண்டு குடும்பங்களையும் வசவுகளால் வதைத்து எடுத்தது.

இவையெல்லாம் இனிதே நடந்து முடிய, அடுத்த ஒரு வாரத்தில் செல்வியும் அவளது தந்தையும் - இத்தனை காலமாய் தங்கள் கூடாய் விளங்கிய வீட்டைப் பிரிந்து, சிங்கப்பூர் விமானம் ஏற சென்னை வந்து சேர்ந்தனர். அந்த வீட்டில் எத்தனையோ இன்பங்களைக் கண்டிருந்த போதும், சமீபத்தில் அனுபவித்த பெரும் துன்பமே மனதில் நின்றது கசப்பான நிஜம்!

ஊராரின் வசவுகளிலிருந்து விடுதலை, இப்படியாகிவிட்டதே என்ற வருத்தம், தாய் நாட்டை விட்டு செல்லும் பிரிவுத்துயரம், இனிமேலாவது வாழ்வு மலரவேண்டுமே என்ற வேண்டுதல் என கலவையான உணர்வுகளுடன் சென்னை விமானநிலையத்தில் செல்வியும், செல்லியப்பனும் காத்திருக்க, அங்கே வந்து சேர்ந்தான் நிகேதன்.

செல்வியின் மீது பார்வையையே திருப்பாமல், செல்லியப்பனின் மீது மட்டும் கவனத்தை வைத்து "வணக்கம் மாமா" என்றான். சிறு தயக்கத்திற்குப் பின்னர் "வ...வணக்கம் த...தம்பி" என்ற செல்லியப்பன், அடுத்து ஏதும் பேசாது மௌனமாய் இருந்தார்.

"சிங்கப்பூர் ஃபிளைட்க்காக காத்திருக்கீங்களா?" என அவன் அடுத்து கேட்ட கேள்விக்கும் "ஆமா" என்ற ஒற்றை சொல்லே பதிலாய் வந்தது.

"சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் தானே? நானும் அதில தான் போறேன். என்னோட சீட் நம்பர்:16D . ஏதாவது தேவைன்னா சொல்லுங்க" என்ற நிகேதன் செல்லியப்பனின் தலையாட்டலுக்காக நின்றுகொண்டிராமல் நகர்ந்துவிட, "ஒரு நிமிஷம்" என அவனை நிறுத்தினாள் செல்வி.

அவளது அழைப்பில் நின்றவன், அவளாகவே பேசட்டும் என்று மௌனம் காக்க "என்னை அமெரிக்காவிலிருந்து கூட்டிட்டு வந்ததற்கு தேங்க்ஸ். நீங்க கூட்டிட்டு வந்த நன்றியை மறந்துட்டு...அப்படி ஓடிவரதுக்கே நீங்க தானே காரணம் என்ற ஆதங்கத்தில...கோபத்தில அப்பாவும் நானும் உங்களையும் ஷைலஜா அண்ணியையும் துரத்தியதற்கு சாரி. நானோ அப்பாவோ வேணும்ன்னு அதை செய்யலை...ஒரு விரக்தியில் செய்துட்டோம். இதை ஷைலஜா அண்ணிகிட்டயும் சொல்லிடுங்க. வேறெதுவும் விஷயமில்லை" என்ற செல்வியின் பார்வை நிகேதனை நேர் கோட்டில் சந்தித்திருந்தது குறிப்படத்தக்கது.

அவளது 'நீள' பேச்சை ஒரு தலையசைப்பால் ஏற்று கொண்டவன் "பரவாயில்லை!கண்டிப்பா என்னோட 'அக்கா'கிட்ட சொல்லிடுறேன்" என்றுவிட்டுச் சென்றான். அவன் உச்சரித்த 'அக்கா'வில் இருந்த அழுத்தத்தை செல்வி கவனிக்காமலும் இருக்கவில்லை, அதே சமயம் அந்த அழுத்தத்திற்கான காரணம் தான் உபயோகித்த 'அண்ணி' என்ற அழைப்பு என்பதை உணராமலும் இருக்கவில்லை. ஆனால், அதற்கெல்லாம் வருத்தப்படும் காலத்தை அவள் கடந்துவிட்டதால் "பிளைட்டுல போவரதுக்கு முன்னாடி கொஞ்சமா சாப்பிட்டு பாப்பா! நேத்து ராவுல சாப்பிட்டது" என்ற தந்தையின் குரலுக்கு அடி பணிந்தாள் மகள்.

விமானத்திலும் நிகேதன் அமர்ந்திருந்த இருக்கையின் வரிசையிலேயே செல்விக்கும், செல்லியப்பனுக்கும் இடம் கிடைத்திருக்க, செல்வி அதை தற்செயல் என்றெண்ணி சாதாரணமாய் இருந்தாலும், தன் இருக்கையை அவ்வாறு அமைத்துக்கொண்ட நிகேதன் அவள் முகம் மாறாமல் இருந்ததில் லேசாய் நிம்மதியடைந்தான்.

ஆனால் அவனின் நிம்மதி, செல்வியின் கைகள் ஓயாமல் நடுங்கியதிலும், சிறு சத்தத்திற்குக் கூட அவளது இமைகள் திறந்துகொண்டதிலும், தன் உணவைக் கூட தானாகவே உண்ண முடியாதா அவளது நிலையிலும் குலைந்து தான் போனது! "இந்தச்

சிறு பெண்ணிற்கு வாழ்வை எதிர்கொள்ளும் தைரியத்தை கொடு கடவுளே!" என்ற வேண்டுதலைத் தவிர வேறெதையும் அந்த நேரத்தில் செய்ய முடியாமல், மௌனமாய் பயணித்தான் அவன்.

சிங்கப்பூரை  அடைந்தபோது ஷ்யாமின் அலுவலக பணியாள் செல்வியை அழைத்துச் செல்ல வந்திருக்க, நிகேதன் அவனது வழியை பார்த்தான். முதல் ஒரு வாரத்திற்கு ஷ்யாமின் அலுவலக விருந்தினர் மாளிகை செல்வி மற்றும் செல்லியப்பனின் வீடாக, அடுத்த வாரமே ஷ்யாமின் வீட்டருகே (சில தெருக்கள் தள்ளி) இருக்கும் ஓர் அபார்ட்மென்ட் ஒன்றை வாடகைக்குப் பார்த்துக்கொடுத்தான் அண்ணன்.

அதன் பின்னர், வேலை, வீடு, தந்தை என செல்வியின் தினப்படி காரியங்கள் நடைபெறுவது போலிருந்தாலும், நவநீதனிடமிருந்து மனவிடுதலை கோரி விவாகரத்து தாக்கல் செய்திருந்தாள் செல்வி! அந்த விஷயம் நவநீதனின் குடும்பத்திற்கு தெரிந்தது - வக்கீல் அறிக்கை மூலமாக!

அத்தியாயம் 14

செல்வி தாக்கல் செய்த விவாகரத்து மனு செம்பட்டியிலிருந்த தர்மராஜனின் வீட்டு முகவரியை அடைந்தபோது, தர்மராஜன் தான் அதை கையெழுத்திட்டு வாங்கும்படியானது.

உள்ளம் வலிக்க அதை படித்தவரின் பெற்ற மனம் - சந்தோஷங்கள் நிரம்பிய தாம்பத்தியமாய் இருந்திருக்க வேண்டிய திருமண பந்தம் இப்படி ஒரு பக்க காகிதத்தில் முடிகிறதே என மருகியது! ஆனால், நியாயப்புத்தி கொண்ட அந்த தலைமையாசிரியரோ மகனின் தப்பை சகித்துக் கொண்டு, அவனுக்கு அடிமையாய் செல்வி வாழவேண்டும் என்று நினைக்காததால், செல்வியின் விடுதலையை எண்ணி அமைதியே அடைந்தார். விவாகரத்து அறிக்கை வந்திருப்பதை மூத்த மகனுக்கு அறிவிக்கும் செயலைக் கூட செய்ய மனமற்றவர் போல், சிங்கப்பூரில் இருக்கும் தன் இளைய மகனை அழைத்தவர் "நிகேதா! செல்வி விவாகரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கா. நீ...உங்க அண்ணனுக்கு ஃபோன் பண்ணி விஷயத்தை சொல்லிடு. அதோட சேர்த்து, அவளை

இன்னமும் நோககடிக்காம உடனே விவாகரத்து கொடுக்கச் சொல்லு" என்றார் சோர்ந்த குரலில்.

நிகேதனுக்கு செல்வியின் விவாகரத்து மனு பெரும் ஆறுதலைக் கொடுத்தாலும் அதை வெளியிடும் நேரமும், கேட்கும் நபரும் பொருந்தி வராததால் "சரிப்பா.நான் பார்த்துக்கிறேன். அம்மாவும் நீங்களும் எப்போ சிங்கப்பூர் கிளம்பிவறீங்க? இன்னும் எத்தனை நாளுக்கு அங்கேயே இருந்து ஊர் காரங்களுக்குப் பதில் சொல்லிட்டு இருக்கப்போறீங்க? ஒரு வாரம்ன்னு சொன்னீங்க...இப்போ இருபது நாளுக்கு மேல ஆச்சு. சீக்கிரம் கிளம்பி வாங்கப்ப" என மகனாய் உத்தரவிட்டான்.

"சரிப்பா! இப்போ இந்த விவாகரத்து விஷயம் வேற வந்திருக்கில்லையா? முடிஞ்சதும் கிளம்பி வரோம்" என்ற தர்மராஜன், நிகேதன் மேலே பேசும் முன்னர் "அம்மா வந்துட்டா. கொடுக்கிறேன்" என்றதோடு மகனை மனைவியிடம் பேசுமாறு செய்தார்.

தாய்க்கும் மகனுக்குமான பாசப்பரிமாறல் இனிதே நடந்து முடிய, மங்கையின் மனதில் குடுபுகுந்த அந்த சிறு சந்தோஷத்தையும் செல்வியின் விவாகரத்து பத்திரம் தகர்த்தெறிந்தது. சில நாட்களாய் நின்றிருந்த கண்ணீர் மேலும் துளிர்க்க, ஒரு வேகத்தில் மூத்த மகனின் கைப்பேசிக்கு அழைப்பு விடுத்த மங்கையர்க்கரசி, அந்தப்பக்கம் கைப்பேசி எடுக்கப்பட்டதும் "ஏன்டா...ஏன்டா என் வயுத்தில வந்து பிறந்து தொலைஞ்ச? உன்னை பாராட்டி, சீராட்டி வளர்த்ததுக்கு எனக்கும் உங்கப்பாக்கும் ரொம்ப நல்ல பேர் வாங்கிக் கொடுத்துட்டே நவநீதா? ஊர்ல தலை நிமிர்ந்து நடந்திட்டு இருந்தவர் கண்ட பேச்செல்லாம் கேட்க வச்சுட்டியேடா...கடவுளே! உன்னோட குணம் தெரிஞ்சிருந்தும் செல்வியை நாங்க தான் உனக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுத்து, கொடுமை படுத்திட்டோம்ன்னு என் காது படவே பேசுறாங்களே! பாவி! பாவி! இப்போ விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியிருக்காளே அந்தப்பொண்ணு...எவ்வளவு மனசு நொந்து அதை அனுப்பியிருப்பா...ஒரு பொண்ணோட வயிற்றெரிச்சலை இப்படி கொட்டிக்கிறியே! நீயெல்லாம் எதுக்குடா கல்யாணம் செய்துகிட்டே!" எனத் தன் இயல்பிற்கு மீறி, கத்தி தீர்த்துவிட்டார்.

©BIM anastory

தன் ஆத்திரம் தீர கத்தி முடித்து மங்கை ஆசுவாசப்பெருமூச்சு விட்ட சமயம், அந்த பக்கமிருந்து "அம்மா" என்ற அழைப்பு வர "என்னை அப்படி கூப்பிடாதேடா பாவி!" என்ற சொல்லோடு தொலைப்பேசியை வெறுப்புடன் தூக்கி எரிந்தவரை, ஒரு நிலை படுத்துவதற்குள் தர்மராஜனுக்கு இரண்டு முறைக்கும் மேலாய் கண்கள் குளமாகிவிட்டன.

ஆனால் தொலைப்பேசியில் மகனை வைது தீர்த்த மனைவியை சமாதானப்படுத்திய ஆசிரியரால், தப்பு செய்த மகன் நேரில் வந்து நின்றபோது மனைவியின் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியவில்லை! ஆம், வக்கீல் அறிக்கை வந்துசேர்ந்த ஒரு வார இடைவேளையில் தாய் நாட்டிற்கு வருகை புரிந்த நவநீதன் - சற்றும் உறுத்தலின்றி தன் வீட்டுக்கதவைத் தட்டிவிட்டு, தான் உள்ளே அனுமதிக்கப்படுவதற்காக காத்திருக்க, கதவைத் திறந்த அவனது அன்னை முதலில் அதிர்ந்தார்! அதிர்ச்சியின் தொடர்ச்சியாக வீட்டினுள் நுழைய அவனுக்கு வழிவிடாமல், அதே சமயம் மகனை நேரில் கண்டதும் பாசத்தில் தன் சுயநிலையை இழக்காமல், "அம்மா" என்றழைத்தவனின் கன்னத்தில் ஓங்கி ஓர் அரை விட்ட தாய், "என்னை அப்படி கூப்பிடாதேடா பாவி! இப்போ எதுக்கு இங்க வந்திருக்க? போய்டு...போய்டு! என்னை மேலும் மேலும் கோபப்படுத்தாதே!" என்றவரின் குரல் ஆத்திரத்தில் துவங்கி அழுகையில் முடிந்தது.

"அம்மா, நான் சொல்றதை..." என அவன் துவங்க, "நீ ஒன்னும் சொல்லத் தேவையில்லை. நான் தான் கண்கூடா பார்த்தேனே! அந்தப் பொண்ணை அரை உயிரா ஆக்கி வச்சிருந்தியே!?" என்ற மங்கை கதவை அடைக்க முற்பட

"அம்மா, நான் நல்லா யோசிச்சு எல்லாருக்கும் சாதகமான முடிவு தான் எடுத்தேன். அதை அவ தான் புரிஞ்சுக்கலைன்னா நீங்களுமா?" என இப்போதும் தான் செய்தது சரியே என்று பேசிக்கொண்டிருந்த நவநீதனின் தோளில் ஓர் கை விழ, அங்கே நின்றிருந்தவன் நிகேதன். தாய்-தந்தையை சிங்கப்பூர் அழைத்துச் செல்வதற்காக ஊருக்கு வந்திருந்தான் அவன். நிகேதன் ஊருக்கு வந்ததற்கு மற்றொரு காரணம் - விவாகரத்து அறிக்கை வந்திருப்பதை நவநீதனுக்கு தெரிவித்த இரண்டு நாட்களில், நவநீதனின் கைப்பேசிக்கு அவன் முயன்றபோது, அதை எடுத்த ஜாக்-கின் மூலமாக அண்ணன் இந்தியா வந்திருப்பதை தெரிந்துகொண்டதும் தான்!

"நிக்கி" என மங்கை தடுக்க, "இவனும் அக்காவும் தான்...எதையும் விசாரிக்கமா பெரிய ஜேம்ஸ் பான்ட் மாதிரி அவளைக் கூட்டிட்டு வந்துட்டாங்க. இப்போ டைவர்ஸ்

வரைக்கும் போயிருக்கு. என் விஷயத்தில நீ ஏன்டா தலையிடுறே?" எனத் தம்பியின் சட்டையைப் பிடித்தான் மூத்தவன்.

"இன்னும் நீ செஞ்சதுன்னு சரின்னு பேசிட்டு இருக்க கிராக்குகிட்ட எல்லாம் என்னால பேசமுடியாது! அம்மா கொடுத்த மாதிரி இன்னொன்னு வேணும்னா கையை அப்படியே வச்சுக்கோ...இல்லைன்னா மரியாதையா கையை எடு!" என்ற நிகேதனின் குரலில் புலியின் சீற்றம் இருந்தது. அதிலிருந்த இரும்பு தன்மை நவநீதனின் கைகளை கீழே விழ வைக்கவே, அதுவே அவனுக்குப் பெருத்த அவமானத்தை உண்டுசெய்தது நிஜம்!

அந்த அவமானத்தை சமன்செய்யும் பொருட்டு "உன்னோட எனக்கென்ன பேச்சு?" எனத் தம்பியை துச்சமாய் கணக்கிட்டவன், தாயிடம் திரும்பி "அம்மா, இப்போ கூட எனக்கு செல்வி மேலயோ உங்க யாரு மேலயோ கொஞ்சம் கூட கோபமில்லை. எல்லாத்தையும் மறந்துட்டு அவளை நான் யூ.எஸ் கூட்டிட்டு போறேன். அப்படி கூட்டிட்டு போய்ட்டா...இப்போ கண்டபடி பேசுற ஊர் காரங்க எல்லாம் வாயை மூடிடுவாங்க. உங்களுக்கும் நிம்மதி. செல்விக்கும் நல்ல வாழ்க்கை. உங்க எல்லாருக்கும் ஜாக் விஷயம் தெரிஞ்சதால, இனி மறைக்க வேண்டிய கட்டாயமும் இல்லை, குழந்தை குட்டின்னு பெருசா நீங்க எதிர்பார்க்கப் போறதுமில்லை. என்ன சொல்றீங்க? செல்விகிட்ட பேசி நம்ம வழிக்கு கொண்டுவந்துடலாமா?" என அவன் பேசிக்கொண்டே செல்ல, "அம்ம்ம்ம்ம்ம்ம்ம்மா" என்ற நிகேதனின் அடக்கிய குரல் ஆயிரமாயிரம் கோபங்களை உள்பொதித்து வைத்திருந்தது.

மூத்த மகனின் பேச்சில் கொதித்து போயிருந்த மங்கையரக்கரசிக்கு, இளைய மகனின் தூண்டுதல் சிறிதும் தேவையிருக்கவில்லை என்பதை "அம்மா" என்ற நிகேதனின் குரல் வெளிவந்த அதே நொடி, நவநீதனின் கன்னத்தில் அவரின் விரல்கள் மீண்டும் பதிந்து, நிரூபித்தது!

"இவ்வளவு சுயநலமா எப்படிடா உன்னால யோசிக்க முடியுது?? உன் கையில திரும்பவும் செல்வியை கொடுக்கிறதா? எதுக்கு அவளை இல்லாமலே செய்றதுக்கா? இப்போ அவ படர வேதனை உனக்குப் பத்தலையா? இன்னும் நோகக்கடிக்கணுமா?
போய்டு...போய்டு...இங்கிருந்து தயவு செஞ்சு போய்டு" என்ற மங்கை, உள்ளே செல்ல முற்பட

"அம்மா, செல்வியைப் பத்தி இவ்வளவு தூரம் யோசிக்கிற நீங்க...என்னைப் பத்தி ஏன் யோசிக்கவே மாட்டேங்கிறீங்க? நான் உங்க பையன். என்னைத் தான் நீங்க சப்போர்ட் செய்யணும்" என முகத்தில் திமிருடன் நவநீதன் சிலிர்க்க, "உன்னை மாதிரி எங்கம்மா சுயநலவாதி இல்லை! அதனால நீ போகலாம்" என்றான் நிகேதன் "உன்னை", "எங்க", "சுயநல" போன்ற எழுத்துக்களில் அளவுக்கு அதிகமாய் அழுத்தம் கொடுத்து.

"அவன் சொல்றது காதில விழலை? நான் முதல ஒரு பொம்பளை....அப்புறம் ஒரு நேர்மையான வாத்தியாரோட மனைவி...அதுக்கு அப்புறம் தான் உனக்கு அம்மா! என் குடும்பம்...என் மகன்...ன்னு யோசிக்கிற மாதிரி இடத்தில நான் வாழ்க்கைப்படலை. அதே மாதிரி ஒரு சின்னப்பொண்ணு கஷ்டப்படட்டும்...என் குடும்ப கௌரவம் தான் எனக்கு முக்கியம்ன்னு நினைக்கிற சுயநல மனுஷியும் இல்லை. அவனை அனுப்பிடு நிக்கிமா" என்றதோடு உள்ளே செல்லத் திரும்பினார்.

"நவநீதா, அம்மா சொல்றது புத்தில ஏறுச்சா? இங்க நின்னு தேவையில்லாத நாடகம் போடாம வந்த வழியே போய்டு!" என்ற நிகேதன், "ஹே ஹே ஒரு நிமிஷம் நில்லு! செல்வி டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பியிருக்கா. அதில உனக்கும் சம்மதம்ன்னு சொல்லி கையெழுத்து போட்டுட்டு போய்டு. வாழ்க்கையில நீ செய்ற முதல் நல்ல காரியமா இது இருக்கட்டும்" என்றான் அவசரமாய்.

"அதெல்லாம் போடமுடியாது! நீ என்னடா என்னை அதிகாரம் செய்றது? நான் போய் செல்விகிட்ட பேசி... அவளை இந்த டைவர்ஸ் நோட்டீஸ்சை வாபஸ் வாங்க வைக்கிறேன்" என அவன் சூளுரைக்க

"அம்மாவாவது கையால அடிச்சதோட விட்டாங்க. அங்க போனியோ கல்லால அடிச்சே கொன்னுடுவாங்க! போறதுன்னா போ!" என்ற நிகேதன், "ஆமா, உனக்குத் தான் வெட்கம்...மானம்...சூடு...சுரணை ஒண்ணுமே கிடையாதே! சாப்பிட்டில உப்பு போட்டு சாப்பிட்டா அதெல்லாம் இருக்கும்...நீ தான் பீட்சா...பர்கர்ன்னு அமெரிக்க கலாச்சாரத்தில் மூழ்கிப் போயிருக்கியே!" என இரு பொருள் பட அவனைக் குத்தினான்.

"ஹே, என்னடா வாய் நீளுது?" என நவநீதன் எகிற, "நான் இலை மறை காயாய் சொன்னதுக்கே வாய் நீளுதுன்னு சொன்னா எப்படி நவநீதன் சார்? உன்னோட பொறுக்கித்தனத்தை அப்பட்டமா வெளிய சொன்னா என்ன சார் செய்வீங்க? என்னை

கொண்ணுடுவீங்களா? ஐயோ பயமா இருக்கே?!

என்ற நிகேதனின் குரலில் போலி பணிவு குடி புகுந்திருந்தது!

இளையவனின் போலி பணிவு, மூத்தவனின் போலி தன்மானத்தைத் தூண்டிவிட "டேய்" என கர்ஜித்தவன், நிகேதனின் சட்டையில் மீண்டும் கை வைத்தான். ஓர் வேகத்துடன் அண்ணனின் கைகளைத் தட்டிவிட்ட நிகேதன் "மிஸ்டர்.நவநீதன்! இது தான் நான் உனக்கு கொடுக்கும் மரியாதையோட கடைசி படி. இதுக்கு மேல ஓர் அடி எடுத்து வச்சே...நல்லா இருக்காது!" என்றான் கடுமை முழுமையாய் ஏறிய குரலில்.

அந்த நேரம் தர்மராஜன் வெளியிருந்து வீட்டிற்குள் வர, மங்கையும் மகன்களுக்கு நடுவே வந்தார். மங்கையாவது நவநீதனிடம் உயர்ந்த குரலில் தூற்றினார் என்றாலும் முகம் கொடுத்து அவனிடம் பேசினார்! ஆனால் தர்மராஜனோ, அவன் ஒருவன் அங்கே நிற்பதே கண்ணில் படாதது போல் உள்ளே சென்றுகொண்டிருக்க "அப்பா" என்றான் நவநீதன், அவரை நிறுத்தும் நோக்குடன்.

அந்த அழைப்பிற்கு சற்றும் இசையாமல், நிகேதனின் புறம் திரும்பி "இன்னும் ரெண்டு மணி நேரத்தில் நாம கிளம்பனும் நிக்கி! அதுக்கு மேல தாமதம் செய்தா ஃபிளைட்க்கு நேரமாகிடும்! வந்தவங்களை சீக்கிரம் அனுப்பிட்டு அம்மாவும் நீயும் உள்ள வாங்க" என்றதோடு உள்ளே சென்று மறைந்தே விட்டார்.

"அவர் சொல்றது புரியலை? வெளிய போறியா?" என தாய் துரத்த, "சை. உங்க பையனையே வீட்டை விட்டுப் போகச் சொல்றீங்களே? உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது பாசமிருக்கா? இதுக்கெல்லாம் ஒரு காலத்தில் படப்போறீங்க" என அவன் கருவ, "இப்போ படுறதே இந்த ஜென்மத்திற்கு போதும் !? போடா என்கிறேன்" என்றார் கோபமாய்.

"இந்த விவாகரத்து நோட்டீஸ்ல கையெழுத்து போட்டுட்டு போ" என்றான் நிகேதன்.

"நான் செல்விகிட்ட பேசிக்கிறேன்" என நவநீதன் விலக, "இவன் கல்லடி பட்டா தான்

திருந்துவான். நானே அங்க போய் பெரிய பாறங்கல்லா எதாவது எடுத்து வைக்கிறேன்" என்றான் நிகேதன்.

"நீ அவகிட்ட பேசி எதுவும் ஆகப்போறதில்ல நவநீதா! அவளே ஆயிரத்தில ஒரு சதவீதமா மனசு மாறினாலும், நான் அவளை மாற விடமாட்டேன். முன்னாடி தெரியாம அவ வாழ்க்கையை பாழாக்கினேன்...இப்போ தெரிஞ்சே செய்யமாட்டேன்" என்றார் மங்கை தீர்மானமாய்.

"அவன் போடலைன்னா போறான். இவன் ஒரு மன நோயாளி...மற்றவங்களோட துன்பத்தில் இன்பம் காணும் மிருகம் அப்படின்னு என்னால மெடிக்கல் செர்டிபிகேட் வாங்கமுடியும். அதை வச்சு இவனை கோர்ட்ல பார்த்துக்கலாம்" என்றான் நிகேதன்.

அந்த வார்த்தையில் பலமாய் அதிர்ந்து தான் போனான் பெரியவன். அதை விட, தாய் அதற்கு மாறாய் ஏதும் சொல்லாமல் மௌனம் காத்ததில் பெரும் அதிர்ச்சி உண்டாகியிருந்தது! அதிர்ச்சியின் ஊடே அவன் "அம்மா" என்க, "என்னை நிஜமாவே நீ அம்மாவா நினைச்சேன்னா இதில கையெழுத்து போடு நவநீதா! அப்படியில்லாம இன்னமும் நீ செல்வியை தொந்தரவு செய்வேன்னு சொன்னா...உன்னைப் பெத்ததுக்கு நான் தூக்கில தான் தொங்கணும்" என்றபோது "அம்மா" என நவநீதன் கூவியிருக்க, நிகேதனோ "அம்மா! என்ன பேச்சு பேசுறீங்க?!" எனத் தாயைத் தோளோடு அணைத்திருந்தான்.

தாய் கொடுத்த அதிர்ச்சியின் விளைவாக, நிகேதன் வைத்திருந்த பத்திரத்தில் கையெழுத்து போட்ட நவநீதன் அதன் பின்னர் அங்கே நிற்கவே இல்லை. கண்களில் கண்ணீரோடு நின்ற தாயை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு, வந்த வழியே நடக்கலானான்.

இளைய மகனின் தோளில் இதம் தேடிய அந்த தாய், அதன் பின்னர் தேறி வர வெகு காலமாகிற்று!!

இங்கே செல்வியின் மேல் பாசம் கொண்டு மங்கையர்க்கரசி தான் பெற்ற பிள்ளையுடன் ஓர் யுத்தம் நடத்திக் கொண்டிருக்க, அங்கே செல்வி தன்னுடனே விவாதம் நடத்தி, அந்த விவாதத்தின் விளைவாக தெளிந்தும் கொண்டிருந்தாள்.

சிங்கப்பூர் வாழ்க்கை ஓரளவு பழகிவிட்ட இந்த நிலையில், அவளுக்கு ஷ்யாம் அளித்திருந்த வேலையும் சவாலான காரியமாகவே இருந்தது! செல்வியை வேலைக்கு அழைத்தப்போது ஷ்யாம் கூறிய வார்த்தைகளை மெய்ப்பிப்பது போல் வேலையின் முக்கியத்துவமும், நம்பகத்தன்மையும் மிக அதிகமாய் இருக்கவே, செல்விக்கு அந்த வேலை பிடித்திருந்தது என்றே சொல்லலாம். தேவையில்லாத விஷயங்களை எண்ணி மருகாமல் இருக்கும் வண்ணம், அடுத்து என்ன? அடுத்து என்ன? என்ற ரீதியில் அலுவல் அமைய, அவளும் ஓர் வெறியுடனே வேலை செய்தாள்!

ஷ்யாம் நிர்வகிக்கும் இரு நிறுவனங்கள் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கும் திட்ட அறிக்கை (proposal ), அதில் அவர்கள் குறிப்பிடும் தொகை, வேலையாட்களின் எண்ணிக்கை, நாள் கணக்கு போன்றவற்றை ஒரு முறைக்கு நூறு முறை சரிபார்ப்பதில் துவங்கி, அவர்களது திட்ட அறிக்கை ஒத்துக்கொள்ளப்படாத பட்சத்தில் எங்கே, எப்படி தவறு நடந்தது என்பதை ஆய்ந்து அறிந்து, அதை கணினியில் ஏற்றும் வேளையில் அதிகமாய் சிந்திக்க வேண்டியிருந்ததால், கடந்த காலத்தை எண்ணி அவள் துவண்டு போவதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

அத்தோடு சேர்த்து, புதிய ஊர், அன்பாய் பழகிய அலுவலக நண்பர்கள், பக்கத்துக்கு வீட்டுக் குழந்தைகள் பேசும் அழகான மலாய் , அக்கறை காட்டும் அண்ணனாய் ஷ்யாம் சுந்தர், மாலையில் தந்தையும் அவளுமாக செல்லும் யோகா வகுப்பு, வார இறுதிகளில் அவள் பயிலும் கைவினை பொருட்கள் செய்யும் வகுப்பு, பயின்று கொண்ட கராத்தே, எல்லாவற்றுக்கும் மேலாய் பல காலங்களுக்குப் பின்னர் தந்தையுடன் அதிக நேரம் செலவு செய்ய முடிவது என செல்வியை ஒரு நிலை படுத்திருந்தது அந்த ஊர். முக்கியமாய், வேலையின் நடுவே "உனக்காக (Its just for you!)" என்ற தலைப்புடன், "உன் நண்பன் (your friend)" என்ற மின்னஞ்சல் முகவரியிலிருந்து வரும் மின்னஞ்சல் முகவரிகளை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அந்த மின்னஞ்சல் வந்த முதல் சில நாட்களில், ஏதோ தப்பான முகவரி என அவள் ஒதுக்க, அவள் ஒதுக்கியதை அறிந்துகொண்டது போல், தொடர்ந்து வந்தன அந்த மின்னஞ்சல்கள்! "என்ன இது...ஒரே தொல்லையாக இருக்கிறது" என்ற எரிச்சல் மனதில் மண்ட, என்ன தான் இருக்கிறது என அதை திறந்து பார்த்த செல்விக்கு லேசாய் சிரிப்பு வந்தது. அதிலிருந்த ஓர் கரடி பொம்மை, அவள் முகத்தில் ஓங்கி ஓர் குத்து விட்டு "வேலை செய்யாமல் இங்கே என்ன பார்வை வேண்டிக்கிடக்கிறது? என்கிட்ட குத்து வாங்கத்தான் உனக்கு சம்பளம் கொடுக்கிறார்களா?" எகத்தாளம் செய்யவே, விரிந்த புன்னகையுடன்

© Bhuvana's stori

அதை மூடியவளின் மனம், சில மணி நேரங்கள் தன்னை குத்திய கரடி பொம்மையிடமே இருந்து, முகத்தில் புன்னகையை நிலைக்க வைத்திருந்தது.

அந்த புன்னகையின் விளைவாக, அடுத்து அந்த முகவரியிலிருந்து வந்த மின்னஞ்சலை எதிர்பார்ப்புடன் திறந்தவளுக்கு, இன்னமும் சிரிப்பு விரிந்தது! இப்போது அங்கே 1, 5, 6, 9, 13, 14.........................என்ற எண்கள் இருக்க, உன்னால் இந்த எண்கள் எதை குறிக்கிறது எனக்கண்டு பிடிக்க முடிகிறதா? என்ற கேள்வியும் இருந்தது. என்னவாய் இருக்கும் என ஐந்து நிமிடத்திற்கும் மேல் யோசித்த செல்வி, வேகமாய் கீழே நகர்ந்து அதற்கான விடையைக் காண முயல "எனக்கு தான் எண் கணிதம் தெரியாது என்று நினைத்தேன், உனக்கு தெரியாதா? ஹய்யோ, ஹய்யோ!" என அதே கரடி அங்கே தலையில் அடித்துக்கொண்டது!

அதிலிருந்து அந்த மின்னஞ்சல் முகவரியிலிருந்து வரும் மின்னஞ்சல்களை ஆர்வத்துடனே எதிர்பார்க்க ஆரம்பித்திருந்தாள் செல்வி! வெறும் நகைச்சுவைகள் மட்டும் நிறைந்திராமல், காலையில் ஓர் சிந்தனையோடு கூடிய காலை வணக்கம், அடுத்த சில மணி நேரத்தில் உலக செய்திகளில் சில, மேலும் சில மணி நேர இடைவெளிகளில் சில நகைச்சுவை துணுக்குகள், முடிவை தன்னம்பிக்கையை தூண்டும் சில கதைகள் என ஒரு நாளுக்கு கிட்டத்தட்ட நான்கு மின்னஞ்சல்கள் வர, செல்வியும் அதை விரும்பவே செய்தாள். ஒரு நாள், தனக்கு மட்டும் இப்படி மின்னஞ்சல்கள் வருகின்றனவோ என்ற சந்தேகம் மனதில் பூதமாய் கிளம்ப, புருவத்தில் முடிச்சுடன் அமர்ந்திருந்தவளை எதிர்கொண்ட ஷ்யாம் "என்னாச்சு செல்வி? யார் மேல இத்தனை கோபம்?" எனக் கேட்கவே, அவனிடம் இந்த மின்னஞ்சல் வேலையை பகிர்ந்ததொடு தன் சந்தேகத்தையும் எடுத்து வைத்தாள்.

அவனோ "ஹோ, அந்த ஈமெயில்லா? அது என்னோட ஃபிரண்ட் ஒருத்தன் செட் பண்ணி வச்சிருக்க ஆட்டோமாட்டிக் ஈமெயில் என்ஜின். என்னோட ஈமெயில்க்கு கூட வரும். இதோ பாரேன்..." எனத் தன் ப்ளாக்பெர்ரியை திறந்து செல்வியிடம் ஓர் மின்னஞ்சலைக் காட்ட, செல்வியும் "சரி அண்ணா! யாரோ தெரிஞ்சவங்க தான் விளையாடுறாங்களோன்னு பயந்துட்டேன்" என்றாள் சமாதானமாய்.

செல்விக்குப் பதில் சொல்லிவிட்டு அந்த பக்கம் நகர்ந்த ஷ்யாம் "மகனே, இன்னைக்கு மாட்ட வேண்டியது! தப்புச்சுட்டேடா! என்னை கேட்காம அவ மட்டும் வேற யாரையாவது

கேட்டிருக்கணும்... தர்ம சாது வாங்கியிருப்பே!!" என்ற வாக்கியத்தை உதிர்த்ததை, செல்வி கேட்டிருக்கவில்லை! கேட்டிருந்தால்...............

"உன் நண்பன்" என்ற முகவரியிலிருந்து வந்த பல அஞ்சல்கள் அவளை சிரிக்க வைத்திருந்தாலும், ஒரு சில மின்னஞ்சல்கள் அவளை சிந்திக்கவும் வைத்தன! அதில் முக்கியமானது - சாலையில் நடந்து கொண்டிருந்த ஒருவனுக்கு காலில் முள் தைத்துவிட, நொண்டியவாறே வீட்டினுள் நுழைந்தவனை, "என்னவாகிற்று?" என்று வினவியதற்கு "முள் குத்திவிட்டது" என்றான் அவன். முள்ளின் மீது தப்பு சொன்ன அவனிற்குத் தன் மீதே தப்பிருக்கிறது என்பது புரியவில்லை! மனமும் உடலும் புண்பட்டிருக்கும் போது யார் மேல் தப்பு சொல்லலாம் என்று தேடுவது தான் மனித இயல்போ! அதை மாற்றுவது தான் கடினமோ! என்ற செய்தியைத் தாங்கியிருந்த மின்னஞ்சல்.

இப்படியாய் நிகழும் மிக சில சமயங்களில், தன் வாழ்வின் கருப்பு பக்கங்களை அவள் புரட்டிப் பார்ப்பதும் உண்டு. அப்படி பார்க்கும் போது கோபம், விரக்தி, வெறுமை, அனுதாபம், கண்ணீர் என எதிர்மறையான உணர்வுகளே தோன்ற, தலையை உலுக்கிக்கொண்டு கண் முன்னே இருக்கும் கணினியில் கவனத்தைப் புகுத்த முயன்று, அதில் வெற்றியும் கண்டுவிடுவாள் அந்த பெண் பாவை! கருப்பு பக்கங்களை அவள் புரட்டிப் பார்த்த வேளையில், அந்த பக்கங்களில் முழுதாய் கருப்பு பிடித்திராமல், அங்கங்கே வெண்மையும் நிறைந்திருப்பது உரைக்க ஆரம்பித்தது!

ஆம், செல்வியின் வாழ்வு பாழனதற்கு நவநீதனின் பெற்றோரின் மீது அவள் கொண்டிருந்த கோபம் - இப்போது தப்பனதாய் பட்டது!
அவர்கள் தன்னை "மருமகளாக்கிக் கொள்ள விரும்பியது என்னவோ உண்மை தான். ஆனால் அவர்கள் ஒன்றும் செல்வியின் கையையும் காலையும் கட்டி நவநீதனுக்கு மனம் முடித்துக் கொடுக்க வில்லையே!! தந்தையின் சம்மதம் பெற்ற கையோடு, "செல்விக்கு விருப்பமிருந்தால் பேசலாம்" என்று தானே சொன்னார்கள்.
நவநீதனின் தன்னிலை விளக்கமும் அவர்களுக்கு அவனது "சொந்த" வாழ்வை பற்றின உண்மைகள் தெரியாது என்று தானே இருந்தது!
மகனின் சுயரூபம் தெரிந்த பின்னரும், தன்மானம் பாராமல் தந்தையின் கால்களில் நீள விழுந்தாரே அந்தப் பெரிய மனிதர்!!
"நான் பையனைப் பெற்றவன். அவன் என்ன செய்திருந்தாலும் சரியே என்று வாதாடாமல்

- மகனின் பாவத்தை அவர் கழுவ முயன்றது பெரிய மனிதத்தனம் அல்லவா?!!
- என மங்கையின் மீதும், தர்மராஜனின் மீதும் புதிதாய் ஓர் மரியாதை தோன்றி, அவர்களின் மீதிருந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாய் வடியத் துவங்கியது.

அவளது கோபம் வடிந்த நேரம், ஷ்யாம் - ஷைலஜாவின் செல்வங்கள் ஓர் வயதை எட்டியிருந்த நேரம் என்பதால், ஷ்யாமும் ஷைலஜாவும் செல்லியப்பனின் வீடேறி வந்து அவரையும் அவர் பெண்ணையும் விழாவிற்கு அழைக்க, செல்லியப்பனால் மறுக்க முடியவில்லை.

மகளின் முகத்தில் தெளிவும், சிறிது சிறிதாய் சிரிப்பும் எட்டிப் பார்ப்பதற்கு காரணம் அவனல்லவா?! மகளின் வாழ்வு என்னாகுமோ என மருகிக்கொண்டிருந்த தந்தைக்கு "என் மகளால் அவள் காலில் நிற்க முடியும். அதே போல், அவள் வாழ்வை பற்றிய முடிவுகளையும் அவளால் தெளிவாய் எடுக்க முடியும்" என்ற நம்பிக்கையை கொடுத்த ஷ்யாமிடம் மறுக்க முடியாமல், மகளிடம் "போவோமா பாப்பா?" எனப் பாவமாய் வினவியவரை, "சரிப்பா, போகலாம்! எனக்கும் அங்க ஒரு சின்ன வேலையிருக்கு" எனக் கூறி ஒத்துக் கொண்டாள் மகள்.

ஷ்யாமின் வீட்டிற்குள் காலடி எடுத்துவைத்தவளை "வாம்மா செல்வி!" என வாயார வரவேற்ற மங்கையற்கரசியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "சாரி அம்மா!! யாரோ செய்த தப்பிற்கு உங்களைக் குற்றவாளியாக்கி...என்னை மன்னிச்சுடுங்க!" என்ற செல்வியால் அதற்கு மேல் பேசமுடியாமல் வார்த்தைகள் திக்கின. மங்கைக்கும் கண்களில் நீர் சுரந்துவிட, "உன் நிலமையில நான் இருந்தாலும்...அப்படி தான் கண்ணம்மா நடந்திட்டு இருந்திருப்பேன். மன்னிப்பெல்லாம் கேட்டு எனக்கு இன்னமும் குற்ற உணர்ச்சியைக் கூட்டாதேடா" என்றார் அவர்.

அதன் பின்னர் தர்மராஜன் மற்றும் ஷைலஜாவிடம் முறையே அவள் மன்னிப்பை வேண்ட, அங்கே சில உணர்ச்சி பூர்வமான தருணங்கள் நடந்தேறின. எல்லாவற்றிலும் முக்கியமானது பிள்ளைகளுடன் பிள்ளைகளாய் ஓடி விளையாடிக் கொண்டிருந்த நிகேதனை அவள் கண்ணெடுத்தும் பாரவில்லை என்பது தான்! அதோடு சேர்த்து, அவன் செல்லியப்பனிடம் பேசிக்கொண்டிருந்ததை சிறு எரிச்சலுடன் பார்த்தவள், தந்தையை அவனிடமிருந்து நகர்த்துவதிலேயே குறியாக இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது!

©Bhuvanas

ஒரு கட்டத்தில் ஷ்யாம் அவனது நண்பர்களுடன் நின்றிருக்க, செல்லியப்பனும் தர்மராஜனும் சிறு சங்கோஜத்திற்குப் பின்னர் பேச ஆரம்பித்திருக்க, மங்கையும் ஷைலஜாவும் குழந்தைகளின் பால் தேவையை கவனிக்க உள்ளே சென்றிருக்க, தனித்து விடப்பட்டாள் செல்வி. அவளின் அலுவலகத்தினர் வந்திருந்தபோதும், அவரவர் ஓரோர் குழுவில் இருந்ததால் அதில் நடுவே சென்று நுளையப்பிடிக்காமல், ஷ்யாமின் வீட்டுத் தோட்டத்தை மெல்ல சுற்றி வந்தாள் தாமரை.

செடிகளும், கொடிகளும் நிரம்பிய அந்த தோட்டத்தின் ஓர் மூலையில் ரோஜா செடிகள் கூட்டமாய் நின்று செல்வியை வரவேற்க, அவ்வழைப்பிற்கு இணங்கி அவளது கால்கள் அங்கே பயணித்தன.

அன்று தான் மொட்டவிழ்ந்து, விரிய துடித்துக்கொண்டிருந்த லாவெண்டர் வண்ண ரோஜாவின் அருகே சென்றவள், அதன் பட்டிதழ்களை மெல்ல வருடியவாறு அங்கே நின்றிருந்த போது - அவள் முகத்தில் மெலிதாய் ஓர் ஏக்கமும், கண்களில் கோடாய் கண்ணீரும் புரண்டோட, அதை பார்த்திருந்த ஓர் இதயத்தை ஓர் நிமிடம் நிறுத்தி, பின்னர் தலைகீழாய் புரட்டிப்போட்டது! பார்த்திருந்தவனின் கைகள் ஏங்கி நின்றவளின் துன்பம் துடைக்க துடித்ததில், அவனது மனதிற்கு ஓர் அரிய உண்மை புரிய ஆரம்பித்தது! அந்த உண்மை இனிக்கவும் செய்தது!

## அத்தியாயம் 15

பூவின் மென்மையை வருடிக்கொண்டிருந்த பெண்மையைக் கண்டதும், நிகேதனின் மனம் சட்டென கரைந்து பெண்மையை மென்மையாய் தழுவும் மேன்மைக்கு அவனை இட்டுச் சென்றது! "இவள் என்னவள். இவளது துயர் துடைக்கும் கடமை எனக்கிருக்கிறது!" என்ற உறுதியும் ஓலமும் நெஞ்சில் எப்போதும் புகுந்து கொண்டன எனத் தெரியமால், அதை கண்டு பிடிக்க மனமும் நேரமில்லாமல் செல்வியை நோக்கி அவனது கால்கள் நடை போடத் துவங்கின.

அவள் கண்களில் தெரிந்த அசாத்திய ஏக்கம் - பலபல அர்த்தங்களை எடுத்துக்காட்டி நெஞ்சில் கூர் முள்ளாய் குத்திக்கிழிக்க, நிகேதனின் கால்கள் அதிவேக நடை பயின்று அவளருகே சென்றன. செல்விக்கும்-நிகேதனுக்கும் இரண்டடி இடைவெளி இருந்தநிலையில், நிகேதனின் கரங்கள் செல்வியைத் தன் புறம் திருப்ப முயன்றபோது, நிஜமாகவே நிகேதனை முள் குத்தியது - ஏக்கமுள் அல்ல, ரோஜாமுள்!

உடலில் பட்ட வேதனை மனதை அதன் மாயத்திலிருந்து வெளிக்கொண்டு வர, திகைத்து நின்று விட்டான் அவன்! உயர்ந்த கைகள் அப்படியே காற்றில் மிதக்க, அவனின் எண்ணங்களோ அதற்கு மாறாய் வெகுவேகமாய் அலைபாய்ந்தது!

மிதந்த கைகளையும், அலைபாய்ந்த எண்ணங்களையும் ஓர் நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு தாமரையாள் தன் மோனத்திலிருந்து கரைந்து, வீடு நோக்கிச்செல்ல மேனியை திருப்பினாள்.

திரும்பியவள் ஓரடி எடுத்துவைத்திருந்தாலும் நிகேதனின் மேல் மோதிக் கொண்டுவிடும் நிலை அங்கே நிலவவே செல்வி திகைத்து விழித்தாள். மேலும் அவனது அதிர்ந்த முகமும், உயர்ந்திருந்த கைகளும் வேறு மனதை குழப்ப "என்ன? என்ன?" என்ற செல்வியின் வார்த்தைகளில் உயிர் பெற்ற நிகேதன், தலையை உலுக்கிக்கொண்டு இயல்பிற்கு வந்தான்.

அவனது அச்செய்கையில் மேலும் குழம்பிய செல்வி - "என்னாச்சு? என்ன விஷயம்? அப்பா..." என்றாள் சிறு பதட்டத்துடன்.

தான் என்ன எண்ணி வந்திருக்க, இவளது எண்ணங்கள் அங்கே போகிறது? என்றெண்ணிய நிகேதனின் மனம் ஒரு நிலைக்கு வந்துசேர்ந்துவிட்டிருந்தது! "மாமாக்கு ஒண்ணுமில்லை. ஷைலுக்கா உன்னை கூட்டிட்டு வரச் சொன்னா. கிஃபிட் கொடுக்கிறதில் உன்னோட உதவி வேணுமாம்" என்றான் நிகேதன் கோர்வையாக.

"ஹோ சரி! இதோ போறேன். இதை நீங்க அங்கிருந்து சொல்லியிருக்கலாமே?" என்றாள் செல்வி நடந்துகொண்டே,

"சொன்னேனே! உனக்கு சிங்கப்பூர் வந்ததிலிருந்து காது டமாரம் ஆகிடுச்சு போல...அதான் கேட்கலை! உனக்கும் மட்டும் காது கேட்டிருந்தா நான் ஏன் கால் கடுக்க இத்த்த்ததனை தூரம் நடக்கப் போறேன்" என்ற நிகேதன், தடுமாறி நின்ற ஐந்து வினாடிகளுக்கும் சேர்த்து கூடுதலாய் நடித்து முடித்தான்.

நிகேதனின் இந்தப்பெசில் செல்வி மேலும் திகைத்துத் தான் போனாள் எனலாம் - திகைப்பு ஏற்பட்டதற்கு காரணம் நிகேதனின் கேலி அல்ல! அது தான் ஊர் உலகம் அறிந்த ஒன்றாகிற்றே. ஆனால், நடந்து முடிந்த சில அசம்பாவிதங்களுக்கு நடுவே, செல்வி அவனது கேலியை கேட்பது இதுவே முதல் முறை என்பதால் தான்!

அவளது திகைத்த முகம் அடுத்த கேள்வி தொகுப்பிற்கு அவள் ஆயத்தமாவதை காட்ட, "ஓகே செல்வி, சீக்கிரம் போ! எனக்கு வேறொரு வேலை இருக்கு." என அங்கிருந்து வேகமாய் நகர்ந்த நிகேதன், செல்விக்கு முன்னராய் தமக்கையை எட்டி "அக்கா, இப்போ செல்வி வருவா. கிபிட் கொடுக்கிறது சம்பந்தமா அவளுக்கு ஏதாவது வேலை கொடு. வேற ஏதாவது சொல்லி சொதப்பிடாதே. உன் சொதப்பல் உன் தம்பிக்கு ஆப்பு வச்சிடும் சரியா? ஒழுங்கா சமாளி' என்ற சொல்லோடு அங்கிருந்து பறந்தான்.

"என்ன இவன்? எங்கிருந்தோ மின்னல் மாதிரி வந்தான்...செல்விக்கு இந்த வேலையை கொடுன்னு சொல்றான்...தொன்னோறு சதவீதம் கிபிட் கொடுத்து முடிச்சதுக்கு அப்புறம் எங்கிருந்து அதில வேலை கொடுக்கிறது?...அப்படி கொடுக்கலைன்னா அவனுக்கு ஆப்பாம்... என்ன நடக்குது இங்க?" என ஷைலஜா தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கும் போதே அங்கு வந்து சேர்ந்த செல்வி,

"சொல்லுங்க ஷைலுக்கா, கிபிட் டிஸ்ட்ரிபூட் பண்றதில் ஹெல்ப் வேணும்ன்னு சொன்னீங்களாமே. உங்க தம்பி சொன்னார். என்ன செய்யணும்?" எனவும்,

"அது...அது வந்து...ஆமா, கிபிட் கொடுக்கிறதில் ஹெல்ப் வேணும்...ஆனா கொடுத்து முடிச்ச கிபிட்டை என்ன செய்றது?" என அவள் திணற, செல்வி விழித்தாள் என்றால் அடுத்த அறையில் அவர்களது சம்பாஷணைகளை ஒட்டிக் கேட்டுக் கொண்டிருந்த நிகேதன் தலையில் அடித்துக்கொண்டான்.

செல்வியின் கண்களில் கேள்வி படர்ந்த அதே வேளையில், தம்பியின் மிரட்டலும் நினைவுவர, "இல்லைடா செல்வி! வயசு வாரியா கிபிட் வாங்கி வச்சிருந்தேனா...அதை வந்தவங்க பார்த்து கொடுக்கிறதில தான் உன்னோட உதவி தேவைப்பட்டச்சு...ஆனா, அந்த நேரம் பார்த்து உன்னைக் காணோமா...அதான் நானே...நானும் அம்மாவுமே கொடுத்துட்டோம். சாரிடா...அது தெரியாம நிக்கி வந்து உன்னை கூட்டிட்டு

வந்துட்டான்" என யோசித்து யோசித்து பேசி முடித்தாள் பெரியவள்.

"அச்சோ, தேடினீங்களா? நான் தோட்டத்தைப் பார்த்திட்டு அப்படியே நின்னுட்டேன். சாரி அக்கா" என இளையவள் வருத்தம் கொள்ள, "பரவாயில்லைடா. அப்புவை கொஞ்ச நேரம் வச்சுக்கிறியா? நான் போய் உங்க ஆபீஸ் ஸ்டாஃப் சிலரை வழியனுப்பி வச்சுட்டு வந்துவிடவா?" என்றாள் சிறு கெஞ்சலுடன்.

"போயிட்டு வாங்கக்கா. நான் பார்த்துக்கிறேன். அம்மு எங்க?" என்ற செல்விக்கு, தகுந்த பதிலைக் கூறிவிட்டு ஷைலஜா நகர, ப்ரீத்தியுடன் கொஞ்ச ஆரம்பித்தாள் வயதில் சிறியவள்.

"ஹே செல்லக்குட்டி. ஆன்ட்டி பாருங்க...ஆன்ட்டியும் நீயும் ஒரே கலர் டிரஸ்டா குட்டி...ப்ளூ...ப்ளூ செம் பின்ச்...ம்ம் பின்ச் வேண்டாம்...உனக்கும் வலிக்கும் எனக்கும் வலிக்கும். ஸ்வீட் மம்மம் சாப்பிடுவோமா? அப்புக்கு என்ன ஸ்வீட் பிடிக்கும்? ஆன்ட்டிக்கு குலாப் ஜாமூன் ஸ்வீட் பிடிக்கும்...அப்புகுட்டிக்கு என்ன பிடிக்கும்? சொல்லுங்க...சொல்லுங்க என் அப்பு சொல்லுங்க...என் தங்கம் சொல்லுங்க...என் வைரம் சொல்லுங்க...என் ராஜாத்தி சொல்லுங்க...என் புஜ்ஜு பாப்பா சொல்லுங்க...என் கண்ணு சொல்லுங்க...என் மூக்கு சொல்லுங்க...என் அப்புக்குட்டி சொல்லுங்க" என ஒரோர் கொஞ்சலுக்கும் ப்ரீத்தியின் உள்ளங்கையில் முத்தம் வைத்து கொஞ்சிய செல்வியைப் பார்க்கப் பார்க்க நிகேதனுக்கு ஆனந்தமாய் இருந்தது! இதே போன்ற ஆனந்தத்தை அவளுக்கு வாழ்நாள் முழுதும் கொடுக்கவேண்டும் என்ற ஆசை மனதில் தோன்றிய அதே சமயம், தன் மனதின் தீர்மானத்தை அவன் அலசிப் பார்க்காமல் இருக்கவில்லை!

விழா முடிந்து அனைவரும் (செல்வி - செல்லியப்பன் உட்பட) கிளம்பிச் சென்றபின்னர், வீட்டினர் அனைவரும் மனநிம்மதியுடன் படுக்கையில் விழுந்தபோது நிகேதன் மொட்டை மாடியில் நின்று நிலவில் மலர்ந்திருந்த தாமரையை ரசித்தவாறே தன் எண்ணங்களுடன் போர் புரிந்து கொண்டிருந்தது! புரிந்தது போர் என்ற போதிலும், புரியப்பட்டது மலருக்காக என்பதால் நெஞ்சம் கனிந்து முகத்தில் யோசனையுடன் சேர்த்து காதலும் வழிந்தோடியது!

இத்தனை ஆண்டுகள் அவன் பார்த்து வளர்ந்த பெண் தான் செல்வி என்றபோதும் இன்று

அவள் வித்தியாசமாய் பட்டாள்! கண்களில் எப்போதும் ஓர் தேடல் நிரம்பிய சிறுமியாய், தாயை இழந்து பரிதவித்த பசப் பைங்கிளியாய், படிக்கும் ஆர்வம் பொங்கி வழிந்த ஓர் மாணவியாய், சற்று காலத்திற்கு அண்ணன் மனைவியாய்....இங்கே நின்றது நிகேதனின் எண்ணவோட்டம்!

அண்ணன் மனைவி - அண்ணனின் மனைவியை அணைக்கத் துடித்தோமே என்ற குற்ற உணர்வாலோ அல்லது கழிவிரக்கத்தாலோ நிகேதனின் எண்ணங்கள் நிற்கவில்லை! அந்த பதவியை அவள் வகிக்கவேவில்லையே...பின்னர் எப்படி அவளை அண்ணன் மனைவி என்றெண்ணினாய் முட்டாளே? என்ற கோபத்தில் தான்!

ஆம், நிகேதனின் மனதில் நவநீதனுடன் அவள் கழித்த (வாழ்ந்த வாழ்க்கை என்று கூறக் கூட அவனுக்கு மனம் வரவில்லை) நாட்கள் அவளின் வாழ்விலிருந்து அழிக்கப்படவேண்டிய கரிய நாட்கள் என்றெண்ணமே மேலோங்கியிருந்தது! அறியாமல் போய் விழுந்த சாக்கடையிலிருந்து வெண்தாமரை மொட்டாய் அவள் மலர்ந்தது போல் நெஞ்சம் அவளது சோக வனங்களை ஒதுக்கவே முயன்று, அதில் வெற்றியும் கண்டது!

செல்லியப்பனிடம் செல்வியை ஒப்படைத்தப்போது "செல்வியோட வாழ்க்கையில கடந்த ஆறு மாசம் நடக்கவே இல்லைன்னு நினைச்சுக்கோங்க!" என்ற அவனது வார்த்தைகள், அவன் ஆழ் மனதிலிருந்து வந்தவை என்பதாலோ என்னவோ இப்போதும் அவை மீண்டும் எதிரொலித்து நெஞ்சில் புதைந்திருந்த உறுதியை இரும்பாக்கியது!

மனம் ஒதுக்கிவைத்த ஆறு மாதங்களுக்கு முன்பான நிகழ்வுகளை ஓர் புன்னகையுடன் அளவிட்டவன் - தனது ஆங்கில வாத்தியார் அவதாரத்தில் சிறிது அப்போதிருந்த செல்வியின் பால் வடியும் முகத்தின் சிரிப்பை கண் முன் கொண்டு வந்து ரசித்தான்! சில காலங்களாய் அது தொலைந்து போயிருந்ததும் கூடவே நினைவு வர, "என் திறமை மேல் எனக்கு நம்பிக்கையிருக்கு. அவளைப் பழைய செல்வியாய்...எனது தாமரையாய் என்னால் மாற்றமுடியும். மாற்றுவேன்" என்ற தீர்மானத்துடன், மேலும் இனிமையான நினைவுகளுக்கு பயணித்தது நிக்கியின் மனம்!

ஷைலஜாவின் ஆசை உணர்ந்து தனக்கே பாடம் நடத்திய செல்வியின் திறமை,

செல்வியின் தாயார் மறைந்தபின்னர், நாளின் முக்கால்வாசி நேரத்தை தர்மராஜன் வீட்டிலேயே கழிக்கும் செல்வியை வம்பு செய்வதையே முழு நேரத் தொழிலாய் தான் நடத்திவந்த கேலி-கிண்டல் தருணங்கள், படிக்கவென்று வெளியூர் சென்றுவிட்ட போதிலும் விடுமுறையில் அவளிடம் வேலை வாங்கிய தன் வீரதீர செயல் என வளம் வந்த நெஞ்சம் செல்விக்கு நடந்த திருமணத்தில் வந்து நின்றது!

ஷைலஜா செல்வியின் திருமண விஷயத்தை தன்னிடம் கூறிய போது கூட, மனம் லேசாய் வாடியதே!? அப்போதே...என் மனம் என்னையும் அறியாமல் அவள் புறம் சாய்ந்திருந்ததோ? ம்ம் அப்படியிருக்கும் பட்சத்தில் குறுக்கே விழுந்தாவது அவளது திருமணத்தை நிறுத்தியிருப்பேனே! சற்று நிதானித்து யோசியாமல் விட்டுவிட்டேனே! கடவுளே! இத்தனை வேதனையும், துன்பமும் நிகழ்ந்தே இருக்காதே! என தவித்த நிகேதனுக்கு "பூ மலரும் நொடியையும், காதலை உணரும் தருணத்தையும் தீர்மானிப்பது கடவுளே! தாமரையின் மீது தனக்கு காதல் உதிக்கும் நொடி இப்போது தான் என அவர் முடிவு செய்திருக்கையில் அது ஏன் ஓராண்டிற்கு முன்னரே நிகழவில்லை என வருந்துவதில் பிரயோஜனமில்லை" என அதிலிருந்து வெளிவந்தான்.

சந்தோஷ நினைவுகளை வலம் வந்த மனம், துக்க நினைவுகளை வலம் வரக்கூடாது என்றெண்ணியதாலோ என்னவோ துக்க நினைவுகள் ஓர் வேகத்துடன் அவன் மனதிற்குள் புகுந்தது நிஜம்! "இந்த விஷயத்தை மறக்க வேண்டும்" என்றெண்ணிக்கொண்டே அந்த விஷயத்தை நினைப்பதில், மறக்கவேண்டியவை மிக வேகமாய் நினைக்கப்படுகின்றன என்ற யதார்த்தம் புரியாவதனாய் இருந்தான் அந்த மருத்துவன்!

சில நாட்களாய் அவள் கண்களில் நிலைத்திருக்கும் பயம் கலந்த எச்சரிக்கை உணர்வு, இயல்பிற்கு சற்று அதிகமாய் வளர்ந்திருக்கும் ஒதுக்கம், கைகள் அவ்வப்போது கான்னப்படும் நடுக்கம் - என சுற்றி வந்த நெஞ்சத்திற்கு, ஆழ் மனதில் அவளுக்கென ஓர் அழுத்தமான இடமிருந்ததால் தான் அவளின் நன்மைக்காக பல விஷயங்களைத் தான் செய்திருப்பது புரிந்தது! அந்த அழுத்தமான இடம் - சக மனுஷியின் மேல் கொண்ட அக்கறையால் மட்டுமே என்று இத்தனை நாட்களாய் அவன் நினைத்திருக்க, இப்போது காதல் தான் காரணமாய் இருந்திருக்கும் என்ற முடிவை அவனுக்குள் புகுத்தியது! சக மனுஷியின் மேலுள்ள அக்கறை என்றால் - இந்தியாவிலேயே ஓர் வேலையை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கலாமே? அப்படியே சிங்கப்பூரில் வேலை என்றாலும், அவள்

வேலைக்குச் சேர்ந்த பின்னர் எதற்கு ஆயிரத்தெட்டு மின்னஞ்சல்கள், மெனக்கெடல்கள் என மனம் காதலுக்கும் அக்கறைக்கும் இடையே இருக்கும் வித்யாசத்தை அக்குவேறு, ஆணி வேறாய் பிரித்து மேய்ந்தது.

அவனது கருத்துகளை அவனே எத்தனை நேரம் தான் பிரித்து மேய்ந்து கொண்டிருப்பான்? அவனுக்கு உதவியாய்...தம்பியின் வேலையை சுலபமாக்க ஷைலஜா அங்கே வந்து சேர்ந்தாள்!

நிலவில் பார்வையைப் பதித்து, தாமரையில் நெஞ்சத்தைப் பதித்து, கனவில் உலா வந்து கொண்டிருந்த நிகேதனின் தோள்களில் கை வைத்து திருப்பிய ஷைலஜா "நடு ராத்திரியில இங்க என்னடா செய்கிறாய்?" என்றாள் குறுகுறு பார்வையுடன்.

"சும்மா தான்க்கா! தூக்கம் வரலை" என்றவனின் கண்களை நேரா பார்த்து "யாருக்கு? உனக்கு? தூக்கம் வரலை? இதை நாங்க நம்பனுமா? ஓர் நாளைக்கு இருபது மணி நேரம் தூங்கி சாதனை படைத்த இந்த சுறுசுறுப்பு திலகத்தோட வாயிலிருந்து 'தூக்கம் வரலை' என்ற வார்த்தையை கேட்க...நாராசமா இருக்கு!" என்றாள் ஷைலஜா, சிறு சிரிப்புடன். அவளது வியப்பிற்கு காரணம் - நிகேதன் அனுபவித்து செய்யும் விஷயங்களுள் தூக்கம் மிக முக்கிய இடத்தைப் பிடிப்பதால் தான்! "எப்போ படுத்தாலும் எப்படிடா உனக்கு மட்டும் இப்படி தூக்கம் வருது? கும்ப கர்ணனுக்கு இவன் பேரன் இல்லை...இவன் தான் கும்ப கர்ணனுக்கு தாத்தன்!" என மங்கை சலித்துக்கொள்ளும் அளவிற்கு, நிகேதனும் தூக்கமும் இணைத்த கரங்கள் போல் ஒன்றாகவே இருப்பர்.

"ஷ், ஷைலுக்கா! ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி யோசிச்சிட்டு இருக்கேன்...நடுல புகுந்து ஃப்லோவை ஸ்பாயில் பண்ணாதே!" என்ற தம்பியை முதுகில் தட்டி "அப்படி என்னடா, முக்கியமான விஷயம்? அதுவும் தூக்கத்தை விட முக்கியமா?" என்ற ஷைலஜாவை ஸ்தம்பிக்க வைக்கும் வண்ணம் "ம்ம், நேஷனல்லுக்கும், எனக்கும் நடக்கப்போற கல்யாணம்!" என்றான் இளையவன்.

"ஹே...நேஷனல்-னா நம்ம செல்வியா? நிக்கி என்னடா சொல்றே?" என தமக்கை திக்க

"எதுக்கு இப்படி ஒரு ஆச்சிரியக்குறி பார்வை? ஆமா, நம்ம செல்வியைத் திருமதியாக்கும் யோசனை தான்!" என்றான் தம்பி சிறிதும் பிசிறில்லாத குரலில்.

"அது...நீ...அவ...நவீ..." என்ற ஷைலஜா சொல்வதரியாமல் கைகளை அசைக்கையில் "இன்னும் செல்வியை நவநீதனோட மனைவியா பார்க்கிறியாக்கா?" என்றான் நிகேதன் கூர்மையான குரலில்.

"ச்சே ச்சே, அப்படி இல்லைடா, அவன் கட்டின தாலியை கழட்டி எரிஞ்சவ நான். அப்படியிருக்கும் போது கணவனாவது - மனைவியாவது! எல்லாம் சுத்த ஹம்பக்!" என வேகமாய் மறுத்தவள்,

"எனக்கு ரொம்ப சந்தோசம் நிக்கி! நான் அதை நினைச்சு பேசாம இருக்கல...என் சின்னத்தம்பியை பார்த்து ஒரு நிமிஷம் பிரமிச்சு போயிட்டேன்!" என்ற ஷைலஜா, தன் உயிருக்கு உயிரான தம்பியை ஆர தழுவிக்கொண்டாள்.

"இதில பிரமிக்க என்னக்கா இருக்கு? நீ இதை தயவு செய்து தியாகமா பார்க்காதே! ஒரு அழகான காதலா பாரு!" என்றான் நிகேதன் விரிந்த சிரிப்புடன்.

"ம்ம். எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. உனக்கு எப்போவுமே அதிர்ஷ்டம் அசால்டா வரும்ன்னு எனக்குத் தெரியும்! செல்விக்கும் வாழ்க்கை சுவாரஸ்யமா இருக்கும்! எனக்கு ரொம்ப சந்தோசம் நிக்கி!' எனத் தன் மனதிற்கு நெருங்கியவர்கள் இருவரையும் விட்டுக்கொடுக்காமல் அழகாய் பேசிய தமக்கையின் கண்களில் மெல்லிய கோடாய் ஆனந்தக்கண்ணீர் சுரந்திருந்தது.

"தேங்க்ஸ்க்கா! இப்போவே ஓவரா சந்தொஷப்பட்டுடாதே! எனக்குத் தான் காதல் உதிச்சிருக்கு...இன்னும் எத்தனை வேலையிருக்கு...என் காதலை நேஷனல்-கிட்ட சொல்லணும்....அவளோட சம்மதம் வாங்கணும்...முக்கியமா அவளையும் காதலிக்க வைக்கணும்....அப்புறம் பெரியவங்ககிட்ட சொல்லணும்...நிறைய வேலையிருக்கு!" என்ற நிகேதனின் மூளை அவற்றை எப்படி நடத்துவது எனத் திட்டமிடத்துவங்கிவிட்டது!

"ம்ம், இதில செல்விகிட்ட சம்மதம் வாங்குறது தான் ரொம்ப கஷ்டமான காரியாம

இருக்கும் போலிருக்கு!" என்றான் நிகேதன், மனதினுள் போட்ட திட்டத்தில் விளைவாக.

"ஏன்டா அப்படி சொல்ற? இன்னைக்கு நம்ம வீட்டுக்கு வந்ததுமில்லாம எல்லார்கிட்டயும் மன்னிப்பு கேட்டு, நல்லாவும் பேசினாளே! அப்புறம் என்ன?" என்ற தமக்கையின் தலையில் தட்டி

"மன்னிப்பு கேட்டா தான்! ஆனா, அவளோட வேதனைகளுக்கு அடிக்காரணம் நம்ம குடும்பம் தான் என்பதை அவ மறந்திருப்பான்னு எனக்குத் தோணலை! அதுவுமில்லாம, அவ 'எல்லார்கிட்டயும்' மன்னிப்பு கேட்டான்னு சொல்ற உனக்கு...அந்த 'எல்லார்'-ல நான் சேர்த்தியில்லைன்னு தெரியுமா? மேடம் என்கிட்டே மன்னிப்பு கேட்கிறது என்ன? பார்க்கக்கூட இல்லை! மாமா கூட நான் பேசிட்டு இருந்ததே அவளுக்குப் பிடிக்கலை! உங்க எல்லார் மேல இருக்க கோபத்தை மீறி என் மேல வேற ஏதோ கோபமிருக்கு...அப்படியில்லாத பட்சத்தில் அமெரிக்காவிலிருந்து அவளைக் கூட்டிட்டு வந்தவன் என்கிற முறையில் அவ குணத்திற்கு என்கிட்டே பேசியிருப்பா...ஆனா பேசலையே! சோ, சம்திங் ராங்!!! கண்டுப்பிடிக்கிறேன்!!" என்றான் நிகேதன் சிரிப்புடன்.

அவன் கூறிய விஷயத்தில் மனம் சோர்வுற்றதில் ஷைலஜாவின் பளிங்கு முகத்தில் வாட்டம் சட்டென குடிகொண்டது! "என்னடா சிரிக்கிறா? நீ சொல்றதைப் பார்த்த எனக்கு பயமா இருக்கே! ரொம்ப கோபம் வந்து...ஊருக்கே போய்டப்போறாடா" என்றாள் பதட்டமாய்.

"அவ போகலைன்னாலும்...நீயே அவளுக்கு ஐடியா கொடுப்பே போலிருக்கே! செல்ல மக்கு ஷைலுக்கா நீ" என்ற நிகேதன் உல்லாசமாய் சிரித்தான். எல்லாம் காதல் புகுத்தியிருக்கும் சந்தோசம்! அனுபவிக்கட்டும்!

"ஏய் என்ன கொழுப்பா? என் வீட்டுக்காரரையும் பிள்ளைங்களையும் எழுப்பி கூட்டிட்டு வந்தேனோ உன்னை உண்டு இல்லைன்னு செய்துடுவாங்க!" என ஷைலஜா ஒற்றை விரல் தூக்கிமிரட்டிய வேளையில் குளிர் காற்றும் சற்று அதிகமாய் வீசி, அவளது குரலில் சிறு "ஞ, ந, ம, ன" வைப் புகுதியிருக்கவே

"எதுக்கு ஜலதோஷம் அவங்கெல்லாம்? நீ ரெண்டு தும்மு தும்மினாலே நான் அப்படியே

பறந்து நேஷனல் வீட்டுக்கிட்ட போய்டுவேன்...அதை விட்டுட்டு உன்னோட ஜால்ராவை எல்லாம் ஏன் எழுப்புறே?" என நிகேதன் சந்தோஷமாய் கால் வார, ஷைலஜா சிலிர்த்துக்கொண்டு அவனைத் துரத்தினாள்.

"என் பிள்ளைங்க...உனக்கு ஜால்ராவா...அடி..." என்ற தமக்கையின் பிடியில் சிக்காமல் லாவகமாய் தப்பித்து ஓடிய நிகேதன், " 'எனக்கு' ஜால்ரான்னு சொல்லலை ஜல்ஸ்! உனக்கு...உனக்கு மட்டுமே ஜால்ரா அடிக்கும் சிங்கக்குட்டிகள்!" என்றான் பெரும் சிரிப்புடன்.

ஐந்து நிமிட ஓட்டத்திற்குப் பின்னர் தானாகவே தமக்கையின் கையில் சிக்கியவன், "இன்னும் கொஞ்ச நாள் தான் உடனே உடனே என்னை அடிக்க முடியும். அதனால அடிச்சுக்கோ! இந்த இங்க அடி...ஹான்...அங்க...இதோ முதுகில" என மாறி மாறி அவளிடம் அடிவாங்கினான்.

"ஏன்? எதுக்கு அப்புறம் எங்க போகப்போறீங்க சார்?" என்று வினவிய ஷைலஜாவின் கைகள் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தன.

"ம்ம். நேஷனல்கிட்ட!" என்றான் தம்பி "ஆ...ஊ...வலிக்குது"விற்கு இடையே.

"செல்வி வீட்டுக்கா? விடுவாங்களா?" என்ற ஷைலஜாவின் மூக்கைப் பிடித்து ஆட்டி, "மக்குன்னு சொன்னா மட்டும் மூக்குக்கு மேல கோவம் வருது! ஆனா, மக்கு பிளாஸ்திரி மாதிரி கேள்வி கேட்பியே? செல்வி வீட்டுக்குப் போனா...நீ அடிக்கிறதை விட பத்து மடங்கு அடி விழும்" என்ற நிகேதன், "நேஷனல் வீட்டுக்குப் பக்கத்தில! அந்த அபார்ட்மென்ட்ல இருக்க உன்னோட மலாய் ஃபிரண்ட் ஒருத்தங்க...புது வீடு கட்டிட்டு போறதா சொன்னியே? நான் மாறிடலாம்ன்னு பார்க்கிறேன்!" என்றான் தன் திட்டத்தின் முதல் படியாய்.

"இதுவும் ஒன்னும் அதிக தூரமில்லையே! ரெண்டு தெரு தள்ளித் தானே! இங்கிருந்தே பேசிப்பாரேன் நிக்கி..." என்ற ஷைலஜாவிற்கு அவனைப் பிரிய மனமே இல்லை.

"உன்னை விட்டுப் போகணும்ன்னு எனக்கு என்ன ஆசையா? ஆனா, அவகிட்ட

இருந்தாதான் காரியம் சாதிக்க முடியும். என் செல்ல ஷைலுக்கா இல்லையா?!" எனக் கொஞ்சிய நிகேதனின் மனதில் இருந்தது - ஷைலு வீட்டிலிருந்து அடிக்கடி செல்வி வீட்டுக்குப் போய்க்கொண்டே இருந்தால், செல்வியை விட செல்லியப்பனிடம் என்ன காரணம் சொல்லி சமாளிப்பது என்ற பயமும், அதற்கான தீர்வாய் அவள் வசிக்கும் அபார்ட்மென்ட்டிலேயே தங்கிவிடலாம் என்ற எண்ணமும் தான். அதை சொல்லவேண்டிய விதத்தில் எடுத்துச் சொல்லி, தமக்கையை சரி செய்தவன், அடுத்த நாள் காலையில் முதல் வேலையாக தாய்-தந்தையிடம் பேசினான்.

"அம்மா! அப்பா! நான் தாமரையை காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். அதை சொல்லி, அவளை சம்மதிக்க வச்சு நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வரதுக்கு உங்க சம்மதம் எனக்கு வேணும். என்ன சொல்றீங்க?" எனத் தேங்காய் உடைத்தார் போல் பட்டென விஷயத்தைச் சொல்லி, சம்மதம் கேட்ட மகனை இமைக்க மறந்து பார்த்திருந்தனர் பெற்றோர் இருவரும்.

"என்னப்பா இது? ஒண்ணுமே சொல்லாம இருக்கீங்க? அஞ்சு மார்க் கேள்வி அளவுக்கு பதில் சொல்லலைனாலும் ஜஸ்ட் ஒன் வோர்ட்ல பதில் சொல்லுங்கப்பா! நெகடிவ் மார்க்கிங் எல்லாம் கிடையாது! ம்ம்...பதில் சொல்லுங்க பார்க்கலாம்...மங்கை உங்களுக்கு ஒரு ஸ்பெஷல் ஆஃபர்! ஒரு வார்த்தை பதிலுக்கு ஒரு மார்க்கு பதிலா ரெண்டு மார்க்...அதாவது ரெண்டு முத்தம் பார்சல்! சொல்லுங்க சொல்லுங்க" என **நிகேதன்** பறக்க, அருகே நின்றிருந்த ஷ்யாம் "ஷ், அடங்கவே மாட்டியாடா நிக்கி!! என் தங்கைகிட்ட இருந்து ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் தர்ம சாத்து வாங்கத்தான் போறே! அந்த நாள்...அந்த நாள்...இந்த அண்ணன் என் கையாலேயே பாயசம் வச்சு குடிப்பேன்டா!" என்றான் மிக மிக சந்தோசம் நிரம்பிய துள்ளல் குரலில்.

"பாய்சனா? ஏன் ஜல்ஸ் அத்தானை பாய்சன் சாப்பிடிற அளவுக்கு கொடுமை பண்றே? அச்சோ பாவம் அத்தான் நீங்க!? ஒரு காலத்திலும் எனக்கு அந்த நிலைமை வராம நேஷனல் தான் காப்பாத்தனும்!" என அவன் போலியாய் வருத்தம் கொள்ள, இரு வேறு இடத்திலிருந்து அடிகள் பரிசாய் சிப்பமானது.

"நிகேதா, வாழ்க்கை விளையாட்டு கிடையாது! கொஞ்சம் சீரியஸா பேசு" என தர்மராஜன் அதட்ட,

"என் கண்ணா!" என அவனின் கன்னம் வலித்து உச்சி முகர்ந்த தாயாரின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்தோடியது.

"தேங்க்ஸ்மா! நான் என்னோட முடிவில உறுதியா, ரொம்பவே சீரியஸ்ஸா இருக்கேன். உங்க கேள்விகளுக்கு தடுமாறாம ஒழுங்கா பதில் சொல்ற அளவுக்கு எனக்குத் தெளிவிருக்கு! உங்க சந்தேகத்தை கேளுங்கப்பா" என்ற நிகேதனுக்கு, தந்தையின் மனதில் ஆயிரமாயிரம் கேள்விகள் முளைத்திருக்கும் என ஆணித்தரமாய் தோன்றியது. அதனாலேயே அவரைத் தூண்டினான்.

"நீ இதை ஒரு தியாகச்செயலா நினைக்கிறாயா?" என்ற அவரின் கேள்விக்கு, "நான் அவளைக் காதலிக்கிறேன்" என்ற அறிவிப்பே பதிலானதில் தந்தையின் முகம் தெளிந்ததோ இல்லையோ தாயின் முகம் ஓர் பெண்மணியாய் விசிகசித்தது.

"அவளை உன் அண்ணன்..." என அவர் தொடங்கியபோதே, "அவளை நான் செல்வியா தான் பார்க்கிறேன். திருமதியா இல்லை" என்றான் நிகேதன் இடைப்புகுந்து.

"நீ நினைக்கிறாய் சரி! அவள் மனதில் உன் அண்ணன் அவளைப் படுத்திய பாடு தானே நினைவிருக்கும். அப்படியிருக்கும் போது..."

"அதை மாற்றுவதுக்கு தானே நான் அவ வீட்டுக்குப் பக்கத்திலேயே போறேன். கண்டிப்பா மாறிடுவா...என்னால மாத்த முடியும்!" என்றான் நிகேதன் உறுதியாய்.

"ம்ம். சரி! நம்ம குடும்பத்தால் இழந்த வாழ்க்கையை நீயே அவளுக்குக் கொடுக்கிறாய் என்பதில் எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோசம் தான். ஆனால், அவள் மனசை மேலும் கஷ்டப்படுத்திடாதே!" என்ற தர்மராஜனிடம், "கண்டிப்பா அப்பா!! நடுவில் அவ பட்ட

கஷ்டத்தை ஈடுகட்டுற மாதிரி சந்தோஷமா வச்சுக்கிறேன்" என்றான் புன்னகையுடன். அதில் சற்றே நிம்மதியடைந்தாலும், மற்றொரு கேள்வி மனதில் எழத்தான் செய்தது. அதை எப்படி கேட்பது என அவர் யோசித்துக்கொண்டிருக்க, அவரது மனைவி அதை கேட்டு முடித்தே விட்டார்.

"கேட்கிறேன் என்று தப்பா எடுத்துக்காதே கண்ணா! எனக்கு...எனக்கு...எப்படி கேட்கிறதுன்னு தெரியல...சங்கடமா தான் இருக்கு...நீ...நீ...நவீ மாதிரி...அப்படி ஏதுமில்லை தானே!? அந்த பொண்ணு...இன்னொரு அடியைத் தாங்கமாட்டா கண்ணா...எனக்கு அவ மனநிம்மதி ரொம்ப முக்கியம். அதான் கேட்டேன்...தப்பா எடுத்துக்காதே!" எனத் தயங்கித் தயங்கி மங்கை கேட்டு முடிக்க,

"ஒரு தடவை விழுந்த அடி உங்களை இப்படி கேட்க வைக்குதும்மா. அதில எந்த தப்புமில்லை. என் மனசறிஞ்சு தாமரைக்கு நான் எந்த துரோகமும் செய்யமாட்டேன்! என்னை நீங்க நூறு சதவீதமா நம்பலாம்!" என்ற மகனை அணைத்துக்கொண்ட தாயின் பெற்ற வயிறும், மனமும் குளிர்ந்துபோயிற்று. அவனின் தெளிந்த பேச்சில் என்ன கண்டாரோ, தந்தையும் அவனின் தோளில் லேசாய் தட்டிவிட்டுச் சென்றார்.

தாய்-தந்தையின் ஆசிர்வாதம், தமக்கை மற்றும் அவளது கணவனின் தன்னிகரற்ற ஆதரவு, எல்லாவற்றுக்கும் மேலாய் தாமரையின் மீது தோன்றிய மறையா காதல் என எல்லாவற்றையும் வளர்ந்துக்கொண்ட நிகேதன், அடுத்ததாய் செய்தது சபரிமலைக்கு மாலை போட்டது!

கேள்வியாய் நோக்கிய அத்தானிடம் "காதல் நிறைவேற சாமிக்கு விரதம் இருக்கேன்!" என்று கர்ம சிரத்தையாய் பதில் கூறிய கையோடு, தன் காதலை நிறைவேற்ற அந்த வார இறுதியில் தாமரை கராத்தே பயிலும் இடத்திற்குச் சென்றான். கடவுளின் மீது கடமையை சுமத்திவிட்டு, ஐயனே என்று உட்கார மனமில்லாமல் தன்னாலான முயற்சிகளை எடுப்பதற்காக அவன் தாமரைச்செல்வியைக் காணச் சென்றது ஒரு வகையில்

நல்லதாகவே அமைந்தது.

கராத்தே பயிற்சி முடிந்து வெளியே வந்த தாமரைச்செல்வி, நிகேதன் அங்கிருப்பதை உணராமலே பேருந்து நிறுத்தம் நோக்கிச் செல்ல, வேகமாய் அவள் பின்னே சென்ற நிகேதன், "ஹாய் நேஷனல்!" என்றான் படு உற்சாகமாய்.

இவன் எங்கே இங்கே வந்தான்? வந்ததும் இல்லாமல் என்னிடம் என்ன பேச்சு? பேசுவதும் இல்லாமல் இதென்ன நேஷனல்? என சுறுசுறுவென கோபம் முளைக்க, "என் பெயர் எஸ்.தாமரைச்செல்வி!" என்றாள் வெடுக்கென.

"உன் பேர் தெரியாம 'நேஷனல்'ன்னு கூப்பிட்டேன்னு நினைச்சியா? இன்னும் இப்படி பச்சை புள்ளையாவே இருக்கியே!? சரி, சரி பரவாயில்லை. நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன். ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன். மறக்கிறதுக்கு முன்னாடி சொல்லிடுறேன். இந்தா இதை பிடி..." என்றவன், கையில் வைத்திருந்த லாவெண்டர் நிற ரோஜாக்கள் கொத்துகொத்தாய் பூத்திருந்த ரோஜாப் பூங்கொத்துடன் ஓர் வாழ்த்தட்டையும் அவளிடம் நீட்டினான்.

"என்னது இது?" என்ற செல்வி, பலத்த முறைப்புடன் தயங்க

"ஒரே ஒரு நிமிஷம் இதை பிடி! அட பிடி! நான் சொல்ல வேண்டிய விஷயத்தை சொல்லிட்டு அதை உன்கிட்ட இருந்து வாங்கிக்கிறேன். கண்டிப்பா வாங்கிக்க தான் போறேன்.... ஜஸ்ட் அஞ்சு நிமிஷம் பிடிச்சுக்கோ" என்ற நிகேதனின் முகத்தை மிகுந்த குழப்பத்துடன் நோக்கிய செல்வியின் கரங்கள் ஒருவித தயக்கத்துடன் அதை அவனிடமிருந்து வாங்கின.

"குட் கேர்ள்" என அவளைப் பாராட்டிய நிகேதன், "நான் உன்னை மனசார விரும்புறேன். நீயும் என்னை விரும்பினா...கையில வச்சிருக்கதை என்கிட்டே கொடுத்திடு! வாங்கிட்டு

ஓடியே போய்டுறேன்!" என்றான் புன்னகையுடன்.

நிகேதனின் வார்த்தைகளை உள்வாங்கவே செல்விக்கு இரண்டு நிமிடம் பிடித்தது என்றால், மனதில் ஏறிய விஷயம் அளவுக்கு அதிகமான கோபத்தை உண்டு பண்ண "என்ன பேச்சு பேசுறீங்க? கொஞ்சம் கூட அறிவில்லையா?" எனப் பெருங்குரலெடுத்து கத்த ஆரம்பித்த தாமரையிடம், கழுத்தில் போட்டிருந்த ஐயப்ப மணிமாலையை உயர்த்தி காண்பித்து "சாமி சரணம்!" என நிகேதன் கும்பிட்டபோது செல்வியின் குரல் சட்டென வடிய ஆரம்பித்தது! நிகேதன் மனதில் சந்தோஷம் குடிபுக ஆரம்பித்தது!

அத்தியாயம் 16

தாமரைச்செல்வியிடம் பூங்கொத்தை கொடுத்துவிட்டு, "நீ என்னைக் காதலிக்கும் பட்சத்தில் அதை என்னிடம் திருப்பிக்கொடு!" என்ற நிகேதன் அத்தோடு நிறுத்திக்கொள்ளாமல் "நேஷனல், நேரம் ஆகிட்டே இருக்குப் பாரு! கையில வச்சிருக்கதை என்கிட்டே கொடுத்தினா வாங்கிட்டு போயிட்டே இருப்பேன்! நேரம் பொன்னானதுடா ராஜாத்தி! அதை வேஸ்ட் பண்ணாதே!" என்றான் படு தீவிரமான குரலில்.

"விளையாடாதீங்க! நீங்க பேசுறது...பண்றது எதையாவது யோசிச்சு தான் பண்றீங்களா?" என்ற செல்வியின் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தபோதும், அவன் போட்டிருந்த மாலைக்கு மரியாதை கொடுத்து குரல் தணிந்தே இருந்தது.

"நிச்சயமா!" என்றான் நிகேதன், அதே தெளிவுடன்.

அவன் எதற்கு "நிச்சயமா" எனப் பதிலுரைத்தான் என்பது புரியாமல், "என்ன நிச்சயமா?!" என்றாள் செல்வி எரிச்சலுடன்.

"யோசிச்சு தான் பண்றீங்களான்னு கேட்டியே? அது தான் நிச்சயமா யோசிச்சுத்தான் பண்றேன்னு சொன்னேன்! நான் யோசிச்சு பண்றது நிச்சயமானதால அந்த ரோஸை என்கிட்டே கொடுத்திடேன்!" என அதை அவள் கையிலிருந்து வாங்குவதிலேயே குறியாய் இருந்தான் செல்வியின் மனம் கவர முயலும் கள்வன்.

"தர முடியாது!" எனப் பட்டென பதில் சொன்ன தாமரை, வார்த்தைகளிலிருந்த வேகத்தை காலுக்கும் புகுத்தி, வேகமாய் நடக்க முயன்றாள்.

"வாவ்! என்னைப் பிடிச்சிருக்கு என்பதை மறைமுகமா சொல்றியா?! சூப்பர்டா நேஷனல்! உன்னளவு மூளை எனக்கில்லை பாரேன்!" என்றான் நிக்கி, பலத்த ஆச்சரியத்துடன்.

"லூசாப்பா நீயி" போன்ற ஓர் பார்வையுடன் அவன் புறம் திரும்பிய செல்வி, அவனின் விரதத்தையும் மீறி அவனைக் கண்களால் எரிக்க "உங்களைப் பிடிச்சிருக்குன்னு நான் எப்போ சொன்னேன்?" என்றாள் கடித்தப்பற்களின் ஊடே.

"அதான் ரோஸை நீயே வச்சுக்கிடியே! நான் வாங்கிக்கொடுத்த ரோஸை பிடிச்சிருக்குன்னா என்னையும் பிடிச்சிருக்குன்னு தானே அர்த்தம். தேங்க்ஸ், தேங்க்ஸ், தேங்க்ஸ். நான் கிளம்புறேன். நீயும் பத்திரமா வீட்டுக்குப்போ. நைட் ஃபோன் பண்றேன்" என்றான் நிகேதன் தன் காரின் புறம் திரும்பியவாறே.

"மண்ணாங்கட்டி! இந்தாங்க நீங்க கொடுத்த குப்பை...எடுத்திட்டு போங்க" என செல்வி நீட்ட

"வாவ்! இப்போ நீ என்னை லவ் பண்றே...அப்படித்தானே!" என அப்போதும் கண்ணடித்து அவளுக்கு மேலும் வெறுப்பேற்றினான்.

"கடவுளே!" என்ற செல்வியின் கண்களில் அதீதமாய் கோபம் மின்னவே, "நீங்களும் உங்க ரோஸும்! வேணும்னா எடுத்துக்கோங்க...இல்லைனா அப்படியும் போங்க" என்ற கோபச்சொற்களுடன், அவன் கொடுத்த ரோஜாப்பூங்கொத்தை வீதியில் வீசியெறிந்தாள்.

அவள் வீசியெறிந்ததில் நிகேதன் வாங்கிக்கொடுத்த வாழ்த்தட்டை திறந்து கொள்ள, "தாமரையே மலர்ந்திடு! உன் முகம் பார்த்து நான் மலர வரம் கொடு!" என்ற நிகேதனின் குரலைத் தொடர்ந்து "நிகேதன் லவ்ஸ் தாமரை" என்ற வாக்கியம் இன்னிசை மழையாய் நிற்காமல் பெய்துகொண்டிருந்தது.

அதில் அதீதமாய் அதிர்ந்து, வாழ்த்தட்டையை சாலையிலிருந்து பொறுக்கியவள் "பைத்தியமா உங்களுக்கு?" என்ற சொல்லுடன் நிகேதனைப் பார்த்தாள்.

"இல்லையே! ஏன் கேட்கிறே?" என அப்பாவியாய் வினவிய நிகேதனுக்கும் அவளது அதிர்ச்சி புரிந்தது. ஆனால், காதல் பகிரும் கணத்தை அவன் கனமனதாய் ஆக்கவிரும்பவில்லை. எதுவாக இருந்தாலும் தன் இயல்பான கிண்டலிலும், கேலியிலுமே அவளை சமாளிக்கவிரும்பினான். வாழும் நாட்கள் யாவும் எண்ணி எண்ணி மகிழ வேண்டிய கணங்களை கனத்த விவாதத்தோடு துவங்க மனமின்றி, சிரித்தே சமாளித்தான் அவன்.

"உங்களோட வார்த்தையாட எனக்கு நேரமுமில்லை..இஷ்டமுமில்லை. நீங்க என்ன கருமத்தை நினைச்சாலும் எனக்கு ஒரு மண்ணுமில்லை" என்ற தாமரைச்செல்வி, தன் கையிலிருந்த பூங்கொத்தை அவன் கையில் திணித்துவிட்டு, பேருந்து நிலையம் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"ஹே நேஷனல்!" என்ற நிகேதனின் குரல் அவளை ஒரு வினாடி கூட தாமதித்து நிறுத்தவில்லை. ஒரே எட்டில் அவளுடன் இணைந்து கொண்டவன் "நேஷனல், எதுக்கு இவ்வளவு கோபம்? கொஞ்சம் நிதானமா உட்கார்ந்து பேசலாமா?" என்றான் நயமாக.

அவனுக்குப் பதில் சொன்னால் தானே மேலுமேலும் ஏதாவது பேசி எரிச்சல் மூட்டுகிறான் என்ற கோபத்தில், உதட்டை இறுக மூடிக்கொண்டு செல்வி மிக விரைவாய் தன் நடையை போட்டாள்.

அப்போதும் விவாதத்தை உணர்ச்சிப்பூர்வமாய் திருப்ப மனமில்லாமல் "உன்னோட நேரத்தை அதிகம் வீணாக்கமாட்டேன் தாமரை. பத்து நிமிஷம் மட்டும் போதும். அதுக்குள்ள என்னோட காதலை உனக்குப் புரிய வச்சுடுவேன்" என்றான் நம்பிக்கையுடன்.

அவனது "காதல்" என்ற வார்த்தையில் மீண்டும் சிலிர்த்து, அடுத்த அனல் பார்வையை அவனுக்குப் பரிசாக்கியவளிடம் "சாமியை முறைக்கக்கூடாதுமா" என்றான் நிகேதன் சட்டென முளைத்த சிரிப்புடன்.

அவனது யுக்தி புரிந்தவளாய் "சாமி பேரை சொல்லிட்டு ரோடு சைடு ரோமியோ மாதிரி என்னை சுத்திவர உங்களுக்கு வெட்கமாயில்லை?" என்றாள் செல்வி காட்டமாய்.

"எதுக்கு வெட்கப்படணும்? இல்லை எதுக்கு வெட்கப்படணும்? என்னோட காதலை நிறைவேத்தி வை ஐயப்பா என்று தான் விரதமே இருக்கேன். ஜஸ்ட் விரதம் மட்டும் இருக்காம அதுக்கான முதல்படி எடுத்து வச்சிருக்கதை நினைச்சு சந்தோசம் படணுமே ஒழிய எதுக்கு வெட்கம்? நிறைவேறிய வேண்டிய காதலுக்கு விரதம் இருக்கும் போது, அந்த காதலை சொல்றது தானே முறை! அதை தான் செய்றேன்!" என்றான் நிகேதன் தன் பக்க விவாதமாய்.

"உங்ககிட்ட பேசமுடியாது! உங்க குடும்பத்தில எல்லாருக்குமே நீங்க செய்ற அதிகப்பிரசங்கித்தனங்களை நீங்களே நியாயப்படுத்தி தானே பழக்கம்!? " என்றவளின் இளக்காரக்குரலில் நிகேதனின் நடை நின்றது.

"ஒரு காரியத்தை செஞ்சுட்டு அதுக்கான காரணங்களைத் தேடி அலையுற ஆளில்லை நான்! அப்புறம், ஒரு முக்கியமான விஷயம்... நான் மனசு முழுக்க பக்தியோட தான் விரதம் இருக்கேன். அந்த பக்திக்குக் காரணம் காதல்ன்னு வெளிப்படையா நான் சொல்றதால அது உனக்கு அதிகப்பிரசங்கித்தனம் போல தெரியலாம்...என்னடா இவன் மாலையை போட்டுட்டு பொறுக்கி மாதிரி சுத்துறான்னு கூட நீ நினைக்கலாம்...லாம் என்ன லாம்...நினைக்கிற...ஆனா, என் குடும்பம் நல்லா இருக்கணும்! வேலை கிடைக்கணும்! கல்யாணம் சீக்கிரம் நடக்கணும்! நல்ல துணை அமையனும்! எனக்கு குழந்தை பிறக்கணும்! ன்னு எத்தனை பேர் விரதம் இருக்காங்க...அவங்கெல்லாம் ஓர் உயிர் மேல வச்சிருக்க அன்பு நல்ல விதமா நிலைக்கணும்ன்னு தானே விரதம் இருக்காங்க...அதெல்லாம் தப்பா படாதபோது...காதலும் ஒரு வகை அன்பு தானே? அது நிறைவேற விரதம் இருக்கிறதில் என்ன தப்பு? விரதத்தோட சேர்த்து அதுக்கான முயற்சியும் ஒருத்தன் செஞ்சா அது அதிகப்பிரசங்கித்தனமா? உன் அகராதியில் அப்படியிருந்தா...அதை நான் மாத்த விரும்பல. அப்படியே நினைச்சுக்கோ. நான் வரேன்." என மிக மிக நிதானமாய் பதில் கூறிவிட்டு, தன் வாகனம் நோக்கி நிகேதன் நகர, செல்வியும் தலையை அலட்சியமாய் சிலுப்பிக்கொண்டு பேருந்து நிலையம் நோக்கி நடந்தாள்.

ஆனால் அவள் இரண்டடி நகர்ந்திருக்கையில் "ஹேய நேஷனல், இதோட முடிஞ்சுடுச்சுன்னு நினைக்காதே! நாளைக்கும் வருவேன்! என் 'அதிகப்பிரசங்கித்தனங்கள்' நாளைக்கும் தொடரும்! நாளைக்கும் வரேன்கிறதுக்காக புது பௌக்கே எல்லாம் வாங்கமுடியாது...இதையே தான் எடுத்திட்டு வருவேன். காத்திட்டு இரு" என்றவனின் குரலில் மருந்துக்கும் தீவிரமில்லாமல் குதூகலமே நிரம்பி வழிந்தது.

"சை" என செல்வி நகர, "சாமி...சாமி...திட்டக்கூடாது! சாமி சரணம் சொல்லிட்டே போ!" என்றவனின் குரல் தேய்ந்து மறையும் வரை, செல்வியின் கன்னங்களில் ஏறியிருந்த கோபச்சிவப்பு சற்றும் குறையவில்லை.

பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்த செல்வியின் மனம் உலைக்களமாய் கொதித்தது. "என்ன ஒரு தைரியம்? என்ன ஒரு திமிர் இருந்தால் என்னிடமே...என்னிடமே உன்னைக் காதலிக்கிறேன்ன்னு சொல்லுவான்? அதுவும் அவன் கூட பிறந்தவனால படக்கூடாத கஷ்டமெல்லாம் பட்டவள் கிட்டேயே...சை அதுக்கு சாமி வேற துணை?" என்று ஆரம்பித்த பொருமல், வீடு வந்து சேரும் வரை பெரும் அர்ச்சனையாய் தொடர்ந்தது.

"காதல்? இந்த வார்த்தை இவனுக்கு எங்கிருந்து முளைத்தது? ஹோ, அண்ணனால் கைவிடப்பட்ட பெண்ணிற்கு வாழ்வு கொடுக்கிறாராமா? இவன் போடும் பிச்சை வாழ்க்கை எனக்குத் தேவையில்லை...பெரிய தியாகச்செம்மல். இவர் அண்ணன் கெடுத்து வைத்ததை மேலுமேலும் கெடுக்கிறதுக்கு வந்துட்டார்...சை!"

"இவங்க வீட்டு சந்காப்தமே வேண்டாம்ன்னு தானே இருந்தோம். இப்போ இவங்க அப்பா-அம்மா-அக்காகிட்ட ஒழுங்க பேச ஆரம்பிச்சதால எனக்கு எல்லாம் மறந்திடுச்சுன்னு நினைச்சுட்டாங்க போல...அவங்க மேல தப்பில்லைன்னு எனக்குத் தோணினதால சகஜமா பேசினேன்...மன்னிப்பு கேட்டேன்...அதுக்காக அந்த வீட்டு பெரிய மனுஷன் செய்த காரியத்தை மறக்கமுடியுமா? மறக்கக்கூடிய காரியமா என்ன?"

"என்னை அங்கிருந்து கூட்டிட்டு வந்ததால இவர் மேல எனக்கு கோபம் வராதுன்னு நினைச்சார் போல...சாருக்கு, அம்மாக்கு அவங்க அண்ணனோட குணம் தெரியாம இருந்திருக்கலாம்...ஆனால் நிகேதன்? நவநீதனே "நிக்கியிடம் சொல்லி அப்பா-அம்மாகிட்ட ஜாக் விஷயம் சொல்லியிருப்பேன்" என்றானே...அப்படியொரு

நம்பிக்கைக்கு பாத்திரமானவன் எப்படி நல்லவனாய் இருக்கமுடியும்?"

"நல்லவனோ கெட்டவனோ...இன்னொரு ஆணிடம் என் வாழ்க்கையை ஒப்படைக்க நான் என்ன லூசா?"

"நான் அந்த நரகத்திலிருந்து "என்னைக்காப்பாத்துங்க"ன்னு கூப்பிட்டப்போ வந்தான் தான். அந்த நன்றி எனக்கிருக்கு...ஆனால் நான் சொன்னதை மட்டும் நம்பி வந்திருக்க மாட்டான்...சொல்லி ஒரு வாரம் கழிச்சு தானே வந்தான்...என் மேல உண்மையான அக்கறை இருந்தா சீக்கிரமே வந்திருக்கலாமே!"

"அப்போ வந்தப்போ ஒரு ஃபிரண்ட்டை கூட்டிட்டு வந்தானே...அவனை விட்டு முதலேயே ஏதாவது செய்திருக்கலாம் இல்லையா? அந்த மிருகத்துக்கிட்ட என்னை அடி வாங்க விட்டுப் பார்த்திட்டு தானே இருந்தான்..."

"தன்னை இந்தியா அழைத்துவந்த போதுகூட, தன் தந்தையிடம் தன்னை ஒப்படைக்கத் தயங்கியவன் தானே! அவரிடம் தன் அண்ணனின் வண்டவாளத்தை மறைக்கவே முயன்றானே! அண்ணன் மேல் கோபமிருந்தால் எதற்கு தயங்கவேண்டும்? எதற்கு மறைக்கவேண்டும்?"

"இவனும் இவன் அண்ணன் போல தான்..."மாமா வருத்தப்படுவாங்க...அப்புறம் சொல்லலாம்" என்று சொல்லிக்கொண்டு...எனது வாழ்க்கை முடிவுகளை அவன் எடுத்துக்கொண்டு...சை..."

"இப்போதும் பெரிய இவன் மாதிரி காதல் வசனம் பேசிட்டு வந்துட்டான். இவர் சொன்னதும் நாங்க அப்படியே ஒத்துக்கிட்டு "நாதா"ன்னு பின்னாடியே போய்டணுமா? நினைப்பு தான் பிழைப்பை கெடுக்குதாம்! ஹுக்கும். இவனை நினைச்சு என் பிழைப்பு தான் கெடுது" என தலையை உலுக்கி நிகேதனின் நினைவுகளிலிருந்து வெளிவந்தாள் (வெளிவர முயன்றாள்) தாமரைச்செல்வி.

இப்படியாக, நவநீதன் - நிகேதனை தன் கலாச்சார மாற்றத்திற்கு துணைபோவான் எனக் கூறியதை மட்டும் அஸ்திவாரமாய் கொண்டு, அதில் நிகேதனும் ஓர் ஆண் மகன் என்ற உடையாத கட்டிடத்தைக் கட்டி, அவன் செய்யாத குற்றங்களையெல்லாம் செய்த

பட்டியலில் சேர்த்து அவற்றை வெறுப்பலான அவ்வீட்டிற்கு சுவர்களாக்கி, அவனது நல்ல செயல்களை மண்ணோடு மண்ணாக புதைத்து அந்த வீட்டிற்கு உரமாக்கி, அவனது தற்போதைய காதலுக்கு தியாக வண்ணம் பூசி, நிகேதன் மேல் தனக்கிருக்கும் வெறுப்பெனும் வீட்டை மென்மேலும் அழகுபடுத்தி வைத்திருந்தாள் தாமரை.

எப்போதும் கராத்தே வகுப்பு முடிந்து வீடு வருபவள், செல்லியப்பன் செய்து வைத்திருக்கும் சாதாரண சாப்பாட்டையே "நல்லா செய்திருக்கேபா" எனக் கூறி, இரு பிடி அதிகமாய் உண்பவள் - இன்று தன் கையில் தந்தை கொடுத்த தட்டை விலக்கி, "உன் மடியில படுத்துக்கிறேன்பா" எனக் கூறி, பெரியவரின் மடியில் தஞ்சம் புகுந்தாள்.

ஒன்றும் சொல்லாமல் பெண்ணின் சிகையை வருடிக்கொடுத்த செல்லியப்பன், முப்பது நிமிடங்கள் சென்றபின்னரும் பெண் நிமிராமல் இருக்கவே "பாப்பா, சண்டை போட்டுட்டு வந்தது பசி எடுக்கலையா? அப்பா அள்ளி தாரேன்...சாப்பிடுறியா?" என்றார் வாஞ்சையாக.

கராத்தேயை சண்டையென அவர் குறப்பிட, நிகேதனுடன் தான் பேசியதை தான் சண்டையென குறிப்பிடுகிறாரோ என்று எண்ணி, அதிர்ந்த தாமரையின் எண்ணங்கள் மனதிற்குள் நிகேதனை அர்ச்சித்தன. "சபரி மலை மாலையை போட்டுட்டு இவன் பண்ற அழிச்சாட்டியம் இருக்கே! என்கிட்டே வந்து பேசினதும் இல்லாம அப்பாகிட்டயும் வந்து ஏதோ உளறி வச்சிருக்கான் போலவே? இவரும் பெண்ணிற்கு ஓர் நல்ல வாழ்க்கை கிடைக்கப்போகுதுன்னு கண்ணுல தண்ணி வச்சுக்கிட்டு அவன்கிட்ட இளிச்சு பேசிட்டு இருந்திருப்பார். இப்படி வெள்ளேந்தியா வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிறதை எப்போ விடப்போறாரோ?" என்று மனதிற்குள் பொருமியவள், "ஏன்பா இப்படி அப்பாவியா இருக்கே? யாரு என்ன வந்து சொன்னாலும் நம்பிடறதா?" என்றாள் எரிச்சல் கோடுகளுடன்.

"என்ன பாப்பா சொல்தே?" என செல்லியப்பன் புரியாமல் விழிக்க,

"ஆமா சொல்றாங்க! எல்லாரையும் சட்டு சட்டுன்னு நம்பாதேபான்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது? அன்னைக்கு ஷ்யாம் அண்ணா வீட்டில கண்டவங்களோட எல்லாம் என்ன பேச்சு உனக்கு?" என நிகேதன் மேலிருந்த கோபத்தையெல்லாம் செல்லியப்பன் மேல் காட்டினாள் சிறியவள்.

"என்ன கண்ணு? ஏன் இம்புட்டு கோபம்? இந்த ஊரு பாஷையே எனக்கு விளங்குதில்லைன்னு நான் யாருகூடவும் பேசவே மாட்டேன் கண்ணு! புள்ளைங்க புறந்தநாளுக்கு நீ தானே போகலாம்ன்னு சொன்னே...அங்கேயும் நான் ரவுசா ஒன்னும் பேசவே இல்லையே!" என்றார் செல்லியப்பன் பாவமாக.

"ப்ச். போப்பா! இனிமேல் யார் என்ன சொன்னாலும் நம்பக்கூடாது என்ன? முக்கியமா அந்தாளு!" என்றவளை விநோதமாய் பார்த்து, "யாரு? என்ன சொன்னாங்க? எதை நம்பக்கூடாது?" என வினவியவரைப் பார்த்து, "சும்மா! எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதே...அந்தாளு இங்க வந்து உன்கிட்ட ஏதோ பேசியிருக்கார். அவர் சொன்னதை நம்பி...நான் அவரோட சண்டை போட்டேன்னு கேட்கிறியே!? போப்பா...இன்னொரு தடவை நாம கஷ்டப்படணுமா? பட்ட கஷ்டம் பத்தாதா?" என அவள் கோபம் கொள்ள,

"இங்க யாருமே வரலையே கண்ணு? நீ சண்டை கிளாஸ்ஸுக்கு போயிட்டு வந்தியேன்னு கேட்டேன்...அங்க யார் கூடவும் வாய்ச்சண்டை போட்டியோ? யாரு பாப்பா? உன்னை ரெம்பவும் தொந்தரவு செய்றாங்களா? ஷ்யாம் தம்பிகிட்ட சொல்லிப்புடுவோம்" எனத் தந்தையை அவர் அக்கறை கொள்ள, செல்விக்குத் தலையில் அடித்துக்கொள்ளலாம் போல் தோன்றியது.

"ஹய்யோ! என் வாயாலேயே மாட்டிக்கிட்டேனே! எல்லாம் இவனால் தான்! இப்போ அப்பாக்கிட்ட என்ன சொல்லி சமாளிக்கிறது?" என ஒரு நிமிடம் விழித்தவள், "அதெல்லாம் ஒண்ணுமில்லைபா. நான் பார்த்துக்கிறேன். சண்டை போட்டுட்டு வந்தது வயிறு பசிக்குது. சாப்பிடலாமா? ஒரு முட்டை அடை ஊத்தித்தரியா? மிளகு சீரகம் மட்டும் போடு..." என அவரை அங்கிருந்து கிளப்பிய பின்னரே செல்வியின் மனம் லேசாய் நிம்மதியடைந்தது.

செல்லியப்பன் அடுப்பின் முன்னர் நின்ற சில நிமிடங்களில், இனிமேல் நிகேதனை பற்றி எண்ணவே கூடாது என்ற தீர்மானத்திற்கு வந்து சேர்ந்திருந்தாள் தாமரைச்செல்வி. மனதின் உறுதி உடலை சுறுசுறுப்பாக்க, தந்தையை அமரவைத்து, அவருக்கும் தனக்கும் உணவு பரிமாறி, அவருடன் சில நிமிடங்கள் முன்னர் கோபமாய் பேசியதற்கு ஈடுகட்டும் வண்ணம் கராத்தே வகுப்பில் அவளுக்குக் கிடைத்த சீன நம்பியைப் பற்றி உரையாற்றி,

அத்துடன் சேர்த்து உணவையும் உண்டுமுடித்து, சமைத்த பாத்திரங்களைக் கழுவி, தந்தையுடன் சேர்ந்து வீட்டை சுத்தம் செய்து, மாலையில் பக்கத்திலிருக்கும் பூங்காவிற்கு அவரை அழைத்துச்சென்று, அங்கிருந்த பூக்களின் சுகந்தத்தில் தன்னை உட்படுத்திக்கொண்டவள், நிகேதன் சொன்ன காதலை மறந்துவிட்டதாகவே நினைத்தாள்! அப்படியில்லை என்பது சிறிது நாட்களில் வெட்ட வெளிச்சமான போது செல்வியை அதை உணரும் நிலையில் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த நாள் காலை வேலைக்குச் சென்றபோது, நிகேதன் செய்த காரியத்தைப் பற்றி ஷ்யாமிடம் சொல்லலாமா என ஒரு நிமிடம் தோன்றியபோதும், எப்போதும் அவன் உதவியை நாடி இருப்பது சற்று சங்கடமாகவும், தன் பிரச்சனைகளை தானே சமாளித்துக்கொள்ளத் தெரியாமல் பிறரிடம் உதவிக்கு நிற்கும் வாடிக்கை உணர்வு தன்னம்பிக்கையை குறைப்பதாகவும் பட, மீண்டும் நிகேதன் வரும்போது பார்த்து கொள்ளலாம் என்ற முடிவுடன் கணினியை உயிர்ப்பித்தாள் இளையவள்.

மின்னசல் பெட்டியை திறந்த வினாடி, "உன் நண்பன்" என்ற மின்னஞ்சலைத் தேடி கண்கள் அலைபாய, அவளின் எதிர்பார்ப்பை வீணடிக்காமல் அங்கே அமர்ந்திருந்தது "உன் நண்பன்" என்ற தலைப்பிலான மின்னஞ்சல். எப்போதுமிருக்கும் அதே ஆர்வம் சற்றும் குறையாமல் அதை திறந்தவளுக்கு, "காலை வணக்கம்" சொல்லியது ஓர் சிறு குழந்தை. அந்த குழந்தையின் கைகளிருந்த லாவெண்டர் நிற ரோஜா லேசாய் நெருடியபோதும், தன் பொக்கை வாய் சிரிப்பை காட்டி சிரித்த குழந்தையைப் பார்க்க அழகாய் இருந்ததில் செல்வியின் கவனம் அதில் முற்றிலுமாய் திரும்பவில்லை.

அதன் பின்னர், அலுவலக வேலை நெட்டி முறிக்க, செல்வியும் தன் முழு கவனத்தையும் அதில் செலுத்தி சிரத்தையாய் வேலைசெய்தாள். பதினோரு மணியளவில் கையில் டீ கோப்பையுடன் அமர்ந்தவளின் மனம் மீண்டும், அந்த மின்னஞ்சல்களைத் தேடி, இப்போது வந்திருந்தது "இருபதே நிமிடத்தில் மலாய் பாஷை" என்ற மின்னஞ்சல்.

ஆர்வமிக அதை திறந்தவளுக்கு "நன்றி", "வணக்கம்", "காலை வணக்கம்", "மாலை வணக்கம்", "மன்னிக்க வேண்டுகிறேன்", "உன் பெயர் என்ன?", "எப்படி இருக்கிறாய்?", "சாப்பிட்டாயா?", "நீ ரொம்ப அழகா இருக்கே" போன்றவைக்கு மலாய் மொழி பெயர்ப்புகள் இருக்க, செல்வியும் சிறு சிரிப்புடன் அதை மனதில் பதித்துக்கொண்டே வர,

"இவை எல்லாவற்றையும் விட ஓர் முக்கியமான மொழி பெயர்ப்பு உங்களுக்காக! மறக்காமல் படியுங்கள்" என்ற ஆங்கில அறிவிப்பிற்கு கீழே "நான் உன்னை காதலிக்கிறேன்" என்பதற்கான மலாய் மொழியாக்கம் வீற்றிருந்தது.

சிறிதே மனம் சுனங்க அவள் அதை வாசித்துக்கொண்டிருக்கும் போது, ஷ்யாமின் "செல்வி, என் அலுவலரைக்குள் உடனே வரமுடியுமா?" என்ற செய்தி, உள் அலுவலக மின் அரட்டை மூலமாக அவளை அடைய, அந்த சுனக்கதிலிருந்து தற்காலிக ஓய்வு பெற்றாள் அவள். அந்த தற்காலிக ஓய்வை நிரந்தரமாக்கும் வண்ணம், ஷ்யாம் வேலைகளால் அவளை மூழ்கடிக்க, மாலையில் வீடு திரும்பும் வேளையில் செல்விக்கு அந்த மின்னஞ்சலின் நியாபகம் சுத்தமாய் தொலைந்திருந்தது.

அடுத்த நாளும் ஓர் சராசரி வேலை நாளாய் செல்ல, அதற்கு சிறிது சோம்பல் வண்ணம் பூசும் பொருட்டு "உனக்காக" என்ற தலைப்பிலான மின்னஞ்சல்கள் வரவே இல்லை. மனதின் ஓரத்தில் ஏதோ காலியாக இருப்பது போல் தோன்றிய உணர்வை போக்குவதற்காக, தந்தையை அழைத்துக்கொண்டு பக்கத்திலிருக்கும் காளி கோவிலுக்குச் சென்று வந்த செல்வி, தன் வீட்டின் கதவை திறக்கையில் அவர்களது பக்கத்துக்கு வீட்டுச் சிறுமி அவளின் சுடிதாரை பிடித்து நிறுத்தினாள்.

செல்லியப்பன் உள்ளே சென்றிருக்க, செல்வி அந்த குழந்தையின் உயரத்திற்கு குனிந்து "என்னமா?" என்று வினவியதும், குண்டு குண்டு கன்னமும் கோவைப்பழ உதடுகளும் கொண்டு அந்த சுட்டி "நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க" என்றாள் மலாய் பாஷையில். செல்விக்கு சட்டென்று அவள் கூறியது விளங்காமல் போனாலும், முந்தைய தினம் வந்த மின்னஞ்சலை நினைவு கூர்ந்து யோசிக்க முயன்று தோற்றாள்.

பின்னர் "அப்படின்னா என்னடா?" என அந்த குழந்தையே அவள் வினவ, "கிகிக்கி" என சிரித்த சிறுமிக்கு அர்த்தம் சொல்லும் எண்ணமெல்லாம் சிறிதும் இருக்கவில்லை.

"ம்ம். சொல்லமாட்டேன். நீங்களே தான் கண்டுபிடிக்கணும்" என்ற கையோடு, "ம்ம். இன்னொன்னு சொல்லணுமே? ஹான்..." என சத்தமாய் யோசித்துவிட்டு, "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றாள் மலாய் பாஷையில், படு குஷியுடன்.

© Bhuvana's Stol

அவள் பேசியதின் அர்த்தம் செல்வியின் மூளைக்குள் புகும் தருணத்தில், "இதெல்லாம் நான் சொல்லலை. அந்த அங்கிள் தான் சொல்லச் சொன்னாங்க! பாய் ஆன்ட்டி!" என்ற அறிவுப்போடு அவள் சிட்டாய் பறக்க, அவள் கை காட்டிய திசையில் கண்களில் செலுத்திய செல்வியின் அதிர்ந்த பார்வை வட்டத்திற்குள் விழுந்தவன், நிகேதன்!

அத்தியாயம் 17

தன் பார்வை வட்டத்திற்குள் விழுந்தவனை பார்த்த தாமரைச்செல்விக்கு "இவன் ஏன் இங்கே வந்தான்?" என்ற கேள்வியுடன், "சின்னக் குழந்தையிடம் என்ன சொல்லி அனுப்புவது என்ற இங்கீதம் கொஞ்சம் கூட இல்லாமல் இவனெல்லாம் ஒரு டாக்டர் சை!" என்ற எரிச்சலும் ஒருங்கே வந்து சேர்ந்தது.

சின்னது என்றாலும் பலமான ஓர் முறைப்புடன் வீட்டினுள் செல்வி நுழைய முற்பட்டபோது, மின்னல் வேகத்துடன் அவள் எதிரே விஜயம் செய்த நிகேதன் "ஹாய் நேஷனல்! எப்படி இருக்கே? ரெண்டு நாளா உன்னைப் பார்க்காம எனக்குத் தூக்கமே வரலை...சாப்பாடு இறங்கலை...வேலையே ஓடலை..." எனக்கூறி சிறு இடைவெளிவிட்டு "இப்படியெல்லாம் எதுவுமே நடக்கலை. எப்பவும் இருக்கிறதை விட ரொம்ப சந்தோஷமா இருந்தது இந்த ரெண்டு நாளும்! ஏன் தெரியுமா? நீ கேட்டா தான் நான் சொல்லுவேன்..." என்றான் பெரிய பிகுவுடன்.

"ஆமா, இவனிடம் உட்கார்ந்து கதை பேசுறதுக்கு தான் தவமிருக்கிறேன் பாரு" என மனதிற்குள் நினைத்ததை வெளியே சொல்லாமல், கதவைத் திறந்து கொண்டு செல்வி உள்ளே செல்ல முயல "சின்னப்புள்ளன்னு நிரூபிக்கிற பாத்தியா?! வயசில பெரியவன் நின்னு பேசிட்டு இருக்கும்போது இப்படி தான் போறதா? கூப்பிடு மிஸ்டர்.செல்லியப்பனை...என்ன பொண்ணு வளர்திருக்கீங்கன்னு கேட்கிறேன்! கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாமா" என அவளையும் தாண்டிக் கொண்டு, வீட்டின் கதவை அவன் திறக்க முற்பட, கதவை மறித்துக் கொண்டு நின்றாள் தாமரை. அவளுக்கு, தந்தையிடம் என்ன பேசி அவரை குழப்புவானோ என்ற பயம்!

"இது தான் நல்ல பிள்ளைக்கு அழகு! அதே அழகோட என்னோட சந்தோஷத்திற்கு என்ன காரணம்ன்னு கேளேன்...அட கேளேன்...அட ஏன்னு கேளேன்...அட கேளுமா...என் சொந்த நேஷனல் இல்ல கேளேன் ப்ளீஸ்" என்றான் ராகத்துடன். அவன் பேசிய பாவனை

சிரிப்பை வரவழைத்தப்போதும், கன்னத்திற்குள் அதை அடக்கிக்கொண்டு, மீண்டும் உள்ளே செல்ல முயன்றாள்.

"உனக்குத் தான் பெரிய மனசில்லை. அதுக்காக பெரிய மனுஷன் எனக்கும் மனசு சின்னதா இருக்குமா என்ன? நானே சொல்றேன்..." எனத் தன் டி-ஷிர்டில் இல்லாத காலரை தூக்கிவிட்டுக் கொண்டு, "இந்தியாவின் தேசிய மலர் இந்த குடியிருப்பு வளாகத்தில் இருப்பதாய் வந்த தகவலின் பேரில், மலரிடம் நயமாக பேசி சொந்த வீட்டிற்கு..ம்ம் நாட்டிற்கு அழைத்துச் செல்லும் பணிக்காக மேலிடம் என்னை அனுப்பியிருக்கும் பட்சத்தில் இந்த குடியிருப்பிலேயே சமாதான தூதுவராய் குடிபுகுந்து விட்டேன்" என்றான் நாடக பாணியில்.

"கடவுளே! இங்கேயே குடியேறிவிட்டானா?! இனி தினம் தினம் இவனது காதல் கன்றாவி பேச்சுக்களை கேட்டாகவேண்டுமே" என மனம் துணுக்குற இரண்டு வினாடி அவனை வெறித்துக்கொண்டு நின்றவள், "என்னை நிம்மதியா இருக்க விடுறதில்லைன்னு முடிவு பண்ணிட்டீங்க?! ரொம்ப சந்தோஷம்! உங்களா முடிஞ்சா அளவு என்னைக் கஷ்டப்படுத்துங்க" என்றாள் மிக கடுமையான குரலில்.

அந்த கடுமையான குரலை விட அதற்கு பின்னிருந்த அவளது வேதனையும் வலியும் நெஞ்சை அறுக்க, "ஒகே நேஷனல், நான் கிளம்புறேன். அப்புறம் பேசலாம்" என்றதோடு நகர்ந்துவிட்டான் நிகேதன். தான் பேசியதற்கு அவனிடம் ஓர் விவாதத்தை எதிர்பார்த்திருந்த செல்விக்கு சிறு ஏமாற்றம் தோன்றியது நிஜமே என்றாலும், ஏமாற்றத்தை முகத்தில் காட்டாமல் "ரொம்ப சந்தோஷம்!" என்றதோடு வீட்டின் புறம் திரும்பி ஓரடி உள்ளே எடுத்து வைத்துவிட்டாள் செல்வி.

"வாவ்! என்னோட பேசுறதில் உனக்கும் சந்தோஷம் தான் இல்லையா? அப்போ...இப்போவே பேசிடலாமா? என்ன சொல்றே நேஷனல்?" என அவன் கண் சிமிட்ட, தலையில் அடித்துக் கொண்ட செல்வி தலையைத் திருப்பியபோது செல்லியப்பன் வாசலுக்கு வந்துவிட்டிருந்தார்.

"யாரு பாப்பா?" என அவரது கேள்விக்கு, "யாருமில்ல" என செல்வி மறைக்க, "ஹாய் மாமா" என நிகேதன் கையை ஆட்டித் தன் வரவை தெரியப்படுத்தினான்.

"தம்பி!! நீங்களா? என்ன தம்பி இங்கன?" என அவரும் ஆச்சிரியப்பட, "அம்மா-அப்பா-நான்...இங்க தான் இரண்டாவது மாடிக்கு குடிவந்திருக்கோம் மாமா" என்றான் அவருக்குப் பதிலாய்.

"ஏன் தம்பி?" என கேட்க வாயெடுத்துவிட்டு, "உன் அக்கா வீட்டிலிருக்காமல் இங்கே எதற்கு குடி வந்தீர்கள்?" எனக் கேட்க முடியாமல் / பிடிக்காமல் சிறிது சங்கடமாய் உணர்ந்தவர், சற்றே திணறினார்.

அவரது திணறலை புரிந்துகொண்டவன் போல் "இங்க வந்ததிலிருந்தே அக்கா வீடு பக்கத்தில வீடு தேடிட்டே இருந்தோம் மாமா. இப்போ தான் ஒருவழியா இந்த வீடு அமைஞ்சது! அதான் வந்துட்டோம்" என்றான் காரணமாக.

"நாளைக்கு காலையில பால் காய்ச்சுறோம். பார்க்கும் போது கூப்பிடுறேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நாளைக்குக் காலையில அம்மா வந்து கூப்பிடுவாங்க. தாமரை வராளோ இல்லையோ...நீங்க கட்டாயம் வந்திடுங்க, மாமா!" என செல்வியின் பக்கம் பார்வையைத் திருப்பாமலே செல்லியப்பனுக்கு அழைப்பு விடுத்தான்.

அவன் வாக்கியத்திலிருந்த பொடியை உணராமல், "சரி தம்பி! பாப்பா வேலைக்குப் போன புறவு கண்டிப்பா வாரேன். சாமான் சீர் செய்றதில எதுனா உதவி வேனும்னாக்க சொல்லுங்க தம்பி. என் மேலுக்கு முடிஞ்சதை செய்து தாரேன்" என்றார் செல்லியப்பனும் சக மனிதருக்கு உதவும் எண்ணத்துடன்.

"நீங்க கேட்டதே எனக்கு மனசுக்கு ரொம்ப சந்தோஷம், மாமா! வேணும்னா கண்டிப்பா கூப்பிடுறோம். எங்களுக்கும் உங்களை விட்டா வேறு யாரிருக்கா?! நீங்க தானே உதவி பண்ணனும்!" என்றான் நிகேதன் இப்போது செல்வியின் மீது பார்வையை பதித்து.

செல்லியப்பன் அதற்கு லேசான சிரிப்புடன் மெலிதாய் தலை அசைக்க, செல்வியோ அவன் வாக்கியங்களில் இருந்த உள்ளர்த்தங்களை எண்ணி புகைந்து கொண்டிருந்தாள்.

"வரேன் மாமா! வரேன் செல்வி! நாளைக்கு கண்டிப்பா வந்திடு...ங்க" என்றவன் செல்வியின் வீடிருந்த முதல் தளத்தை விட்டு மேலேறி சென்றான்.

அவன் தலை மறைந்ததும் கூட, ஒன்றும் பேசாமல் இறுக மூடிய வாயுடன் வீட்டினுள் வந்த செல்வியின் மனநிலை புரியாமல் "நாளைக்கு பால் காய்ச்சுறதுக்கு நீயும் வரியா பாப்பா?" எனக் கேட்டு அவளைப் பல்லைக் கடிக்க வைத்தார் செல்லியப்பன்.

"அவங்க குடும்பத்தால தான் நாம சொந்த நாட்டை விட்டு இவ்வளவு தூரம் வந்து கஷ்டப்படுறோம்...அதை மறந்துட்டு அவங்களுக்கு உதவி செய்ய துடிக்கிறியே! என்னப்பா நீயி!" என செல்வி படபடவென பொரிய,

"அவுக புள்ளை செஞ்ச தப்புக்கு வாத்தியார் ஐயாவும், அந்தம்மாவும் எந்த வகையிலையும் காரணமில்லைன்னு நீ தானே பாப்பா சொன்னே? அப்படி சொல்லித்தானே நாம ஷ்யாம் தம்பி வூட்டுக்கு போனோம். இப்போ எதுக்கு தாயி கோபப்படுறே? உனக்குப் பிடிக்கலைன்னா நான் அவங்களோட பேசுறேனில்ல கண்ணு...எதுனா அதிகமா செஞ்சு, அப்பா உன்னை ரொம்ப கஷ்டப்படுத்துறேனா? அப்பாக்கு யார்கிட்ட என்ன பேசுறதுன்னு சட்டுன்னு தெரிய மாட்டேன்து ஆத்தா...இனிமே நீ சொல்லுற மாதிரியே நடந்துக்கிடுறேன். மன்னிச்சிடு பாப்பா" என அவர் இல்லாததை எல்லாம் எண்ணி மனம் நொந்ததொடு மட்டுமில்லாமல், நடுங்கிய குரலில் பெண்ணிடம் மன்னிப்பு கேட்க, பெண் அந்த தருணத்தில் உடைந்தாள்.

"ஹய்யோ, என்னப்பா நீ! என்கிட்டே போய்...மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு...சை...யாரு மேலையோ இருந்த கோபத்தை உன்மேல காட்டிட்டேன்...என்னால நீ பட்ட கஷ்டமெல்லாம் போதும்...இனிமேலும் உன்னை ஒன்னும் சொல்லமாட்டேன்...நீ அழுவாதேபா. நான் தான் பைத்தியக்காரி மாதிரி மாறி மாறி பேசுறேன்னா...நீயும் அப்படி இருக்கனுமா? நாளைக்கு நான் வேலைக்குப் போனதும்...அம்மாவுக்கும் சாருக்கும் வேண்டியதை செய்து கொடுத்திட்டு வா" என அழுகையில் ஆரம்பித்து, சமாதானத்தில் முடித்தாள் பெண்ணானவள்.

"நெசமாலுமே உனக்கு இதில எந்த வருத்தமும் இல்லை தானே கண்ணு?" என மகளின் சிகையை வருடிக் கொடுத்தவாறே தந்தை வினவ, "இல்லை" என அழுத்தம் திருத்தமாய் தலையசைத்த மகள் வெகு நேரம் அவரின் மடியை விட்டு அகலவில்லை. அவர் மடியில் தலை சாய்த்திருந்த நேரத்தில் பாதி நேரம் - 'மன்னிச்சிடுபா. உன்மேல தேவையில்லாம கோபப்பட்டுட்டேன்..." என்ற மன்னிப்பு வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வந்தன என்றால், அவை உதிர்ந்த நேரம் யாவும் தன் கோபத்திற்கு காரணமான நிகேதனை

மனதார திட்டினாள்.

தந்தையிடம் தான் கொண்ட புரியாத கோபத்தால், மாலையில் மலாய் பாஷையில் வந்த காதல் விண்ணப்பம் அந்த நேரத்திற்கு மறந்து போயிருந்தது. அடுத்த நாளும் அதை நியாபகப்படுத்தும் வண்ணம் "உனக்காக" என்ற தலைப்பில் மின்னஞ்சல் வராமல் போக, மலாய் பாஷையையும் நிகேதனையும் சந்தேகிக்கமாலே விட்டுவிட்டாள் செல்வி – அப்போதைக்கு!

சந்தேகம் கொள்ளாமல் இருந்தது ஒரு பக்கமிருக்க, அந்த மின்னஞ்சல்கள் வராமலிருந்ததில் செல்விக்கு சற்றே வருத்தமாகவே இருந்தது உண்மை! அரை மணிக்கு ஒரு முறை மின்னஞ்சல் பெட்டியில் "உன் நண்பன்" என்ற அனுப்புனரின் அஞ்சலைத் தேடி களைத்தவளுக்கு, அவற்றை காணாமல் வேலை செய்த திருப்தியே ஏற்படவில்லை.

சோர்ந்து களைத்து வந்தவளுக்கு செல்லியப்பன் செய்து வைத்திருந்த மோர் களியே அமிர்தமாய் பட, அவரது மலர்ந்த முகம் சந்தோஷத்தைக் கொடுத்த அதே நேரத்தில் சில பல கேள்விகளையும் எழுப்பியது! அவளது கேள்விகளை உணர்ந்தவர் போல் "இன்னைக்கு வாத்தியார் ஐயாவும், அம்மாவும் நம்ம வீட்டுக்கு வந்தாங்க கண்ணு! பால் காய்ச்சரதுக்கு கூப்பிட்டாங்க..." என அவர் தொடங்க, "ம்ம். போனியா?" என்றாள் மகள் சிறு கேள்வியாய்.

"ம்ம். பால் காய்ச்சின நேரத்துக்கு போவ முடியல பாப்பா. இந்த பைப் அடைசல் எடுக்குற ஆள் வாந்தாரில... அவர் போனாங்காட்டியும் நான் அங்கே அரை அவர் போயிட்டு வந்தேன் கண்ணு"

"வாத்தியார் ஐயா, என் கையை பிடிச்சிட்டு விடவே இல்ல. அன்னைக்கு புள்ளங்க பிறந்தநாளப்ப கூட ரெம்பவும் வருத்தப்பட்டார்ரில்ல...அது மாதிரி இன்னைக்கும் ஒரு பத்து வாட்டி மன்னிப்பு  கேட்டாரு கண்ணு! அப்புறம் ஒரு முக்கியமான விசையம், நீ அனுப்பின ரத்து பத்திரத்தில அவுக பெரிய பையன் சுளுவா கையொப்பம் வைக்கலையாம்...இந்த சின்ன பையனும், வாத்தியார் அம்மாவும் ரொம்பவே மிரட்டி வாங்கினாங்களாம். வாத்தியார் ஐயா அந்த பையனோட அவர் பேசவே இல்லையாமாம்" என்றார் முக்கிய விஷயமாய்.

"உனக்கு யார் சொன்னது? அவரே சொன்னாராக்கும்? இல்ல அவர் சின்னப் பிள்ளை அளந்தாரா? அவங்க வீட்டில எல்லாருமே சுய புராணம் படிக்கிறதில வல்லவங்க இல்ல! " என்ற செல்வியின் குரலில் ஏளனமும், ஆராய்ச்சியும் ஒருங்கே சேர்ந்திருந்தது.

"அவங்களே சொல்றதுன்னா என்னைக்கோ சொல்லியிருக்கலாமே ராசாத்தி! சும்மா குறை சொல்றதுக்குன்னு பேசக்கூடாது பாப்பா" என்றார் செல்லியப்பன் சிறு கண்டிப்புடன். குறிஞ்சி பூ மலர்வது போல் மிக மிக அபூர்வமாய் வரும் அவரின் கண்டிப்பை மீற முடியாமல், "வேறு யாரு சொன்னா?" என்றாள் செல்வி மெது குரலில்.

"அவுக வூட்டில இருக்கையில, குவாரியில வேலை பார்த்த மேஸ்திரி கூப்பிட்டிருந்தாரு...ஏதோ நில குத்தகை விசையமா கூப்பிட்டிருந்தார் போல... எனப் பேசியவர் விவரத்தில் துவங்கி, "நா அங்க இருக்கிறது தெரிஞ்சதும் என் கூடவும் பேசினாரு...அவரு தான் வாத்தியாரோட பெரிய புள்ள ஊருக்கு வந்த விவரம்...நிகேதன் தம்பியும் அவுக அம்மாவும் அவர்கிட்ட மல்லுக்கு நின்னு கையொப்பம் வாங்கின விசையம் எல்லாம் சொன்னாரு. அவரு மச்சினன் காரன் தானே ஐயா வீட்டில காவலுக்கு நிக்கிறான். அவன் சொன்னானாம்... வாத்தியார் ஐயா அந்த பையன் கூட பேசவே இல்லையாம்...நிகேதன் தம்பிக்கும் அந்த பையனுக்கும் கை கலப்பே ஆகிப்போச்சாம்" என முழு விவரமும் கூறினார்.

"ம்" தவிர, செல்வியிடமிருந்து வேறு அந்த அசைவும் வராமலிருந்த போதிலும் செல்லியப்பனின் பேச்சு தொடர்ந்து கொண்டே சென்று, மங்கையர்க்கரசி மற்றும் தர்மராஜன் மேலிருந்த கோபத்தை முற்றிலுமாய் தகர்த்தியது என்றபோதிலும் நிகேதன் மேல் அவளுக்கு நல்ல அபிப்பராயம் வருவதாய் இல்லை. அதற்காக நிகேதனும் விடுவதாய் இல்லை.

அடுத்த நாள் காலையிலிருந்து நிகேதனின் வேலைகள் புது பொலிவுடன் அரங்கேற ஆரம்பித்தன.

காலை நேரத்தில், அவர்களது குடியிருப்பு வளாகத்தைச் சுற்றியிருக்கும் புல் தரையில் தந்தையுடன் சேர்ந்து நடப்பது தாமரைச்செல்வியின் வழக்கம். வழக்கம் மாறாமல் அன்றைய தினமும் அவர்கள் இருவரும் நடை பயில ஆரம்பித்தப்போதும், நிகேதன்

அங்கே வந்து சேர்ந்தான்.

"குட் மோர்னிங்" என்றவனுக்குப் பதிலாய் செல்வியும் ஓர் காலை வணக்கத்தை உதிர்த்தாள் - வேண்டா வெறுப்பாய், மிக மிக மென் குரலில், முணுமுணுப்பின் ஊடே!

ஆனால் பெண்ணின் மனநிலை அறியாமல், செல்லியப்பன் அவனிடம் சிறிது நேரம் பேசிவிட்டே வர, பொறுமையை இழுத்துப் பிடித்திருந்த செல்விக்கு எரிச்சல் அதிகமானது.

அவளது எரிச்சலை அதிகரிப்பது போல் "என்ன மாமா? உங்க பொண்ணுக்கு எத்தனை வயசிருக்கும்? ஒரு அறுபது இருக்குமா? இல்லை ஒரு ஐம்பத்தொன்பது இருக்குமா?" என்றான் அந்த குறும்புக்காரன் பெரும் ஆராய்ச்சியுடன்.

செல்விக்கு எரிச்சல் வந்தது என்றால் அந்த வெள்ளந்தி மனிதருக்கு வருத்தம் வந்தது "ஏனுங்க தம்பி...பாப்பா ரொம்ப வயசானது மாதிரி இருக்குதுங்களா? சரியாவே சாப்பிடறதில்ல தம்பி...கன்னமெல்லாம் ஒட்டிப்போச்சு...நீங்கானுச்சும் எடுத்துச் சொல்லுங்க தம்பி" என்றார் பெண்ணின் மேல் கொண்ட அக்கறையின் விளைவாய்.

"ஹய்யோ அப்பா" எனத் தலையில் அடித்துக்கொண்ட செல்வி, அவரின் கை பிடித்து முன்னே நடக்க, "கண்டிப்பா சொல்றேன் மாமா! அவளுக்கு சொல்லாம வேற யாருக்கு சொல்லப்போறேன்...ஆனா இப்போ நான் அதை வச்சு அறுபது வயசுன்னு சொல்லலைங்க மாமா" என்றான் பதவிசாக.

"இரு பாப்பா...தம்பி ஏதோ சொல்லுது..." எனப் பெண்ணைப் பிடித்துவைத்த செல்லியப்பன் "என்னங்க தம்பி?" என்றார் கர்மசிரத்தையுடன்.

"அப்படியே சுத்தி பாருங்க...உங்க வயசு ஆளுங்க தான் நடக்குறாங்க...அதான் செல்விக்கும் உங்க வயசோன்னு எனக்கு சந்தேகம் வந்துடுச்சு" என்றவனிடம் "அட ஆமா..." என்ற செல்லியப்பன், "பாப்பா, இனிமேல் என் கூட நடக்கவேண்டாம்டா. சின்னப் புள்ளைங்க மாதிரி ஓடி...தம்பி கூட ஓடத்தான் செய்யுது போல...அது கூடவே

போயேன்" என்றார் அறிவுரையாக.

"நீ மட்டும் தனியா நடப்பியா? அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்...நாம ரெண்டு பேருமே போகலாம். அவரைப் போகச் சொல்லு" என்ற செல்வி, இரண்டடி எடுத்துவைக்கும் முன்னர் "நீங்க தனியா நடக்க வேண்டாம் மாமா. அப்பா இப்போ வருவாங்க...அவங்களோட நடங்க. உங்க வயசு ஆளோட நீங்க நடந்த மாதிரியும் இருக்கும்...செல்வி ஓடின மாதிரியும் இருக்கும்" என மேலும் எடுத்துக்கொடுத்து, செல்வியுடன் தான் (தினந்தோறும்) ஓடுவதை உறுதி செய்துகொண்டான்.

இரு பெரியவர்களின் பார்வை வட்டத்தை விட்டு சற்றே தாண்டிய பின்னர், செல்வி நிகேதனை மீறி கொண்டு ஓட முயன்ற வேளையில் "நேஷனல், மாலை போட்டிருக்க நேரத்தில உன் கையை... என்னைப் பிடிக்க வைக்காதே! நீ பாட்டுக்கு ஓட, நான் பாட்டுக்கு கையைப் பிடிச்சு நிறுத்த, அப்படியே கற்பனையில இளையராஜா சார் ஹார்மனி பெட்டியை வச்சுக்கிட்டு ரொமாண்டிக் மியூசிக் போட, அப்புறம் வெள்ளை டிரஸ் போட்ட தேவதைங்க பத்து பதினஞ்சு பேர் நம்ம சுத்தி ஆட... சாமி குத்தம் ஆகுதோ இல்லையோ...நாம ரெண்டு பெரும் ஆவிகளோட பேசுறோம்ன்னு யாராவது பயந்துடு போறாங்க" என்ற அவனது பேச்சு, மெலிதாய் ஓர் புன்னகையை வரவழைத்தது.

"இது...இது...இது தான் நேஷனலுக்கு அழகு!" என்ற நிகேதன் பெரிதாய் புன்னகைக்க, செல்வியின் முகம் கடுத்தது.

"உங்களுக்கு என்ன வேணும்?" என அவளது கடுமை குரலுக்குப் பதிலாய் "ஒண்ணுமே வேண்டாமே! ஜஸ்ட் ஓடலாம்...வா" என முன்னே ஓடினான் அவன்.

ஒன்றும் பேசாமல் அவனைத் தொடர்ந்தவள், சற்றே வேகத்தைக் குறைத்து அவனை விட்டு விலக முயற்சிக்க, அவளது முயற்சி புரிந்தவன் போல் அவளது வேகத்திற்கேற்ப அவனும் மாறி மாறி ஓடினான். "நேஷனல், அன்னைக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லி...ஒரு லாவெண்டர் ரோஸ் பௌக்கே குடுத்தியே! ரொம்ப நல்லா இருந்தது! ரொம்ப தேங்க்ஸ் நேஷனல்!" என்றவனின் வார்த்தைகளைப் புதியவர் யாரும் கேட்டால், கண்டிப்பாக செல்வி தான் அவனிடம் பூங்கொத்து கொடுத்திருக்கிறாள் என்று கூறிவிடுவார்கள் - அந்தளவு நயப்பட பேசினான் நிகேதன்.

"என்னமாய் மாற்றி பேசுகிறான்? இவன் கொடுத்த பூங்கொத்தை அவனுக்கே நான் திருப்பிக் கொடுத்தால்...நானே அவனுக்கு சொந்தமாய் கொடுத்தது போல் பேச்சைப்பாரு பேச்சை!" எனப் பொருமிய செல்வியிடமிருந்து எதிர் வாதம் ஏதும் வரவில்லை. அவள் எதிர்த்து பேசுவதை விட, தான் பேசுவதை கவனிப்பது தான் முக்கியம் என்பதாலோ இல்ல அவள் பேசினால் தான் கூற வந்த விஷயத்தைக் கூற முடியாமலே போய் விடுமோ என்ற எண்ணத்திலோ நிகேதன் மேலும் தொடர்ந்தான்.

"லாவெண்டர் கலர்ன்னா உனக்கும் ரொம்ப பிடிக்குமா? இப்போ கொஞ்ச நாளா எனக்கும் பிடிக்க ஆரம்பிச்சிடுச்சு. ஏன் தெரியுமா? அக்கா வீட்டு தோட்டத்தில, லாவெண்டர் ரோஸ் செடி பக்கத்தில நின்னியே...அந்த வினாடி தான் என் மனசே எனக்கு புரிஞ்சுச்சு! சோ லாவெண்டர் ரோஸ் என் மனசுக்கு ரொம்ப நெருக்கமாகிடுச்சு!" என்றவனை "இது என்ன புது கதை?" என்பது போல் பார்த்தாள் அவனின் மனம் கவர்ந்தவள். தனது இந்தப்பேச்சு செல்வியின் மனதில் தோன்றாத சில சந்தேகங்களையும் தூண்டிவிட்டு, தன்னை மாட்ட வைக்கப்போகிறது என்பதை அவன் அப்போது அறியவில்லை!

"எதுக்கு இந்த வில்லி லுக்கு? நான் சொல்றதெல்லாம் உண்மை...உண்மையைத் தவிர வேற எதுவுமில்லை" என்ற நிகேதனின் குரலில் சிரிப்பிருந்தாலும், அழுத்தமும் கூடவே இருந்து அவன் சொல்வது உண்மை என்பதை எடுத்துரைத்தது.

"நான் எதை எதுக்கு தெரியுமா...உன்கிட்ட சொல்றேன்? உன்னை நான் விரும்புறது முழுக்க முழுக்க காதலால் தான்! ஜஸ்ட் யு அண்ட் மீ! தியாகமோ...பிராயசித்தமோ...பெரியவங்களோட தலையீடோ...மறுவாழ்வு கொடுக்கும் முயற்சியோ சுத்தமா இல்லை. சுத்தம் என்றால் சுத்தம் - இந்த நிகேதன் மனசு மாதிரி அக்மார்க் பொன் மாதிரியான சுத்தம்! இதை சொல்லத்தான் அன்னைக்கு பேசலாம்ன்னு கூப்பிட்டேன்...ப்ச்...நீ தான் வரலை...அதான் உன்கிட்ட பேசக்கிடைச்ச முதல் சந்தர்பத்தில இதை சொல்லிடனும்ன்னு சொல்லிட்டேன்" என்றான் புன்னகையும், உண்மையுமாய்.

அவன் கூறியதைக் கேட்ட செல்விக்கு, சிறிது அதிர்ச்சியும், பெரிதாய் குழப்பமும் என மனம் அலைபாய்ந்தது. "காதல் என்கிறான்...தியகமில்லை என்கிறான்...லாவெண்டர்

நிறம் பிடிக்கும் என்கிறான்...நான் பார்த்தேன் என்கிறான்...அதையும் சீரியஸ்சாக பேசும் விஷயத்தை சீரியஸ்சாகவே முடிக்காமல் நடுவில் ஓர் கிண்டல்...இல்லை சுய பிரதாபம்...சொல்வது உண்மையா? பொய்யா? என்று கேட்பவருக்கு குழம்பாதா? ஏன் தான் உயிரை வாங்குகிறானோ?" என்றவளின் மனம் முற்றிலும் குழம்பியிருக்க,

"இவனை எப்படிடா நம்புறதுன்னு ஒரே குழப்பமா இருக்கா, நேஷனல்? குட்! அப்படி தான் குழம்பிட்டே இருக்கணும்...அது தான் உனக்கும் சரி, எனக்கும் சரி ரொம்ப...ரொம்ப நல்லது!" என்ற நிகேதன், "இங்க ஸ்லோ ரன்னிங் ரேசா நடத்துறாங்க. வேகமா ஓடலாம். வா...வா" என அவன் முன்னே ஓட, செல்வியும் தன் குழப்பத்தின் விளைவாக அவனுடன் இணைந்தே ஓடினாள்.

அவளை குழப்பத்திலிருந்து மீட்கும் எண்ணம் சிறிதுமில்லாததால் நிகேதன் அமைதியே காத்தான். முதல் ஒரு வாரம் தன் நேசத்தின் சாரம் புடம்போட்ட காதல் தான் என்பதையே விதவிதமாய் எடுத்துக் கூறியதன் விளைவாக, செல்வி சிந்திக்க ஆரம்பித்திருந்தாள். நவநீதனிடம் நிகேதன் நடந்துகொண்ட முறையை தந்தையின் வாய் மொழியாக கேட்டிருந்தவளுக்கும், இப்போது நிகேதனின் பேச்சு அவன் மேல் சற்றே நல்ல அபிப்ராயத்தை வளர்க்கத் தான் செய்தது! நவநீதனை பிறர் முன்னிலையில் அடித்திருக்கிறான் என்றால்...அவன் செய்த முறைகேட்டை இவன் ஆதரிக்கவில்லை என்று தானே அர்த்தம் என்று கூட தோன்றியது. நவநீதன் தானே "நிக்கியிடம் சொல்லி அம்மா-அப்பாவிடம் பேசச் சொல்லுவேன்" என்றான்...நிகேதனின் வாய் மொழியாக அதை அவள் கேட்கவில்லையே?! நவநீதன் மனிதர்களை கணிக்கும் முறை தெரிந்திருந்தும் அவனது பேச்சை வைத்து நிகேதனை மதிப்பிடுவதா? என அவளது மனமே நிகேதனுக்கு சார்பாய் அவளிடம் வாதாடியது!

ஆனால், நல்லதாய் வளர்ந்த அபிப்பராயம் காதல் ஆகாதே! அதனால் நிகேதனும் தன் பேச்சு திறனை தொடர்ந்து காட்டியதோடு நில்லாமல் வேறு வகையிலும் செல்வியை குழப்பித் தெளிய வைக்க முயன்றான்.

"உன் நண்பன்" என்ற பெயரில் செல்விக்குத் தொடர்ந்து மின்னஞ்சல் அனுப்பிக்கொண்டிருந்தவன், பத்து நாட்களுக்கும் மேலாக அதை நிறுத்திவைக்க, செல்வி ஷ்யாமிடம் சென்று "அண்ணா, ஏன் திடீர்ன்னு யுவர் ஃபிரண்ட் ஈமெயில்

வரமாட்டேங்குது! ஆட்டோமாடிக் ஈமெயில் என்ஜின்ல ஏதாவது ப்ரோப்லேம்மா? அந்த ஈமெயில்ஸ் வராம ஒரு மாதிரி இருக்குண்ணா" என்று சொன்னதும், "ஹப்பாடா, இந்த நேஷனல் செம டியூப் லைட் ஆகிடுச்சு. நாம தான் அந்த ஈமெயில் அனுப்புரோம்ன்னு கண்டுபிடிக்காம இருந்ததே பெரிய விஷயம்...இனிமேலும் இப்படியே மினிச் மினிசுன்னு எறிஞ்சான்னா பரவாயில்லை... நான் பிழைச்சுப்பேன்!" என சந்தோஷத்தில் துள்ளி குதித்த கையோடு மின்னஞ்சல் சேவையை செவ்வனே துவங்கினான்.

"நீ நினைப்பது போல் நான் ஒன்றும் டியூப் லைட் இல்லை! உன்னை விட புத்திசாலி தான்!" என்று மார் தட்டும் வகையில், "ஷ்யாம் அண்ணாவின் துணையுடன் எனக்கு மட்டுமாய் இந்த மின்னஞ்சல்களை அனுப்பிக்கொடுக்கிருக்கும் நீங்கள் - நிகேதன் தானே?! உங்கள் இருவரின் கூட்டும் - என் அலுவலக நண்பரிடம் இந்த மின்னஞ்சல் பற்றி விசாரித்ததிலும், நீங்கள் அனுப்பிய உங்களுக்குப் பிடித்தமான "லாவெண்டர்" ரோஜாவிலும், ஆங்கில வாத்தியாராய் இருந்த நீங்கள் மலாய் வாத்தியார் அவதாரம் எடுத்ததிலும் வெளிப்பட்டு விட்டது! ஏன் இந்த வேண்டாத வேலை? இனிமேல் என் வேலை நேரத்தை விரையம் செய்யும் வண்ணம் மின்னஞ்சல் அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து தொந்தரவு செய்யாதீர்கள்" என்ற மின்னஞ்சல் செல்வியின் முகவரியிலிருந்து நிகேதனின் "உன் நண்பன்" என்ற முகவரிக்கு வந்து சேர்ந்தது.

ஆனால் இதற்கெல்லாம் அசந்துபோய், தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டால் அவன் நிகேதன் அல்லவே. தான் நிகேதன் என்பதை நிரூபிக்கும் வண்ணம் - "ஹப்பாடா உனக்கு ஒரு வழியாக பல்பு பிரகாசமாய் எரிந்துவிட்டதா? எனக்கு அதில் மிக்க மகிழ்ச்சியே! கட்டிக்க போற பொண்ணு மக்கு மன்னாந்தையா இருந்தா...இந்த அறிவாளி டாக்டர்ருக்கு இவ்வளவு இழுக்கு பாரு...அதான்! "எவ்வளவு படிச்சிருந்து என்ன புண்ணியம்...டாக்டர் நிகேதன் பொண்டாட்டி சரியான மக்காம்" என ஊர் உலகம் பேசிட கூடாதில்லையா? அதை நல்ல வேலைக்குத் தீர்த்து வச்சுட்டே! தேங்க்ஸ்டா நேஷனல்! அப்புறம் உனக்கு விஷயம் தெரிஞ்சதினால் நான் என்னோட பேரை மாத்திட்டேன்...போய் பாரேன்! நான் போய் சீக்கிரமா ஒரு லாவெண்டர் ரோசை தேடிப் பிடிச்சிட்டு வரேன்!" என்று முடிந்திருந்த மின்னஞ்சலின் அனுப்புநரை அப்போது தான் கவனித்தாள் தாமரைச்செல்வி. "உன் நண்பன்(Your Friend)" என்றிருந்த முகவரி "உன் அன்பன்(Your Love)" என மாறியிருக்க, "உனக்காக(Just for you)" என்றிருந்த தலைப்பு "நேஷனலுக்காக(Just for my National)" என்று மாறியிருந்தது. அதை கவனித்தவளின் கண்களில் கோபத்திற்குப் பதிலாக சிறு

© Bhuvana's Story

முறுவலே படர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது!

அத்தியாயம் 18

"உன் அன்பன்" என்ற அடைப்புக்குறிக்குள் வந்த மின்னஞ்சல்கள் முறையாக பார்த்தால் செல்விக்குப் பெரும் கோபத்தை உண்டு செய்திருக்கவேண்டும். ஆனால், கோபத்திற்கு முற்றிலும் மாறாக மலர்ந்த முகத்துடன், நிகேதன் அனுப்பிய அஞ்சலையே ஐந்து நிமிடத்திற்கு மேலாக பார்த்துக்கொண்டிருந்தவள், சட்டென தலையை உலுக்கி அந்த மாய வலையிலிருந்து வெளி வந்தாள்.

ஷ்யாமிடம் கேட்க துடித்த நாவை, மனதிலிருந்த ஏதோ ஒன்று தடுக்க, நிகேதன் இதுவரை தான் செல்கிறான் என்று பார்ப்போமே என்ற எண்ணத்தில் வாளா இருந்தாள் தாமரையாள்.

இத்தனை நாட்கள் அவன் தன்னை ஏமாற்றியதை விட, தனக்கு விஷயம் தெரியும் என்றதும் அவன் சமாளித்த விதம் கண்டு "எமகாதகன், கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சமாளித்தால் கூட பரவாயில்லை...நான் கீழே விழுந்ததில் உன் மீசையில் மண் ஒட்டிவிட்டது என்பது போலல்லவா சமாளிக்கிறான்!?" என எண்ணி எண்ணி வியந்தவள், மகிழவும் செய்தாள் என்பது அவள் நெஞ்சம் மட்டுமே அறிந்த உண்மை.

நெஞ்சறிந்த உண்மையை நிகேதன் அறியும் வண்ணம் பறைசாற்றாமல் (பறைசாற்ற கௌரவம் இடம் கொடுக்காமல்), முயன்று கோபத்தை வரவழைத்துக்கொண்டாள். பெரும் முயற்சி செய்து வந்த கோபத்தை ஆராய்வதை விட உடனடியாய் வந்த மகிழ்ச்சியை அலசி ஆராய்ந்திருந்தால், நிகேதனின் வாய்க்கும் அதை செயல்படுத்தும் மூளைக்கும் வேலை குறைந்திருக்கும். ஆனால், அந்த நல்ல எண்ணமெல்லாம் நம் செல்விக்கு இல்லாமல் போனதால் நிகேதன் தன் பாணியில் அவளைக் கரைத்துக் கொண்டே இருந்தான். "அன்பன்" என்று தன்னை நிலைப்படுத்திக்கொண்டு அவன் அனுப்பிய மின்னஞ்சலுக்கு அவள் பதில் அனுப்பவில்லை என்றாலும் அந்த அஞ்சலை அவள் அழித்துவிடவில்லை. அடுத்து வந்த சில மின்னஞ்சல்களை மனதின் மேல் தட்டிலிருந்த கோபம் அழிக்கச் செய்தது என்றாலும், மனதின் ஆழத்திலிருந்த எதிர்பார்ப்போ - அரை மணி நேர இடைவேளையில் மீள்சுழற்சி பெட்டியிலிருந்து (recycle bin) அவ்வஞ்சல்களை எடுத்துப் படிக்கச் செய்தது.

அவனுக்குத் தெரியாது என்ற நினைப்பில் - முதலில் அவ்வஞ்சல்களை அழிப்பது மாதிரி அழித்துவிட்டு, பின்னர் குப்பைத்தொட்டியை கிளறி அப்பொக்கிஷங்களை ஆவலுடன் படிக்கும் அவளின் விளையாட்டிற்கும் நிகேதனே காரணகர்த்தாவானான். அவன் அனுப்பியதால் தான் அவற்றை அழிக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு அவள் தள்ளப்பட்டாளாம்! அழித்தவள் மீண்டும் அவற்றை மீண்டும் கிளறுவானேன்? ஒன்றும் தெரியாத அந்த பச்சைப் பிள்ளையை குறை கூறுவானேன்?! ஹ்ம்ம் எல்லாம் நிகேதனின் கெட்ட நேரம்! ஒருவேளை நல்ல நேரம் எனக் கூறவேண்டுமோ!?!

அவளையும் மீறி நிகேதனுக்கென அவள் மனதில் ஓர் இடம் உருவாவதை அவளால் தடுக்க முடியவில்லை என்றாலும் நிகேதன் மேலிருந்த கோபங்களை அவள் குறைத்துக் கொள்வதாகவும் இல்லை. நல்ல அபிப்ராயம் வருகிறது தான் என்றாலும் தப்பாய் தோன்றிய ஒன்றை வெகு சுளுவில் இறக்கிவைக்க அவள் விரும்பவில்லை. எதுவரை போகிறதோ போகட்டும் என்ற நினைப்பில் அவள் நாட்களைக் கடத்த, நிகேதனோ "அப்படியெல்லாம் விடமுடியாதுடா செல்லம்!" என்ற நோக்குடன் தன் காரியங்களைச் செய்தான்.

வார நாட்கள் முழுவதும் இருவருக்குமான கண்ணாம்பூச்சியில் கழிய, அந்த வார ஞாயிற்று கிழமை அதிகாலையில் நிகேதனும் சரி தர்மராஜனும் சரி நடைப்(ஓட்டப்)பயிற்சிக்கு வரவில்லை. செல்வியின் மனதில் "ஏன் வரவில்லை?" என்ற கேள்வியுடன் சேர்த்து ஓர் மறைமுகத் தேடுதல் வேட்டை நடந்தேற, செல்லியப்பனோ ஒளிவு மறைவின்றி தேடுதல் வேட்டை நடத்தியதோடு நில்லாமல் நிகேதனின் வீட்டிற்கும் விஜயம் செய்து நலம் விசாரித்தார்.

"வாத்தியார் வூட்டுக்குப் போயிட்டு ஓடியாந்துறேன் பாப்பா. நீயும் வரியா?" என்றவரோடு மனம் போகத் துடித்தப்போதும், அதன் மேலிருந்த சந்தேகப்பூச்சும் முழுதாய் மறையாத கோபமும் கயிறு கட்டி அவளை இழுத்துவைக்க, "எனக்கு கராத்தே கிளாஸ்க்கு நேரமாச்சு. நீ போய்ட்டுவாப்பா" என்றதோடு வீட்டிற்குள் சென்று மறைந்தவள், நிகேதன் வீட்டிலிருந்து வந்த அவர் "நிகேதன் தம்பிக்கு மேலுக்கு முடியல. ஜூரமாம்!" என்றதும் பதறி போனாள்.

"எப்படி பா? தன் உடம்பைப் பார்த்துக்கத் தெரியாத இவரெல்லாம் என்ன டாக்டர்?!" என மகள் எரிந்துவிழ, அவளுள்ளிருக்கும் வேதனை புரியாமல் "என்னதான் டாக்டரானாலும் ஐயப்பனுக்கு மாலை போட்டிருக்கையில் நிதம் காலையில தலையில தண்ணி விட்டுக்கணும் இல்ல. ஐயனுக்கு விரதம் இருக்கிறவங்க சுத்த பத்தமா இருக்கவேண்டாமா?! அதான் ஐஸு தண்ணில குளிச்சு மேலுக்கு இழுத்துக்கிடுச்சு...ப்ச் பாவம். பார்க்க யாருமில்லாம வாத்தியாரும் அதுவுமா தடுமாருறாங்க" என்றார் வருத்தமாய்.

"அம்மா எங்க?" என அவள் கேட்க, "வாத்தியார் அம்மா, ஷைலு பாப்பா ரெண்டு பேருக்குமே வீட்டுக்கு வரக்கூடாத நாளாம். ஷ்யாம் தம்பி வீட்டில இருக்காங்க போல...வாத்தியார் ஐயாவையும் அங்க போகச் சொல்லி, தம்பி ரொம்ப சொன்னிச்சு. சாரு தான் ஒரே பிடியா மகனோட இருந்திட்டாரு " என்றார் செல்லியப்பன் மேலிட்ட வருத்தத்துடன்.

"அம்மா வரவரைக்கும் நாம வேணும்னா சாப்பாடு கொடுத்துவிடலாமாபா? பாவம்!" என்ற செல்வியின் கன்னம் வருடி, "இது தான் என் பாப்பா! ஒருத்தங்க கஷ்டப்படுறதை பார்த்திட்டு நமக்கென்னன்னு இருக்காது. நானே சொல்லனும்ன்னு நினைச்சேன்...ஆனா நீ என்ன சொல்லுதியோன்னு தயங்கிட்டு இருந்துட்டேன் ராசாத்தி! இப்ப தான் எனக்கு ரெம்ப சந்தோஷமா இருக்குது..." என மனம் நிறைந்த சந்தோஷத்துடன் தன் எண்ணங்களைப் பகிர்ந்தார் அவளின் ஆருயிர் தகப்பனார்.

"ம்ம் சரி, நான் போய் தலைக்குக் குளிச்சிட்டு சமைக்கிறேன். மாலை போட்டிருக்கார் இல்லையா!?" என்ற செல்வி, அதன் பின்னர் கர்மசிரத்தையுடன் தலைக்குக் குளித்து, சாமி விளக்கேற்றி, ஏற்கனவே துடைத்திருந்த அடுப்பை மீண்டும் சுத்தம் செய்து, தன் சமையலிலேயே ஓரளவிற்கு நன்றாக இருக்கக் கூடிய சேமியா கிச்சடி மற்றும் தேங்காய் சட்னியை காலை உணவிற்கென செய்தவள், மதியத்திற்கு தக்காளி சாதம் மற்றும் பீன்ஸ் துவட்டல் செய்து, அவற்றை டப்பாகளில் அடைத்து, செல்லியப்பனிடம் கொடுத்துவிட்டாள்.

அதன் பின்னர் கராத்தே வகுப்பிற்கு தயாரானவளின் மனம், தேர்வு எழுதிவிட்டு அதன் முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவியின் நிலையை விட படு மோசமாய் இருந்தது. ஆனால் அவளின் தவிப்பை சிறிதும் உணர்ந்துகொள்ளாத, செல்லியப்பனோ அவள் வகுப்பிற்குக் கிளம்பும் வரையிலும் கூட நிகேதனின் வீட்டிலிருந்து வரவே இல்லை. கராத்தே வகுப்பிற்குக் கிளம்புவதைத் தன்னால் முடிந்த அளவு தாமதித்துப் பார்த்தவளுக்கு, ஒரு சில வினாடிகள் வகுப்பிற்குப் போகாமல் வீட்டிலேயே இருந்துவிட்டால் என்ன என்று கூடத் தோன்றிவிட்டது. தன் எண்ணங்களின் போக்கில் தானே திகைத்து, தன் மனமே தனக்கு எதிரியாகி தன்னை காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்து, மனதுடனிடும் சண்டைக்கு உடலுடனிடும் சண்டையே மேல் என்ற முடிவிற்கு வந்தவள் வேகவேகமாய் கராத்தே வகுப்பிற்குக் கிளம்பிச் சென்றாள்.

என்னதான் ஜம்பமாய் கிளம்பிவந்துவிட்டாலும், நிகேதன் தான் தயாரித்த உணவை உண்டிருப்பனோ, பிடித்திருக்குமோ, ஒரு வேளை காரம் ஜாஸ்தியாய் இருந்திருக்குமோ, பாவம் சுரத்தில் வேறு துவண்டிருப்பானே, வாய் கசந்திருக்குமோ, ரசம் சாதம் செய்து கொடுத்திருக்க வேண்டுமோ, கிறுக்குத் தனமாய் தக்காளி சாதம் செய்துவிட்டேனோ, காலைக்கு இட்லி ஊற்றியிருக்கலாமே, ம்ம் என்ன செய்வது மாவு காலியாகிவிட்டதே, இன்று மதியம் போய் இட்லிக்கு மாவு அரைத்துவைத்துவிட வேண்டும், ம்ம்...இரவிற்கு இடியாப்பம் மாதிரி மிதமான உணவு ஏதாவது செய்து கொடுத்துவிடலாமா என எண்ணங்கள் நிகேதனின் வயிற்றை சுற்றியே சுழன்று கொண்டிருந்தன.

கராத்தே வகுப்பு முடிந்து வீடு வந்தவளிடம் செல்லியப்பன் ஏதேனும் விவரம் கூறியிருந்தால் அவருக்கு கோடி புண்ணியமாய் போயிருக்கும். ஆனால், அவரோ "எனக்கு ஏற்கனவே வண்டிக் கணக்கில் புண்ணியங்கள் வழிந்தோடுகின்றன. அதனால் புதிதாய் கூடிவரும் புண்ணியத்தில் எனக்கு நாட்டமில்லை" என்பது போல், நிகேதனின் வீட்டில் நடந்ததை பற்றி பேசாமல், மகளின் பசித்த வயிற்றை பற்றியே கவலை கொண்டிருந்தார்.

"முட்டை தோசை ஊதட்டுமாடா பாப்பா? வயித்த பசிக்கலையா?" என அவர் பிரியத்தோடு வினவ,

"முட்டையா?அவர் மாலை போட்டிருக்கும் போது யாராவது முட்டை சாப்பிடுவாங்களா? என்னப்பா நீ?" என அவரை வேற்று கிரக மனிதரைப் பார்ப்பது போல் பார்த்தாள் செல்வி! (சில பல தினங்கள் முன்னர் தானே அவரிடம் முட்டை தோசை ஊற்றி தரச்சொன்னதை முற்றிலுமாய் மறந்து போய்!)

"அவர் தானே கண்ணு மாலை போட்டிருக்கார்?" என செல்லியப்பனும் மகளை வேற்று கிரக மனுஷியாய் பாவித்து, புருவம் உயர்த்த, சட்டென நாக்கைக் கடித்தவள் திரு திருவென இரண்டு வினாடிகள் முழித்தாள்.

அதன் பின்னர், "அது..அது வந்து...நம்ம வீட்டிலிருந்து தானே சாப்பாடு கொடுத்துவிடுறோம். அதான், நாமளும் சுத்த பத்தமாய் இருக்க வேண்டாமா?! சாமி குத்தம் ஆகிடப் போகுதுப்பா" என்ற மகளிடம் "நல்ல பொண்ணு போ! எப்ப கோபப்படுதே...எப்ப ஒழுங்க பேசுறேன்னே எனக்கு பல சமையம் விளங்குதில. சரி, சாப்பாடு எடுத்தாறேன். சாப்பிட்டு சத்த நேரம் படுத்திரு" எனப் பதில் கூறியவர், மகளுக்கான உணவை தட்டிலிட்டு அவளிடம் நீட்டினார்.

சற்று நேரம் முன்னர், தேவையில்லாமல் வாய் கொடுத்து மாட்டிக் கொண்டது சிறு சங்கோஜத்தை ஏற்படுத்தியிருந்த போதும், "சாப்பாடு எப்படி இருந்ததுன்னு கேளு" என்று மனம் படுத்திய பாட்டைத் தாங்கமுடியாமல் "இன்னைக்கு சாப்பாடு எப்படி இருந்துச்சுப்பா?" என்றாள் செல்வி, மெது குரலில் - ஆர்வத்தை அடக்கியபடி.

"எப்பயும் போல நல்லா இருந்திச்சு கண்ணு! உன் ஆயி கை பக்குவம் உனக்கும் கூடி வருது!" எனப் பெண்ணின் பெருமையை மாறாமல் பேசிய தந்தையிடம் உதடுகளை இழுத்துச் சிரித்து வைத்தவள், "ஹையோ அப்பா, நான் என்ன கேட்கிறேன்...நீ என்ன சொல்றே?" என மனதிற்குள் புலம்பியதோடு வேறு வழி தேடினாள் - எல்லாம் நிகேதன் தன் சமையலின் மேல் வைத்திருக்கும் அபிப்ராயத்தை அறிவதற்கே!

சில நிமிடக்காத்திருப்பிற்குப் பின்னர் "சார் என்ன சொன்னாரு? அவங்களுக்கு காரம் அதிகமா இருந்துச்சோ?" என மெல்ல நோட்டம் விட்டவளின் வலையில் அலுங்காமல் விழுந்த செல்லியப்பன், "வாத்தியார் ஐயாவிற்கும், நிகேதன் தம்பிக்கும் உன் சமையல் ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ஒரே புகழாரம் தான்!!" என்று மனதாரப் புகழ்ந்து, வாயார சிரித்தார்.

அவரது அந்த பாராட்டலின் விளைவாகவோ, அல்லது தன் மனதின் ஆரவாரத்தின் காரணமாகவோ, தொடர்ந்த இரு நாட்களும் செல்வி தன் நளபாகத்தை விரும்பியே அரங்கேற்றினாள்.

தந்தையின் வாய்மொழியாய் வந்த பாராட்டைவிட, நிகேதன் "அன்பன்" என்ற போர்வையில் அனுப்பும் மின்னஞ்சல்களில் "இன்னைக்கு பீட்ரூட்டை கொலை பண்ணி கோலா பண்ணியிருந்தியே...அதோட டேஸ்ட் என்னை கொன்னிடுச்சு. வாவ் சூப்பர் நேஷனல்! பரவாயில்லை, நல்லாவே சமைக்கிறே!", "வத்தல் குழம்பும், முட்டைக்கோஸ் துவட்டலும்...என்ன ஒரு காம்பி (combi), காரசாரமா சண்டை போடுற நீயும் எல்லாத்தையும் கூலா எடுத்துக்கிற நானும் மாதிரி செம அட்டகாசமான பிணைப்பாக்கும்", "நைட்க்கு கொடுத்துவிட்டிருந்தியே சப்பாத்தி...அதை பிய்க்கும் போது அப்பு/அம்மு கன்னத்தை கிள்ளுற எப்பெக்ட். அவங்க கன்னத்தை கிள்ளினா ஜல்ஸ் காரமா ஒரு லுக் விடுவாளா...அது மாதிரி இருந்தது தொட்டுக்கிறதுக்கு நீ கொடுத்துவிட்ட தக்காளி தொக்கு! ஷ்...நினைச்சாலே இனிக்குது...ச்சே ச்சே உரைக்குது" என்ற வாக்கியங்களில் பொதிந்திருந்த பாராட்டு செல்வியை உயரே உயரே பறக்க வைத்தது.

அவளின் மனதை மேலும் மேலும் உருக்குவது போல், லாவெண்டர் வண்ணப் பூங்கொத்துக்களும், பெண் உரிமை பேசும் நிகேதனின் சொந்த கவிதைகளும், உனக்காய் நான் - எனக்காய் நீ போன்ற இரு வரிகளும் வந்து குவிந்தன.

அதிலும், "பெண்ணே - ஆணின் கைகளில் கைதியாகாமல்
உன் கண்களால் அவனைக் கைது செய்!

காதல் கொண்டவன் மீளமாட்டான்!

போதை கொண்டவன் வீழ்ந்திடுவான்!" என்ற கவிதை அவளை அசைத்துத் தான் பார்த்தது.

எல்லாவற்றுக்கும் மகுடமாய் "நேஷனல், உனக்கு என் மேல ஏதாவது கோபமா? அம்மா-அப்பா-அக்கா மேல இருந்த கோபத்தை விடவும் மேலா ஏதோ ஒன்னு என் மேல இருக்கு. ம்ம்...இரு இரு...நான் உன்மேல வச்சிருக்க காதல் தான் கோபத்துக்குக் காரணம்ன்னு சொல்லாதே! இந்த கோபம் காதலால் வந்ததில்லை...நான் என்னோட காதலை சொல்றதுக்கு முன்னாடியிலிருந்தே இருக்கு! அது என்னன்னு தான் என்னால கண்டுபிடிக்க முடியல. எதுவா இருந்தாலும் வாய் விட்டு சொல்லிடு நேஷனல். என்னால நிவர்த்தி செய்ய முடியுதான்னு பார்க்கிறேன். தயவு செஞ்சு மனசுக்குள்ளேயே வச்சுக்கிட்டு மருகாதே. ப்ளீஸ் சொல்லுமா" என்ற மின்னஞ்சல் அவளை அதிகமாய் கரைத்தது என்றாலும் அவன் மேலிருந்த கோபத்தை அவளுக்கே நினைவு படுத்தி, இதை எப்படி மறந்தோம் என அவளை ஆச்சிரியப்பட வைத்தது நிஜம்.

ஆனால், இந்த குதூகலம் எல்லாம் அடுத்து சில தினங்கள் மட்டுமே நீடித்தன - அதாவது, நவநீதனிடமிருந்து விடுதலை கோரி அவள் விண்ணப்பித்திருந்த மனு ஏற்கப்பட்டு, விசாரணைக்கான அழைப்பு அவளுக்கு வரும் வரை!

கிட்டத்தட்ட ஐந்தாறு நாட்களாய் இருந்த நல்ல மனநிலையை நீதிமன்றத்திலிருந்து வந்த அந்த மனு கலைக்க, செல்வியின் அடி மனதிலிருந்த வேதனை புழு கொஞ்சம் கொஞ்சமாய் மேலேறி அவளை அரிக்கத் துவங்கியது. நவநீதனால் ஏற்பட்ட காயத்தை விட ஒரு ஆண் மகனை நம்பி, வாழ்வை வீணாக்கிக் கொண்டு நிற்பது பத்தாது என்று மற்றொருவனிடம் மயங்கி நிற்கிறோமே என்ற கேள்வியே அவளை அளவிற்கு அதிகமாய் கொன்றது!

ஆம், செல்வியால் வெளிப்படையாக ஒத்துக்கொள்ள முடியாவிட்டாலும் நிதெனின் அருகாமையை அவள் விரும்ப ஆரம்பித்துவிட்டதை அவள் மனது ஒத்துக்கொள்ளவே செய்தது. அந்த விருப்பம் - காதலா அல்லது மனதை லேசாக்கும் அவனது பேச்சுகளிடம்

தனக்கு ஏற்பட்ட ஈர்ப்பா என்பதை பகுத்தறிய முடியாவிட்டாலும், நிகேதனுக்கு தன் மனதில் ஓர் மென்மையான இடம் உருவாவதை உணர்ந்தே இருந்தாள் அவள்.

திருமணம் என்ற நிகழ்வு தன் வாழ்வில் உண்டாக்கி வைத்திருந்த கந்த கோலத்தை எண்ணியெண்ணி நொந்து கொள்ளும் இந்நிலையில் நிகேதனிடம், அதுவும் நவநீதனின் தம்பியிடம் வாழ்வை கொடுப்பது பெரும் முட்டாள்தனமாய் பட்டது செல்விக்கு.

பாசம் கொண்டவர் தான் என்றாலும், அவர் கொண்டிருந்த பாசத்தின் மீது பயம் கொண்டே தந்தையிடம் இந்த விஷயத்தைப் பகிராமல் இருந்தவள், நிலவுடன் உலா வரும் தாயிடம் தன் மனப்போராட்டதைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் அவர்களது குடியிருப்பு வளாகத்திலிருக்கும் சின்ன பூந்தோட்டத்திற்குள் சரண்புகுந்தாள்.

அங்கிருந்த கல் மேடையில் அமர்ந்து, நிலவில் பார்வையைப் பதித்து, கண்ணோரம் சிறு கண்ணீர் துளியை வெளியிட்டவளை "ஹே நேஷனல்!" என்ற குரல் களைத்தது.

அவசரமாய் கண்களின் மீது கீரடமாய் அமர்ந்திருந்த ஒற்றை வைரத் துளியை சுண்டிவிட்டவள், அவனை ஏறெடுத்தும் பாராமல் அடுத்திருந்த கல் மேடையில் போய் அமர்ந்தாள்.

"எதுக்கு ஓடுறே?" என்ற கேள்வியுடன் நிகேதன் அங்கும் வர, செல்வி மற்றொரு கல் மேடைக்கு இடம் பெயர்ந்தாள். இப்படியாக தவிர்த்தல் / துரத்தல் என்ற போர்வையில் நடந்த இவ்விளையாட்டு, மேலும் ஓர் பத்து நிமிடங்கள் நடக்க "என்ன நேஷனல்? எதுக்கு இப்படி பல்லாங்குழி ஆடிட்டு இருக்கே? வாட் இஸ் ஈட்டிங் யு?" என்றான் நிகேதன், பொறுமையிழந்த ஓர் பெருமூச்சுடன்.

அவன் பொறுமை பறந்த அந்த வினாடி, செல்வியின் கோபமும் வெடிக்க

"நீங்க தான்! என்னை கொல்லாம கொல்றீங்க? கல்யாணம்ன்னு ஒரு கருமாதியை பண்ணிட்டு…உங்க அண்ணா என்னோட உயிரில பாதியை எடுத்துட்டார்ன்னா…நீங்க

காதல், கண்றாவின்னு மீதி உயிரை எடுக்குறீங்க?! ஒரு தரம் பட்ட சூடு பத்தாதா?!"

"உயிர் போற மாதிரி எனக்கு எப்படி வலிச்சுது தெரியுமா? தினம் தினம் என்ன நடக்குமோ...இன்னைக்கு உயிரோட இருப்போமான்னு பயந்து பயந்து செத்து...ப்ச் எனக்கு பைத்தியம் பிடிச்சிருந்தா கூட ஆச்சரியம் இல்லை! எத்தனை அடி! உடலால பட்ட அடியை விடுங்க...மனசால எவ்வளவு நொந்து போயிருப்பேன்...நான் ஒரு சாதாரண மனுஷி தானே....எனக்கும் கணவன், காதல், நேசம், புதுசா கல்யாணம் ஆகுற ஒரு பெண்ணிற்கு இருக்கக் கூடிய நியாயமான ஆசைகள், குழந்தை, குடும்பம்ன்னு எத்தனை இருந்திருக்கும்...எல்லாத்தையும்...எல்லாத்தையும் ஒருத்தரோட சுயநலத்திற்காக தொலைச்சிட்டு... உணர்ச்சியில்லாத ஒரு ஜடமா, மத்தவங்களோட கை பொம்மையா..."

"எல்லாத்தையும் விட கொடுமையா...என் முன்னாடியே உங்க அண்ணன்...ஒரு..ஒருத்..ஒருத்தரோட உறவு கொண்ட போது...செத்து போய்ட மாட்டோமான்னு இருந்தது...இந்த மாதிரி கொடுமை யாருக்குமே வரக்கூடாது!"

"இதெல்லாத்தையும் எப்படி மறக்கிறது! மறக்கிற மாதிரியான ரணமா இது!?"

"அப்படியே மறந்து உங்க காதலை ஏத்துக்கிட்டாலும்...உங்களை எப்படி நம்புறது? காதல்...நேசம்...அன்புன்னு சொல்ற நீங்களும் உங்க அண்ணா மாதிரி இருக்கமாட்டீங்கன்னு என்ன நிச்சயம்?"

"அவரோட முறை தவறின வாழ்க்கைக்கு உங்களைத் துணைக்குக் கூப்பிட்டார் தானே? அப்படியிருக்கும் போது நீங்களும் என்ன ஒழுங்கு?! அதுவில்லாம நான் அங்க அடைஞ்சு கிடந்தப்போ கூட....நீங்க உடனே வரலையே...ஆற அமர தானே வந்தீங்க? உங்களால வர முடியலைனாலும் உங்க ஃபிரண்ட்...யாரோ ஒருத்தர் வந்தாரே அவரை அனுப்பியிருக்கலாமே!? என்னை பாதுகாக்கணும்ங்கிற அக்கறை உங்ககிட்ட இல்லை தானே?! இப்போ மட்டும் பெருசா காதல்...அன்பு...தியாகமில்லை...பெண்மை...அப்படி

இப்படின்னு பேத்துறீங்க? அப்போ எங்க போச்சு அக்கறை...இப்போ உங்களுக்குன்னு ஒரு உரிமையை நீங்களே எடுத்துக்கிட்டு நீங்க காட்டுற அக்கறை அப்போ எங்க போச்சு? அங்க நான் அடிப்பட்டு சாகட்டும் என்று தானே நீங்க ஒரு வாரம் கழிச்சு வந்தீங்க?! அதுவும் உங்க அண்ணன் என்கிட்டே ஃபோனை கூட கொடுக்கிறதில்லைன்னு தெரிஞ்சிருந்தும்...சை...எல்லாம் முடிஞ்சு போன விஷயம்...இப்போ பேசி ஒன்னும் ஆகப்போறதில்ல...போங்க...போங்க...என்னைப் பேச வைக்காம போய்டுங்க" என்ற செல்வி, முகத்தை மூடிக் கொண்டு அழுதுவிட்டாள்.

அவளிடமிருந்து இப்படியொரு வெடிப்பை எதிர்ப்பார்த்திராத நிகேதன் - திகைத்து நின்றது ஒரே கணம் தான்!

அவளின் மறுப்புக்கும், வெறுப்புக்குமான காரணம் வெளியானதில் அவனுக்கு நிம்மதியே! காரணம் தெரியாமல் கலங்கியிருப்பதை விட காரணம் தெரிந்து கொண்டதில் அவனுக்கு மகிழ்ச்சி என்று தான் சொல்லவேண்டும்! ஆனால், எண்ணி எண்ணி மகிழ அவள் கூறிய விஷயம் எதுவும் உவப்பானது அல்லவே! அதைவிடவும், அன்பு கொண்டவளின் கண்ணீர் அவனை உருக்கிக் கரைத்தது!

"தாமரை!" என்ற நிகேதனின் குரல் அவனையும் மீறி கரகரத்துப் போயிருந்தது.

கல் மேடையில் அமர்ந்திருந்த தன்னவளின் முன்னே மண்டியிட்டு அமர்ந்தவன் - நடுங்கும் கரங்களால் அவள் கைகளைப் பிரிக்க முயன்றான். ஆனால், அவனின் முயற்சி புரிந்து சட்டென கைகளை விளக்கிக் கொண்டவள் "என்னைத் தொடாதீங்க?! தொட்டீங்கன்னா...தொட்டீங்கன்னா...நான்...நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது! போங்க..இங்கிருந்து போங்க!" என வெறி கொண்டு அவள் விசிக்க,

"ஓகே, ஓகே, தொடலை" என அவள் கூறியதில் பாதியை மட்டும் நிறைவேற்றியவன், மீதி பாதியை நிறைவேற்றவில்லை. அவள் காலடியில் மண்டியிட்டு அமர்ந்திருந்தவன், அதே

நிலையிலிருந்தவாறே பேச ஆரம்பித்தான்.

"தாமரை கண்ணம்மா! இப்போ என்னோட காதலின் மேன்மையைப் பற்றியோ, அதை நீ ஏத்துக்கிட்டே ஆகணும்ன்கிற மாதிரியோ நான் பேசப் போறதில்லை. உன் அளவில தெளிவில்லாம இருக்கிற சில விஷயங்களை தெளிவு படுத்தத்தான் பேசுறேன்" என்ற முகவுரையுடன் ஆரம்பித்தவன், அவளின் கண்ணீரை சிறு வருத்தத்துடன் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

"அமெரிக்காவிலிருந்து "என்னைக் காப்பாத்துங்க"ன்னு நீ கூப்பிட்ட மறு நிமிஷம் நான் உன்னை நம்ப ஆரம்பிச்சிட்டேன். ஒரு நிமிஷம் என்ன ஒரு வினாடி கூட....எனக்கு இங்க இருக்கவே மனசில்ல. அடுத்து என்ன, அடுத்து என்னன்னு யோசிச்சு, ஷ்யாம் அண்ணா - ஷைலு அக்காகிட்ட பேசி, விசாக்கு ஏற்பாடு பண்ற வரைக்கும்...ஏன் அமெரிக்கா வந்து உன்னைக் கண்ணால பார்க்கிற வரைக்கும் எனக்கு பொட்டு தூக்கமில்லை"

"எனக்கு இந்தியன் பாஸ்போர்ட்ங்கிறதால விசா கிடைக்க கொஞ்சம் தாமதமாகிடுச்சு. விசாவுக்காக காத்திருந்த ஒரொரு நாளும் என்ன மாதிரி ஒரு கஷ்டமா இருந்தது தெரியுமா? நீ எப்படி இருக்கியோ? எனக்கு ஃபோன் பண்ண விஷயம் தெரிஞ்சு நவநீத் உன்னை என்ன கொடுமை செய்றானோ? உன் உயிருக்கு என்ன ஆபத்தோ?ன்னு என் மனசு கிடந்து தவியா தவிச்சுப் போச்சு. என் மேல உனக்கு ஒரு நல்ல அபிப்ராயம் வரணும்கிறதுக்காக நான் இதை சொல்லலை...அப்படியிருந்தா முன்னாடியே சொல்லியிருப்பேன். நீ வச்சிருக்கிற தப்பான அபிப்ராயத்தின் படி எதுவும் நடக்கலைன்னு தன்னிலை விளக்கம் கொடுக்கிறேன்னு வச்சுக்கோயேன்"

"உன் மேல அக்கறையில்லாம இல்லைடா...நிஷாந்த்கிட்ட சொல்லி உன்னை முன்னமே காப்பாத்தியிருக்கலாம் தான்! ஆனா, அவனை நவநீத் எப்படிடா நம்புவான்? "என் சொந்த விஷயத்தில தலையிட நீ யாரு"ன்னு கழுதைப் பிடிச்சு வெளிய தள்ளியிருக்க மாட்டான்னா? அதோட இல்லாம, உன்னையும் வதைச்சிருப்பானே! நிஷாந்தை அனுப்பி, நவநீதனோட ஒரு கை கலப்பாகி, உனக்கு மேலுமேலும் பிரச்னை வந்து, உன்னோட

உயிருக்கு எதாவது ஒன்னு நடந்திருந்தா என்னால உயிரோடவே இருந்திருக்க முடியாது. இப்போ நெஞ்சுக்குள்ள புகுந்து என்னை ஆட்டி வைக்கிற காதலால இதை நான் சொல்லலை. அப்போ இருந்த மனநிலையும் இது தான்...உன்னை எப்படியாவது காப்பாத்திடனும்ன்னு நொடிக்கொரு முறை என் மனசு அடிச்சிட்டே இருந்தது. அதனால தான் ஷைலு அக்காவையும் என்னோட கூட்டிட்டு வந்தேன். அக்கா வந்தா நவநீதால பெருசா எதுவும் பண்ண முடியாது...உன்னை எங்களோட அனுப்பிவைக்கிரத்தை தவிரன்னு எனக்குத் தோணிட்டே இருந்தது"

"உன்னை அங்க அரை உயிரா பார்த்தப்ப...நவநீதை அப்படியே கொன்னு போடணும் போல இருந்தது தெரியுமா? பூ மாதிரி இருந்த பெண்ணை இப்படி உருக்குலைச்சு வச்சிருக்கானேன்னு அவன் மேல ஆத்திரமா வந்தது. ஆனா, அந்த நிமிடம் என் மனசுக்குள்ள காதல் இல்லை. நான் ஏன் இதை சொல்றேன்னா...நான் உன் மேல பரிதாபப்பட்டு உன்னை காதலிக்கிறேன்னு உருகலை சரியா? தன்னிலை விளக்கம் கொடுக்கிறேன்கிற பேர்ல என் காதலுக்கு துணை சேர்க்கிறேன் போல...ப்ச்...எங்க சுத்தினாலும் அங்க வந்திடுது! ப்ச்..."

"உன் மேல அக்கறையில்லாமலா அத்தான்கிட்ட சொல்லி...உன்னை இங்க வரவைச்சேன்...என்ன அப்படி கண்ணை விரிக்கிற...எல்லாம் ஐயாவோட ஸ்கிரிப்ட் தான்...அத்தான் ஜஸ்ட் ஆக்ட் தான் செய்தாங்க..."

"அப்புறம்...கராத்தே கிளாஸ் சேரச் சொன்னது...ஈமெயில் அனுப்பினது...மெடிடேஷன், யோகான்னு உன்னை திசைத் திருப்பினது...எல்லாமே உன் மேல இருக்க அக்கறையால தானே! என்னோட நேஷனல்...வெளிநாட்டில வந்தும் இந்தியாவோட தேசிய மலரின் உரு குலையாம...காண கம்பீரமா நிற்கனும்ன்னு ஆசைப்பட்ட எனக்கு உன் மேல அக்கறையில்லையா? நல்லா இருக்கே உங்க ஊரு நியாயம்!? ஹ்ம்ம்!"

"நீ சொன்ன எல்லாத்துக்குமே விளக்கம் கொடுத்துட்டேன் - இரண்டே இரண்டைத் தவிர!

முதல...கல்யாணம் என்கிற பந்தத்தால நீ பட்ட வலியும் வேதனையும். ஒரு ஆணாய் இருந்தாலும், என்னால ஒரு மனுஷனா உன்னோட வலிகளைப் புரிஞ்சுக்க முடியுது. நடந்து முடிஞ்ச அநியாயங்களை நினைச்சு மனசு பதறினாலும்...அந்த சூழ்நிலையில் இருந்திட்டு வந்திருக்க உன்னை வெறும் ஆறுதல் வார்த்தைகளால தேற்ற முடியும்னு தோணலை. அந்த கருப்பான நாட்கள் உன்னோட வாழ்க்கையில நடக்கவே இல்லைன்னு நினைச்சுக்கோன்னு சொல்றதை தவிர...எனக்கு வேற வார்த்தைகள் தெரியல"

"அடுத்து...நவநீதன் மாதிரி நான் இருக்கமாட்டேன்னு என்ன நிச்சயம்ன்னு கேட்டியே - இதுக்கு விளக்கங்களோ, நம்பிக்கை வார்த்தைகளோ பத்தவே பத்தாது. அது தானா வரணும். பரஸ்பர நம்பிக்கை வரணும்...அது என் மேல உனக்கு வரவரைக்கும் நான் காத்திட்டு இருப்பேன்"

இவை அனைத்தையும் ஓர் கனிவுடன் செல்வியின் முகத்தைப் பார்த்து கூறிய நிகேதன், "பனி அதிகமா இருக்கு. எழுந்து...உள்ள போ! மனசை ரொம்ப ரணப்படுத்திக்காம நிம்மதியா தூங்கு! நாளைக்கு ஒரு அழகான லாவெண்டர் பௌக்கேயோட நான் உன்னை சந்திக்கிறேன். அது வரை வணக்கம் கூறி விடை பெறுவது உனது அன்பன் - நிகேதன்!" என இடுப்பு வரை குனிந்து அவளிடம் விடைபெற்றான்.

அத்தியாயம் 19

நிகேதன் தனது தன்னிலை விளக்கத்தை முடித்துக்கொண்டு உள்ளே சென்றபின்னரும் செல்வியின் திகைத்த பார்வையில் மாற்றம் ஏற்படவில்லை. அவன் கூறிய விளக்கங்களில், அவனே கூறியது போல் அவனது காதலுக்கு ஆதரவான விளக்கங்கள் சிறிதளவு இருந்தபோதிலும், பெரும்பான்மையாக அவனது அப்போதைய மனநிலையை விளக்குவதாகவே இருந்தது என்பது செல்விக்கும் புரிந்தது.

அதிலும், "நவநீதன் போல் நான் இருக்க மாட்டேன் என்பதை வெறும் வார்த்தைகளால் விளக்குவது என்பது முறையல்ல. அது பரஸ்பர நம்பிக்கை. அந்த நம்பிக்கை என் மேல் உனக்கு வரும் வரை நான் காத்திருப்பேன்" என்ற அவனது வார்த்தைகள் இப்போதும் செல்வியின் காதுகளில் ரீங்காரமிட்டன. தன் மீது நம்பிக்கை ஏற்படும் வண்ணம் நிகேதன் விவாதித்திருந்தால் செல்வி எப்படி உணர்ந்திருப்பாளோ, அவன் பேசாத வார்த்தைகள்

செல்வியை யோசிக்க வைத்தன. ஆம், அவன் கூறிய பரஸ்பர நம்பிக்கை மெல்லிதாய் முளைக்க ஆரம்பித்திருந்தது. அதற்கு தேவையான வார்த்தைகளை அவனுக்குப் பதிலாய் அவளே தேட ஆரம்பித்திருந்தாள் என்பது வியக்கத்தக்க விஷயம் தான்!

அவன் மீது குற்றம் என்று தான் சாடிய விஷயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாய் எடுத்துப்பார்த்து, நிகேதனுக்கு சாதகமாய் வாதாடியது செல்வியின் மனம்.

முதலாவதாய், நவநீதன் நிகேதன் மேல் வைத்திருந்த நம்பிக்கை - அதாவது அவனின் மேல் நாட்டு கலாச்சார மாற்றத்திற்கு நிகேதன் துணை புரிவான் என்ற நவநீதனின் நம்பிக்கையில் துவங்கியது செல்வியின் வாதாடும் படலம். மேல் நாட்டு கலாச்சாரத்திற்கு துணை போகும் எண்ணம் கொண்டவன் - தனக்கொரு ஆபத்து என்றதும் ஏன் ஓடி வரவேண்டும்? அதற்கு ஒத்துப்போபவனாய் இருக்கும் பட்சத்தில் தன்னை காக்க வந்திருக்கவே மாட்டானே! "என் தமையன் செய்வது சரியே...அவனோடு வாழும் வழியைப் பார்" என்று கூறியிருக்கலாமே? அப்படி கூறாததோடு, தனக்கொரு ஆபத்து என்றதும் தவித்தும் இருக்கிறானே...ஹ்ம்ம்...அவன் தவித்தது உண்மை தான்...'தவித்தேன்' என்ற அவனது குரலிலிருந்த வருத்தம் இப்போதும் செல்வியை உருக்கவே செய்ததால் அவன் தவித்ததை அவளால் 'இல்லை' என்று நிராகரிக்க முடியவில்லை.

தவித்தான்...துடித்தான்...காத்தான்...என்பதற்கெல்லாம் மேலாய் அவனது தமையனை அடிக்கும் அளவிற்குப் போயிருக்கிறானே! இதை கூட "என் அண்ணன் செய்த தப்பை தட்டிக் கேட்கும் வண்ணம் அவனை அடித்தேன்" எனத் தன்னிடம் சொல்லி, அவனை நல்லவனாய் நிலைநாட்டிக்கொள்ளவில்லையே! தந்தை கூறியதன் மூலமாக தானே அவனுக்கும் நவநீதனுக்கும் கைகலப்பு நடந்தது தெரியும்! அதையுமே நிகேதனின் குடும்பத்தில் யாரும, அவர்களின் வாய்மொழியாக கூறவில்லையே! செல்லியப்பன் சொன்னது போல் "தங்களை நல்லவர்களாய் நிலைநாட்டிக்கொள்ள அவர்கள் போராடவில்லை" என்பது செல்விக்கும் உரைத்தது. அதே எண்ணத்துடன், நவநீதன் மனதில் எண்ணியதற்கு நிகேதன் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்பதை அவளே பகுத்தறிந்தாள்.

இரண்டாவதாய், தனக்கு ஆபத்து என்றதும் நிகேதன் புஷ்பக விமானத்தில் பறந்து வரவில்லை என அவனைச் சாடியது இப்போது லேசான சிரிப்பைக் கூட வரவழைத்தது. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் நாலடி தூரம் மாதிரியும், அதை கடக்க நிகேதான் நாலு நாள் எடுத்துக்கொண்டது போலவும் தான் எண்ணியதை நினைத்தால் செல்விக்கு சிரிப்புத்தான் வந்தது.

மூன்றாவதாய், நிஷாந்த்தை அனுப்பி நிகேதன் தன்னை மீட்கவில்லை என்பதற்கு அவன் கூறிய விளக்கங்கள் சரியானதாய் பட்ட அதே வேளையில் - "சாமியே வரம் கொடுக்கும் போது பூசாரி மணி ஆட்டவில்லை என்பது உனக்கே நியாயமா?" என செல்வியை அவளது மனமே கேள்வி கேட்டது. அவன் சொன்னது போல், நிஷாந்த் வந்து தன்னை மீட்டிருக்கும் பட்சத்தில் நவநீதனின் வீட்டிலிருந்து இத்தனை சுளுவாய் வெளிவந்திருக்க முடியாது என்றே தோன்றியது. ஷைலஜாவையும், நிகேதனையும் பார்த்த வினாடியில் நவநீதன் அதிர்ந்து நின்றது இப்போதும் மனக்கண்ணில் மின்னி மறைய, நிகேதன் ஷைலஜாவை அழைத்து வந்ததே சரியென்ற எண்ணம் செல்வியின் மனதில் ஆழமாய், அழுத்தமாய் பதிந்து போனது.

கடைசியாய், நிகேதனின் காதல்! அங்கே நின்றன செல்வியின் எண்ணங்கள்! அவனின் காதலை சந்தேகித்து அல்ல! ஏற்கனவே திருமண பந்தத்தில் விழுந்து, அதன் வெப்பத்தில் வெந்து, ஆறாத ரணங்களுடன் வாழும் தன்னால் அவனை காதலிக்க முடியுமா என்ற பயத்தில்!?

அவனின் அண்ணன் மனைவியாய் சில காலம் இருந்த தன்னால், அவனின் காதலை சுகிக்க முடியுமா? அப்படியே ஏற்றாலும், அந்த உறவை ஊர் உலகம் எப்படி பார்க்கும்? அண்ணன் மனைவியை மணந்து கொண்டுவிட்டான் என அவனைத் தூற்றுமோ? இல்லை கொழுந்தன் மேல் மோகம் கொண்டாள் என அவளைப் பழிக்குமோ?

ஆனால், நிகேதனின் அண்ணனை மணந்து கொண்டேன் என்பதற்காக அவனது மனைவி என்ற நிலைக்கு நான் எப்படி போவேன்? மனைவி என்ற பதவியை - ஊர் உலகம் ஒரு பெண்ணிற்கு கொடுப்பதில்லையே...கட்டிய கணவன் அல்லவா கொடுக்கவேண்டும்?

தன்னில் பாதியாய், உயிரின் உணர்வாய், சந்தோஷங்களின் பிம்பமாய், துயரங்களின்

வடிகாலாய், நட்பின் சுவடாய் மணம் கொண்டவளை ஓர் ஆண்மகன் பாவிக்கும் போது தானே, யாரும் கொடுக்காமலே மனைவி என்ற பதவி ஓர் பெண்ணிற்கு வந்து சேர்கிறது.

தன்னில் பாதியாய் என்ன...அவளை ஓர் மனுஷியாய் கூட மதிக்காத நவநீதனை கணவன் என்று எண்ணுவதே பெரும் குற்றமாய் பட, அதற்கு மேல் செல்வியால் யோசிக்கமுடியவில்லை! நிகேதனின் மீது தான் சுமத்திய குற்றங்கள் அனைத்திற்கும் தீர்வு கண்டவள், அவனின் காதலுக்கு விடை காணும் முன்னால், சிறிதாய் தூறல் போட ஆரம்பித்திருந்தது.

செந்தாமரையாளின் கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீரின் சுவடுகளை, வெண் மேகத்தின் கண்ணீர் துளிகளான மழைத்துளிகள் துடைக்க, செல்வி சுதாரித்து எழுவதற்குள் "நேஷனல், எழுந்திரு! மழை தூறுது...வீட்டுக்குப் போ" என்ற அதட்டலுடன் அங்கே வந்து சேர்த்தான், அவளது எண்ணங்களின் நாயகன்.

திடீரென கேட்ட அவனது குரலில் அதிர்ந்து விழித்த செல்வி, இருந்த இடத்தை விட்டு நகராமலே இருக்க "எழுந்திரு நேஷனல்! சொல்றதை கேளு! என்ன யோசனை என்றாலும் வீட்டுக்குள்ள போய் பண்ணிக்கலாம். காய்ச்சல் வந்திடப்போகுதுமா. உள்ள வா" என்றான் நிகேதன் வலியுறுத்தும் குரலில்.

அவனது குரலில் எழுந்துவிட்ட செல்வி, வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். இரண்டடி எடுத்து வைத்தவள், திரும்பி நிகேதனை பார்த்த வினாடி பிரம்மித்தாள்!

வெண் பனிச்சாரலாய் விழுந்த மழைத்துளிகளின் ஊடே தெரிந்த அவனின் முகத்தில் இருந்தது என்ன? காதலா? பாசமா? நனைகிறாளே என்ற கவலையா? அழுதாளே என்ற வருத்தமா? இவளை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதியா? இல்லை எல்லாமுமா? - என்ற அலசலுடன் அவனைப் பார்த்திருந்த செல்வி திகைத்தாள்!

வசீகரமான முகத்தில் கனிவுடன் - கண்களில் காதலுடன் - உள்ளே செல்லுமாறு கூறிய செய்கையில் வலியுறுத்தலுடன் - உதட்டில் மாறாத புன்னகையுடன் நின்றிருந்த நிகேதனைப் பார்த்த செல்விக்கு உள்ளுக்குள் ஏதோ ஒன்று புரண்டது!

புரண்ட மனதின் ஓட்டத்தில் செல்வி நிலைதடுமாறிக் கொண்டிருக்கும் போதே "இந்த நிக்கி அழகு தான்...அதுக்காக இவ்வளவு நேரம் என்னை பார்க்க வேண்டியதில்லை...இந்த அழகான முகத்தை நாளைக்கும் பாரக்கலாம் என்பதால் இப்போ உள்ள போங்க மேடம்" என்ற நிகேதனின் குரல் அவளை நிகழ்விற்கு மீட்டு வந்தது.

சட்டென மூண்ட கோபத்தில் "எந்த நேரத்தில் விளையாடுவது என்ற விவஸ்தையே இவனுக்குக் கிடையாது!" என அவனைத் திட்டிவிட்டு, வேகவேகமாய் வீட்டினுள் சென்றாள் செல்வி

தன்னிடமிருந்த சாவியால் வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்றவள், செல்லியப்பனின் உறக்கம் களைந்துவிட்டதா என எட்டிப்பார்த்து, அவர் அசந்து உறங்குவதை உறுதி செய்து கொண்டு தன் அறைக்குள் வந்தாள்.

சற்று முன் நடந்த மனப்போராட்டத்தின் விளைவாய் உறக்கம் என்பதே தன் கண்களைத் தழுவப் போவதில்லை என்றெண்ணிய செல்விக்கு அடுத்ததாய் நினைவு திரும்பியது - காலை ஆறு மணிக்கு - அதுவும் செல்லியப்பன் அவளை எழுப்பிய பிறகு தான்.
மிதமான ஆச்சரியத்துடன், தன் காலை கடன்களை முடித்தவள், நடைப்பயிற்சிக்காக வெளியே வந்த போது, நேற்று பார்த்த அதே முறுவலுடன் அங்கே நின்றிருந்தான் நிகேதன். வழக்கமாய் அவன் கூறும் "காலை வணக்கத்தை" மறக்காமல் பெற்று கொண்டவள், பதிலுக்கு ஓர் "காலை வணக்கம்" என்ன...ஓர் சின்னப் புன்னகையைக் கூட சிந்தவில்லை.

"என்ன நேஷனல்? ராத்திரி முழுசும் என்னைப் பத்தி நினைச்சிட்டே இருந்தியா?" என்றவன், அவள் பதிலேதும் பேசாமல் இருக்கவே

"ஹோ...இழுத்து போர்த்திட்டு நல்லா தூங்கினியோ?" எனக் கூறி அதற்கும் ஓர் இடைவேளை விட்டான்.

பின்னர் அவனே "தூக்கத்தில கனவு ஏதாவது வந்துச்சா? அந்த கனவில நான் வந்தேனா?" எனப் பலவாறாய் அவளைப் பேசவைக்க முயன்று தோற்றான்.

சற்று நேரம் அவள் தூக்கத்தைக் குறித்தே வம்பு வளர்த்துக் கொண்டிருந்தவன், "ஹய்யோ,

நேத்தைக்கு நீ கத்தினதை பார்த்து...நான் எவ்வளவு அரண்டு போயிட்டேன் தெரியுமா? ஒரு பச்சைப் பிள்ளையை...அறியா குழந்தையை...கபடரியா செல்வத்தை...சுடு சொல் தாங்காத சிங்கத்தை...கனிவே உருவான ஒரு டாக்டரை இப்படியா பயமுறுத்துவது? இனிமேல் இப்படியெல்லாம் செய்யாதே என்னடா? எதுவா இருந்தாலும் பேசி...சி...சி... தீர்த்துக்கலாம். தேவையில்லாம நோ கத்தல்...நோ அழுகை...நோ வருத்தம்...நோ கோபம்...நோ பயமுறுத்தல். நீ நல்லா பேசினாலே கேட்கிறதுக்கு நான் இருக்கும் போது...எதுக்கு அழணும்? எதுக்கு கத்தணும்? எதுக்கு வருத்தப்படணும்? ஒகேவா! என்ன கஷ்டம் என்றாலும்...நீ என்கிட்டே சாதரணமாவே பேசலாம். ஐ வில் ஹெல்ப் யு அவுட்" என்றவனின் குரல் கிண்டலில் ஆரம்பித்து கிண்டலில் முடிந்தாலும், அதிலிருந்தது அக்கறையே என செல்விக்குப் புரிந்தது.

அப்போதும் செல்வி வாளா இருக்க, நிகேதனும் பல விதமாய் முயன்றான். எதற்குமே அவள் அசைந்து கொடுக்காமல் இருக்கவே, நேரில் அல்லது மின்னஞ்சலிலும் அவனின் பேச்சுக்கள் தொடர்ந்தன.

காலையில் - லாவெண்டர் வண்ணப் பூங்கொத்துடன் அவளின் வேலை நாளைத் துவக்கி வைப்பவன், இடையிடையே சாப்பிட்டாயா?, காபி குடித்தாயா?, லஞ்ச் ஆச்சா?, எப்போ வீட்டுக்குப் போறே?, ரொம்ப வேலை பார்க்காதே! அத்தானுக்கும் கொஞ்சம் வேலை கொடு!, இன்னைக்கு அம்மா பீட்ரூட் செய்தாங்க...உன்னை நினைச்சுட்டே சாப்பிட்டேன் என விதவிதமாய் அவளைப் பேச்சிற்கு இழுத்தான்.

இப்படியாக சில நாட்கள் கழிய, தான் இந்தியா செல்லவேண்டியிருப்பதை தன் தந்தையிடம் கூட வெளியிடவில்லை செல்வி! மனதின் வேதனைக்கு விடுதலை கொடுக்கப் போகும் மணவிடுதலையை அடைய ஐந்து நாட்கள் இருந்த நிலையில் - நிகேதன் இருமுடி கட்டி, சபரி மலைக்குக் கிளம்பும் பூஜைக்கு அவளை அழைக்க வந்தார் மங்கையர்க்கரசி.

மறுக்கத் தோன்றாமல் பூஜையில் கலந்து கொண்டவள் - ஐயனை நினைத்து விரதமிருந்தவன் அதே சிரத்தையுடன் ஐயனுக்கான தேங்காயையும் நெய்யையும் தன் இரு முடியில் தாங்கி, மண்ணாளும் மணிகண்டனின் தரிசனம் பெற சபரிமலைக்குக் கிளம்பியபோது அவன் பாதம் தொட்டு வணங்கினாள். (எல்லாரையும் பின்பற்றி தான்)

"எல்லாம் நல்லபடியா நடக்கும்! கவலைப்படாதே!" என்ற ஆசியுடன் சபரி மலைக்கு அவன் கிளம்பிச் செல்ல, அவனது பிம்பம் தன் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்தாள் செல்வி.

அடுத்த நாள் காலை, தான் இந்தியா செல்லவேண்டியிருப்பதை செல்லியப்பனிடம் பகிர்ந்தவள், அவரின் கண்ணீரை "ஒரு நல்லது நடக்கும் போது யாரவது அழுவாங்களாப்பா? கண்ணைத் துடை" என்ற கண்டிப்பு வார்த்தைகளில் அடக்கினாள் என்றால், நானும் உடன் வருகிறேன் என்ற அவரது தவிப்பை "அங்க வந்து...நவநீதனைப் பார்த்தா உனக்கு ரொம்ப கோபம் வரும்பா. கோபம் வரத்தை தப்புன்னு சொல்லலை. அதை உணராத மனுஷங்ககிட்ட எதுக்கு அதை காட்டணும்? நான் மட்டும் போயிட்டு வரேன். அங்கிருந்து வரும்போது உன் பொண்ணு...ஒரு புது மனுஷியா வரணும்கிற வேண்டுதலோட நீ இங்கவே இரு! ம்ம்...ஷைலு அக்கா வீட்டில பிள்ளைங்களோட இருக்கியா? நீ தனியா இருக்கிறதைவிட....அங்க இருந்தா...எனக்கும் நிம்மதியா இருக்கும்" என்ற வாதத்தில் அடக்கி ஆண்டாள்.

அடுத்ததாக ஷ்யாமிடம் சென்று, தனக்கு ஒரு வாரம் விடுமுறை வேண்டுமென கேட்டவள், அவன் காரணம் கேட்ட பின்னரே, விவாகரத்து விசாரணையைப் பற்றி வாய் திறந்தாள். தானும் உடன் வருகிறேன் என உடன் பிறந்தவனாய் அவன் வாதாட, "எத்தனை நாளைக்குத் தான் உங்க பின்னாடியே ஒளிஞ்சுக்கிறது? எதையும் தயங்காம எதிர்கொள்ற தைரியம் எனக்கு வரவேண்டாமா? ப்ளீஸ் அண்ணா...இப்படி சொல்றதால எனக்கு உங்க மேல கோபமோ, வருத்தமோ, நம்பிக்கையின்மையோ சுத்தமா கிடையாது. என் மேல நீங்க வச்சிருக்க அக்கறையால தான் உங்ககிட்ட இப்படி பேசுறேன். தயவு செஞ்சு என்னைப் புரிஞ்சுக்கோங்க" என்று அவனை மடக்கினாள். மடக்கியதோடு நில்லாமல், ஷ்யாமின் விரல்கள் வாஞ்சையாக அவள் தலையை வருடியதையும் வாங்கிக்கொண்டே இந்தியா செல்ல ஆயத்தமானாள் செல்வி.

செல்வி இந்தியா செல்கிறாள், அதுவும் தன் மகனிடமிருந்து விவாகரத்து வேண்டி நீதிமன்றம் செல்கிறாள் என்ற செய்தியை கேள்விப்பட்ட மங்கையர்க்கரசி - செல்வியின் இந்தியா பயணத்திற்கு முன்தினம் அவளின் வீட்டிற்கு விஜயம் செய்தார்.

"வாங்கம்மா" என வாயார வரவேற்றவளின் கன்னம் வருடி, "செல்விம்மா...நா கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதே! நீ...நீ இந்தியாவுக்குத் தனியா போகவேண்டாம்

கண்ணம்மா...நானும் கூடவரட்டுமா? அவன்...அவன்...அதான் நவநீத்...ஏதாவது ஏடாகூடம் பண்ணினா...உனக்கு ஒரு துணை வேண்டாமா? பெண்ணுக்குப் பெண்ணாய்...ஒரு அம்மாவா நானும் கூட வரவா?" என்றார் குரலில் பெரும் தவிப்பும், தடுமாற்றமுமாய்.

அவரது வார்த்தைகளில் உடைந்தே போன செல்வி, தான் பெற்ற மகனுக்கு எதிராக மருமகளை மகளாக்கி நிற்கும் இந்த தாயின் மீதா கோபம் கொண்டிருந்தோம்...அப்படி கொண்ட கோபம் எத்தனை தப்பு என மனம் நொந்து போனாள். நொந்த மனதின் உந்துதலால் அவரை அணைத்துக்கொண்டவள் "தேங்க்ஸ்மா. தேங்க்ஸ்மா" என்ற வார்த்தைகளைத் தவிர வேறெதையும் உதிர்க்கவில்லை.

என்ன தான் உருகியபோதும், "உங்களை மீறி பேசுறேன்னு நினைக்காதீங்கம்மா. நான் மனசு கஷ்டப்படுவேன்னு நீங்க வருத்தப்படுற மாதிரியே...ஒரு அம்மாவா உங்க மனசு படர வேதனையைப் பார்க்க எனக்கும் திராணியில்லைமா. நான்...நான் பார்த்துக்கிறேன்...ப்ளீஸ்" என அவரையும் சிங்கப்பூரிலேயே நிறுத்திவைத்தாள்.

பலவிதமாய் அவளிடம் வாதாடி தோற்ற மங்கையர்க்கரசி, "உன் இஷ்டப்படியே நீ மட்டும் போயிட்டு வா...ஆனா...என்ன நடந்தாலும்...இந்த அம்மாவும், உன் சாரும் உனக்கு ஆதரவா இருப்போம். சரியா?" என்றார்.

"தேங்க்ஸ் மா" என்ற செல்வியிடம் விடை பெற்றவர், மேலும் தயங்கி "செல்விமா...இதை...இதை...எப்படி கேட்கிறது...சொல்றதுன்னு புரியலை...நிக்கிக்குத் தெரிஞ்சா கோபப்படுவான்...உன்கிட்ட இந்த விஷயத்தைப் பத்தி பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்கான்...ஆனாலும்...ஆனாலும்...பெத்த மனசில்லையா...சொன்னதை கேட்க மாட்டேங்குது..." என பலமாய் தயங்கியவர், "சொல்லுங்கம்மா" என செல்வி பலமாய் உந்தியதில், தயக்கம் சிறுது அகன்றவர் போல் மேலும் பேசினார்.

"அது...நிக்கிக்கு உன்னை...நிக்கி...உன்னை லவ் பண்றதா...உனக்கு இஷ்டமா கண்ணு!? நவநீத் பண்ணியதை மனசில வச்சிட்டு...நிக்கியை...அப்படி இடை போட்டுடாதே...சை...உன்கிட்ட இதை பத்தி பேசவே கூடாதுன்னு நிக்கி படிச்சுப் படிச்சு சொன்னான்...நான் தான் கேட்காம...மன்னிச்சிடுமா. உனக்கு எது நல்லதுன்னு உனக்கே

தெரியும்...அதனால நீயே ஒரு நல்ல முடிவா எடு. நீ என்ன முடிவெடுத்தாலும்...நான் உனக்குத் துணையா இருப்பேன். அது நிக்கியை எதிர்த்தே என்றாலும் சரி தான். நல்லா யோசிச்சு ஒரு முடிவிற்கு வா" என்றவரின் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்த அதே சமயம், கனிவும் கூடவே இருந்து, "உனது முடிவை நான் மதிக்கிறேன்" என்ற அவரது பெருந்தன்மையை எடுத்துக்காட்டியது.

அனைவரது ஆசிர்வாதத்தையும் பெற்று கொண்டு விமானம் ஏறிய செல்விக்கு, சிந்தனைகள் பலவாறாய் பறந்து விரிந்தன.

சிந்தனை குவியலாய் இருந்த மனதுடன் சென்னை விமானநிலையத்தில் இறங்கியவளை, ஷ்யாம் ஏற்பாடு செய்திருந்த உண்டுறை விடுதிக்கு அங்கிருந்தே ஒரு கார் வந்து அழைத்துச் சென்றது. அன்றைய தினத்தை, அருகிலிருக்கும் மருந்தீஸ்வரர் சிவாலயத்திலும், திருவான்மியூர் கடற்கரையிலுமாய் கழித்தவள், அடுத்த நாள் காலை பத்து மணிக்கு நீதிமன்ற வளாகத்திற்குச் சென்றாள்.

அங்கே உடல் கருத்து, துரும்பாய் இளைத்து, கண்கள் உள்ளே போன நிலையில் சோர்ந்து அமர்ந்திருந்த நவநீதனைப் பார்த்ததும் நெஞ்சம் துணுக்குற்ற போதும், தனக்கு அவன் இழைத்த அநியாயத்திற்கு இதற்கு மேலும் இளைத்து வருந்த வேண்டும் என்றே அந்த பெண் மனம் கறுவியது.

அவளது உள்ளக் குமுறலை உணர்ந்தவன் போல், செல்வியை ஒரே தரம் நிமிர்ந்து பார்த்தவனின் தலை குனிந்தே இருந்தது குறிப்பிடத்தக்கது!

அவர்களது முறை அழைக்கப்பட்டப்போது, என்னென்ன காரணங்கள் கூறி, மணவிடுதலையை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்பதை பட்டியலிட்டவாறே குடும்ப நல நீதிபதியின் முன்னே அமர்ந்தாள் செல்வி.

ஆனால், அவளது பட்டியலுக்கு அவசியமே இல்லாதது போல் நவநீதன் பேசினான்...பேசி அவளை மட்டுமல்லாது குடும்ப நல நீதிபதியையும் வியப்பிலும் பரிதாபத்திலும் ஆழ வைத்தான்.

"தாமரைச்செல்வி கேட்டிருக்க இந்த விவகாரத்தை நான் மனசார கொடுக்கிறேன் மேடம்" எனத் தொடங்கியவன்,

"என்னோட அவளுக்கு நடந்தது கல்யாணமே இல்லை மேடம்...அது ஒரு வியாபார ஒப்பந்தம். தாமரைச்செல்வி அதை கல்யாணமா நினைச்சு தான் நான் கட்டின தாலியை வாங்கிட்டாங்க...ஆனா, நான் அதை ஒரு வியாபாரமா தான் பார்த்தேன். ஒரு பெண்ணிற்கு காசும், பணமும், சமுதாயத்தில் பெரிய நிலையம் போதும்கிற மிதப்பில அவளோட உணர்வுகளை நான் சுத்தமா புரிஞ்சுக்கலை. எனக்கு ஒரு மனசிருக்கிற மாதிரி அவளுக்கும் ஓர் மனசிருக்கு...அதில ஆசைகள் ம்ம் நியாயமான ஆசைகள் இருக்குன்னு எனக்குப் புரியலை..."

"இப்போ எப்படி புரிஞ்சதுன்னு கேட்கிறீங்களா? புரிய வச்சாங்க...என் குடும்பத்தில இருக்கிற எல்லாரும் புரிய வச்சாங்க...கிட்டத்தட்ட முப்பது வருஷமா என்னை கொண்டாடின என்னோட குடும்பம் இந்த ஒரு வருஷமா என்கூட பேசுறதே இல்லை. பேசுறது என்ன....என்னைப் பார்க்கிறதை கூட பாவமா நினைக்கிறாங்க"

"இத்தனை நாள் என்னைத் தாங்கின என் குடும்பம்...மூணாவது மனுஷியான செல்விக்கு ஆதரவா நின்ன போது கூட நான் உணரவே இல்லை...எங்க அக்கா அவ கழுத்தில இருந்த தாலியை தூக்கி எரிஞ்சபோது கூட நான் என் தப்பை உணரலை...என் தம்பி ஊருக்கு முன்னாடி என்னை கை நீட்டி அடிச்சப்போ கூட நான் திருந்தலை..."

"எங்கம்மா...எங்கம்மா...செல்விக்கு விவாகரத்து கொடுக்கலைன்னா செத்து...செத்துடுவேன்னு சொன்னாங்க...அப்போ தான் நான் பண்ணினது தப்போன்னு தோண ஆரம்பிச்சது"

"அதுக்கு அப்புறம்...என் குடும்பம் என்னை வெறுத்த அளவுக்கு வேறு யாரையுமே வெறுத்திருக்க மாட்டாங்க என்ற நிலைக்கு வந்தப்ப தான் என்னோட தப்பே எனக்குப் புரிஞ்சது"

"கிட்டத்தட்ட ஆறு வருஷத்துக்கும் மேலான அமெரிக்க வாசம் எனக்குள்ள நிறைய கல்ச்சர மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கு. அதை தப்புன்னோ...அதுனால தான் நான்

செல்வியை கொடுமை படுத்தினேன் என்றோ நான் பழியை வேற பக்கம் போடா விரும்பலை. அந்த கலாச்சார உருமாற்றத்துக்கு அப்புறமும் பல பேர் சந்தோஷமா இருக்காங்க...நான் செல்விக்கு செய்த கொடுமைக்குக் காரணம் என்னோட சுயநலம்...என்னை மட்டுமே எண்ணிய என்னோட சுயநலம். அப்படிப்பட்ட சுயநலவாதிகிட்ட இருந்து செல்விக்கு விடுதலை கொடுத்திடுங்க. நான் மனசார சம்மதிக்கிறேன்" என அவன் முடித்தப்போது

"மிஸ்டர்.நவநீதன் மனம் திருந்தி வந்திருக்கையில் நீங்க அவரோட சேர்ந்து வாழ்வதை பற்றி யோசிக்கலாமே" என நீதிபதி வினவ, செல்வி ஸ்தம்பித்துப் போனாள். ஆனால், உடனடியாய் தோன்றிய மறுப்பை அவள் அமல்படுத்தும் முன்னர்

"இல்லை மேடம். எங்களுக்குள்ள ஒரு நல்ல குடும்ப வாழ்வு ஏற்படும் வாய்ப்பு சுத்தமா கிடையாது. அதை நானே அழிச்சுட்டேன். தாமரைச்செல்வியை நான் திருமணம் செய்திருக்கும் போதே அவளை ஓர் பொருளாய் தான் பார்த்தேனே ஒழிய, மனைவியாய்...என்ன மனுஷியாய் கூட பார்க்கலை. எப்போவும் மனுஷி என்ற உணர்வு எனக்குள்ள வந்திருக்கு தான் என்றாலும்...மனைவியாய் இல்லை!" என்றான் தீர்மானமாய்.

தொடர்ந்து "நான் ஜாக் என்ற என் நண்பனுடான உறவை முறித்துக் கொள்ளாத பட்சத்தில்..இதை நீங்க தப்பா பார்க்காதீங்க...எனக்கு ஓர் துணை வேண்டும்...அது இப்போதைக்கு ஜாக்! இது இந்தியக் கலாச்சாரத்திற்கு எதிராய் இருந்தாலும்...உண்மையை சொல்லப்போனால் என்னால் அதை விடமுடியவில்லை" என சிறு சங்கடத்துடன் அவன் நிறுத்தியபோது, நீதிபதி பதவியிலிருந்த அப்பெண்மணி விவாகரத்து மனுவில் கையெழுத்திட்டு, சட்டப்படி செல்விக்கு நடந்த திருமணத்தை இல்லை என்றாக்கினார்.

நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த செல்விக்கு, மனதிலிருந்த பெரும் கேள்வியும், அதனால் உண்டான மன அழுத்தமும் சட்டென வடிய, கால்கள் துவண்டு, உடல் தளர்ந்து, உள்ளம் உருகி, கண்கள் பனித்து, கைகள் நடுங்கி...சாய்ந்துகொள்ள ஓர் தோள்...நிகேதனின் தோளை அவள் தேடியபோது...விரிந்த சிரிப்புடன் அங்கே நின்றிருந்தான் நிகேதன்.

மனதின் நாயகன் கண் முன்னே தோன்றியதும் ஒரு நிமிடம் கனவோ என்றெண்ணிய தாமரைச்செல்வி, அவனது "நேஷனல்" என்ற அழைப்பில் நினைவுலகிற்குத் தாவி, "மாமா" என்ற கூவலுடன் அவனிடம் சென்று தஞ்சம் புகுந்தாள்.

சூர்யனின் கதிர் வீச்சு தன்னைப் பொசுக்கிவிடுமோ என்ற பயத்தில் மலராமலே இருந்த தாமரையாள், சூர்யனின் கதிர் தன்னை சுடாததோடு சுகமும் தரும் என்பதை உணர்ந்த தருணம் - சூர்யனான தன் நாயகனின் காதல் கதிரை மகிழ்வுடனே ஏற்றாள், சுட்டுவிடுமோ என்ற பயம் சிறிதுமின்றி!

அத்தியாயம் 20

"மாமா" என்ற அழைப்புடன் தன்னிடம் தஞ்சம் புகுந்த மலர் கொடியை, வாகாக தன்னிடம் சாற்றி கொண்டவன், சற்று நேரம் மௌனம் காத்தான்.

தங்களுக்குள் பூத்த முதற்காதலை இருவருமே அணுஅணுவாய் ரசித்து மகிழ அந்த மௌனநொடிகள் வழிவகுத்தன. இதுவரை வாதாடலும், வாக்குவாதமும், புரிவித்தலும், தேடலும், தேற்றலுமாய் இருந்த காதல் கை கூடியதில் நெஞ்சம் லேசாகி, மயிலிறகாய் மிதந்தது.

சுவைக்க சுவைக்க தெவிட்டாத அமுதமாய் அந்த மௌனநொடிகள் கரைய, அவளாய் வெளிவருவாள் என நிகேதன் காத்திருக்க, அவன் வெளிக்கொண்டு வரட்டும் என்ற எதிர்ப்பார்ப்புடன் தாமரை காத்திருந்தாள்.

மனம் கவர்ந்தவளின் கண்ணசைவிலேயே காவியம் படைக்கும் அந்த மணாளனும், அவளது எதிர்பார்ப்பை செவ்வனே படித்ததோடு நில்லாமல் "நேஷனல் பேபி, நீ வாயைத் திறந்து சொல்லாத காதலை உன்னோட "மாமா" சொல்லிடுச்சு! ஐ அம் ஜஸ்ட் சோ ஹாப்பி! தேங்க்ஸ்டா பேபி!" என்றான் அவளைத் தோளோடு தோள் சேர்த்து அணைத்தவாறே.

அப்போதும் செல்வி தன் மௌனத்தைக் கலைக்கவில்லை. ஏற்கனவே நெருங்கி நின்றவனிடம் மேலும் ஒண்டியவள் "மாமா" என மீண்டும் அழைத்து (முணுமுணுத்து), முகம் மறைத்தாள்.

அவளின் அருகாமை சொர்க்கத்தின் வாசற்படியாய் இனித்தப்போதும், அவர்கள் நின்றிக்கும் இடமும், சுற்றியிருக்கும் மனிதர்களும், பின்காலை இளம் வெயிலும், நிகேதனை நினைவுலகிற்கு வலுக்கட்டாயமாக மீட்டு வந்தன.

"நேஷனல் பேபி! இந்த உச்சி வெயில உன்னோட டூயட் பாட எனக்கு ரொம்பவே ஆசை தான். தமிழ் சினிமால வர மாதிரி...அங்க ஒரு ஆலமரம் கூட இருக்கு...வரியா அங்க போய் ஒரு டான்ஸ்சை போடலாம்...இல்லை இந்த இடம் உனக்குப் பிடிக்கலைன்னா பக்கத்தில ஏதாவது ஒரு பார்க்-க்கு போய்டலாமா? என்ன சொல்றே? சொல்றதை சீக்கிரம் சொன்னின்னா...நான் கொஞ்சம் மேக்-கப் போட்டுட்டு வந்திடுவேன். உன்னை மாதிரி இல்லாம...இயற்கையிலேயே நான் அழகு தான்னு நீ விதவிதமா என்னை சமாதானப்படுத்தினாலும்...என் மனசு கேட்கமாட்டேங்குது...டூயட் ஆடும் போது அட்டகாசமா இருக்கவேண்டாம்" என்றவன் பேசிக்கொண்டிருக்கும் போதே

"உங்க வாய்...இருக்கே வாய்...கொஞ்சம் கூட அடங்கவே அடங்காது...", "சீரியசா பேசிட்டு இருக்கும் போது கூட...விளையாட்டு தான்", "இவர் பெரிய அழகு...சரியான ஸெல்ப் டப்பா!" என விதவிதமாய் அவனை இடைமறிக்க முயன்று, அதில் தோற்று, முடிவில் தோல்வியை ஒத்துக்கொண்டு "ஹய்யோ நிக்கி...போகலாம் வாங்க!" என்றாள் செல்வி சிரிப்புடன்.

"நோ நிக்கி! ஒன்லி மாமா! அப்படி கூப்பிட்டா தான் இந்த இடத்தை விட்டு வருவேன். இல்லைனா...இங்கேயே உட்கார்ந்து சத்தியாகிரகம் தான்...'மாமா என்ற அழைப்பு வரும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மருத்துவர்' என்ற தலைப்பில் செய்தி வரவரைக்கும் இங்க தான் வாசம்..." என்றவன் நீதிமன்ற வளாக, மண் தரையில் அமர முற்பட்டு, அமர்ந்தும்விட்டான்.

"கடவுளே! மானத்தை வாங்காதீங்க! எழுந்திருங்க...எழுந்திருங்க" என்றாள் செல்வி, செல்லத் தவிப்புடன்.

தவிப்பு குடி கொண்டிருந்த அதே பெண்மனதில், வியப்பும் குடி ஏறியிருந்தது. வியப்பிற்குக் காரணம் - எப்படிப்பட்ட இறுக்கமான சூழ்நிலையில் இருந்தாலும், தன் மனம் கவர்ந்தவனின் அருகாமை அந்த இறுக்கத்தை தளர்த்திவிடும் என்ற நம்பிக்கை

கொண்டிருந்தவளின் மனதில், இப்போது மனமே தளர்ந்து சுகம் தேடிக்கொண்டிருக்கும் போது அவனது சீண்டல்களின் சாரலை பற்றி சொல்லவா வேண்டும்? அவளை சீண்டிச் சீண்டி சந்தோஷமாய் சிலிர்க்கவைக்கிறானே! என்ற எண்ணம் துள்ளலாய் துள்ளி விழுந்தது தான்!.

தூறலாய் ஆரம்பித்து...சந்தோஷ சாரலாய் வீசி...ஓயாத மழையாய் அவன் பேசுவது கேட்க அவளுக்கும் விருப்பம் தான் என்றாலும், சூழ இருந்த சிலரின் கண்கள் அவர்களிடம் நிலைப்பதைக் கண்டதும் "நிக்கி...அச்சோ...இல்லை இல்லை...மாமா, இங்கிருந்து போகலாம் மாமா. ப்ளீஸ் எழுந்திருங்க" என அவன் கைப்பிடித்து எழுப்பிவிட்டாள்.

"ம்ம். அந்த பயம் இருக்கட்டும். இனிமேல் மாமா மட்டும் தான்! வேற எப்படியாவது கூப்பிட்டியோ...இடம் பொருள் ஏவல் பார்க்காம அப்படியே உண்ணாவிரதம் தான்" என்ற மிரட்டலுடன் எழுந்த நிகேதனின் தோளில் செல்லமாய் ஓர் அடி விழுந்தது.

"ஹே மாமா! உன்னோட நேஷனலுக்கு நீ ரொம்ப செல்லம் கொடுத்து கெடுத்து வச்சிருக்கேடா...பொது இடத்தில உன்னைப் போட்டு என்ன மொத்து மொத்துறா பாரு! இனிமேல் ஸ்ட்ரிக்ட் ஆபிசரா இருக்க வழியை பாரு" எனத் தன் ஆட்காட்டி விரலைத் தன் முகம் நோக்கி நீட்டியவாறே அவன் பேச, ஒன்றும் சொல்லாமல் மேலும் ஓர் அடி வைத்தாள் செல்வி - இப்போது இன்னும் பலமாய்.

அவளது அடியில் துவளாது - துள்ளியவன், இரண்டடி தள்ளி இருந்தவளை தன்னிடம் இழுத்துக் கொண்டு "எங்க போகலாம்டா? கோவில்? பார்க்? பீச்? எங்க போகலாம்?" எனக் கேட்டான்.

"எனக்கு பசிக்குது மாமா, மிதமா ஏதாவது சாப்பிடலாமா? என்றாள் செல்வி சிறு சங்கோஜத்துடன். அந்த சங்கோஜத்தின் பின்னால் சிறு வியப்பும் இருந்தது; ஏனென்றால், சிங்கப்பூரிலிருந்து கிளம்பிய நாள் முதலாய் அவளுக்குப் பசி என்று ஒன்றிருப்பதே தெரியவில்லை எனலாம். இன்று காலை கூட, ஒரு குவளை காபியுடன் தன் காலை உணவை முடித்துக்கொண்டவளுக்கு, இந்த நிமிடம் வரை...அதாவது நிகேதனைப் பார்க்கும் வரை...தன் வாழ்விலிருந்த தடைகள் அகலும் வரை...தனக்குள் முதன்முதலாய்

முளைத்த காதலை அவள் வெளிக்கொணரும் வரை...தன் தலைவனின் தோளில் தலை சாய்க்கும் வரை...மொத்தமாய் சந்தோசம் மட்டுமே நெஞ்சம் நிலைத்திருக்கும் இந்த நிமிடம் வரை...பசியை அவள் உணரவே இல்லை.

"நேத்திலிருந்து பட்ட பட்டினியா? கொஞ்சமும் அக்கறையே இல்லை...நேஷனல் உனக்கு! எல்லா நேரமும், உன் மாமாவோ...என் மாமாவோ உன்னைப் பார்த்துட்டே இருக்க முடியுமா? சீக்கிரம் வா..." என அவன் கோபித்துக்கொண்டது கூட தாமரைக்கு இதமாகவே இருக்க, விரிந்த புன்னகையுடன் அவனைத் தொடர்ந்தாள்.

அவர்கள் நீதிமன்றத்திலிருந்து வெளிவரும் போது, நவநீதனின் பார்வை அவர்களின் மீது விழுவதை உணர்ந்தாள் செல்வி.

"உங்க அண்ணா..." என நிகேதனிடம் காட்டியவள், அவனை மேலும் ஒட்டி நடக்க, "ம்ம்" என ஒற்றை வார்த்தையில் அவளது வார்த்தைகளை உள்வாங்கியவன், கண்களை சிறிதும் நவநீதனின் பக்கம் திருப்பாமல் ஆட்டோ நிறுத்தம் நோக்கி நடந்தான்.

"மாமா, நவநீதன்...கோர்ட்ல..." எனத் துவங்கி, நவநீதனின் பேச்சுக்கள் முழுதையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்து, "அவரோட சேர்ந்து வாழ்றியான்னு ஜட்ஜ் அம்மா கேட்டதும் தூக்கி வாரி போட்டுடுச்சு. அந்த நிமிஷம் தான்...உங்க...உங்க மேல எனக்கிருக்க காதல் எனக்கு நூறு சதவீதமா புரிஞ்சுச்சு. நீங்க...நீங்க மட்டும் தான் எனக்கு வேணும்ன்னு மனசு உறுதியா சொன்னதும், பேச வாய் திறக்கிறதுக்கு முன்னாடி...உங்க அண்ணாவே பேசிட்டார்" எனத் தன் காதலை அவள் முழுதாய்...சிறு உறுத்தல் கூட இல்லாது உணர்ந்த வினாடி வரை எடுத்துரைத்து, நவநீதன் கூறிய காரணங்களோட தன் பேச்சை நிறைவு செய்தாள்.

"ம்ம்" என அதையும் ஒற்றை வார்த்தையில் உள்வாங்கினாலும், இறுக்கமாய் பதிந்த அவனின் கைப்பிடி அவனது மனநிலையை எடுத்துக்கூறியது!

நிகேதனின் கைப்பிடியில் செல்வியின் கைகளைப் பார்த்த நவநீதனுக்கு மேலும் சில விஷயங்கள் விளங்க, முகத்தில் படர்ந்த விசித்திர நிம்மதியுடன் அவன் வண்டியில் ஏறுவதை செல்வி உணர்ந்தாளோ இல்லையோ அவனை ஓரக்கண்ணில் நோட்டம்

விட்டுக் கொண்டிருந்த நிகேதன் பார்த்தான். பார்த்தவனின் மனதில் பலவகையான எண்ணங்கள் அலை மோதியபோதும், அதை வெளிக்காட்டினால் செல்வியை அது பாதிக்குமோ என்ற எண்ணத்தில் அதை கைவிட்டு, அவளை இனியும் வருத்தப்பட வைக்கக்கூடாது என்ற வைராக்கியத்துடன் நடந்தான்.

அருகிலிருந்த உணவகத்திற்கு செல்வியை இட்டுச் சென்றவன், அவளின் வயிறு நிறையும் வரை, மனம் சந்தோஷத்திலும், வாய் சிரிப்பிலும் நிறையும்படி பார்த்துக்கொண்டான்.

அதனூடே, தான் சபரி மலையிலிருந்து திரும்பி வந்த விவரம், மலைக்குப் போய் வந்தவர்கள் வீட்டிற்குச் சென்று சில பிரார்த்தனைகளை நிறைவேற்றும் என்பதால் செம்பட்டி சென்றது, அங்கிருந்து ஷ்யாமை தொடர்பு கொண்டு அவளின் வழக்கு விவரம் அறிந்தது, நேற்று மாலையே சென்னை வந்து சேர்ந்தது, வழக்கு முடிந்து றது என்ற தீர்ப்பு வந்ததும் அவள் தன்னை தேடுவாள் என்ற எண்ணத்தில் நீதிமன்றத்தில் காத்திருந்தது, காத்திருந்த ஒரோர் நொடியும் எங்கே அவள் தன்னை நாட மாட்டாளோ எனத் தவித்தது என வரிசையாய் சொல்லிக்கொண்டே வந்தான், அவன்.

"காபி சாப்பிடுறியா பேபி?" என அவன் கடைசியாக வினவிய போது தான், தான் உண்டு முடித்திருக்கும் பதார்த்தங்களின் எண்ணிக்கை அவளை வியக்க வைத்தது. "ஹய்யோ போதும் நிக்...ம்ம்...மாமா. வயிறு வெடிச்சிடும் போல...இருக்கு" என கையை நெஞ்சுவரை உயர்த்தி அவள் மறுக்க,

"அப்புறம், பத்து இட்லி, ரெண்டு தோசை, அஞ்சு பூரி,மூணு கரண்டி பொங்கல், கணக்கில்லாம வடை, முக்கால் வாளி கேசரி - அதுவும் நெய் சொட்ட சொட்ட முந்திரி போட்ட கேசரி, இதெல்லாத்தையும் மீறி மூணு டம்ளர் காபி இவ்வளவையும் சாப்பிட்டா...அதிலையும் "உங்களுக்கு வேணுமா மாமா"ன்னு என்னை ஒரு வார்த்தை கூட கேட்காம இப்படி மொக்கினா...வயிறு வெடிக்காம...இருந்த இடத்திலேயே இருக்குமா?" என்றவனிடம் "இப்படி ஏதாவது சொல்வீங்கன்னு தான்...வேண்டாம் வேண்டாம்ன்னு சொன்னேன்...பெரிய இவர் மாதிரி...சாப்பிடு சாப்பிடுன்னு கொஞ்சிட்டு...போங்க போங்க...எனக்குக் கோவம் கோவமா வருது...ஹ்ம்ம்" என மெல்ல சிணுங்கியவள், முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

©Bhuvana story

"கோவம்...கோவமா வருதா... என்னைக்குத் தான் அது வராம இருந்திருக்கு? வண்டி கணக்கா வருமே?! அதுவும் என்னையும், உங்க அப்பாவையும் பார்த்தா பொங்கிப் பொங்கி வருமே?! அதுக்கு தனியா உன்கிட்ட ஒரு பஞ்சாயத்து இருக்கு...அப்போ பார்த்துக்கலாம். சரி சரி எழுந்திரு! ஹோட்டல் காரன் வந்து, பாத்திரம் எல்லாம் கழுவி கவுத்தாச்சு...இனிமேல் உங்களுக்கு சாப்பாடு போட்டு எங்களுக்கு மாளாதுன்னு தூரத்துற வரைக்கும் இங்க இருக்கிறது இந்த நிக்கியோட கௌரவத்துக்கு இழுக்கு இல்லையா?" என அவளை அங்கிருந்து கிளப்பினான்.

"உரிமையும், பாசமும் இருக்க இடத்தில தானே கோபமும் வரும். இதுக்கு என்ன பஞ்சாயத்து!?" என்ற செல்வியின் கேள்வியிலேயே அவளின் மனநிலை புரிய,

"உன் மாமாவோட சேர்ந்து நல்லாவே பேசக் கத்துக்கிட்டே நேஷனல்! வெரி குட்! ஐ லைக் இட்!" என்ற நிகேதன், அதன் பின்னர் அந்த பஞ்சாதயத்தைப் பற்றி பேசவே இல்லை...அது தான் மனம் குளிர்ந்துவிட்டதே! இனி பஞ்சாயத்து செய்து உடம்பை ஏன் புண்ணாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணம் தான்!

"வேற எங்கடா போகலாம்?" என நிகேதன் வினவ, "ஃப்ளைட் கிடைச்சா இப்போவே சிங்கப்பூர் போய்டலாமா மாமா?! அப்பா, சார், அம்மா, ஷைலு அக்கா, ஷ்யாம் அண்ணா, குட்டீஸ்...எல்லாரையும் உடனே பார்க்கணும் போலிருக்கு" என்றாள் செல்வி, ஆர்வமாய்.

"ம்ம் ஓகே!" என்றவன், சில பல தொலைப்பேசி அழைப்புகளில் பயணச்சீட்டை உறுதி செய்துவிட, செல்வி தங்கியிருந்த அறையை காலி செய்துகொண்டு, அடுத்த நான்காவது மணி நேரம் இருவரும் விமானத்தில் அமர்ந்திருந்தனர்.

"ஒரு மாசமா...விரதம்...கூடவே உன்னோட நடத்தின போராட்டம்...நடுவில காய்ச்சல்...வீடு மாத்தின அலைச்சல்ன்னு சரியாவே தூங்களை பேபி! நான் தூங்கப்போறேன்! நீயும் தூங்கிடேன்..." என்ற நிகேதன், கண்களுக்கான உரையை அணிந்துகொண்டு, இரண்டே நிமிடத்தில் கண்ணயர்ந்துவிட்டான்.

படுத்ததும் குழந்தை போல் உறங்கும் அவனை செல்லம் கொஞ்சியபடி அமர்ந்திருந்த செல்வியால், சிறிது கூட கண் மூட முடியவில்லை.

தன் வாழ்க்கையில் அடித்த புயலை எண்ணி சிறு வருத்தம் தோன்றினாலும், அந்த புயல் அடிக்காமல் போயிருந்தால் துன்பங்களை எதிர்கொள்ளும் துணிவும், அதிலிருந்து வெளிவரும் தெளிவும், தன் முடிவுகளைத் தானே எடுக்கும் தைரியமும், எல்லாவற்றுக்கும் மேலாய் தன் மேல் உயிரையே வைத்திருக்கும் கணாளனும், அவளை அவளாய் மதிக்கும் சொந்தங்களின் சுகமும் கிடைத்திருக்கிறதே என நடந்ததில் நல்லதையே நினைத்து மகிழும் போது சிங்கப்பூர் வந்து சேர்ந்திருந்தது.

தன் கைகளுக்குள் அவளது கைகளை இறுக்கிப் பிடித்து வைத்திருந்த நிகேதனின் தோள் தொட்டு மெல்ல எழுப்பினாள் தாமரைச்செல்வி. தூக்கத்தை ஓர் பகுதி நேர வேலையாகவே செய்யும் அவனோ, சற்றும் அசைந்து கொடுக்காமல் போகவே, ஓர் இருபது நிமிடப் போராட்டத்திற்குப் பின்னரே சிறிதாய் அவனை அசைக்க முடிந்தது. "அப்பா...இப்படியா தூங்குவீங்க? கடவுளே!! எல்லாரும் ஃப்ளைட்டை விட்டு இறங்கிப் போய்ட்டாங்க...வாங்க போகலாம். இப்படி ஒரு தூங்குமூஞ்சியை கல்யாணம் செய்துக்க எனக்கு ஒரே பயமா இருக்கு" என்றாள் சிறு சிரிப்பு கலந்த கண்டிப்புடன்.

"கவலைப்படாதேடா! முழிக்க வேண்டிய நேரத்தில முழிச்சு...ஏன் அளவுக்கு அதிகமாவே முழிச்சு...ஓவர் டைம் வேலை பார்த்துடுறேன்டா. ஓவர் டைம் பார்த்ததுக்கு கரெக்ட்டா கணக்கு போட்டு வசூல் செய்துடுவேன், அப்ப எதாவது முரண்டு பண்ணின...இந்த ஏர் ஹோஸ்டஸ்கிட்ட வந்து பஞ்சாயத்து வச்சுடுவேன் ஆமா..." என அவன் தூக்கம் கலைந்ததுமே தன் உற்சாகப் பேச்சில் உள்குத்து வைக்க,

"ஓவர் டைம் வேலை பார்க்கும் போது பார்த்துக்கலாம். நீங்களாவது முழிக்கிறதாவது..." என அலட்சியமாய் தோளை குலுக்கியவளின் காதோரம் குனிந்து, "நம்ம ஹனிமூன்ல வந்து தூங்கினா நல்லவா இருக்கும். அங்க வந்து கண்டிப்பா ஓவர் டைம் பார்த்துடுவேன். நீயும் வசூலை ரெடி பண்ணி வச்சுக்கோ" என்றான் கிசுகிசுப்பாய். இவ்வளவு நாட்கள் காதல், நேசம், என்னை மணந்து கொள் என்ற வேண்டுதல் என்றிருந்த நிகேதனின் வாயிலிருந்து தேனிலவு, கல்யாணம், ஓவர் டைம் போன்ற வார்த்தைகள் வரவே வெண்தாமரையாய் இருந்த செல்வி செந்தாமரையாய் மலர்ந்தாள்.

"வாவ், சூப்பர்ரா சிவக்கிறடா ரைஸ்!" என அவன் சீட்டியடிக்க, அதற்குப் பதிலாய் "ரைஸா? இது என்ன புது பெயரு?" என வியந்த செல்வியிடம் "ஆமா, தூங்கும் யோசிச்சு

உனக்கு ஒரு பத்து பேர் கண்டு பிடிச்சிருக்கேன்...ஒரு வேலைக்கு ஒன்னு...தாமஸ்...தமா...ரைஸ்..செல்லு...தரு...எப்பவும் போல நேஷனல்! எப்படி நம்ம கண்டுபிடிப்பு?" என அவன் பெருமை பேச, "அய்யே சகிக்கலை" என நிஜமாகவே தலையில் அடித்துக் கொண்டாள் அவள்.

"ஹோ, ரொம்ப சூப்பர்ரா இருக்கா...தேங்க் யு, தேங்க் யு, அதுக்காக இப்படி நீ புகழ்ந்திருக்க வேண்டாம்" என அவளிடம் வம்பு வளர்த்துக்கொண்டே செல்வியின் வீட்டிற்கு அவளை அழைத்து வந்திருந்தான். "ஓகே நேஷனல், நீ போய் மாமாவை பாரு. நான் அப்பா-அம்மாவோட வந்து முறையா பேசுறேன்" என்ற நிகேதனுக்கு விடை கொடுத்து அனுப்பியவள், வீட்டின் அழைப்பு மணியை அழுத்திவிட்டு காத்திருந்தாள். கதவை திறந்த செல்லியப்பனின் "பாப்பா" என்ற அழைப்பிலேயே நிகழ்ந்து, அவரின் மனநிலை புரிந்தவளாய் அவரின் தோள் சாய்ந்தாள்.

சிறிது நேர அமைதிக்குப் பின்னர், அவளது விவகாரத்தைப் பற்றி செல்லியப்பன் விசாரிக்க வாய் எடுக்க, "அப்பா, அதைப் பத்தி நாம அப்புறம் பேசலாம். இப்போ...நா ஒன்னு சொல்றேன். எனக்காக சரி சொல்லுவியா?" என்றவளின் குரலில் கெஞ்சல் விரவியிருந்தது.

அவள் சாதாரணமாய் பேசினாலே உருகிவிடும் தந்தைக்கு இந்த கெஞ்சல் தேவையே இருக்கவில்லை. "சொல்லு கண்ணு" என அவர் உருக, செல்வியின் மனமோ அடுத்து சில நிமிடங்கள் மௌனத்தைக் கடைப்பிடித்தன. "என்னது? என்ன கண்ணு? ஏதானும் பிரச்சனையா? அந்த பையன்...எதுவும் பிரச்னை செய்துடுச்சா...உன்னை அடிச்சோ...அது தேன் நான் வரேன்னு சொன்னேன்..."என அவர் மயங்க, "அதெல்லாம் ஒண்ணுமே இல்லைப்பா" என அவர் சமாதானப்படுத்திவிட்டு, முழு விவரம் கூறியவள், நிகேதனின் வரவில் நிறுத்தினாள்.

சில வினாடி தயக்கத்தின் பின்னர் "எனக்கு...எனக்கு...ம்ம்...நிகேதனுக்கு என்னை கட்டிக் கொடுப்பியாப்பா" எனப் பட்டென கேட்டுவிட்டாள் மகள்.

அவள் அப்படி கேட்டதும், "நீ...என்ன பாப்பா சொல்றே...திரும்ப அவுக குடும்பத்தில்...." என அவர் தந்தையாக கவலை கொள்ள, "நிகேதன் என்னைக் காதலிக்கிறார்பா. எனக்கும்

அவரைப் பிடிச்சிருக்கு, அவர் என்னை நல்லபடியா வச்சுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. என்னை மட்டுமில்லை...உன்னையும் அவர் அப்பா மாதிரி பார்த்துப்பார்...கண்டிப்பா" என்றவளின் குரலிலிருந்த உறுதியை கண்ட பின்னர் செல்லியப்பனுக்கு வேறு என்ன வேண்டும்?! சந்தோஷமாய், சொல்லப்போனால் அதீத மகிழ்ச்சியுடன் தன் மகளின் வாழ்வு மலர்வதை, கண் குளிர பார்த்திருக்கலானார் அவர்.

எல்லாருக்கும் மன நிறைவை கொடுக்கும் திருமணத்தை அடுத்து வந்த முகூர்த்ததில் நடத்திவிட, இரு குடும்பங்களும் முடிவு செய்திருக்கவே, அந்த பொன் நாளும் இனிதே வந்து சேர்ந்தது.

திருமணத்திற்கான மந்திரங்கள் ஓதப்பட்டு, பெரியவர்களின் பனித்த நெஞ்சங்களின் ஆசி வழங்கப்பட்டு, அண்ணனாய் ஷ்யாம் சுந்தர் முன் நிற்க, நாத்தனாராய் ஷைலஜா வாழ்த்துச் சொல்ல, மாமனுக்கு ஏற்ற மாணிக்கங்களாய் ஆர்த்தியும் ப்ரீதியும் சிரிப்பில் பூத்திருக்க, புரோகிதர் திருமாங்கல்யத்தை நிகேதன் முன் நீட்டிய போது, அதை அவன் எடுப்பதற்குள் ஷைலஜா தன் கைகளில் அதை எடுத்தாள்.

"ஹே ஷைலு" என நிகேதன் பதற, செல்வி திகைத்து விழித்தாள். "என்ன - ஹே ஷைலு? எங்ககிட்ட விட்ட சவால் எல்லாம் மறந்துபோச்சா? செல்வி - "ஐ லவ் யு" சொன்னா தான் கல்யாணம்ன்னு சொன்னியே! அவ இன்னும் "ஐ லவ் யு" சொன்ன மாதிரி தெரியலையே! அவ சொல்லட்டும்...நான் தரேன்" என்றாள் சிரிப்புடன்.

"அடிப்பாவி" என நிகேதன் வாய் பிளக்க, "ஷைலு, என்னடா இது? கொடுத்திடு கண்ணம்மா" என மங்கை மகனின் உதவிக்கு வந்தார்.

"செல்லாது...செல்லாது...உங்க உதவியெல்லாம் செல்லாது...செல்லாது..." எனப் பண்ணையார் பாணியில் அவள் மறுக்க, "கொடுத்திடு ராசாத்தி!" என செல்லியப்பனின் உதவியையும், "செல்வி தான் சொல்லணும்...செல்லியப்பன் மாமா சொல்றதெல்லாம் செல்லாது செல்லாது..." என மீண்டும் மறுத்தாள்.

"ஜல்ஸ், அநியாயம் செய்யாதே ப்ளீஸ்! கொடுத்திடு!" என நிகேதனின் கெஞ்சலையும்,

"செல்வி தான் கொஞ்சனும்...நீ கெஞ்சக் கூடாது...நீ கெஞ்சுவதெல்லாம் செல்லாது செல்லாது..." என மறுத்து அவனுக்கு வில்லியானாள் தமக்கை.

"ஷைலும்மா, விளையாடாதே! குடுடா" என ஷ்யாம் லேசாய் அதட்ட, "உங்க தங்கச்சிக்காக உங்க பொண்டாட்டியை அதட்டுறதைஎல்லாம் ஒதுக்க முடியாது...இதுவும் செல்லாது செல்லாது..." என அப்போதும் பிடிவாதமாய் நின்றாள் அவள்.

"ஷைலு அக்கா, ப்ளீஸ்" எனக் கடைசியாய் வாய் திறந்தாள் செல்வி, "ப்ளீசா? அதுவும் எனக்கா? இதுவும் செல்லாது செல்லாது" என ஷைலஜா சிரிக்க,

"நேஷனல், என் கல்யாண ஆசையை தயவு செஞ்சு நிறைவேத்திடு செல்லம்...ஒரு "ஐ லவ் யு"சொல்லிடேன்" என வெட்கத்தை விட்டு நிகேதன் கெஞ்சியதில் எல்லாருமே சிரித்தனர்.

"எல்லார் முன்னாடியும் எப்படிப்பா..." என தாமரையாள் தயங்கி மறுக்க, "ஒரு "ஐ லவ் யு"வுக்காக...என்னை பிரமச்சாரியாவே இருக்க வச்சுடாதேடி, ப்ளீஸ்" என மீண்டும் மன்றாடினான் அவன்.

"இப்படி கெஞ்சி வாங்குற "ஐ லவ் யு"வை ஒதுக்க முடியாது...இதுவும் செல்லாது செல்லாது" என ஷைலஜாவை மேலே பேச விடாமல், "மாமா, ஐ லவ் யு! ஐ லவ் யு! ஐ லவ் யு! இது போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?" எனக் கேட்ட செல்வி, நிகேதனின் கன்னத்தில் அழுத்தமாய் ஓர் முத்தம் கொடுத்து "என்னை கல்யாணம் பண்ணிக்கோங்க மாமா! ஐ லவ் யு! ஐ லவ் யு! ஐ லவ் யு!" என்றாள் வேகத்துடன்.

அவளது அந்த செயல் அங்கே பெரும் சிரிப்பலையை கிளப்ப, அதனூடே தமக்கையின் கையிலிருந்து திருமாங்கல்யத்தை எடுத்துக்கொண்ட நிகேதன், மேலும் எதுவும் நடக்கும் முன்னர், வேகவேகமாய் தாமரையை தன்னவளாக்கி, வெண்தாமரை மேனியாளின் கன்னங்களை மட்டுமல்லாது மனதையும் செந்தாமரையாய் சிவக்கச்செய்தான்!
காதல் சுவைக்கப்படுகிறது!

## அத்தியாயம் 21

தமிழகத்தின் முன்னணி நாளிதழ்களில் - அதுவும் பெண்களுக்கென வெளிவரும் நாளிதழ் ஒன்றில் வெளியான "நம்பிக்கை நட்சத்திரங்கள்" என்ற பகுதி கீழ் வருமாறு

*மணவாழ்வில் விழுந்த அடியை அடிக்கல்லாய் நாட்டி, அதன் மேல் தன்னம்பிக்கையெனும் நீர் ஊற்றி, இன்று விருட்சமாய் வளர்ந்து நிற்கும் திருமதி.தாமரைச்செல்வி நிகேதன் பற்றிய கட்டுரை உங்களுக்காக!*

*'வேல் சாப்ட்வேர் சிஸ்டம்ஸ்' என்ற மென்பொருள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான திருமதி.தாமரைச்செல்வி நிகேதனுக்கு பெரிய பின்புலங்கள் ஏதுமில்லை. தினக்கூலிக்கு கல் உடைக்கும் தந்தைக்கும் - தாய்க்கும் மகளாய் பிறந்து, கல்வி ஒன்றே வாழ்வின் ஆதாரம் என்ற போதனையில் நன்றாக படித்து, உயர்ந்த வேலையில் அமர்ந்தவரின் வாழ்வு அங்கே மலர்ந்துவிடவில்லை. அதன் பின்னர், திருமணம் எனும் புயல் அவர் வாழ்வை சீர்குலைக்க, மேலை நட்டு கலாச்சாரம் அவரை ஓர் ஆண்மகனின் கை பொம்மையாகி, மனதளவில் மட்டுமல்லாது உடலளவிலும் அவர் உடைந்து போனது தான் அங்கே வேதனை!*

*வெறும் மண்ணாய் - ஓர் கதவின் திறப்பிற்கு கூட மேனி அதிர்ந்து விதிர்த்த என்னை ஓர் முழு மனுஷியாய், இரு நூறு தொழிலார்களின் முதலாளியாய், தமிழர்களின் கலாச்சாரத்தின் மகத்துவத்தை என் பேச்சுக்களின் மூலம் வெளிக்கொணரும் ஓர் சமூக ஆர்வலராய், இரு செல்லக் குழந்தைகளின் தாயாய், எல்லாவற்றுக்கும் மகுடம் போல் - சந்தோஷமான இல்லத்தரசியாய் வைத்திருக்கும் பெருமை முழுதும் என் கணவர் - நிகேதனையே சேரும்" என்ற தாமரைச்செல்விக்கு, நான்கு வயதில் இரட்டை குழந்தைகள் இருக்கின்றனர் என்பதை நம்ப முடியவில்லை.*

*அவ்வளவு கச்சிதமான உடல் அமைப்பு, நேர்த்தியாக உடுத்திய லாவெண்டர் வண்ண சில்க் காட்டன் புடவை, தாலி கயிறுடன் சேர்த்து "மாமா" என்ற எழுத்துக்களைத் தாங்கியவாறே தொங்கும் சின்னச் சங்கிலி, படிய வாரிய கூந்தலில் ஓர் சிறு கற்றை மற்றும் காற்றில் மிதக்க - காதோரத்தில் அழகாய் வீற்றிருக்கும் லாவெண்டர் வண்ண ஒற்றை ரோஜா, உதட்டில் எப்போதும் ஓர் புன்னகை, உதட்டில் மட்டுமல்லாது அதை கண்ணிற்கு எடுத்துச் சென்று பார்ப்போரையும் வசீகரிக்கும் அவாது அழகு - ஓர் குத்து விளக்கைப் போல் நம்மை சிலிர்க்கத்தான் வைக்கிறது.*

*"எல்லா பெண்களையும் மாதிரியும் நிறைய ஆசைகளோட, எதிர்பார்ப்புகளோட கல்யாணமாகி அமெரிக்கா போன எனக்கு - கிடைச்சது தனிமையும், நம் கல்யாணம் ஓர் நாடகம் என்ற அறிவிப்பும், கட்டிய கணவன் ஒரே வீட்டில் மற்றொருவரோட குடும்பம் நடத்திய கொடுமையும் தான். உடலால் அவாது கொடுமைகளை சகித்த நான் மனத்தால் நொறுங்கிப் போயிருந்த சமயம் -*

அங்கே வந்து என்னை மீட்டது யார் தெரியுமா? என்னைக் கல்யாணம் செய்து கொண்டு என் உணர்வுகளை அவனது சுயநலத் தீயிற்கு இரையாக்கியவனின் உடன் பிறந்தவர்கள். தம்பி கட்டிய தாலியை அவர் முகத்திலேயே கழட்டி வீசிய அவரின் தமக்கையும், எனக்காக அண்ணனை பகைத்துக்கொண்ட அவரது தம்பியும் - இப்போதும் என்னோட மனதிற்கு மிகவும் நெருக்கமான இடத்தில இருக்காங்க"

"ஆமா, என் கணவர் நிகேதனின் அண்ணனை தான் நான் முதலில் மணந்து கொள்ளும்படி நேர்ந்தது. ஆனால், முதலில் மணந்து கொண்டவரின் தம்பியையே மணக்கிறோமே என்ற உறுத்தல் சிறிதுமில்லாமல் அவரின் காதலால் என்னை சிறை செய்த என் கணவரை மட்டுமல்லாது என்னை அவரின் மகளுக்கு நிகராய் வைத்திருக்கும் என் மற்றொரு தாயான மாமியாரையும் நான் மிகவும் நேசிக்கிறேன், ஓர் பெண்ணாய் அவர்களை மதிக்கிறேன்" - இதை சொல்லும் போது அவரின் குரலில் மிகுந்த தெளிவை உணர காதுகள் கோடி வேண்டும்!

"என்னடா இவள் புகுந்த வீட்டை மட்டுமே புகழ்கிறாளே என்று நினைக்கவேண்டாம். இதோ என்னோட செல்ல அப்பாகிட்ட வந்துட்டேன். அம்மா இல்லாத என்னை அந்த குறை தெரியாம வளர்த்த அவரை ஒரு அம்மாவா நான் பார்த்துக்க முடியுதே என்ற சந்தோஷத்தோட அவரைப் பத்தி பேசிடலாம். நான் இவ்வளவு தூரம் வளர்ந்து, ஓர் பெரிய நிறுவனத்தை நிர்வகித்தாலும், இன்றும் அவர் ஒருவருக்கு மட்டும் "பாப்பா" தான். பாசத்தைத் தவிர எதையும் உணர்ந்திடாத / உணரத்தெரியாத அவர் எனக்காகவே (இப்போ என் கணவர் மற்றும் குழந்தைகளுக்காகவும் சேர்த்து) வாழ்கிறார். ஒரு காலத்தில் அவருக்காகவே நான் என்னை உயர்த்திக்கிட்டேன்...அவர் கவலைப்படக் கூடாதே என்ற எண்ணத்தில், அவரை இனியும் கஷ்டப்படுத்தக்கூடாது என்ற வைராக்கியத்தில் தான் சிங்கப்பூர் கிளம்பி வந்தேன். அன்னையிலிருந்து இன்னைக்கு வரைக்கும் நான் சொல்றது எதையும் மறுக்காம, காது கொடுத்து கேட்கிற ஒரே ஜீவன் அவர் தான்!" என்ற செல்வியின் உதட்டில் விரிந்த சிரிப்பு.

சென்னையை தலைமை அலுவலகமாக கொண்டு செயல்படும் அவரது மென்பொருள் நிறுவனத்தை - ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், தன் பிள்ளைகளை கருவில் சுமந்த வண்ணம் துவங்கியிருக்கிறார். தன் நிறுவனத்தை நிறுவியது பற்றி மெல்ல பேச ஆரம்பித்தார்.

"எங்க அண்ணாவோட கம்பெனில அவரோட செயலாளரா வேலை பார்த்திட்டு இருந்த என்னால - ஒரு கம்பெனியை துவங்கி, அதை வெற்றி கரமா நடத்த முடியும் என்ற நம்பிக்கை கொடுத்தது எங்க அண்ணாவும், அண்ணியும் தான், அதாவது என் நாத்தனாரும் அவரது கணவரும் தான். இந்த இடத்தில எங்க அண்ணனைப் பத்தி சொல்லியே ஆகணும் - இவர்

என்னோட சொந்த அண்ணனாய் பிறக்கவில்லையே என்ற எண்ணி எண்ணி உருக வைக்கிற அளவுக்கு என்னை மதித்த ஓர் நல்ல உள்ளம். என்னோட தன்னம்பிக்கையை ஊக்கமெனும் நீர் ஊற்றி வளர்த்ததில் என் கணவருக்கு எந்தளவு பங்கு இருக்கிறதோ, அதே அளவு என் தமையனுக்கும் பங்கிருக்கிறது!"

"அங்கே முளைத்த ஆதரவு, என் குடும்பத்தில் அனைவரிடமிருந்து தொடர, எனக்காக சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு குடி பெயர்ந்தாங்க. பணத்திலும் சரி, உழைப்பிலும் சரி, கவனிப்பிலும் சரி, குடும்ப நலனிலும் சரி - என்னை எதுக்குமே தவிக்க வைக்காம, என்னை அவங்க தாங்கின தருணங்கள் - வாழ்க்கையில மறக்கவே முடியாது!"

"அண்ணனின் நிறுவனத்தில் என் தகுதிக்கு மீறிய வேலையை பார்த்ததாலோ, பல தரப்பட்ட வாடிக்கையாளர்களை எதிர்கொண்டதாலோ, வியாபார நுணுக்கங்களை செயல்முறையில் உணர்ந்ததாலோ, போட்டி கம்பெனிகளின் வியாபார தந்திரங்களை என் அண்ணனின் வாய் மொழியாய் பயின்றதாலோ என்னால் என் நிறுவனத்தின் முதல் ஒப்பந்தத்தை யாரது உதவியுமில்லாமல் தனியாகவே வெல்ல முடிந்தது. முதல் வெற்றி தந்த சுவையை மேலுமேலும் சுவைக்க எண்ணி, அடுத்தடுத்த ஒப்பந்தைகளை அடையும் வெறி எனக்கு மேலிட்டுவிட, ஐந்து நபர்களைக் கொண்டு நான் துவங்கிய நிறுவனம் ஐந்தே வருடத்தில் இருநூறு தொழிலாளர்கள் கொண்ட ஸ்தாபனமாய் வளர்ந்து நிற்கிறது" என்ற போது அவர் முகத்தில் சாதித்து விட்ட திருப்தி.

ஒரு தொழிலதிபராய் மட்டும் இருந்துவிடாமல், தனக்கு இழைக்கப்பட்ட துன்பத்திலிருந்து ஓர் வேகத்துடன் வெளிவந்த இந்த தங்கத்தாரகை, தன் நம்பிக்கையை பிறருக்குள் - முக்கியமாய் பதின்வயதில் இருக்கும் பெண்களுக்குள் பதிய வைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். சென்னை மற்றும் அதன் சுற்று புறங்களில் அமைந்திருக்கும் கல்லூரி மற்றும் கூட்டுநிறுவனங்களில் சுயமுன்னேற்றத்தை மையமாய் வைத்தும் நிறைய உரைகள் ஆற்றியும் வருகிறார்.

"எனக்கு இழைக்கப்பட்ட தீங்கை விட, எனக்கு கிடைத்திருக்கும் சந்தோசம் மிக மிக அதிகம். ஆனால் அந்த பாக்கியம் அமையாத பலர் - இழைக்கப்பட்ட தீங்கை எண்ணி எண்ணி அடையவேண்டிய சந்தோஷத்தை இழந்துவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் துவங்கியது தான் இந்த உரைகள். இந்த உரைகளால், நூற்றில் ஓர் பெண்ணிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டு - கணவன் கொடுமை செய்யும் பட்சத்தில் தன்னை பாதுகாத்து கொள்ளும் தைரியமும், மோசமான சூழ்நிலைகளை கையாளும் பக்குவமும் வந்தால் - நான் இப்போது இருப்பதை விட நூறு மடங்கு சந்தோஷமாய் இருப்பேன்" என்றவரின் குரலில் கோபம், வருத்தம், ஆதங்கம், எதிர்பார்ப்பு எனப் பலவகை உணர்வுகள் சம பங்கில் கலந்திருந்தன.

*பரவியிருந்த இறுக்கத்தைக் குறைப்பது போல், நாம் அவரது கணவர் மற்றும் குழந்தைகள் பற்றி பேச, அவர் முகத்தில் சந்தோசம் அழையா விருந்தாளியாய் வந்து குடியேறியது. "என் கணவர் - பிரபல நரம்பியல் நிபுணர், டாக்டர்.நிகேதன். எப்படிப்பட்ட இறுக்கமான சூழலையும் தன்னோட பேச்சு திறமையால் சகஜமாக்கிடுவார். ஒரே வார்த்தையில் "என் உயிர் நாடி" அவர் தான்!" என சிரிக்கும் செல்வியின் கன்னங்களில் அழகாய் ஓர் குழி!*

*"அப்புறம் என் பசங்க - ஒரு பையன் - பேர் பிரஜன், ஒரு பொண்ணு - பேர் பிரகதி. ரெண்டு பேரும் அப்பாக்குத் தப்பாம பிறந்த வாலுங்க. நான் ஒல்லியா இருக்கிறதுக்கு காரணமே அவங்க மூணு பேரும் தான் - என்ன புரியலையா? அவங்களை சுத்தி சுத்தி ஓடி, அவங்க பண்ற அட்டகாசத்தை அடக்கி, ஓர் நிலைக்குக் கொண்டு வரதிலேயே என் சக்தியெல்லாம் போய்டும். அப்புறம் எங்க குண்டாகுறது!?" என்ற செல்வியின் முகத்தில் மிதக்கும் சந்தோஷத்தைப் பார்த்தவாறே விடை பெற்ற நமக்குப் புரிந்தது இது தான் - "கல்யாணம் என்பது ஓர் வியாபாரம் அல்ல, ஓர் பெண்ணிற்கு தாய்மையை மட்டுமல்லாது தன்னம்பிக்கையையும் சேர்த்து ஊட்டும் ஓர் அரிய உருமாற்றம்!"*

அந்த கட்டுரையை பத்தாவது முறையாக படித்துக் கொண்டிருந்த நிகேதனின் கைப்பேசி "தங்கத்தாமரை மகளே வா அருகே, தத்தித்தாவுது மனமே  வா அழகே, வெள்ளம் மன்மத வெள்ளம் சிறு விரிசல் கண்டது உள்ளம், எல்லாம் பெண்ணை உன்னாலே" என்ற பாட்டுடன், தாமரையின் அழைப்பை ஏந்தி வந்தது.

செல்வியின் பேட்டியை திரும்பத் திரும்பப் படித்து பெருமையில் திளைத்துக்கொண்டிருந்த மனதை உலுக்கி, அதை உயிர்ப்பித்தவனின் காதுகளில் "மாமா" என்ற அழைப்பு சங்கீதமாய் ஒலித்தது. அதில் நினைவுலகிற்கு திரும்பி "சொல்லு மாமா! நியூயார்க் நகரம் உறங்கும் நேரம் தனிமை கொடுமையேன்னு சிச்சு சாங் பாடிட்டு இருக்கியா?" என்றான் நிகேதன் சிரிப்புடன்.

"நியூயார்க் நகரம் உறங்கும் நேரம் வர இன்னும் எட்டு மணி நேரம் இருக்கு... ப்ச் அதை விடுங்க...ஷ்யாம் வீட்டுக்குக் கூப்பிட்டேன். அம்மாக்கு ஜுரமாமே? பேசினீங்களா? சிங்கப்பூர்ல ரொம்ப குளிரா இருக்காம்...அடுத்த வாரம் கிளம்புறதை இந்த வாரமே கிளம்பச்சொன்னேன். நீங்களும் சொல்லுங்க" எனத் தன் மற்றொரு தாயின் நலம் பற்றி பேசினாள்.

"ம்ம். நவநீத் நேத்தைக்குத் தானே அங்க போயிருக்கான். அவனோட இரண்டு நாள் இருந்திட்டு வரட்டும்" என்றான் நிகேதன். ஆம், ஆறு வருடங்களுக்குப் பின்னர்

மன்கையர்கரசியின் மனம் சற்றே இளகியிருக்க, இப்போதும் மூத்த மகனை சென்னைக்கு வரக்கூடாது என்று விட்ட அந்த தாய் - நான்கு நாட்களுக்கு அவனது தமக்கை வீட்டிற்கு அவன் வருவதற்கு அனுமதி கொடுத்திருந்தார்; அதுவும் நிகேதன் - முக்கியமாய் செல்வியின் "செய்த தப்பை உணர்ந்து, அதற்குப் பிரயாச்சித்தமாய் இத்தனை காலம் தனித்து வாழ்ந்தவருக்கு இந்த சலுகையாவது கொடுங்கம்மா" என்ற வேண்டுதலால் தான்.

"ம்ம் சரி. ரொம்ப முடியலன்னா நீங்க போய் கூட்டிட்டு வந்திடுங்க மாமா...அவங்க தனியா வரவேண்டாம். சரியா?" எனக் கணவனுக்குக் கட்டளையிட்டவளின் மனம், தன் மாமாவிடம் தாவியது. மனதின் உந்துதலால் "என்ன செய்றீங்க? இன்னும் தூங்கலையா?" என்றவளின் குரலில் நிச்சயம் ஏக்கம் இருந்தது. இருக்காதா பின்னே? தன் சுட்டிக் கணவனையும், செல்லக் குழந்தைகளையும், அன்பு குடும்பத்தாரையும் பிரிந்து ஓர் வியாபார ஒப்பந்தம் சம்பந்தமாக நியூயார்க் வந்து இரண்டு நாட்கள் ஆகிறதே!

"தூங்குறவனை எழுப்பி விட்டுட்டு என்ன விசாரிப்பு வேண்டிக் கிடக்கு? சரி, சரி, இதுக்கு ஓர் அபாரதாம் உன் கணக்கில் எழுதப்பட்டுவிட்டது. வந்ததும் மறக்காம கட்டிடு" என்ற நிகேதனின் பேச்சை அந்தரத்தில் விட்டவள்,

"குழந்தைங்க என்ன செய்றாங்க? தூங்கிட்டாங்களா?" என்றாள் விசாரிப்பாய். "அடேங்கப்பா?! முதலாளியம்மா தொழில் நுணுக்கங்களை எல்லாம் பயன்படுத்துறாங்கபா. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம அடுத்த கேள்விக்குப் போனா அந்த கேள்விக்குப் பதில் இல்லைன்னு நாங்க புரிஞ்சுக்கனுமா?" என நிகேதன் சீண்ட, "நீங்க என்ன கேள்வியா கேட்டீங்க? அபராதம் எழுதுறேன்...கட்டிடுன்னு சொன்னீங்க...அவ்வளவு தானே! அதை செய்யப் போகும்போது எதுக்கு வீணா வார்த்தையாடனும்?" என்றாள் செல்வி ஒரே போடாய்.

"ம்ம். என் பொண்டாட்டின்னு அப்பப்போ நிரூபிக்கிற...சூப்பர் போ!" எனப் பெருமை பட, "குழந்தைங்க எங்க மாமா?" என்றாள் செல்வி மீண்டும்.

"தூங்கியாச்சு நேஷனல். மாமாகூட...அவர் ரூம்ல படுத்திருக்காங்க" என்றான் கணவன். "பிரதி குட்டி என்னைத் தேடினாளா?" என்றவளின் மனம், தன் வயிற்றில் உதிக்காது மனதில் உதித்து அங்கே நிறைந்திருக்கும் பெண்ணரசியை தேடியது. ஆம், தன் தமக்கை குடும்பத்தை முன் உதாரணமாய் கொண்டு, தங்களது மகன் பிரஜன் பிறந்த அதே

வேளையில் பிரகதியையும் தங்கள் மகளாய் சுவீகாரம் செய்து கொண்டிருந்தான் நிகேதன் - செல்வியின் முழு சம்மதத்துடன்.

மறையாத சந்தோஷத்தைத் தங்களுக்குக் கொடுத்த செல்வச்சீமாட்டியை பற்றிய நினைவில் மனம் பூரித்த நிகேதன் "இல்லையே! தேடலையே!" என்றான் அமைதியாக. "என்னது தேடலையா? ம்ம்...பிரஜூ குட்டி?" என்றாள் செல்வி சிறு ஏமாற்றத்துடன். "அவனும் தான். ஆனா, நான் உன்னைத் தேடினேன். காலையில "மாமா...மணி ஆறாச்சு...எழுந்திருங்க...மாமா...மணி ஆறரை..எழுந்திருக்கிறீங்களா இல்லையா? தலையில தண்ணி ஊத்திடுவேன்"ன்னு நீ மிரட்டுறது இல்லாம, நான் குளிக்கும் போது உன்னையும் சேர்த்து நனைய வைக்காம, நீ செய்ற கொடுமையான டிபனை சாப்பிடாம, பேஷண்ட் பார்த்திட்டு இருக்கும் போது "மாமா, மாமா"ன்னு உன்னோட ஃபோன் கால் இல்லாம, "பாருங்க மாமா, இந்த பிரஜூ என்னை அடிக்கிறான்"ன்னு சின்னப்புள்ளைத்தனமான உன்னோட குற்றபத்திரிக்கை இல்லாம, "இன்னைக்கு என்ன சமைக்கட்டும்? சாப்பாடா? சப்பாத்தியா?" ன்னு அதிமுக்கியமா நீ கேட்கிற கேள்விகள் இல்லாம, எல்லாத்துக்கும் மேலா நைட் தூங்கும் போது என் நேஷனல் மடியில் தலை சாய்க்காம...ம்ம் ரொம்பவே ஏக்கமா இருக்குடா. உன்னைத் தேடோ தேடுன்னு கண்ணு தேடி அலையுது" என்றான் நிகேதன் ஏக்கத்துடன்.

அவனது உருகலில் "ம்ம்" என செல்வி அங்கே நெகிழ, "ஹையே...நான் சொன்னதையெல்லாம் உண்மைன்னு நம்பி...அப்படியே ஐஸ்கிரீம் மாதிரி உருகிட்டு இருக்கியா? அச்சோ...அச்சோ...இன்னும் இப்படி சின்னப்புள்ளையாவே இருக்கியே?! நீ இல்லாம...பக்கத்து வீட்டு பச்சைக்கிளி - அதான் நம்ம ஹர்ஷினி - அவளை சைட் அடிச்சு தள்ளுறேன்...நீ ஏன் ஒரே பீலிங்க்ஸ் ஆப் இந்தியா எப்பெக்ட் கொடுக்கிறே?" என்றான் நிகேதன், தன் பாணியில்.

"அதானே பார்த்தேன்! என்னடா இது...தொடர்ந்து அஞ்சு நிமிஷம் ஒழுங்கா பேசிட்டீங்களேன்னு ஒரு நிமிஷம் சந்தோஷப்பட்டுட்டேன்...ம்ம். என்னைச் சொல்லணும்?" எனத் தலையில் அடித்துக் கொண்ட செல்வியும், "போயும், போயும் உங்களுக்கு அந்த ஹர்ஷினி தான் கிடைச்சாளா? ஹ்ம்ம் பெட்டெர் லக் நெக்ஸ்ட் டைம்!" என்றாள் சிரிப்புடனே.

©Bhuvana's

"அடிப்பாவி! போடி, பொறாமைக்காரி! நாம அவளைவிட அழகா இருக்கோமேன்னு உனக்கு அவளைப் பார்த்து பொறாமை!" என்ற நிகேதனின் பேச்சில் சிரித்து, "நான் அவளை விட அழகா இருக்கும் போது...எதுக்கு பொறாமை படனும்...உங்களை...எப்படியெல்லாம் பேசுறீங்க? இருங்க இருங்க...மாத்தி மாத்தி பேசுற அந்த வாயை..." என்றவளை இடைவெட்டிய காதலன் "அப்படியே அடைச்சிடு...உன் வா..."என்றான் கணவனாய். அதற்கு அவள் "ச்சீ" என சிணுங்க, "என்ன ச்சீ...கையாலன்னு சொல்லவந்தேன்டி! நீ என்ன நினைச்சு ச்சீ சொன்னே...சொல்லு" என அவன் மேலும் கணவன் போர்வையில் சீண்டினான். அதன் பின்னர் அவர்களுக்குள் நடந்த பேச்சுக்கள் - அக்மார்க் கணவன்-மனைவி உரையாடல்கள் என்பதால் இங்கே தவிர்க்கப்படுகின்றன!?!

காதல், கிண்டல், அழகான இரு குழந்தைகள், அன்பான குடும்பம் என எப்போதும் மலர்ந்திருக்கும் தாமரையை சிவக்க வைக்கும் தன்மை - அவளது நாயகனின் காதல் சூட்டிற்கு மட்டுமே உண்டு போலும்!!

விழுந்த இடம் சேராய் இருந்தாலும் முளைத்த விதம் பூவாய் இருப்பின் சந்தோஷத்திற்கு எங்கே என்ன குறை!?

